ஹகாயிகுஸ் ஸபா

என்னும்

பரமார்த்தத் தெளிவு.

பிஸ்மில்லாஹி.

இஃது

ஹகாயிகுஸ் ஸபா

என்னும்

பரமார்த்தத் தெளிவு.

"மன்லகன்" மூலகிரந்தகர்த்தா:

ஹலரத்து மௌலானு மஹ்மூது பஹ்ரீ

(றலி.) அவர்கள்.

அரபுத்தமிழில் விரிவுபடுத்தியது:

நாகூர் ஷரீப், ஹலரத்து 'மௌலா சாஹிபு'

என்ற

ஷா(ஹ்) முஹம்மது கௌது சாஹிபு

ஆரிபு பில்லா(ஹ்) அவர்கள்.

தமிழில் ஒழுங்குபெறத் திரட்டி எளிய நடையில் சம்பூர்ணமாக்கி

அச்சிட்டு வெளிப்படுத்தியது:

மா. மு. மஸ்தான் லெப்பை

திப்பொருள்வைத்தசேரி,

சிக்கில்.

பொதுநலப் பிரீதியுடன் பொருளுதவி செய்தது:

M. P. M. ஷரீபுத்தீன் அவர்கள்,

இலங்கை—கண்டிமா நகர்.

இதன் விலை] 1952 [ரூ. 3-8-0

FIRST EDITION ... DECEMBER 1952 (1000)

All Rights Reserved.

Printed at the CHAKRAVARTHI PRESS,
K[illegible]ALUR.
(S. INDIA)

புகழுரை.

விஸ்வாஸமுள்ள அன்பர்காள்!

சுமார் நூறு வருடங்களுக்கு முன்பு நாகூர் ஷரீபில் சிறந்து விளங்கிய எனது பூட்டனர் ஹலரத்து ஷா(ஹ்) மௌலா முஹம்மது கௌது சாஹிபு ஷத்தாரிய்யுல் காதிரீ (ரஹ்) அவர்கள் மௌலானா மஹ்மூது பஹ்ரீ (ரலி) அவர்களால் **பூர்பீ** பாஷையில் கோர்வை செய்யப்பட்ட **மன்லகன்** என்ற நூலை மூலமாகக்கொண்டு **தஸ்னீபு** செய்த **ஹகாயிகுஸ் ஸபா** என்ற **ரிஸாலா**வை கோர்வை செய்யுமுன்னர் அவர்களுடைய மனதில், "வயது என்னும் மேலான இரத்தினத்தை **கப்லத்து** என்ற மறதியில் பராக்காக்கி விடாமல் நமது **தாலிபீன்**களுக்கு பிரயோஜனங் கொடுக்கத்தக்க ஒரு **ரிஸாலா**வைக் கோர்வைசெய்து வைத்தால் அது **ஸதககதுல்ஜாரியா**வான நிரந்தர தர்மமாக விருக்கும்," என்று உதிப்பானது. அவ்வேளை அன்னாருடைய சிஷ்யர்களுள் சிலர் தங்கள் தங்கள் மனோநிலை **தௌஹீது** என்னும் அத்துவிதத்தில் நிறப்பமாக இருப்பதற்காக ஓர் **கிதாபை**ங் கோர்வைசெய்து தரவேண்டுமென்று அவர்களிடம் கோரிக்கொண்ட நிமித்தம் மேற்படி **ஹகாயிகுஸ்ஸபா**வை கோர்வை செய்து தங்களுடைய சிஷ்யர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கையெழுத்துப் பிரதியை அளித்துதவினார்கள். அவ்வாறாக செய்தபோது தங்கள் மகனாரும், கலீபாவும், எனது பாட்டனருமான ஹலரத்து ஷா(ஹ்) கலீபா செய்பிது பீர் முஹம்மது சாஹிபு ஷத்தாரிய்யுல்காதிரீ (ரஹ்) அவர்களிடமும் ஒரு கையெழுத்துப்பிரதி அளிக்கப்பட்டது.

சிறப்புமிக்க எனது பூட்டனார் அவர்களுடைய மகிமையைப்பற்றி கீழக்கரையில் அடங்கி விளங்கும் ஹலரத்து செய்யிது அப்துல் காதிர் **கல்வத்து நாயகம்** ஆரிபுபில்லா(ஹ்) அவர்களின் பெருமைதங்கிய தந்தையார் ஹலரத்து செய்யிது முஹம்மது மாப்பிள்ளை லெப்பை ஆலிம் ஆரிபுபில்லா(ஹ்) அவர்கள் கோர்வைசெய்த **மவாஹிபுல் மஜீதிய்யா பீ மனகிபில் ஷாஹில் ஹமீதிய்யா** என்ற கிரந்தத்தில் அவர்களை பெரியோர் ஷெய்குல்காமில் என்றும், ஆலிம், ஆரிபு என்றும் புகழ்ந்து கீழ்வரும் **இபாரத்தை** அரபியில் **நகல்** செய்திருக்கிறார்கள். அதாவது:—

★ "அக்ரபுல் முகர்ரபீன இலைஹி, வஅஹப்புல் மஹ்பூபீன அலைஹி, ஆலிமு ரப்பானீ,வ ஆரிபுந்நூரானீ, ஷெய்குன் காமிலுன், வ ஹிப்ருன் ஆமிலுன், பஸீஹுல்லிசானி, பஸீஹுல்ஜனானி, பத்ருல் முனைபா, மஹ்ஙியத்தரா, தாஜுல்மஷாயிகி வல் புகராஇ, வ மஹ்பூபுல் உமாராஇ வல் வுஜராஇ, செய்யிது ஷா(ஹ்) மௌலா முஹம்மது கௌது ஷத்தாரிய்யுல் காதிரிய்யி சாஹிபு சஜ்ஜாதா(ஹ்) தர்காஹில் முஷர்ரபி ஷாஹில் ஹமீதி குத்பிஸ் ஸிர்ருஹு இப்னுஷ்ஷரீபின்ஷரீபில் அபீபில் மனீபி ஷா(ஹ்) முஹம்மது பாகிர் சாஹிப் (ரஹ்.)" என்பதாம். ★

நிற்க, தங்கள் அரிய பெரிய தந்தையார் அவர்களிடம் நன்கொடையாகப்பெற்ற **ஹகாயிகுஸ்ஸபா** கையெழுத்துப் பிரதியை எனது பாட்டனார் ஹலரத்து செய்யிது ஷா(ஹ்)கலீபா பீர் முஹம்மது சாஹிபு ஷத்தாரிய்யுல் காதிரீ அவர்கள் தங்களுக்கு மிகுந்த உவப்பானவர்களும் **தாலிபு** மாகிய பொரவச்சேரி மகாகனம் தங்கிய சூபீ மா. மு. மஸ்தான் லெப்பை காதிரிய்யிஷ்ஷத்தாரிய்யி அவர்

களுக்கு **இஜாயத்**தாகக் கொடுத்தருளினார்கள். கிடைத்தற்கரிய அந்த கலாநிதியை அடையப் பெற்ற ஹலரத்து மஸ்தான் லெப்பை அவர்கள் அதனை மிக்க சிரமத்துடன் படித்துத் தெளிந்து **அமல்** செய்ததோடு, அதனை அழகிய தமிழ் நடையில் பூர்த்தியுரச்செய்து, அலங்கரித்து அச்சிட்டு வெளிப்படுத்தினால் சூபித்துவ பாதையில் தெண்டிப் போர் யாவருக்கும் பிரயோஜனங் கிட்டுமென்று அவர்கள் மனதில் உதிப்புண்டானதும், அவ்வாறே அன்னவர்கள் இந்த அரும் பெருங் கைங்கரியத்தில் ஈடுபடலானதற்கு நான் அன்னாருக்கு நன்றி பாராட்டுவதுடன் அவர்களுக்கு **தௌஹீதின்** நிலை சதாகாலமும் மாறாதிருக்கு மாறு, அதனைத் தரி படுத்தி வைக்கும்படி நாயனை பிரார்த்திக்கிறேன். மேலும் ஹுஜ்ஜதுல் இஸ்லாம் இமாமுல் கிராம் ஹலரத்து கஸ்ஸாலீ (ரலி) அவர்களுடைய இஹ்யா உலூமுத்தீன் என்னும் கிரந்தத்தில் **ஆகிரத்து** ஆகிய மறுமையின் **இல்மு**களுடைய பாடத்தில் முந்தின பங்காகிறது **முகாஷபா**வின் **இல்மாக** விருக்குமென்று எழுதியிருக்கிறார்கள். அத்தகைய **இல்மோ** சகலவித **இல்மு**களின் தீர்ச்சையான **பாத்தினு**டைய **இல்மாக** இருக்கும். மேலும் எந்த மனிதனுக்கு இந்த **இல்மில்** நின்றும் **நஸீபு** என்னும் விதி ஏற்படவில்லையோ அத்தகையோன்மீது **சூஅல்காத்திமா** என்னும் கேடான முடிவு உண்டாதலைப்பற்றி நான் அஞ்சுகிறேன் என்றும் இந்த கெட்ட முடிவைத் தவிர்த்துக்கொள்வதற்கு இந்த **பாத்தினு**டைய **இல்மை** உண்மை கொள்வதும், இந்த **இல்மு**டையவர்களை **இன்கார்** செய்

யாது ஒப்புக்கொள்வதும், இதில் மிகவும் குறைந்த பதவியென்றும் திட்டமாக ஆரிபீன்களுள் சிலர் சொல்லியிருப்பதாக ஹலரத்து இமாம் கஸ்ஸாலீ (ரலி) அவர்கள் அருளியிருக்கிறார்கள்.

ஆகையால் இந்த **பாத்தினுடைய இல்மை இன்கார்** செய்வதானது நமது நபிகட்பிரான் (ஸல்) அவர்கள் திருவுளமாயிருக்கிற **ஹதீதுபடி** 73-கூட்டத்தில் சுன்னத்து ஜமாஅத்து கூட்டம் ஒன்றைத் தவிர, மீதமுள்ள கொள்கைக் கெட்ட **அகீதா**வினுடைய 72-கூட்டத்தாருள் 39-வது கூட்டமான **ஹஷ்விய்யா** கூட்டத்தாரின் **அகீதா**வாகுமென்று வேலூர் "ஹலரத்து மகான்" மதுரஸா ஸ்தாபகர் அல்லாமா அல் ஆரிபு பில்லா(ஹ்) ஹலரத்து அல் ஹாஜ் ஹாபில் செய்யிது ஷா(ஹ்) முஹ்யியத்தீன் சாஹிபு காதிரீ அவர்கள் தங்களின் பஸ்லுல் கிதாபில் அருட் செய்திருக்கிறார்கள்.

எனவே இந்த கிதாபை அச்சிட்டு வெளிப்படுத்த பங்கெடுத்துக்கொண்டு பிரயாசைப்பட்டு வரும் அனைவரையும் நான் மனமார வாழ்த்துவதோடு அன்னார் யாவருக்கும் எனது நன்றியையும் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

இலாஹீ! எனது ஆண்டவா! **லாஹிர்** ஆகிய வெளியரங்கத்தையும், **பாத்தின்** ஆகிய அந்தரங்கத்தையும் சேகரித்து **ஜம்உ** செய்தவண்ணம் நடந்தேறிய **முஹக்கிகீன்**களாகிய பரமார்த்த ஞானிகளான **சூபிய்யா**க்களின் கூட்டத்தில் எங்களனைவரையும் ஆக்கிவைத்தருள்வாயாக, ஆமீன்.

நாகூர் ஷரீப், 19—5—1952.

பெ. த. மு. முஹம்மது பாக்கர் சாஹிபு காதிரீ.

முகவுரை.

அல்லாஹுத்தஆலாவுக்கே புகழ் யாவும் உரித்தாகுக. அவன் சர்வலோகங்களுக்கும் இரட்சகன். **தான்** என்னும் தத்சொரூபம் **ரப்** எனும் **இரட்சகன்** என்ற உன்னத திருநாமபுறத்தால் **திருக்கு** எனப்படும் **அறிவு**டைய சொன்மாத்திரமும், தோற்றன் மாத்திரமுமான **திரிசியம்** எனப்படும் அறிபடுபொருட்களாய்ப் பிரதிபிம்பித்த மித்தையாம் இப் பிரபஞ்சாதிகள் ஜக, ஜீவ, பரம் என்னும் நாமந்தரித்து, **தான்** என்னும் தத்சொரூபத்துக்கு சாய்கையாயும், **இரட்சகன்** என்ற உயரிய திருநாமத்துக்கு-**மர்பூப்** எனும் இரட்சிக்கப்படு பொருட்களாயும் ஆகி, தானே தானய் **வேற்றுமை** என்பது கிஞ்சிற்றுமின்றி, தோற்றப் பொருட்களாக சமைந்த **திரிசிய**மாயும், தோற்றுவிக்கும் பொருளாயமைந்த **திருக்**காயும் திரிகாலத்தும் யாதொரு கூடுதற்குறைதலின்றி அகண்டேகரசமாய் இலங்கிவருகின்றது.

சர்வஞ்ஞன இறைவனின் கருணையும், ஆசியும் ஈடேற்றமளிக்கப்பட்ட நமது நபிகள் பெருமானர் முஹம்மதுர் றசூல் (ஸல்) அவர்களமீதும், அவர்களின் புத்திர, பௌத்திர, சந்ததியினர், ஏனைய தோழர்கள் மீதும் சதாகாலமும் சுரந்து வடிவதாகுக.

அகண்ட பரிபூர்ணமாகிய **தத்சொரூபம்** தன்னையே தன்னில் தன்னைக்கொண்டு தனக்குத் தான் தோற்றுவிக்க ஆசித்தபோது **அல்லா(ஹ்)**

என்னும் சச்சிதானந்த பொருளின் சாய்கையும், பிரதிநிதியும், மானிட சிரேஷ்டரும், சகல கோளங்களான அண்டபிண்ட சராசரங்களின் மூலமும், சின்மயமான **மகாமுன் மஹ்மூது** எனும் புகழுங்குரிய ஸ்தானம் வகிப்பவர்களும், நடுநிலையாகிய **வஹ்தத்து** என்ற சிதாகாச நிலையைப் பெற்றவர்களும், உண்மைப்பொருளாகிய **ஹக்கையும்**, கற்பிதமான இன்மைப்பொருளாகிய **கல்கையும்** பிரித்துக்காட்டி பிரதிபிம்பிக்கும் **ரசூல்** ஆகிய **தன்** சுயத்தைத் தோற்றுவித்தது.

சகோதரர்களே! இஸ்லாமிய **சூபிய்யாக்**களின் ஞான பாட்டைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன:— 1. **இஜாதிய்யா**, 2. **ஷுஹூதிய்யா**, 3. **வுஜூதிய்யா** என்பனவாம்.

இந்த அரியபெரிய அத்துவித நூல் **வுஜூதிய்யா**க்களின் கொள்கைக்கொத்த கருத்துக்களைக் கொண்டமைந்திருப்பதால் **வுஜூதிய்யா** வகுப்பினைச்சாராத ஏனையோர்கள் இதனைப் பார்வையிட்டு பொறுமை மேலீட்டினாலோ, அன்றி, வேறு எக்காரணங்கொண்டோ எதிர்வாதம் பண்ணுதிருப்பார்களென்று நான் பெரிதும் நம்புகிறேன்.

வஹ்தத்துல் வுஜூது என்னும் **ஏகத்துவ கொள்கை**யையே நாதாக்களுள் பெரும்பாலோர் கடைபிடித்து வந்திருக்கின்றனர். **வஹ்தத்துல் வுஜூது** வாதிகளுள் மாபெரும் சீர்திருத்தக்காரர்கள், ஞானவான்கள், **சூபிய்யா**க்களில் தலை சிறந்தோர், மற்றும் பல மகான்களும் காணப்படுகின்றனர். அவர்களுள் மேன்மைவாய்ந்த சில நாதாக்

களின் பெயர்களையும், அவர்கள் கடைப்பிடித்திருந்த தரீக்குகளையும் கீழ்வருமாறு எடுத்துக் காட்டப்படுகின்றன. அவையாவன:—

(1) காதிரிய்யா தரீக்கு (வழி).

ஹலரத்து கௌதுல் அஃலம் செய்யிதினா அப்துல் காதிர் ஜீலானி (றலி) அவர்களும், ஹலரத்து ஷெய்குல் அக்பர் முஹ்யியத்தீனிப்னு அரபீ (றலி) அவர்களும், ஹலரத்து ஷெய்கு ஸதுருத்தீன் கூனவீ (றஹ்) அவர்களும், ஹலரத்து ஷெய்கு அப்துல்கரீம் ஜியலி (றஹ்) அவர்களும், ஹலரத்து ஷெய்கு அப்துற்றஸ்ஸாக் ஜஹன் ஜானவீ (றஹ்) அவர்களும், ஹலரத்து ஷெய்கு அமான் பாணிபத்தீ (றஹ்) அவர்களுமாவர்.

(2) கப்ரவிய்யா தரீக்கு (வழி).

ஹலரத்து மௌலானா ஜலாலுத்தீன்ரூமீ (றஹ்) அவர்களும், ஹலரத்து ஷம்ஸுத்தீன் தப்ரேஸீ (றஹ்) அவர்களுமாவர்.

(3) ஸஹ்ரவர்திய்யா தரீக்கு (வழி).

ஹலரத்து ஷெய்கு பரீதுத்தீன் அத்தார் (றஹ்) அவர்களாவர்.

(4) சிஷ்திய்யா தரீக்கு (வழி).

ஹலரத்து செய்யிது முஹம்மது கேஸு தராஸ் (றஹ்) அவர்களும், ஹலரத்து செய்யிது ஜஅப்பர் மக்கீ (றஹ்) அவர்களுமாவர்.

(5) நக்ஷபந்திய்யா தரீக்கு (வழி).

ஹலரத்து குவாஜா அப்துல்லா(ஹ்) இஹ்ரார் (றஹ்) அவர்களும், ஹலரத்து மௌலானா ஜாமீ

(றழ்) அவர்களும், ஹலரத்து முல்லா அப்துல்கபூர் லாரி (றழ்) அவர்களும், ஹலரத்து குவாஜா பாகீ பில்லா(ஹ்) காஹிலீ அவர்களும், ஹலரத்து ஷெய்கு அப்துற்றஸ்ஸாக் காஷீ (றழ்) அவர்களும், ஹலரத்து ஷம்ஸுத்தீன் கபாஸீ(றழ்)அவர்களும், ஹலரத்து ஸஊதுத்தீன் பர்கானீ (றழ்) அவர்களுமாவர்.

(6) மக்காமுஅல்லமா ஷெய்குமார்களுள்:—

ஹலரத்து ஷெய்கு ஹுஸாமுத்தீன் அலீ முத்தகீ (றழ்) அவர்களாவர்.

(7) மதீனமுனவ்வரா உலமாக்களுள்:—

ஹலரத்து ஷெய்கு இப்ராஹீம் குர்தீ (றழ்) அவர்களாவர்.

(8) இந்திய உலமாக்களுள்:—

ஹலரத்து ஷெய்கு அப்துல் ஹக்கு முஹத்திது தெஹ்லவீ (றழ்) அவர்களாவர்.

மேற்கண்ட நாதாக்கள் **வஹ்ததுல் வுஜூது** என்ற அத்துவித சித்தாந்தத்தைக் கடைப்பிடித்து முக்தி பெற்றவர்களாவர்.

இன்னும் ஹலரத்து குவாஜா புஸ்ருக் (றழ்) அவர்களும், ஹலரத்து குவாஜா குத்புத்தீன் (றழ்) அவர்களும் பாடியிருக்கும் பாடல்கள் **வஹ்ததுல் வுஜூது** கொள்கையை ஸ்திரப்படுத்துகின்றன. ஹலரத்து குவாஜா பரீதுத்தீன் ஷகர் கன்ஜ் (றழ்) அவர்கள் தங்களுடைய சிஷ்யர்களுக்கு **வஹ்ததுல் வுஜூது** பற்றி போதித்து வந்திருப்பதாக கூறப்படுகிறது.

மேலும் ஹலரத்து ஷா(ஹ்) செய்பிது முஹம்மது கௌது சாஹிபுல் குவாலீர் (றலி) அவர்களும், அவர்களின் உத்தம சிஷ்யர், உலகம்போற்றும் வள்ளல், மாணிக்கப்பூர் பிறந்து, திருநாகூர் ஷரீபில் அடங்கி விளங்கும் சற்குணங் குடிகொண்ட ஹலரத்து சையிது அப்துல்காதிர் மீரான் சுல்தான் ஷாஹுல் ஹமீது ஆண்டகை அவர்களும் வுஜூதிய்யா வகுப்புக் கொள்கையையே தங்களின் வாழ்க்கை இலட்சியமாகக் கருதி வாழ்நாளைக் கடத்தியிருக்கின்றனர்; **வஹ்ததுல் வுஜூது** சித்தாந்தத்தையும் தங்கள் தங்கள் சிஷ்யகோடிகளுக்கு போதனை செய்தும் வந்திருக்கின்றனர்.

ஹலரத்து ஷெய்கு ஹுசைனிப்னு மன்சூருல் ஹல்லாஜ் (றஹ்) அவர்கள் அத்துவித சித்தாந்தத்தை நிலைநாட்டும் பொருட்டே தங்களின் உயிரை நீத்தார்கள். ஹலரத்து ஷெய்கு ஸர்மஸ்து (றஹ்) அவர்களும் **வஹ்ததுல் வுஜூதை** ஸ்தாபித்தற்காகவேண்டி பூதவுடலை விட்டும் பிரிந்தார்கள்.

இஃதிவ்வாறிருக்க, இக்கொள்கையினை எதிர்வாதிக்கும் **இஜாதிய்யா, ஷுஹூதிய்யா**வென்ற இரு ஞான பாட்டைகளைப்பற்றியும் **வஹ்ததுல் வுஜூதை** சரியெனக்கொள்ளும் **வுஜூதிய்யா**வைப் பற்றியும் பின்வருமாறு விவரிக்கப்படுகின்றன.

இஸ்லாமிய ஞானிகளின் ஞானபாட்டைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன:— (1) இஜாதிய்யா, (2) ஷுஹூதிய்யா, (3) வுஜூதிய்யா என்பனவாம்.

(1) இஜாதிய்யா (துவித சித்தாந்தம்).

இக்கொள்கையைக் கடைப்பிடித்து வரும் கூட்டத்தினர் தனது சிருஷ்டிப்பொருட்களுக்கு முற்றும் வேறுபட்ட ஒரு சிருஷ்டிகர்த்தாவான இறைவன் உண்டு என்று கொள்கின்றனர். அதனை ஸ்தாபித்தற்பொருட்டு அவர்கள் காட்டும் **தலீல்** ஆகிய சுருதிப்பிரமாணம் கீழ்வருமாறு:—

"அந்த சிருஷ்டிகர்த்தா வானங்களையும், பூமியையும் ஆறு தினங்களிற் படைத்து ஏழாம் தினத்தில் ஓய்வு எடுத்துக்கொண்டான்."

"வானங்களையும், பூமியையும் படைத்து இருளையும், ஒளியையும் வெளிப்படுத்தின இறைவனுக்கே சர்வபுகழும்," என்பனவாம்.

இந்த **இஜாதிய்யா** கொள்கைதான் **அவாமுன்னாஸ்** என்னும் சாதாரண ஜனங்களுடையதும், **அஷ்அரிய்யா** கூட்டத்தினருடையதுமான கொள்கையுமாகும். இக்கொள்கையுடையோர் திருகுர்ஆனுடைய வெளிப்படை (லாஹிர்) போதனைகளை மட்டும் எடுத்து நடப்பதாலும், சிருஷ்டி பொருட்களின் உள்ளமை இவர்களின் கொள்கைப்படி இன்மையெனப்படும் உள்ளமையாக இருப்பதாலும், இவர்களும் சில **அத்கார்** என்னும் தியானங்களை அனுஷ்டித்து வருவதாலும் இவர்களையும் **சூபிய்யா**க்களான ஞானிகளின் கூட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஹக்குடைய உள்ளமைக்கு முற்றும் வேறுபட்ட சம்பந்தமற்ற **அதம்** என்னும் இல்லாமை

யான உள்ளமையொன்று உண்டு என்று இந்த இஜாதிய்யா வகுப்பினர் கொண்டிருப்பதால் **தத்னியாயெ வுஜூது** என்ற இரு உள்ளமைகளான **தாத்து**க்களென்னும் சுயார்த்த ரூபங்களை அன்னோர் வருவிக்கின்றனர்.

(2) ஷுஹூதிய்யா (விசிஷ்டாதுவித சித்தாந்தம்).

இவ்வகுப்பைச் சேர்ந்த **ஷுஹூதிய்யாக்களும்** இரண்டு **தாத்து**கள் உண்டு என்ற கொள்கையையே உடையோராவர். ஒன்று **ஹக்கு**டையதும், மற்றொன்று **கல்கு**டையதும் என்றும், **கல்கு**டைய தாத்தை **அதமீ இளாபீ** என்ற **சம்பந்தி இன்மை**யேயன்றி **ஹகீகீ** என்னும் யதார்த்தமன்று என்றும் இவர்கள் கூறுகின்றனர்.

அதம் எனும் பெயரால் ஒரு உள்ளமை இருப்பதைக்கொண்டு இரண்டு **தாத்து**கள் என்னும் உள்ளமைப் பொருட்கள் ஏற்பட இங்கும் **துவிதம்** ஸ்தாபிதமாகின்றது. சம்பந்தி இன்மையாகிறது **வுஜூது** என்னும் உள்ளமையுடன் சம்பந்தப்பட்ட இல்லாமையே. இதற்கு ஆதாரமாக அவர்கள் காட்டும் **தலீல்** என்னும் சுருதிப்பிரமாணம் கீழ் வருமாறு காண்க;—

"அல்லா(ஹ்) வானங்களுடையதும், பூமியினுடையதுமான ஒளியாக இருக்கின்றான்; அவன் கண்ணாடிக் குள்ளிருக்கும் விளக்கு போன்றும், அந்தக்கண்ணாடி............"

இந்த **ஷுஹூதிய்யா**க்களின் இமாம் முஜத்திது அல்பதானீ ஷெய்கு அஹ்மது ஸர்ஹந்தீ (றஹ்) அவர்களாவர்.

(3) வுஜூதிய்யா (அத்துவித சித்தாந்தம்).

இம் மாபெரும் வகுப்புக் கொள்கைதான் இஸ்லாமிய தத்துவார்த்தத்தின்மீது பாரிய விசேஷத்தன்மையை அளித்ததாகும். ஷெய்குல் அக்பர் முஹ்யியத்தீனிப்னு அரபீ (றலி) அவர்கள் கி. பி. 1241-ம் வருடத்தில் **ஸ்பெயின்** தேசத்தில் அவதரித்த சிறந்ததோர் ஞானியாவார்கள். இவர்களின் மரணம் **சிரியா**வில் நிகழ்ந்தபோதினும், இவர்களை மேனாட்டு **சூபிய்யா**க்கள், ஞானிகள் ஆகியோர் கூட்டத்தில்தான் சேர்க்கின்றனர். இம்மகான் அவர்களின் பரமார்த்த ஞானம் எத்தகையதென விளங்க கீழ் குறிப்பிடப்பட்டிருப்பனவற்றை கவனிக்கவும்.

"மனிதனோ, அன்றி, உலகமோ **ஹக்கு**டைய **இல்மு** என்னும் அறிவில் நின்றும் தோன்றி, அனுபவங்களை அடையப்பெற்றதும், தத்தம் **ஐன்** ஆகிய சுயம் அல்லது அகமியத்தின்பால் மீண்டுவிடுகின்றவகையாயிருக்கின்றது. அதாவது, ஒரே உள்ளமைப்பொருள் தனது அறிவிலே கணக்கற்ற வகையில் **கத்ரத்**தென்னும் பலவற்றைப் பிரதிபலிக்கச் செய்தபோதினும், அந்த **அறிவு** தான் தானாகவே இருக்கின்றது. தோன்றுதலடைந்த இத்தாதி வஸ்துக்கள் அனுபவங்களைப் பெற்றுக் கொண்டவுடன் தங்கள் தங்கள் அகமியத்தின்பால் மீண்டுவிடுகின்ற தன்மையிலிருக்கும் **எல்லாம் அவனேயாம் (ஹமவோஸ்த்)**.

இதனை விளக்கிக்காட்டித் தெளிவுபடுத்த கீழ்வரும் **ரிபுகீதை** கவிதையொன்று நன்கு உதவும்.

"கனவினிடை திரிசியமாய்க் காணப்பட்டுக்
கடபடமே முதலியவு மித்தையேபோல்,
நனவினிடைத் திரிசியமாய் நாடப்பட்ட
நானாவாஞ் சக, ஜீவ, பரமு மித்தை,
அனையதெலா மறிகின்ற திருக்கேயான
ஆன்மாவுக் கபின்ன மதாம் பிரமமொன்றே
அனவரத மழியாத வுண்மை வத்து
அறைந்ததிலோ ரணுவேனு மையமில்லை."

நிற்க, சிற்பியினுடைய அறிவில் பல்வேறு கோலங்களான அமைப்புகள் இருப்பனபோன்று **ஹக்கு**டைய அறிவில் வஸ்துக்களின் உள்ளமையும் அமைந்திருக்கின்றது. ஆனால், இருப்பது அவன் மட்டுமே; ஏனெனில், அறிவிலுள்ள ஒரு அமைப்பு, அதை அமைத்தவனின் அமைப்பு அல்லது கற்பனையாக இருக்குமேயன்றி, அந்த அமைப்பு அமைத்தவனாக இருக்கமுடியாது. அந்த அமைப்புக்கு உள்ளமை என்ற பெயர்கொண்டோ அல்லது இல்லாமை என்ற பெயர்கொண்டோ தனிப்பட்ட யாதொரு உள்ளமையுங் கிடையாது. ஏனென்றால், அறிவில் அமைந்த அமைப்பு அதனை அமைத்தவன் பக்கமே மீண்டுவிடுகின்றநிலையாம்.

இப்பிரபஞ்சம் முதற்காரணமான ஒரு வஸ்துவாக சிருஷ்டிக்கப்படவில்லை. ஏனெனில், இது **ஹக்கு**டைய அறிவில் தரிபட்டிருந்தே தோற்றமளிக்கின்றது. **ஹக்கு**டைய **தாத்து** என்ற தத்சொரூபம் எவ்வளவு பூர்வமானதோ அது போன்றுதான் அவனுடைய அறிவும் பூர்வீகமாயிருக்கிறது. அறிவிலிருந்துதான் சர்வமும் வெளியீடாயிருக்கின்றன. இத்தாதி அறிபடு பொருட்களாய் இப்

பிரபஞ்சமும் இதிலுள்ள யாவும் அவனுடைய அறிவினால் கற்பிக்கப்பட்டே அமைந்திருக்கின்றன. அவனது அறிவே இவற்றின் உள்ளமையாக இருக்க, இவைகட்கு நாம, ரூபாதி பேதங்களே யன்றி தனியான, வேற்றுமையான யாதொரு உள்ளமையோ, **தாத்**தோ திரிகாலமுங்கிடையாது.

எனவே, இங்கு **வஹ்ததுல் வுஜூது** என்ற ஏக உள்ளமை ஸ்தாபிக்கப்பட்டு விடுகிறபடியால் **துவிதம்**—இரண்டு—என்பது கிஞ்சிற்றுமில்லை. **ஹுலூல்** (ஊடே நுழைதல்), **இத்திஹாது** (இரண்டறக் கலத்தல்) என்ற இருவித தோஷங்களும் அடியோடு நிவிர்த்தியாகிவிடுகின்றன.

இந்திர ஜாலக்காரனின் மந்திர சக்தியினால் காட்டப்படும் பொய் **ரூபா**யைப் போன்றும், **மாஞ்செடி**யைப் போன்றும் **ஹக்**குடைய சிருஷ்டிகள் பொய்யேயாயினும், தோன்றும் வேளையில் மட்டும் தனி உள்ளமையுடையனவாகவே தோற்றமளிக்கின்றன. **கல்**குடைய **தாத்து** ஆகிறது பண்பு, நாம, ரூபாதிகளால் கண்டிக்கப்பட்ட **அப்து** என்னும் **அடிமை** என்பதாகும். **தௌஹீது** என்ற **அத்வைத**மாகிறது கண்டிப்புகளையும், குறிப்புகளையும் விட்டுவிடுதலேயாம். **அத்தௌஹீது இஸ்காத்துல் இஷாரா.**

இதனை ஸ்திரப்படுத்தும் **குர்ஆன்** அத்தாட்சிகளான சுருதிப்பிரமாணங்கள் கீழ் வருவனவாம்.

"இறைவன் கிழக்கிலும், மேற்கிலும் இருக்கின்றான்; ஆதலின் நீர் உமது முகத்தை எங்கு திருப்பினும் அங்கு **அல்லா(ஹ்)**வின் முகமிருக்

கின்றது." (சூரத்துல் பகரா—அத்தியாயம் 2, ஆயத்து 128).

"நிட்சயமாக இறைவன் ஒவ்வொரு வஸ்துவையும் சூழ்ந்திருக்கின்றான்." (சூரத்துன்னிஸா—அத்தியாயம் 5, ஆயத்து 116).

"நாம் மனிதனுக்கு அவனுடைய பிடரி நரம்பைவிட அதிசமீபத்திலிருக்கிறோம்." (சூரத்துல் வாகிஆ—அத்தியாயம் 27, ஆயத்து 78).

"நீங்கள் எங்கிருப்பினும் அல்லா(ஹ்) உங்களோடிருக்கின்றான்." (சூரத்துல் ஹதீது—அத்தியாயம் 2, ஆயத்து 5).

"நான் உங்கள் நப்சுகளிலே இருக்கின்றேன்; ஆனால் நீங்கள் நோட்டமிடுவதில்லை." (சூரத்துத்தாரியா—அத்தியாயம் 26, ஆயத்து 19).

"அவனே முன்னவன்; அவனே பின்னவன்; அவனே வெளியீடானவன்; அவனே உள்ளீடானவன்; அவன் ஒவ்வொரு வஸ்துவையும் அறிபவனுமிருக்கின்றான்." (சூரத்துல் அன்பால்—அத்தியாயம் 8. ஆயத்து 18).

"நாம் **அல்லா(ஹ்)** வினிடமிருந்துள்ளோர்களே, மேலும் அவனிடமே நாம் மீளுகிறவர்களாயிருக்கிறோம்." (சூரத்துல் பகரா—அத்தியாயம் 2, ஆயத்து 156).

மேலும் **ஹதீதுகுத்ஸியில் அல்லாஹுத்தஆலா,** "நான் அதி மறைவான புதையலாயிருந்தேன், என்னை அறியப்பட நான் ஆசித்தேன்; அவ்வாறு அறியப்பட சிருஷ்டிகளை உண்டுபண்ணினேன்," என்பதாகக் கூறியிருக்கிறான்.

இன்னும் கீழ்வரும் நாயக வாக்கியமான **ஹதீது**படியும் ஏகத்துவமானது நன்கு தரிபடுத்தப் படுகின்றது.

“நான் ‘ஐன்’ இன்றிய ‘அரப்’ ஆக இருக்கிறேன்.”
“நான் ‘மீம்’ இன்றிய ‘அஹ்மது’வாக இருக்கின்றேன்.”

“நீங்கள் நீர் மொள்ளும் பாத்திரத்தை ஓர் கிணற்றினுள் இறக்குவீர்களாகில், நிச்சயமாக, அது **அல்லா(ஹ்)**வின் மீது அன்றி பிறிதொரு வஸ்துவின்மீதும் படுவதில்லை.”

இஃதன்றி, **வஹ்தத்துல் வுஜூது** என்னும் ஏகத்துவத்தை ஸ்தாபித்து நிலைநிறுத்த வந்த நாதாக்களுள் அநேகர் வெகு அழகிய வாக்கியங்களால் இதனைத் தெளிவுபடுத்தி யிருக்கின்றனர். உதாரணமாக, கிப்லதுல் ஆரிபீன் ஹலரத்து ஷெய்கு அபாயஸீதுல் புஸ்தாமி (றலி) அவர்கள் கீழ் வருமாறு அருளியிருக்கிறார்கள்.

“எனது சட்டைக்குள் அல்லா(ஹ்)வேயன்றி பிறிதொரு வஸ்துவில்லை.”

.“நான் எவ்வளவு பரிசுத்தமானவன், எனது மகிமை மகாப்பெரிது.”

மீண்டும், ஹலரத்து ஷெய்கு மஉரூபுல் கர்கீ (றலி) அவர்கள்,

“நான் உங்களின் **றப்பு** ஆகயிருக்கிறேன்; என்னையே நீங்கள் வணங்குவீர்களாக,” என்று அருள் செய்திருக்கிறார்கள்.

மேலும் ஹலரத்து ஷெய்கு இப்ராஹீம் (கலீஃபே இலாஹீ) (றஹ்) அவர்கள் கீழ்வருமாறு கூறியிருக்கிறார்கள். அதாவது:—

"ஜாமீ (றஹ்) அவர்களின் **நபஹாதுல் உன்ஸு** என்ற கிரந்தத்தில் **சூபிய்யாக்**களுள் 600 பேர்களைப்பற்றி எழுதப்படுவதாகவும், அவர்களுள் 300-பேர் **ஹக்கும், கல்கும்** பனிக்கட்டியையும், தண்ணீரையும்போல் **ஏகம்** என்ற **இப்னு அரபீ** (ரலி)யுடைய **ஏகத்துவ கொள்கை**யை ஆதரிப்பவர்களாகவே காணப்படுகின்றனர். மற்ற 300-பேர்களுக்கு தலைமை தாங்கும் **ஷெய்கு ஷிஹாபுத்தீன் சுஹ்ரவர்தீ**யைப்போல் **ஹக்கும், கல்கும்,** இரும்பையும், நெருப்பையும் போன்று சம்பந்தத்தை மட்டும் பெற்றிருக்கின்றனரென்று கூறுகிறார்கள்."

"சமுத்திரத்தில் பிறபேதங்கொண்ட எண்ணற்ற அலைகள் நாமமின்மையிலிருந்து நாமத்தைப் பெற்றுக்கொள்கின்றன. ஒரு வேளை **மஜ்னூன்** என்னும் ஆடையையும், மற்றொரு வேளை **லைலா** என்னும் ரூபத்தையும் பெறுகின்றது." இங்ஙனமாக கூறுவது **ஹமீதுத்தீன் லாஹூரீ** (ராஜபுதனம்).

ஹக்குக்கும், கல்குக்கும் உவமாணித்து கூறப்படும் நெருப்புக்கும், இரும்புக்குமுள்ள சம்பந்தத்தில் தற்காலிகமாக இரும்பானது நெருப்பினுள்ளிருக்கையில் நெருப்பைப்போன்று ஆனபோதிலும் நெருப்பிலிருந்து எடுக்கப்பட்டதும் தனது பழைய நிலையைப் பெற்றுக் கொள்கின்றது. **ஷுஹூதிய்யா** வகுப்பினர் காட்டும் மேற்கோள் இம்மாதிரியே.

எனவே, **வஹ்ததுல் வுஜூது** பற்றிய வாக்கியார்த்தங்கள் பற்பல பெரியார்களைக்கொண்

டும், அன்னூர்களின் சொன்முறை, செயன்முறை களான ஆதாரங்களாலும் நமக்கு நன்கு அறியவரு கிறபடியால் அத்தகைய மகான்களின் கொள்கை யினை இதனைப்படித்துணர்ந்து அறிய அருகதை யுடையோருடைய உள்ளங்கள் ஈர்த்து பயன் பெறட்டும் என்ற ஏக நோக்கங்கொண்டே இந்த அரிய நூலை எளிய தமிழ்நடையில் வெளியிடத் துணிந்தேன். எனது உள்ளக்கிடக்கையும் இதுவே.

நிற்க, கிஞ்சிக்ஞனான **மா. மு. மஸ்தான் லெப்பை** என்பவன் கூறுவது யாதெனில், யான், எனது என்னும் தேகாபிமானமாகிய புயற்காற்றில் மக்கள் பலர் சிக்குண்டு சுழலாமலும், மனமாகிய சமுத்திரத்தில் மாய்கையால் கற்பிக்கப்பட்ட **வேற்றுமை** என்னும் அலையாதிகளால் மோதுண்டு கரைகாணாது தத்தளிப்பவனைக் காப்பாற்றவும், **வஹ்தானியத்து** என்ற **ஏகத்துவ நிலையை** அடைதற்கு உயரிய அதிஉன்னத சாதனம் போன்று உதவும் தலைசிறந்த இந்த அரிய நூலை மிகுந்த சிரமத்தின் பயனாய் இறைவனின் திருவருட் கடாட்சத்தால் புத்தக ரூபமாய் அச்சிட்டு வெளிப் படுத்துவான் வேண்டி என்னைப் பலகாலும் தூண்டு தற் செய்துவந்த இலங்கையிலிருக்கும் கண்டிமா நகர் வாழ் எனது அன்புக்குரிய கனம் **M. P. M. ஷரீபுத்தீன்** அவர்களது நன்முயற்சியாலும், பாரிய பொருளுதவியாலும் இக்கிரந்தம் அச்சிட்டு வெளி வருதலைக்கொண்டு மக்கட் பலர் இதன்மூலம் முக்தி நிலையை மகிழ்ச்சியுடன் அடையப்பெற்று உய்யட் டும் என்ற ஏக நோக்கத்தைக்கொண்டு யானும்

சிரமம் பாராட்டாது இறைவனின் அருளால் இந்நூல் வெளிவருதற்கான மேலான கைங்கரியத்தில் பிரவேசிக்கத் துணிந்தேன்.

சகோதரர்களே! இம்மொழிபெயர்ப்பு நூல் தோன்றுதற்கு மூலகிரந்தமான **மன்லகன்** என்னும் கவிதைத்திறட்டு **பூர்பீ** பாஷையில் **ஹலரத்து மௌலானு காளீ மஹ்மூது பஹ்ரீ** (கத்தஸ)அவர்களால் **பைத்து**க்களாக பாடப்பட்டது. மேற்படி **ஹலரத்து** அவர்களின் பிரபல்யமான பெயர் **காளியேதர்யா** என்பதாகும். அவர்களின் ஊர் **நிஜாம்** சமஸ்தானத்திலுள்ள **கோகீ** என்னும் பட்டணம். அவர்கள் கோர்வைசெய்த **மன்லகன்** என்ற அரிய கிரந்தத்தில் 'ஏ, சகோதரனே! பனிரெண்டாவது நூற்ருண்டில் நன்மை மறைந்து தீமை வெளிப்பட்டுவிட்டது,' எனக் கூறியிருப்பதால் **ஹலரத்து** அவர்கள் பனிரெண்டாவது நூற்ருண்டிலுள்ளவர்களென்று தெரியவருகிறது. (ஆனல், இவர்களுடைய குருமஹான், **ஹலரத்து முஹம்மது பாக்கர்** அவர்களின் ஜீவியக்குறிப்பு கிடைக்கவில்லை.) அதனை அரபுத்தமிழில் மொழிபெயர்ப்பு செய்து தந்தது திருநாகூர் ஷரீபின்கண் அடங்கிவிளங்கும் **ஹலரத்து மீரான் சுல்தான் செய்யிது அப்துல் காதிறு ஷாஹுல் ஹமீது** (றலி) ஆண்டகை அவர்களுடைய கோத்திர பரம்பரையில் **ஹலரத்து ஷா(ஹ்) செய்யிது முஹம்மது யூசுபு சாஹிபு ஆரிபுபில்லா(ஹ்)** (றலி) ஆண்டகை அவர்களின் சந்ததியில் அவதரித்த **மௌலா சாஹிபு** என்ற **ஷா(ஹ்) முஹம்மது கௌது**

சாஹிபு ஆரிபுபில்லாஹில் காதிரிய்யின் நாஹூரி அவர்களாகும். இந்த அரபுத்தமிழ் மொழிபெயர்ப்பு சற்றேறக்குறைய நூறு வருடங்களுக்கு முன்னர் செய்யப்பட்டு அக்காலந்தொடுத்து இது பரியந்தம் கையெழுத்துப் பிரதியாகவே இருந்து வந்திருக்கிறது. மொழிபெயர்ப்பாளரான ஹலரத்து அவர்களின் புத்திரசிகாமணியான **ஹலரத்து கலீபா பீர்முஹம்மது சாஹிபு** அவர்கள் அந்த கையெழுத்துப் பிரதியை எனக்கு நன்கொடையாக கொடுத்தருளினார்கள். அந்த மேலான நன்கொடையை நான் நன்கு நோட்டமிட்டு வரவே அதற்கிசைய மேற்படி **மௌலா சாஹிபு** அவர்களாலேயே தமிழ்ப் பாடலாக பாடப்பட்டு, என்னால் அச்சேற்றி வெளிவந்திருக்கும் **இர்பானுஸ் ஸபா** வென்னும் **மெய்ஞ்ஞானத் தெளிவு** என்ற பாடற்றிரட்டில் கூறப்பட்ட **பரமார்த்த** இரகசியங்களுக்கு முற்றும் ஒற்றுமைப்பட வசன நடையில் அமைந்திருக்கக் கண்டு ஆனந்தித்தேன்.

ஆனால், கையெழுத்து அரபுத்தமிழ்ப் பிரதியாக வமைந்திருந்த இந்நூல் ஏதோ துர்அதிர்ஷ்ட வசமாக பதினான்காவது அத்தியாயத்தின் முற்பகுதியில் குறைவுபெற நின்றுவிட்டதைப்பார்த்த யான் இதனை நிறைவுறச் செய்தற்பொருட்டு **மெய்ஞ்ஞானத் தெளிவு**டைய பல கவிதைகளின் கருத்துக்கிசையவும், **இஹ்யாவுல் உலூம், கீமியாயெ சஆதத்து** முதலிய கிரந்தங்களில் **ஹலரத்து இமாம் கஸ்ஸாலி** (றஹ்) அவர்களின் சொற்களைத் தழுவியும், **புசூஸுல் ஹிகம், மத்னவீஷரீபு,**

இன்ஸானுல்காமில் ஆகிய நூல்களில் நின்றும் ஷெய்குல் அக்பர் முஹ்யியத்தீனிப்னு அரபீ (றலி) அவர்கள், ஹலரத்து மௌலானா ஜலாலுத்தீன் ரூமீ (றஹ்) அவர்கள், ஹலரத்து ஷெய்கு அப்துல் கரீமில் ஜீயலீ (றலி) அவர்கள் போன்ற நாதாக்களின் கருத்துக்களையமைத்தும், இன்னும் பல ஞானவான்களின் சொன்முறை, செயன்முறை ஆதாரங்களைக்கொண்டும் இந்நூலின் பதினொன்காவது அத்தியாயத்தைப் பூர்த்திபண்ணி, ஒரு முடிவுரையும் இணைத்து எளிய தமிழ் நடையில் இதனை எழுதிமுடித்து இதற்கு **ஹகாயிகுஸ் ஸபா** என்னும் **பரமார்த்தத் தெளிவு** என்ற பெயரையுஞ் சூட்டி சம்பூர்ணஞ் செய்தேனாக!

அன்பர்களே! ஒப்பிடற்கரிய **ஹகாயிகுஸ் ஸபா** என்னும் **பரமார்த்தத் தெளிவு** என்ற உயரிய இந்த நூல் **வுஜூதிய்யா** வென்னும் அத்வைதிகளுடைய கருத்துக்கு முற்றும் ஒற்றுமைப்பட விளங்குகின்றபடியாலும், இந்நூல் குறிப்பாக **வுஜூதிய்யா**க்களுக்கும், பொதுவாக ஏனையோருக்கும் பாரிய பிரயோஜனத்தை அளிக்க வல்லதோர் நூலாக இருக்குமென்பதிற் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

ஆகையால், இக்கிரந்தமானது "வானத்தில் சூரியனுதயமாகிக்கொண்டும், நட்சத்திரங்கள் பிரகாசித்துக் கொண்டும் இருக்குங் காலபரியந்தம் நிலைத்திருக்கக்கடவது. இதன் பொருட்டால் ஞானக்கண்ணுடையோர், இறைவனை அறிந்தோர், பரிசுத்த இதயத்தோர், ஈடேற்றத்தை நாடி ஆத்ம

முன்னேற்றம் பெறுவோர், அர்ஷுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டிருப்போர், உச்சிமுதல் உள்ளங்கால் வரை ஜோதிமயமானோர், மெய்ஞ்ஞான இரகசியங்களில் மௌனமாயிருப்போர், மறைபொருள் விநோதங்களைத் தெரிசிப்போர், உலக வியவகாரங்களை விட்டு ஒதுங்கி நிற்போர், இறைவனது சமீப நிலையை நாடி உழைப்போர், எளிமையில் ஏந்தலாக இருப்போர், குலத்திற் பெரியோராய்ப் பெருந்தன்மையில் எல்லோரையும் மிகைத்து அத்தாட்சிகளில் மிகத்துலக்கமாக இருப்போராகிய இன்னோர்கள் நற்பலன் பெறுவார்களாக.''

''உலக இரட்சகா! இப் பிரார்த்தனையை ஏற்றுக்கொள்வாயாக. இது ரத்து செய்யப்படாததொன்று. ஏனெனில், இப் பிரார்த்தனை சகல ஜீவராசிகளையும் சேர்த்துக்கொண்டிருக்கின்றது. சர்வ பெருமையும், புகழும் தனிப்பொருள், ஏகப் பரம்பொருளாகிய **அல்லா(ஹ்)** (ஜல்)வுக்கே உரித்தாகும். ஹலரத்து முஹம்மது (ஸல்) அவர்களையும், அவர்களின் சந்ததியினரையும் நீ ஆசீர்வதிப்பாயாக. **அல்லா(ஹ்)**வாகிய நீ ஒருவனே எங்களனைவருக்கும் போதுமானவன்; சர்வ வல்லமையுடையான் நீயே; உயரிய பதவியுடையவன்; நன்கு உதவி செய்பவன்.'' வஸ்ஸலாம்.

நாகபட்டினம்,
ஹிஜ்ரி 1370-ம் வருடம்,
ரமலான் மாதம் பிறை 1,
வியாழக்கிழமை,
7—6—1951.

இங்ஙனம்,
மா. மு. மஸ்தான் லெப்பை,
பொருள்வைத்தசேரி. (சிக்கில்.)

ஹம்து ஸலவாத்து

சர்வ புகழும் அல்லாஹுத்தஆலாவுக்காயிருக்கும். அவன் பிரபஞ்சத்தினர் யாவருக்கும் **ரப்** எனும் இரட்சகனாவன். **தான்** என்ற **தாத்து ரப்** எனும் திருநாம புறத்தால் வெளியீடான வெளிப்பாடு **ரப்**புக்கு **இஸ்மு** என்ற அடையாளமாய் **ஆலம்** என்னும் நாமந்தரித்து, **தான்** என்னும் **தாத்து**க்கு சாய்கையாய் **ரப்** என்ற **இஸ்மு** ஆகிய நாமத்துக்கு **மர்பூப்** என்ற **முஸம்மா**வாகிய நாமரூபமாய் தானே தானாய் வேற்றுமை கிஞ்சிற்றுமின்றியே வெளியரங்கமும், அந்தரங்கமுமாயிருக்கிறது.

சல்வாத்து என்னும் கருணையும், **சலாம்** என்னும் ஈடேற்றமும் நமது நாயகம் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் கிளை, கோத்திர, தபோதனர்கள் மீதும் உண்டாவதாகுக.

தாத்து தானே வெளிப்பட நாடினபோது, தனது திருநாமமாகிய **அல்லா(ஹ்)** வென்ற தொகையான நாமத்தின் **மல்ஹறு** என்னும் உதயஸ்தானமான **இன்ஸான்காமில்** ஆகிய சம்பூர்ண மானிடர்க்கெல்லாம் **அக்மல்** என்னும் சர்வ சம்பூர்ணமாகவும், சகல சிருஷ்டிகளுக்கும் மூலமாகவும், நடுமையமாகவும் நின்று **ஹக்**கெனும் மெய்ப்பொருளையும், **கல்கு** என்னும் தோற்றப்பொருளையும் பிரதிபலிக்கும் கண்ணாடியாகிய **றசூல்** ஆக வெளிப்பட்டது.

பின்னர், வலிகள் சிரோன்மணியான ஹஸ ரத்து செய்யிது அப்துல் காதிர் ஷாஹுல்ஹமீது (றலி) ஆண்டகை அவர்களது **கலீபா**வான எளியேன் ஷா(ஹ்) மௌலா முஹம்மது கௌது சாஹிபுன் நாஹூரீ என்பவனுடைய உள்ளத்தில், "உனது வயது என்ற மதித்தற்கரிய மாணிக்கத்தை மறதி மிகைப்பால் பாழ்படுத்தி விடாது, தேடுபவர்கட்கு பிரயோஜனங் கிட்டும் வண்ணம் ஒரு **ரிஸாலா**வைக் கோர்வைசெய்து வைத்தால் அது ஓர் முற்றுப்பெறுத தர்மகைங்கிரியமாய் சதாகாலமும் விளங்கும்,'' என உதிப்பாயிற்று. எனவே, கிப்லதுல் ஆரிபீன் ஹலரத்து மஹ்மூது பஹ்ரீ(கத்) அவர்கள் உறைபடுத்திய **மன்லகன்** என்ற அரிய கிரந்தத்தை சுருதி, யுக்தி, அனுபவ பிரமாணங்களைக் கொண்டும், மெய்ஞ்ஞானிகளின் அரிய உபதேசமொழிகளைக் கொண்டும் இணைத்து அருமையான **முமூட்சுகள்** விளங்கியறியுமாறு தமிழ்ப் பாஷையில் (அரபுத் தமிழில்) கோர்வைசெய்து இந்த **ரிஸாலா**வுக்கு அரபி மொழியில் **ஹகாயிகுஸ் ஸபா**'வென்று தலையங்கமிட்டு ஒரு நூன்முகம், பதினான்கு அத்தியாயங்கள், ஒரு முடிவுரை என்று அமைய இதனை சீர்படுத்தினேன்.

அன்புமிக்க சோதரீர்! இந்த **ரிஸாலா**வை நோட்டமிடுங்காலை மொழிபெயர்ப்பில் யாதேனும் குற்றங்குறை காணப்படின் தீர ஆராய்ந்துபார்த்து சிந்தித்து பிழைதிருத்தஞ் செய்து கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

ஷா(ஹ்) மௌலா முஹம்மது கௌது சாஹிபுன் நாஹூரீ.

இன்னல்லாஹ கலக ஆதம அலாசூரதிஹி அல்லா(ஹ்) ஆதமைத் தனது வடிவத்திலே சிருஷ்டித்தான், என்ற திருவசனப்படி அல்லாஹுத்த ஆலாவுக்கு **சமஷ்டி**யான தொகை வடிவும், **வியஷ்டி**யான வகைவடிவும் உண்டென அறியவருகின்றது. அல்லா(ஹ்) என்ற சச்சிதானந்த திருநாமத்தின் தோற்றமான **சமஷ்டி** வடிவத்தையும், **ரஹ்மான்** என்ற திருநாமத்தின் தோற்றப் பொருளான **வியஷ்டி** வடிவத்தையும் பொதிந்து கொண்டவனாய் **இன்ஸான்** ஆகிய மானிடன் அமைந்திருக்கிறான், என்ற நாயக வாக்கியத்தை அநுசரித்தவண்ணம் ஹலரத்து மஹ்மூது பஹ்ரீ (கத்) ஆண்டகை அவர்கள், "உன்னுடைய அழகிய **சூரத்**தாகிறது அணுவாகவும், மலையாகவும், சிறிதாகவும், பெரிதாகவுமிருக்கிறது," என்று கூறியிருக்கிறார்கள்; அதாவது, **ரஹ்மான்** என்ற திருநாமத்தைச்சேர்ந்த திருநாமங்கட்கு தோற்றப் பொருட்களான **வியஷ்டி**யாகிய **ஆலம் அஜ்ஸாம்** என்னும் சடலோகத்தின் கோலங்களாம்; இந்த கோலங்களிலே உனது தொகுப்பான கோலம் பெரிதிலும், சிறிதிலும், மலையிலும், அணுவிலும் கூடுதல் குறைதலின்றி யாவற்றிலும் சமமாகவே இருக்கிறது: அதாவது, **அல்லா(ஹ்)** வென்ற **இஸ்மு**க்கு **முஸம்மா**வான **கஷ்புஹகீகீ**யுடைய **சூரத்**தாக இருக்கிறது. **பஐனமா துவல்லூ பதம்ம வஜ்ஹுல்லா(ஹ்).** (திருகுர்ஆன்).

'நீங்கள் எப்பக்கம் திரும்பினாலும் அங்கு அல்லா(ஹ்) வென்னும் **வஜ்ஹு** (முகம்) இருக்கிறது,' என்று அல்லாஹுத்த ஆலா திருவுளமானான். இவ்

வாறு உன்னை வர்ணிப்பதும் குறைபாடேயாம்; ஏனெனில், அகில பிரபஞ்சங்கட்கும் நடுவாக உனக்கோர் ஸ்தானமுண்டாயிருக்கிறது. நீயோ **குல்லு** வாகிய தொகையான கடலாயிருக்கிறாய். எனவே, அக்கடல் எவ்வாறு **ஆலம்** என்ற வகையாகிய சர்மாக்கூட்டில் நிறம்பும்? சிறிய பெட்டி ஒன்றில் சூரியனும், புஷ்ப வாடையினுள் புயல்காற்றும், துளி நீரினுள் கடல் தண்ணீரும் நிறம்பாதது போன்றே யாம்; வகையாகிறது தொகையினுள் மறையும். இதற்கு மாற்றமில்லை என்பது பிரத்தியட்சமான தோர் சொல்லாயிருக்கிறது. இந்த சொல்படி சர்வமும் உன்னிலிருக்கிறதென்பது தண்ணீர் மீன்களைச் சூழ்ந்திருப்பது போன்றதோர் உண்மையாம். **அலா இன்னஹூ பிகுல்லிஷையின் முஹீத்து** (திருகுர்ஆன்) அல்லாஹூத்தஆலா சகல வஸ்துக்களையும் சூழ்ந்தவனாயிருக்கின்றான், என்று ஹக்குத ஆலா திருவுளம்பற்றியிருக்கின்றான். என்னை மீண்டும் விசாரிக்கின் இந்தப்பாதையும் சரியன்று என்றே கூறத்துணிவேன். உன்னுடைய **வஹ்தானியத்து** என்ற ஏகத்துவத்தில் சிக்கு விழுகின்ற படியால் நான் உன்னை 'நீ யாதொரு வஸ்துவிலுமில்லை, உன்னில் எவ்வஸ்துமில்லை,' என்றே கூறுவேன். ஏனெனில், யாதொரு வஸ்துக்கும் உன்னில் சேர்ந்திருத்தலென்ற பதவியுண்டா யிருக்கவில்லை. ஆதலின், மேற்சொல்லப்பட்ட இரண்டு பாதைகளுள் ஒன்றேனும் சரியாகத் தோன்றவில்லை. இவ்விரண்டும் என் பார்வையில் விறண்டோடுவதாயிருக்கும். இந்த சொல்படி **நீ** அன்னியம் என்பதின்றிய ஏகன் என்றும், **நீ**தான் உள்ளவனென்

றும் சொல்லும்படியிருக்கிறது. இதுவும் ஒருவகை யான சித்த பிரேமையான மொழியாயிருக்கிறது. ஏனென்றால் நீ உன்னை இன்னான், இன்னவஸ்து வென்பதை நீயே அறியவேண்டுமேயன்றி, உன்னை அறிதற்கு உன்னைத்தவிர உனக்கு பிறிதொரு வேற்றுப்பொருள் உண்டாயிருக்கவில்லை. ஆகை யால் நீ இன்ன வஸ்துவாயிருக்கிற யென்பதை யும், நீ இன்னானாகவிருக்கிற யென்பதையும் நீ தான் அறிந்திருக்கிறாய். ஆதலின் உன்னை ஏகன் என்றும், சாட்சியானவ னென்றும் கூறுவது உனக்கு பொருத்தமா யிருக்கிறது. இவ்வாறு **ஹக்**கை அறியும் அறிவுதான் **மக்அது சித்கு** என்னும் **மெய்க்குடிகொண்ட இருப்பு** ஆகும். இதுவே தீர்மானமான நிலை என அறிந்துகொள். இன்னும் நீ **முத்லக்**கான **அலீம்** ஆகிய சம்பூர்ண ஞானியாயிருக்கிறாய். உனது ஞானம்தான் பல் வேறு ஹிருதயங்களுக்குள்ளே கூடாரம் அடித் திருக்கிறது. மேலும் நீ ஏகனுயும், இவை யாவும் உனது நிரமாயும், நீ என்ற தண்ணீரின் அலையாக வும், சகல நாமங்களுக்கும் நீ அடையாளமாகவும், சாய்கைகளுக்கு மூலமாகவுமிருக்கிறாய். இந்த பிர பஞ்சமாகிறது பிரபஞ்சமன்று. மெய்யாக உன்னைக் காட்டிவைப்பதாக இருக்கும். ஏனென்றால் **வுஜூது** ஆகிய உள்ளமை அடங்கலும் உனக்காக இருப்ப தினாலும், இந்த உள்ளமையின் தொகுப்பெல்லாம் உன்னில் இருக்கிறதினாலும் உனக்கு ஒத்தாசை செய்வோனும், சமத்துவமானவனும் ஸ்தூல, சூக் கும, காரணமாகிய முவ்வுலகிலுமில்லாதிருக்க உன் னுடைய **ஹிக்மத்து** ஆகிய ஆழிய பூராயமே ஆங்

காங்கு நடைபெற்றுவருகிறது. இன்னும் நீ இன்மையினின்றும் உள்ளமையை எடுத்து, மீண்டும் இன்மை என்கிற கண்டப்பொருளிலே உண்டென்பதைப் போட்டுவிடுகிறாய்; மேலும் இவ்விரண்டிலும் ஒரு இரகசியத்தைப் பொதியச்செய்து, இவ்விடத்தில் அறிவு அதனை விளங்கி அறிய சக்தியின்றி செய்துவிட்டாய். ஆகையால் இந்த மர்மத்தை உன்னையன்றி வேறு யாரும் அறியமாட்டார்கள். ஏனென்றால், வணங்குபவனும், வணக்கப்பொருளும், வணக்கமும் நீயாக இருக்கிறபடியால் மகா தூய்மையான உள்ளம் உன்னையே தேடுகிறதின்பால் வந்ததேயாயின் அவ்வேளை தானே தனது வீட்டிலேயே திரும்பவும்வரும். ஏனெனில் உன்னுடைய வெளியீட்டில் **கல்பு** ஆகிய நீ என்பதும் **மஃறூபு** ஆகிய நாயனும் வேற்றுப்பொருட்களாயில்லை. ஆகவே முன்னும், பின்னும், மேலும், கீழும், திசையும், வீடும் அதன் உள்ளும், புறமும் நீதான் பிரகாசித்துத் துலங்கிக்கொண்டிருக்கிற படியால் எல்லா பிரகாசமும் நீ என்ற சூரியனில் நின்றுமாயிருக்கிறது. இன்னும் நீ **ஹிக்மத்**தென்னும் ஆழிய பூராயத்தையுடையவன்; இவையெல்லாம் உனது **ஹிக்மத்**தானபடியால் சகல வஸ்துக்களுடைய **கல்பு**களில் கொழுகிய மூக்கணாங் கயிறுகளும் உன் கையிலிருக்கின்றன.

மாமின் தாப்பதின் இல்லா ஹுவ ஆகிதுன் பினாஸியதிஹா இன்னரப்பீ அலாஸிராத்திம் முஸ்தகீம்—(திருகுர்ஆன்)

"ஊர்ந்து திரியும் வஸ்துக்களில்லை, அவற்றின் முன்நெற்றி உரோமங்களை அவன் பிடித்தேயொழிய; என்னுடைய ரப் ஆகிறவன் செவ்வையான பாதையிலிருக்கிறான்,"—என்று அல்லாஹுத்தஆலா திருவுளமாயிருக்கிறான்.

அது போன்றே **நீ கல்பு** என்ற சபைக்கு விளக்காகவும், அதில் சாட்சியானவனுமாயிருக்கிறாய். இன்னும் **நீ** உயிர் என்ற **மஹ்பூப்** ஆகவும், நாங்கள் அதன் சரீரங்களாகவுமிருக்கிறோம். நாங்கள் உயிராகிவிட்டோமானால் **நீ** உயிர்க்குயிராகி விடுகிறாய். ஏனெனில் சரீரமும், உயிரும், உயிர்க்குயிரும் **நீ** தானாகவே யிருக்கிறபடியால் உன்னுடைய அமானிதம் என்ற பொக்கிஷத்தை முமூட்சு (சாலிகீன்)களுடைய ஹிருதயத்தில் வைத்திருக்கிறாய். உதாரணமாக இரத்தினமும், அதன் சுடரும், அது விளையுந்தலமும் ஒன்றாயிருக்கிறது. மேலும் அறிவென்ற முத்துக்கு தண்ணீரும், பார்வையென்கிற **நூருக்கு** ஒளிவும் உன்னைக்கொண்டா யிருக்கிறது. இன்னும் பிரபஞ்ச வஸ்துக்களை உண்டுபண்ணி வளர்க்கிற ஆழிப பூராயம் உனக்கு விளங்கியிருக்கிறது. அஃதெவ்வாறெனில், காகத்தின் கூட்டில் குயில் குஞ்சை வளர்ப்பதுபோன்று பதினெண்ணாயிரம் ஆலமடங்கலும் உனது கிருபை என்ற வேளாண்மையில் நின்றும் உணவைப் பெற்றுக்கொள்கின்றன. இன்னும் **நீ** வானலோகத்தில் **கல்பு** போன்று சூரியனை உண்டுபண்ணி அதற்கு சுற்றுதலைக் கொடுத்தாய். இன்னும் ஹலரத்து ஷெய்கு மஅரூபுல்கர்கீ (றலி) அவர்களை இல்லாமையினின்று உள்ளமையில் கொணர்ந்து, உன்னை அறியும்படி **இர்பான்** ஆகிய மெய்ஞ்ஞானத்தைப் போதித்து உன்னிலே நாஸ்தியாக்கி உன்னுடைய **தாத்து** ஆகிய தத்சொரூபத்தையும், **சிபாத்து** ஆகிய பண்புகளையும் அவர்களுக்கு நன்கொடையாகக் கொடுத்து தரிபாடாக்கிவைத்தாய்.

ஆகையால் **பஹ்ரீ** என்பவன் வேற்றுமை என்ற பொதும்பில் விழுந்துகிடக்கிறபடியால் அந்த பொதும்பில் அவனுக்கு துணையாயிருப்பவனே! எவ்வாறேனும் **அவன்** என்ற சலிப்பை நீக்கி விட்டு 'நீ' என்ற 'தனது கிருபை'யைப் புகட்டி, துர்க்குணங்களைப்போக்கி, அவனுடைய **கல்பை** என்னும் உன்னில் தரிபாடாக்கிவைத்து **குர்பு** எனும் சமீபித்தலையும், சிறப்பையும் அளிப்பாயாக. ஹலரத்து ஷா(ஹ்) பூஅலி கலந்தர் (றஹ்) அவர் களுக்கு சிறப்பைக் கொடுத்ததுபோல **இஷ்கு** (காதல்) என்ற நெருப்பில் **அவன்** என்ற சாம் பிராணியைப்போட்டுப் புகைத்து, புகையானபின் அந்த புகையை மேல்நோக்கி உயரும்படிசெய்து, பின்னர் அதைக்கொண்டு உன்னுடைய ஜோதியை விட்டும் தூரப்பட்டிருப்பவனை உனது சமுகத்தில் நாஸ்தியாகச் செய்தருள்வாயாக. இன்னும் **அவன்** என்ற தாகத்தை 'நீ' என்ற பானத்தினால் தீர்த்து விடுவாயாக. இன்னும் **அவன்** என்னும் பனித் துளியை 'நீ' என்ற சூரியனில் இழுத்துக்கொள்வா யாக. மேலும் அறைக்கூவி அழைப்போனுக்கு பிரதி சொல்பவனே! நபிகட்பிரான் (ஸல்) அவர்களுடைய வும், ஹலரத்து மஹ்மூது பஹ்ரீ (கத்) அவர்களு டையவுமான சீர் சிறப்பைக்கொண்டு இந்த பிரார்த் தனையை மொழிபெயர்த்தோனுடைய விஷயத்தி லும், எழுதினவனுடைய விஷயத்திலும் நிறை வேற்றித்தந்து **அவன்** என்ற பெரும் பாவப் பிழையையும் பொறுத்து 'நீ' என்ற கிருபாகடாட் சமும் புரிந்தருள்வாயாக. **நீ**யோவெகுவாக மன்னிப் போனும் பேரன்புடையோனுமாகும்.

உள்ளுறை.

பிரிவு.	பொருள்.	பக்கம்.
	புகழுரை.	i
	முகவுரை.	v
	ஹம்து ஸலவாத்து.	xxiii
	நான்முகம்.	xxv
1.	அல்லாஹுத்தஆலாவின் மகிமை	1
2.	நாயகம் (ஸல்) அவர்களின் கீர்த்தி	5
3.	'மிஃராஜ்' பற்றிய வர்ணிப்பு	9
4.	ஷெய்கு முஹம்மது பாகர் (றலி) அவர்களின் மகத்துவம்	17
5.	'ஆகிறுஜ்ஜமான்' பற்றிய விபரம்	28
6.	'ஸூஃபி' என்னும் மார்க்க உபன்னியாஸம்	32
7.	'ஹக்'கைத் தேடும் விபரம்	48
8.	'பக்ரு' என்னும் ஏழ்மைத்தனம்	55

அத்தியாயம்.

1.	'இன்ஸான்' ஆகிய மானிடனின் சிறப்பு	63
2.	'இர்பான்' பற்றிய விபரம்	83
3.	'ஹக்கு', 'கல்கு' ஆகியவற்றின் சம்பந்தா சம்பந்தம்	98
4.	'மலகூத்து' பற்றிய விளக்கம்	112
5.	மூன்று முத்துக்களின் விபரம்	120

அத்தியாயம்.	பொருள்.	பக்கம்.
6.	'காத்து'டைய 'நுஸூல்' விபரம்	125
7.	'ரூஹுமுத்லக்'கின் விபரம்	141
8.	'கல்பு', 'ரூஹு', 'நப்ஸு' இவைகளைப்பற்றிய விபரம்	152
9.	ஹலரத்து மன்ஸூருல் ஹல்லாஜ் (ரலி) அவர்களின் இரகசியம்	162
10.	'நூர்', 'கைபு', ஆகியவற்றின் விபரம்	174
11.	'இர்பான்', 'நுபுவ்வத்து', 'விலாயத்து', 'நள்று'.	186
12.	மௌத்து மஜாஸீ, மௌத்துஹகீகீ இதுகள் பற்றிய விபரம்	197
13.	இராகங்கேட்டல்	207
14.	'இஷ்கு'—பேரின்பக்காதல்	213
	முடிவுரை	255

بسم الله الرحمن الرحيم

نحمده ونصلي على رسوله الكريم

ஹகாயிகுஸ் ஸபா

என்னும்

பரமார்த்தத் தெளிவு.

முதலாவது (பஸ்லு) பிரிவு.

அருமையானவனே! அறிந்துகொள்வாயாக:—

அல்லாஹுத்தஆலா மகா பெரியவன். அவனாலேயே இந்த **ஜமால்** ஆகிய குளிர்ச்சியும், **ஜலால்** ஆகிய சூடும் ஏற்பட்டிருக்கிறதென்பது வெள்ளிடைமலை. அவனைக்கொண்டே சந்திர, சூரிய நட்சத்திர கிரகாதிகளுட்பட சகல வஸ்துக்களும் நடந்து திரிகின்றன. எவனொருவன் நாமத்தையும், நாமரூபத்தையும், அங்க அடையாளத்தையும் விட்டு பரிசுத்தமடைகின்றானோ அவன்தான் உயிர்களுக்கு எஜமானாகவும், உலகைக் காத்து இரட்சிப்பவனாகவு மிருக்கிறான். எப்பொழுது அவன் **நூர்** ஆகிய ஜோதியினின்றும் **இர்பான்** ஆகிய மெய்ஞ் ஞானத்தை எடுத்துக்கொண்டானோ அப்பொழுது

அவன் எடுத்துக்கொண்ட அந்த **இர்பான்** பிரபஞ்ச மனைத்திற்கும் மூலமாகிவிட்டது. இந்த மூலமாகிய மதிப்பற்றதோர் மாணிக்கத்தைக்கொண்டு இந்த அகிலத்தை மூன்று லோகங்களாகப் பிரித்தான். மேலும் ஒரு கண்ணைக்கொண்டு சகல லோகங்களை யும், ஒரு நாவைக்கொண்டு அனந்தம் **நுக்தா**வாகிய புள்ளிகளையும், அணுக்களையும் உண்டுபண்ணினன். இன்னும், சூரியனைக் கொண்டு சந்திரனுக்கு, கண்ணைக் கொண்டு கண்ணாடிக்குப் பதவியைக் கொடுப்பது போன்று, ஒளிவைக் கொடுத்தான். மேலும் நவகிரகங்களையும் இவ்வித ஆழியு பூராயத் தைக்கொண்டு கூடாரமாக நிறுத்தி, சகல வஸ்துக் களும் இயங்கி நிற்கவும், காற்று வீசியலையவும் இந்த ஆகாயத்தை விரிவாக்கி வைத்தான். இன்னும் **துன்யா**வென்கிற வர்த்தகப்பெண் நாள்தோறும் மனிதனை விலைக்கு வாங்கி தனக்கு அடிமையாக்கிக் கொண்டிருக்கிருள். மானிடனைகப் பிறந்து, துன்யா வுக்கு அடிமைப்பட்டு செத்திறந்துபோவது மகா கேவலமானது. ஏனெனில் **ஹக்கு தஆலா** மனி தனை தனது மேலான அன்பின் காரணமாய் ஒரு உன்னத நோக்கங்கொண்டு படைத்தானேயன்றி இந்த சடலோகத்தைப்போன்று அவனை சிருஷ் டிக்கவில்லை. இவன் **ஆதமீ** யல்லவெனினும் **ஆதம்** என்ற கோலமாகிய உறைக் கல்லிலே **மஆனி** அல்லது **தாத்து** என்ற பொன்னினது மாற்றை உறைத்துக் காட்டியிருக்கின்றதன்றி வேறன்று. மேலும் சரீரத்தை ஏரியாகவும், **கல்பை** மீனகவும் உண்டுபண்ணி **ஹக்கு**தான் வேட்டையாடிக்கொண் டிருக்கிறன். பலதிறப்பட்ட சாஷ்டாங்கங்களுக்கு

பல்வேறு ஆடைகளைக்கொடுத்து அவன் அந்தந்த சடங்களின் வாயிலாய் சாஷ்டாங்கத்தை ஏற்றுக் கொள்கிறான். இன்னும் காதிறு சர்வசக்தன் என்ற திருநாமத்தின் தத்துவத்தினால் மிருகம், புற் பூண்டு, கல்கறடு முதலானவற்றையும், இன்ஸான் ஆகிய மானிடனையும் வெளியாக்கிவைத்து, மானிட னுக்கு வாக்கு சாதுரியத்தையுங்கற்பித்து, அவன்து வசனத்தில் நின்றும் பாடலையும் வெளிப்படுத்தி வைத்தான்; மேலும் பகலை இரவில் நின்றும், இரவை பகலில் நின்றும் பிறப்பித்தான். இன்னும் வானம் என்ற தோட்டத்தை தண்ணீரின்றியே உயிர்ப்பித்து வைத்தான். பூமி என்கிற பூங்கா வனத்தை மழைத் தண்ணீரைக்கொண்டு ஹயாத் தாக்கி வைத்தான். இன்னும் அவன் நாடினால் ஒரு தாத்து ஆகிய சொரூபத்தைக் கொண்டு அநேகம் சிபாத்து ஆகிய பண்புகளையும், ஒரே இலையைக் கொண்டு அனந்தம் பூங்காவனத்தையும் சிருஷ் டித்து விடுவான். அவன் மீண்டும் நாடினால் இந்த பிரபஞ்ச விளையாட்டை அழித்துப் போடுவான். திரும்பவும் நாடினால் அழிவுற்றதை மறுபடியும் உற் பத்தி செய்துவிடுவான். மேலும் அவன் நாடி விட்டால் ஓட்டாஞ்சில்லியை சூரியனாகவும், சூரியனை ஓட்டைப்போல் ஒளியின்றியும் செய்ய வல்லவன். எண்ணற்ற கோடி வகை ஜீவ ஜந்துக்களை உண்டு பண்ணி, அவற்றின் உயிர்களின்பேரில் நாயகன் பரிபூர்ணமாக வெளியீடாகியிருப்பதால் பல்வேறு காரணங்களைக்கொண்டு விசாரணை செய்து அவ் வவற்றிற்குரிய பலாபலனை அளித்தான். அஃதெவ் வாறெனில், நிற்குணமான தாத்து ஆகிய தத்

சொரூபத்துக்கு தனது **சிபாத்து** ஆகிய பண்புகளின் வாயிலாய் அநந்த கோடி குணங்களிருந்தன. எக் குணத்திற்கு எந்த சரீரம் யோக்கியதையாயிருந்ததோ அதை அதற்குக் கொடுத்து வெளியாக்கி வைத்தான். ஏனெனில் யானையின் தத்துவம் கொசுவின் சரீரத்தில் வெளியானால் அதன் சக்தியும், அசைதலாகிய நடையும் எவ்வாறு வெளிப்படும்? இன்னும் பேனாக் கத்தியைக்கொண்டு வாளின் செயலும், ஊசியைக்கொண்டு வேலாயுதத்தின் செயலும் உண்டாகமாட்டாது என்பதைச் சுட்டிக் காட்டுவான் வேண்டி **அஉதா குல்லுஷைஇன் கலகஹு தும்மஹதா** (திருகுர்ஆன்) என்ற இறை வாக்கியம் வந்திருக்கிறது. அவ்வவ் வஸ்துக்கு அதனதன் படைக்கோலத்தைக் கொடுத்து, பின்னர் அவன் அதற்கு நேர்வழியுங் காட்டினான்.

அதுபோன்று எவன் சூரியனைப்போல் சகல வஸ்துக்களின்மீதும் மறைவின்றியே பிரகாசித்துக் கொண்டிருக்கிறானோ அவன் தெளிவினும் தெளிவாய், பொருளினும் பொருளாய் தூய்மையான சம்பூர்ண **தாத்து** ஆகிய தத் சொரூபமாகவும், இத்தகையதென்று வர்ணித்துக் கூறமுடியாத ஸ்தானமாயு மிருக்கிறபடியால் அவனை யார், எவ்வஸ்து என்பதைஒருவராலும் அறியவும், ஆராய்ந்து பார்க்கவும் முடிவதில்லை. ஏனென்றால், ஆங்கு எவனுடைய அறிவும் திசையற்றுப்போய், ஆராய்தல் மழுங்கிவிடுகின்றது. இன்னும் அவனை அறியவும், நோட்டமிட்டுப் பார்க்கவும் ஒருவரு மில்லையென்று நான் எவ்விதம் சொல்வேன்? எனினும் அவனுடைய

மகத்துவம் வலுப்பமா யிருக்கிறபடியால் அவனை அறியவும், அறியும் வகையுடன் அறிந்த **ஆரிபீன்** ஆகிய ஞானசொரூபிகளும் இருக்கின்றார்கள். **லைஸகமித்லிஹி ஷைஉன் வஹுவஸ்ஸமீஉல் பஸீர்** "அவனைப்போன்ற யாதொரு வஸ்துவு மில்லை; அவனே கேட்பவனும், பார்க்கிறவனுயு மிருக்கிறான்," என்று **ஹக்கு தஆலா** திருமந்திரயில் அருட் செய்திருக்கிறதுபோல அவனுக்கு யாதொரு அன்னியமுமில்லை, அன்னியம் அவனை அறியவு மாட்டாது.

இரண்டாவது (பஸ்லு) பிரிவு.

[இந்த **பஸ்லில்** படைப்பினங்களுள் சிரேஷ்டமாகிய நபிகட் கோமான் பாத்துஷா(ஹ்) முஹம்மது(ஸல்) அவர்களுடைய மகிமைப் பிரதாபத்தைப்பற்றி விவரித்துப் பேசப்படுகிறது.]

அருமையானவனே! அறிந்துகொள்வாயாக:—

வஹ்தத்து என்னும் ஏகத்தன்மையானது தன் சகல குணங்களையும் பூராயத்தையும் **கத்ரத்** தாகிய அநேகத் தன்மையில் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. அஃதெவ்வாறெனில், **வஹ்தத்** துக்கு சொந்தமானதொரு வஸ்து **கத்ரத்தின்**பால் காதல் கொண்டு தான் வெளியீடாகவேண்டிய நோக்கம் அல்லது நாட்டத்தைப் பெற்றுக்கொண்ட போது அதன் உன்னத அட்சரங்களெல்லாம் **வெளிப்பாடு** என்ற நூல்நிலையத்தில் வந்து வெளி யீடாயின.

"நாங்கள் மெய்யான அதிமேலான அட்சரங்களாகவிருந்து கீழானவர்களில் இறங்கிவிட்டோம்" என்று ஷெய்குல் அக்பர் முஹ்யியத்தீனிப்னு அரபீ (றலி) அவர்கள் அருளியிருப்பது போன்றாம்.

மேலும் இந்த **வஹ்தத்து** எனும் அட்சரம் தன்னையே சம்பூர்ணமாகக் காண்பிக்க நாடின போது **அப்ஜது** என்னும் அட்சரக் கணக்கு அல்லது புள்ளியாய் இந்த **பிரபஞ்சம்** என்ற பலகையில் வெளியாகி **வஹ்தத்துல்வுஜூது** ஆகிய ஏகத்துவ உள்ளமை எனப்பட்ட சித்தாந்தத்தை ஒவ்வொருவருக்கும் காட்டிவைக்கத்தக்க **இஸ்லாம்** (சாந்தி) என்கிற அறிவைக் கற்பிக்க **ஷரஉ** (சரியை) என்ற வாளாயுதத்தைக் கரத்தில் பிடித்தவண்ணம் மாணிலத்தோ ரனைவரையும் அந்த பாதையளவில் அழைத்தது. (வஹ்தத்து என்ற அட்சரம் நபி பெருமான்(ஸல்) அவர்களேயாம்.) "ளஹர்த்து இலா கல்கீ பிசூரத்தி ஆதமீ வகர்ரர்து ஹாதா பிஷ்ஷரீ அதி ஈமானு" அதாவது, "நான் சிருஷ்டியினளவில் மனித கோலங்கொண்டு வெளியாகி, அவ்வாறு வெளியானதை **ஷரீஅத்தில் ஈமான்** (விசுவாசம்) என்ற **கலிமா** (மூலமந்திரம்) ஆக நரிபடுத்தினேன்," என்று சொல்லப்பட்டதுபோல், நபிகட்பிரான்(ஸல்) அவர்கள் **அன்பியா**க்களுக்கெல்லாம் **சுல்தானு**க வும் தங்கள் **மஹ்பூபு** ஆகிய இறைவனுக்கு மிகவும் உவப்பானவர்களாகவும், தெய்வ சன்னிதானத்தில் அங்கீகரிக்கப்பட்டவர்களுக் கெல்லாம் கிரீடம் போன்றவர்களாகவும், பேரின்ப காதலர் அனை வருக்கும் தலைசிறந்தோராகவும், தங்களது **நூர்**

ஆகிய ஜோதியை இந்த சித்திரக் கோர்வையாகிய படைப்பினங்கள் யாவற்றிற்கும் மூலமாகப்பெற்ற வர்களாயும்; இம்மை, மறுமை என்ற விருக்ஷத்தின் கனியாகவும், இருலோகத்தாரின் கண்களுக்குப் பார்வையாகவும் சிறந்துவிளங்கும் அவர்களின் மஹோன்னத திவ்ய திருநாமமாவது பரிசுத்தமான **அஹது** என்ற தேசத்தின் சக்ராதிபதியான நாயக சிரோன்மணி **அஹ்மது**(ஸல்) என்பதாகும். அந் நாயகரை **ஹக்குதஆலா** கருணை கடாட்சித்து ஈடேற்றிவைப்பாஞகவும். "லகத்ஜாஅ மௌலாஞ பிசூரதி அஹ்மதி, இல்லா பகைபல் ஹக்கு யுஉரபு வபுக்ஸது"—அதாவது, மெய்யாக நமது ஆண்டவன் **அஹ்மது** என்ற கோலத்தில் வந்தான்; அப்படி வந்திராவிடில் **ஹக்**கை எப்படி அறியவும், நாடவும் முடியும்? "தஜல்லா இலாஹுான் தாக்க ஷக்ல முஹம்மதி, இதாமா தஜல்லல்ஹக்கு ஐன முஹம் மது"—அதாவது, அந்த நாயன் முஹம்மதுடைய தோற்றத்தில் வெளியானுன்; அவ்வாறு அந்த சூரத்தில் **ஹக்கு** வெளியாகிவிட்டால் **முஹம்மது** என்கிற நாமம் எங்கிருக்கிறது?

இந்த ஒரே ஜோதியைக் கொண்டுதான் அனந்தகோடி ஜோதிகளும், இந்த ஒரே சூரியனைக் கொண்டே பல்வேறு பிரகாசங்களும், இந்த ஒரே நாயகத்தைக் கொண்டுதான் இருபதிகளும் உண் டாகி ஒன்றையொன்று சங்கிலித் துடர்போன்று கொழுகுதலா யிருக்கின்றன.

"அனமின் னூரில்லாஹி வகுல்லு ஷைஇம் மின்னூரீ"—அதாவது, "நான் **அல்லாஹ்**வெனும்

ஒளியினின்று முள்ளவன், சகல வஸ்துக்களும் எனது ஒளியினின்று முள்ளவை,'' என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் திருவுளம்பற்றி யிருப்பது போன்று, சர்வமும் அவர்களுடைய மகோன்னத ஜோதியிலிருந்து வெளியானதாகும். இந்த நாயக வாக்கியத்தின் இலட்சியார்த்தம் யாதெனில், **நான்** என்பது **அல்லாஹ்**வென்னும் **ஜோதி**யாகவிருக்கும்; சகல வஸ்துக்களும் **நான்** என்ற ஜோதியின் வெளிப்பாடுகளாகும். "அனிய்யதீ பீஹா பதா குல்லு மஷ்ஹதி வகுல்லு மகாமின் கத் ஹவத்ஹா ஹாவிய்யதீ"—**நான்** என்கிற என்னுடைய **அனிய்யத்**தாகிய பிர்ம அகங்காரத்திலே தெரிசிக்கும் தலமடங்கலும் வெளியீடாகி யிருக்கின்றன. இன்னும் எல்லா **மகாம்**களையும் **நான்** என்ற **அவனது அறிவு** (ஹாவிய்யத்து சாரியத்து) பொதிந்து கொண்டிருக்கிறது, என்று ஹலரத்து மூஹ்யியத்தீனிப்னு அரபீ(றலி) அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள்.

இன்னும் ஜிப்ரயீல்(அலை) அவர்கள் நாயகமவர்களுக்குக் கொண்டுவந்த **வஹீ**யாகிய திருத்தூதைப்போன்று மற்றெந்தத் தீர்க்கதரிசிக்கும் கொண்டுவரவில்லை. இன்னும் அவர்களுடைய **முஃஜிஸாத்**தாகிய அற்புதத்திலே மிகுந்த இன்பமுண்டாயிருக்கிறது. அந்த இன்பமும் ஒரு அற்புதமாகவே யிருக்கிறது. மேலும் சந்திரனை இரண்டாய்ப் பிளந்ததும், சூரியனை மீண்டும் உதயமாகச் செய்ததும், பூமியில் நிழல் படாவண்ண மிருந்ததும், மேகம் குடையிட்டதும், சரீரத்தில் ஈ, எறும்பு மொய்க்காத

தும், நிலத்தில் பாதம் தோயாததும், சரீரத்தில் கஸ்தூரி வாடை கமழ்ந்ததும், திரேகத்தில் யாதொரு அழுக்கும் பிடியாததும், மலஜாதிகள் காணப்படாததும், முன்கண்டதூரம் பின்கண்டதும், விழிப்பும், தூக்கமும் சரியாயிருந்ததும், சரீரத்தில் ஒளி பிரகாசித்ததும் அந்த **முஃஜிஸாத்**தில் நின்றுமுள்ளவையாகும். மேலும், **முஹம்மதிய்யா** வென்ற சூரியன் உதயமானபோது **தீன்** (மார்க்கம்) என்ற பகற்பொழுது பிரபஞ்சம் பூராவும் சுடர்வீசி, **குப்ரு** (வழி கேடு) என்ற இராப்பொழுதைப் போக்கிவிட்டது. ஆனால், அந்த **குப்ரு** என்ற இருள் வேற்றுமையுடையோரைக்கொண்டு கொஞ்சம் மீதமாயிருந்தபோதிலும், **இஸ்லாம்** எனும் சூரியன் உதயமாகி, உயர்ந்து நடுநிலையில் நின்று பிரகாசிக்கிறபடியால் **குப்ரு** என்ற இந்த சொற்ப இருளையும் வெளிச்சமாக்கிவிடும். ஏனென்றால் **மீதாக்கு** எனும் வாக்குறுதி நாளிலிருந்து **ஹஷ்று** என்னும் நீதித் தீர்ப்பு நாள்வரை இந்த **தீன்** ஆகிய மார்க்கம் நிலைபெற்றிருக்கிறபடியால் இந்த **தீனை** ஹக்குதஆலா தரிபாடாக்கி வைப்பானாகவும் ஆமீன்.

மூன்றுவது (பஸ்லு) பிரிவு.

[இந்த **பஸ்லில் மிஃராஜ்** என்னும் பரலோக யாத்திரையுடைய வர்ணனைகளைப்பற்றி விவரித்துப்பேசப்படுகிறது.]

அருமையானவனே! அறிந்துகொள்வாயாக:—

பாதுஷா(ஹ்) முஹம்மது (ஸல்) அவர்கள் இந்த ஸ்தூல தேகத்துடனே பரலோக யாத்திரை

யாகிய **மிஃராஜு** செய்தார்கள். எனினும், அச்சரீரம் **கல்பு** என்னும் சூக்கும சரீரத்துக்கு பகரமாயிருக்கிறபடியால், ஏழுமடிப்பு கோதடியில் ஊசி ஏறினாற்போல அவர்கள் வானலோகத்தின்பேரில் ஏறிச்சென்றார்கள்.

பின்னர், அவ்விடமிருந்து வாகனத்தை **லாமகான்** என்ற வெட்டவெளியாகிய மைதானத்துக்கு நடத்திச்சென்று, இந்த **ஜிஸ்மு** (ஸ்தூலம்,) **கல்பு** (சூக்குமம்,) **ரூஹு** (காரணம்,) **நூர்** (மகாகாரணம்) ஆகியவை **சூத்ரத்** ஆகிய பலவற்றுடன் இணைபட்டிருக்கிறபடியால், இந்நான்கையும் விடுத்து அதற்கப்பால் சென்றார்கள். அப்பொழுது **நூருமுத்லக்** ஆகிய சம்பூர்ண ஜோதியும், இவன் என்பதும், அவன் என்பதும், அறிவென்பதும், அறியாமை என்பதும், குணமென்பதும், குணியென்பதும் இன்றிய நிர்மலமாகிய நேரம் உண்டானது. அப்பொழுது இந்த மகாபரிசுத்தப்பேரின்பக்காதலர் தன்னுடைய **மஹ்பூபு** இடத்தில் "எனது நாயகமாகிய நண்பனே! என்மீது உனது காதல் மிகவும் ஏற்பட்டிருப்பதால் **நீ** என்பால் கிருபை கூர்ந்து உனது **லிகா** வென்னும் **தீதார்** தெரிசன பாக்கியத்தை எனக்கு தந்தருள்வாயாக. நானோ உனது **லிகா**வை ஆதரவு வைத்தவனேயன்றி, உண்மையில் வேறு நிலையை ஆசித்தவனன்று. எப்பொழுதும் உன்னுடைய **ஜமால்** ஆகிய பேரழகின்பால் காதலித்தவனாக நானிருக்கிறேன். ஏனெனில், உன்னுடைய தெரிசனையின்றி எனது மனம் நிம்மதியடையாது" என்று பிரார்த்தித்துக்கொண்டபோது

தன்னைத்தெரிசிக்க வந்தவனுக்கு தெரிசனங் கொடுப்பது எஜமானனுக்கு அவசியமானபடியால், **ஹக்கு**க்கும் **கல்கு**க்கும் நடுவிலிருந்து சிருஷ்டி கர்த்தாவான **ஹக்கு** என்றும், சிருஷ்டிப் பொருள்களான **கல்கு** என்றும் இரண்டுபடுத்தி காட்டிக் கொண்டிருந்த பெருந்திரையின் நடுவிலிருந்த முடிச்சு சுத்தமாக அவிழ்ந்துபோய், **தான்** அவனென்றும் அவன் **தான்** என்றும் ஆகி **ஹக்கு**டைய தெரிசனைக்கிடைத்த அதேக்ஷணத்தில் கிழிந்தது.

"மன் ர ஆனீ பகத்ரா அல்ஹக்கு"—'எவனொருவன் என்னைக்கண்டானோ நிட்சயமாக அவன் **ஹக்கை** கண்டவனாகும்' என்று நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ள சைக்கினையை **ஆரிபீன்**களான மெய்ஞ்ஞான நிஷ்டாபரர்கள் நன்குவிளங்கியிருக்கின்றனர். ஏனெனில், நாமம் **அஹது** ஆகவும், அடையாளம் **அஹ்மது** ஆகவுமிருப்பதால் **அஹது அஹ்மது** ஆகிய இவ்விரண்டும் இரண்டன்று, ஒன்றேதான். ஒரேவஸ்துவிற்கு இரண்டு பெயர்கள் இடப்பட்டிருப்பதை க்வனிப்பாயாக. ஆனால் **மஸ்லிஹத்து** ஆகிய இணக்கத்தையுடைய **மீம் அஹது**டைய நடுவில் வந்து, இருபதிக்கும் **இரண்டு** என்கிற வேற்றுமையின் படிப்பைக் கற்பித்துக்கொடுத்தது; அந்த **மீம்** ஐ **அஹது**டைய **அலிபு** என்றும், அப்பொழுதுள்ள **அஹது**டைய **அலிபு** இப்பொழுது **மீம்** ஆக இருக்கிறதென்றும் அறிந்துகொள். ஆகையால், **முவஹ்ஹிதீன்** ஆகிய அத்வைதிகளிடத்தில் யாதொரு மாற்றமின்றியும் அந்த **மீம்** தான் ஒன்றுபடுதலுக்

குரிய **முர்ஷிது** என்னும் நேர்வழிக்காட்டியாக யிருக்கிறது. இந்த **மீம்** ஐக்கொண்டுதான் **அறிவு** உணர்ச்சி பெற்று, ஒன்றை உடைத்து இரண்டு என்பதாய்க் காண்பித்தது. எனது சிறப்பு தங்கிய நண்பர்களே! **சாலிகீன்** ஆகிய முமூட்சுகள் பேரில் இந்த **மீமு**டைய **இஹ்ஸான்** அனந்தமுண்டா யிருக்கிறது. ஏனென்றால் இந்த சிருஷ்டிகளுக்கு அடிமைத்தனத்தைக் கொடுத்ததும், நாயகத் தனத்தை வெளியாக்கிவைத்ததும் அதுதான். அந்த **மீம்** வெளிப்பாடு ஆகாதிருக்கிறபோது **ரூஹு** என்பதும் **மூச்சு** என்பதும் வெளியாகாமல் **மக்சூது** (இலட்சியப்பொருள்) ஆகிய **ஹக்கு**தான் என்பதும் இல்லாமையாயிருக்கிற **கன்ஸுல்மக் பிய்யா** (மறைந்த பொக்கிஷம்) ஆகிய குறிப்பற்ற நிலையில் மறைந்திருந்தான். அப்போது **லாஹூத்து** (மகா காரணம்) **ஜபரூத்து** (காரணம்) **மலகூத்து** (சூட்சுமம்) **நாசூத்து** (ஸ்தூலம்) என்ற நான்கு தங்குமிடங்களான **மன்ஸில்**களும், பஞ்சேந்திரியங் களும் இல்லாதிருந்தன. ஆனால், தான் இருந்தான் எனினும், தான் என்பதைவிட்டுத் தூய்மையாகவும், இந்த நன்மை, தீமைக்கு அதீதமாகவும், சர்வத்தை யும் விட்டு நீங்கினவனாகவுமிருக்கிறபோது ஏழுதட்டு களையுடைய வானம் என்ற மாடிவீடும், அதனுள் பிரகாசிக்கிற விளக்குகளான நட்சத்திரங்களும், பூமியும், பஞ்சபூதமும், கற்கறடு, புற்பூண்டு, மிருகாதி என்னும் ஆலம் (பிரபஞ்சம்) என்கிற போர்வையும், அதன் விளையாட்டும், விளையாடுபவனும், சரீரம் என்கிற இரதத்தினமும், அதன் உயிர் என்ற சுட்டும், உண்மை என்ற புருஷனும், இன்மை என்ற ஸ்திரீ

யும் இல்லாதிருந்தன. இன்னும் **ஹஸ்தீ** (உள்ளமை) என்ற பதவியில் **இர்பான்** (மெய்ஞ்ஞானம்) என்ற வீடும் அந்த வீட்டின் விளக்கான **நள்று** என்கிற பார்வையும், **நான் நீ** என்கிற பிரியம் முதல் யாதொன்றுமில்லாமல் **ஹக்கு** அவ்வியக்தமாயிருக்கிறபோது, **அறிதல்** என்ற முகத்தைத் எந்நேரம் காண்பித்ததோ அந்நேரத்தில் தன்னில் தன்னை அறிந்தவனுக, தன்னுடைய **ஹஸ்தீ**யைத்தான் பெற்றுக்கொண்டபொழுது உள்ளது இந்த **ஹகீகத்து முஹம்மதிய்யா**வாகிய 'முஹம்மதுடைய அகமியம்' என்று அறிவாயாக, இன்னும் **குன்து கன்ஸன் மக்பிய்யா**—'நான் அவ்வியக்த புதையலாயிருந்தேன்,' என்று **ஹதீ துகுத்ஸி**யிலே **அல்லா ஹுத்தஆலா** திருவுளமானுனே அதை **அல்லா ஹுத்தஆலா** வென்றும், **பஅஹ்பப்து அன் உஃரிப** 'என்னை அறியப்பட நான் ஆசித்தேன்' என்று திருவுளமானுனே அதை **ஹுப்புதாத்து** (தாத்தின் காதல்) ஆகிய **முஹம்மது** (ஸல்) அவர்கள் என்றும் நீ அறிந்து கொள்வாயாக. இன்னும் இந்த **நூர்** ஆகிறது அந்த **நூரி**ல் நின்றுமுள்ளது. அது நெருப்பாகவும், இது அதன் சுடராகவுமிருக்கிறது. இந்த சுடர்தான் அந்த நெருப்பை வெளியில் வந்து அறிவித்துக்காட்டியதாகும். இந்த இரகசியமான **சிர்**ரை நான் எதுவரையும் தொடர்ச்சியாக எழுதுவேன்? **ஹஸ்தீ**யாகிய தாத்திலிருந்துதான் இந்த **இர்பான்** (மெய்ஞ்ஞானம்) வெளியாயிருக்கிறது. ஆகையால் **அல்லா**(ஹ்)வின் வேறான **இலாஹு** என்ற நாயகன் யாருமில்லை. **அல்லா**(ஹ்)வின்மீது சத்தியமாக அவனுக்கு நாயகம் . முஹம்மது (ஸல்) அவர்கள்

திரையிடுகிறவர்களாகும். ஆயினும், அநேகர் அவர்களை தூதர் என்றும் சொன்னூர்கள். **நௌஷாபா** தேசத்தின் அரசியாகிய **பாத்துஷா(ஹ்)ஸாதி**யிடம் **சிபத்து** (வர்ணனை) என்ற **லிபாஸ்**ஆகிய உடையை உடுத்தி **ரசூல்** தூதர் என்கிற நாமம் தரித்துக் கொண்டு போய் பேசினது அந்த **இஸ்கந்தர்** என்கிற **பாத்துஷா(ஹ்)**தானுகும். சில மகான்களான ஞானசொரூபிகள் **அனு அஹ்மதுன் பிலாமீம்** நான் மீமின்றியே அஹ்மதுவாயிருக்கும் என்ற ஹதீதுடைய மர்மத்தின்படி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அறிந்திருக்கிருர்கள். **குல் இன்னமா அனுபஷரும் மித்லுகும் யூஹாஇலய்ய** நான் உங்களைப்போன்ற மனிதன் ஆயினும், என்னளவில் **வஹீ** அறிவிக்கப்படுகிறது,' என்ற **ஆயத்** (சுருதிப்பிரமாண)த்தின் அர்த்தப்படி அநேகம் பேர் அவர்களை நம்போன்ற மனிதர்தான் என்று அறிந்தார்கள். ஆனதயினல் **வஇன்னஹு பிள்ளாஹிரி மினல்பஷரி வபில்ஹகீகத்தி ஹக்குன் முபீன்**—

'திட்டமாக அவர்கள் வெளிப்படையில் மனிதரில் நின்றுமுள்ளவர்களும், அந்தரங்கத்தில் பிரத்தியட்சமான **ஹக்கு** ஆகவுமிருக்கும்.' மேலுங் கூறுமிடத்து, **வஇன்னஹு மள்ஹருசிர்ரில்வுஜூதில் ஜுஸ்இய்யி வல்குல்லிய்யி** "இன்னும் அவர்கள்தான் தொகையான சமஷ்டி **வுஜூது** ஆகிய உள்ளமையினதும், வகையான வியஷ்டி **வுஜூது** ஆகிய உள்ளமையினதுமான **சிர்ரு** என்னும் இரகசியம் வெளிப்பாடாகும் ஸ்தானமாயிருக்கிருர்

கள்.' **வஇன்ஸானு ஐனில் வுஜூதில் உல்விய்யி வஸ்ஸுப்லிய்யீ** அவர்கள் **வுஜூது உல்வீ** என்ற மேலான **ஆலத்துக்கும் வுஜூது ஸுப்லீ** என்ற கீழான ஆலத்துக்கும் **ஐனுல் இன்ஸான்** என்கிற சுயார்த்த இன்ஸானுக்கும்.' **வரூஹுல் ஜஸதில் கௌனைனி வஐனுல் ஹயாத்தித்தாரைன்** 'இரு லோகங்களின் சரீரத்துக்கு **ரூஹும்**, இம்மை, மறுமையின் உயிரும் அவர்களேயாம்.' **வகிப்லதில் வாஜிதி வல்மௌஜூது வாஜிது** எனும் **ஹக்கும்**, **மௌஜூது** என்ற கல்கும் முன்னோக்குந் தலமான **கிப்லாவும்** அவர்கள்தான்.' ஆகையால், நபிகட்பிரான் (ஸல்) அவர்களுடைய சிர்ரை மிகமிக விஸ்தரித்துக் கூறவேண்டுமானால் இந்த நூல் விரிவு பெறுமாதலால் **முரீதீன்கள்** விளங்கிக்கொள்ள போதுமான அளவுக்கு சுருக்கமாகச் சொல்லியிருக்கிறோம். அதன் இரகசியத்தைப்பற்றி சம்பூர்ண வழிகாட்டியிடத்தில் நீ விளங்கி அறிந்துகொள்வாயாக. அவருடைய உதவியின்றி நீயே விளங்கியறிந்தால் விளங்கினதுபோல் தோற்றமேயன்றி, அதன் அகமியத்தை உள்ளவுள்ளவாறு விளங்கியறிய முடியாது. மேலும் அறிவாயாக:— நபி (ஸல்) அவர்கள் **அல்லா(ஹ்)**வுக்கு தோழராயிருந்தவாறே **அஸ்ஹாபுல் கிபார்** ஆகிய மாபெருந் தோழர்கள் நால்வரும் அந்நபியுல்லா(ஹ்) (ஸல்) அவர்களுடைய நண்பர்களாயிருந்தனர். அவர்களுள் முதல்வராகிய சத்தியவந்தர் **அபூபக்கர் சித்தீகு** (றலி) அவர்களும், இரண்டாமவரான நெறிமுறை தவறா **உமரிப்னு கத்தாப்** (றலி) அவர்களும், மூன்றாமவராகிய நேர்மைமிக்க நாணத்தைப்பெற்ற **உத்**

மான் (றலி) அவர்களும், நான்காமவரான **அல்லா** (ஹ்)வின் **வலீயாகிய அலிய்யுன் கர்ரமல்லாஹு வஜ்ஹஹு** ஆகியோர்களுமாகும். இவர்கள் நால்வரும் எவ்வாறு ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக சேர்ந்திருந்தார்களென்றால் **அர்பஅ** என்று அழைக்கப்பட்ட **அரபி**வார்த்தையிலுள்ள நான்கு அட்சரங்களும் ஒன்ருய்ச் சேர்ந்திருப்பதைப் போன்றும்.

எனவே **குப்ரு** என்ற பூட்டை **இஸ்லாம்** என்கிற திறவுகோலால் திறந்தவர்களே! சந்திரன் என்ற போர்வையை இரண்டாக கிழித்தவர்களே! என்னுடைய **வுஜூது** என்ற குப்ரை இன்மையாக்கி, என்னுடைய **இஸ்லாம்** என்கிற மொழியிலுள்ள **லாம்** ஐயும் நீக்கிவிட்டு, என்னை **இஸ்மு** ஆக்கிவையுங்கள். இன்னும், எனது கரத்தைப் பிடித்து காப்பாற்றும் எனது **பீர்** தங்களுடைய **நாஇபு** பகரமாயிருக்கிறபடியால் இருமனப்படாது ஒரேமனத்துடன் அவருடைய பாதையில் எந்நாளும் தரிபாடாயிருக்கவும், சுக, துக்கம் முதலான சகல காரியாதிகளிலும் அவருடைய ஞாபகம் என் உள்ளத்தில் பதிந்திருக்கவும், எனது **கல்பு** அவர்புறம் திரும்பி சார்ந்திருக்கவும், எனக்கும் அவருக்குமிடையிலுள்ள **கைர்** (வேற்றுமை, அன்னியம்) என்ற திரைகிழிந்துபோகவும் தாங்கள் பேருதவிசெய்தருள்வீர்களாக. **வமா அர்சல்னக இல்லா றஹ்மதுன் லில் ஆலமீன்**— 'முஹம்மதே! உம்மை உலகத்தோரனைவருக்கும் கிருபாகரராகவேயொழிய நாம் அனுப்பிவைக்கவில்லை', என்று அல்லாஹுத்

தஆலா திருவுளம் பற்றியிருக்கிறான்.

நான்காவது (பஸ்லு) பிரிவு.

[இந்த **பஸ்**லில் ஷெய்குல் முஅள்ளம் ஹளரத்து ஷா(ஹ்) முஹம்மது பாக்கர் (ரஹ்) அவர்களுடைய கீர்த்திப்பிரதாபத்தை பற்றி பேசப்படுகிறது.]

அருமையானவனே! அறிந்துகொள்வாயாக:—

அல்லாஹுதஆலாவுக்கு மிகவும் உவப்பானவரும், நபி(ஸல்) அவர்களுக்கு பகரமானவரும், மனிதவர்க்கத்தினருள் **மல் ஹருல் அஜாயிபு** எனப்படும் புதுமைகள் வெளிப்படும் ஸ்தானமானவரும், இன்னும் நிரப்பமாகிய **மஅரிபா** வென்கிற கடலானவரும், **மஅரிபா** (பிரம்மஞானம்) என்னும் ஜோதிதானானவரும், தனது **ஜிஸ்மு** ஆகிய சரீரம் ஜோதிமயமானவரும், **ரூஹு** ஆகிய ஆத்மாவானது **மஹ்பூபு** என்கிற **ஹக்குதஆலா** வாய் ஆகியிருந்தவரும், **முஹம்மதிய்யா** வென்கிற பாலமிர்தத்தைக் குடித்து எந்நாளும் மஸ்தாயிருக்கிறவர்களுமான **ஹ்லரத்து முஹம்மது பாக்**ர்(கத்) அவர்களாகும். அவர்கள் தனது **ரூஹு, ஜிஸ்மு** என்றழைக்கப்பட்ட இரண்டையும் **இர்பான்** (மெய்ஞ்ஞானம்) என்ற சுத்தமான குகையில் வைத்து உருக்கி ஒரு உண்டையாகச்செய்து, உண்டை எனும் பெயரை தனக்கு வைத்து, பின்னர், அந்த உண்டையை ஆலங்கட்டி மழைபோன்று உருக்கி, தண்ணீராக்கி அந்த தண்ணீரை **நூருல் முத்லக்** என்ற சம்பூர்ண ஜோதியாகிய சமுத்திரத்தில் சேர்த்துவிட்டு **வஹ்**

தத்து எனும் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவராகும். ஆனல் இந்த தெளிவும், இந்த பிரகாசமும், இந்த பொழுதும் தனிப்பட்டவை; இந்த தெளிவோ யாவருக்கும் உண்டாவதன்று. எனது ஷெய்கு அவர்களை **குத்பு** என்று சொல்வதால் மட்டிடப்பட்டு விடுகிறது. அவர்களோ தங்கள் **ஸைர்** எனும் யாத்திரையில் கடலுக்கு ஒப்பானவர்களாயிருக்கிறூர்கள், அன்றி, அவர்களை **கௌது** மூர்த்தி என்று கூறுவதாலும் எல்லைக்குள்ளடக்கிய தோஷம் நிகழ்கிறது. யாதொரு மட்டுதிட்டமென்பதின்றி அவர்கள் அகண்டபரிபூர்ணமானவர்கள். ஆகையால், மேன்மைதங்கிய அத்தகையாருடைய பதவியைப்பற்றி என்னல் எம்மட்டும் விவரித்தெழுத முடியும்? கூறுமின். கொஞ்சமேனும் எழுதுவதற்கு ஓராயிரம் எழுத்தாளர்கள் தேவையாகின்றனர். இக்காலத்தில் ஹலரத்து அபாயஸீதுல்பிஸ்தாமி (றலி) அவர்களைப்போன்றவர்களிருந்தால், எனது ஷெய்கு அவர்களைத் தெரிசித்து பலன்களை அடையப்பெற்று, அவர்களின் பதவியுன்னதத்தைப் பற்றி இடைவிடாது வர்ணிப்பார்கள். அஃதன்றி பாஷாஞானம் மட்டும் தெரிந்த நம்மால் அவர்களின் மகிமையை எவ்வாறு அறிய இயலும்? ஏனெனில், **இர்பான்** ஆகிய **மிம்பர்** என்னும் குத்பாமேடையின் மீது நிற்போரின் உன்னத நிலையை மறதியாகிய பூமியில் உட்கார்ந்திருக்கும் நாம் எவ்விதம் பெற்றுக்கொள்ளுவோம்? ஆதலின், நிரப்பமானவர்களை நிரப்பமானவர்கள்தான் அறிவார்களேயொழிய, நம்போன்ற குறைபாடுள்ளவர்கள் எவ்வாறு அறியக்கூடும்? மேலும், அவர்கள் **பீர் மஷா**

இகு ஆக இருப்பதன்றி சம்பூர்ண **பகீர்** ஆகவு மிருந்தார்கள். அறிந்து கொள்வாயாக:— **பகீர்** என்னும் **இன்மை** எப்பொழுது பூர்த்தியடைந் ததோ அப்பொழுது அது தன்னுடைய நண்ப னகிய **மஹ்பூ**பைக்காட்டி வைக்கிறது." "இதா தம்மல் பக்ருபஹு—வல்லா(ஹ்)". இன்மை பூர்த்தி யாயிட்ட பொழுதுள்ள (நிலையை) அதை அல்லா(ஹ்) வென்று ஒரு மெய்ஞ்ஞானி அழைப்பது போன்ரும். இதில் ஆழிய கருத்து இருக்கிறது. அதனை நான் சைக்கினையாகச் சொல்கின்றேன்; அதனைப்பற்றிய விவரத்தை **காமில்** ஆகிய சம்பூர்ண ஞானியிடத்தில் விளங்கி யறிந்துகொள்வாயாக. அதாவது:—

அல்லாஹு—த்த ஆலாவின் **தாத்து, சிபாத்து** இன்னவென்றும், உன்னுடைய **தாத்து, சிபாத்து** இன்னவையென்றும் விவரித்து அறிந்த பின்னர், அவனுடைய தரிபாடான பூர்வீக **தாத்து, சிபாத்**தில் உன்னுடைய புதுமையாகிய இடையிற்றோன்றிய **தாத்து, சிபாத்**தை இன்மை செய்கிற முறைப்படி நீ இன்மையாக்கினல், அப்போது நீ **குர்பு பராஇலு** (**பர்**லான வணக்கம்), **குர்பு நவாபிலு** ('**நபி**லான வணக்கம்) ஆகிய இவ்விரண்டின் மூலியமாயும் **ஹக்**கில் முடுகிவிட்டாய். அதன்பிறகு, **மலகூத்து**டைய (சூக்கும) வடிவத்தை உன்மனதில் சித்திர மாகப் பதிந்துகொண்டு, எந்நேரமும் **ஹக்**குடைய **ஜமால்** ஆகிய பேரழகை தெரிசனை செய்வதில் ஈடுபட்டிருந்து, இராப்பகலாய் **ஹக்**கின் பொருத் தத்தை நாடி தெண்டிப்பு செய்துவா. அப்போது **ஹிஜாபுலுள்மானி** என்னும் இருளின் திரை

யாகிய பீருகம், ஷைத்தான் ஆகியவற்றினுடைய செயற்கை குணங்களான பழிப்புமிக்க தீயச்செயல்களும்; பழிப்பு நிறைந்த துற்குணங்களும் நீங்கி **ஹுப்புத்துன்யா ரஉஸுகுல்லி கதீஅதின் "துன்யாவின்** மீதுள்ள ஆசை பாவங்கள் யாவற்றிற்கும் சிரம்போன்றது" என்ற நாயக வாக்கியப்படி **துன்யாவின்** ஆசாபாசங்களை விட்டொழித்து, **ஹிஜாபு நூரானீ** என்கிற ஒளியின் திரையாகிய **மலக்குகளின்** செயற்கை குணங்களான புகழ்மிக்க குணங்களையும்; புகழ்நிறைந்த செயல்களையும், **தௌஹீது** (அத்வைத சித்தாந்தம்), **மஅரிபா** (பிரம்மஞானம்) **இஷ்கு** (பேரின்ப காதல்), **முஹப்பத்து** (பேரின்ப ஆசை) முதலானவற்றையும் **நீ** எடுத்து, அதில் இஞ்சிற்றும் **கைரிய்யத்து** அன்னியம் வராதபடி நடந்து **தாத்து, சிபாத்து** (பண்புகள்), **அஸ்மா** (திருநாமங்கள்), **அப்ஆல்** (செயல்கள் அல்லது திருவிளையாட்டல்கள்) மூலமாகவும், உன்னை இன்மையாக்கி, அகண்டேகரசமான பூர்ணமாகச்செய்து, உன்பார்வையிலும், உன்னிலும் இருப்பன யாவும் **ஹக்கு, ஹக்கு** என்று தரிபடுத்தி **மூதூ கப்ல அன்தமூதூ** 'நீங்கள் மரிக்கும் முன்னர் மரித்து விடுங்கள்' என்று வந்த **ஹதீது**படி நீயும் **ஹக்கிலே** இன்மையாகி, **ஹக்கு, கல்கு** என்று வேறுபடுத்திக் காட்டிக்கொண்டிருக்கிற உனது சுட்டறிவும் அற்றுப்போனால்தான் உனக்கு **பக்ரு** என்னும் எளிமை நிறப்பமாயிற்று. அந்நேரத்தில் **நீ** என்பதும் **அவன்** என்பதும் நீங்கிப்போய் தானே தானாயிருக்கிற **பகா**வென்னும் நித்தியத்தைப்பெற்று **தகல்லகூ பிஅக்லாகில்லா(ஹ்) அல்லா(ஹ்)** வின்

குணங்களைக்கொண்டு நீங்கள் குணங்கொள்ளுங்கள் என்ற நாயக வாக்கியப்படி, **ஹக்குடைய** குணங்கொண்டு **காமில்** என்னும் சம்பூர்ணனாக ஆகியிருப்பாய். அப்போதுதான் **அல்பக்ரு பக்ரீ வல்பக்ரு மின்னீ**– **பக்ரு** என்னும் எளிமை எனது பெருமை; சகல பெருமையும் என்னில் நின்றுமுள்ளதாம்,' என்ற ஹதீது நிறப்பமாயிற்று. அறிந்து கொள்வாயாக:– நேர்வழி பெறுதற்குரிய பாதை இவ்வாறிருக்க, அஞ்ஞானிகளான **ஷெய்கு** மார்கள் தங்கள் சிஷ்யர்களுக்கு அண்டபிண்ட சராசரமடங்கலும் **ஹக்கு**தான், நீயும் **ஹக்கு**தான், ஆதலின் நீங்கள் நாடியதை செய்யலாமென்று சொல்லிக் கொடுப்பார்கள். அதனைக்கேட்டு அவன் **நப்ஸானீ**யு(தமோகுண மனது)டைய செயல்களில் மூழ்கி **விலக்கப்பட்ட** வற்றைச் செய்து, வரம்புமீறி மிருகத்தைப் போன்று தான் நாடியதை செய்து வருவதால் மனக்கண் குருடடைந்துபோய், சூட்சுமலோகத்தின் அதிநுட்பமும், சூட்சுமமுமான மண்டலத்தில் ஏறாமல் **அனாஸிறு** என்னும் பூதாதிகளின் கண்டிதமான குணத்தை எடுத்து, பெரிதும் கனத்துப் போய் இந்த **நாசூத்து**டைய உலகம் என்றழைக்கப்பட்ட கீழினுங்கீழான **புஉது– தூரம்** என்ற நரகில் வீழ்ந்துகிடப்பான். இத்தகைய வீணர்களின் சொற்களுக்கு காது தாழ்த்தா வண்ணம் நம்மனைவரையும் அல்லாஹுதஆலா காத்துக்கொள்வானாகவும். ஆமீன். ஆமீன். ஆமீன்.

ஆனால் இந்த **பக்ரு**டைய நிலையில் அன்னியம் என்ற பக்ஷிக்கு பறக்கும் சக்தி கிடையாது. இந்த

மர்த்தப்பாவில் தன்மை மயமாகவே யிருக்கிறது. மேலும் எத்தனையோ **பகீரு**கள் தான் **பனு** நாஸ்தி யாவதை ஆசித்து வந்தனர். என்னுடைய ஞான தேசிகரோ **அனு**வின் பேரில் எப்பொழுதும் காதலித்து வந்தார்கள். ஏனென்றால் **அனு**வின் முடிவையும் **பனு** இன்மை செய்வதின் முறையையும் ஹலரத்து பாத்துஷா(ஹ்) நபி (ஸல்) அவர்களுடைய ஹதீதுபடி எனது ஞானதேசிகர் அவர்கள் விளங்கியிருந்தபடியாலேயாம்.

அறிந்து கொள்வாயாக:— **மன்அரப நப்ஸஹு பகத் ஆரப ரப்பஹு** 'எவனொருவன் தன்னை அறிந்தானோ அவன் திட்டமாக தனது நாயகனை அறிந்துவிட்டான்,' என்று நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமானார்களேயன்றி **மன்அப்னு நப்ஸஹு பகத் அரப ரப்பஹு** 'எவனொருவன் தன்னை நாசஞ்செய்தானோ அவன் திட்டமாக தன்னுடைய நாயகனை அறிந்திட்டான்,' என்று ஒரு காலும் கூறவில்லை. **ஹக்**கிலே தன்னை இன்மை செய்வதினால் நாமரூபங்களை விட்டும் **ஹக்**கை தனிமையாக்குதல் நிறப்புமாகும் **அனு**வை அறிவதின் பேரில் தான் **தௌஹீது** சம்பூர்ணத்தைப் பெறுகிறது. அதனால்தான் அவர்கள் மெய்யாக தொன்றுதொட்டுள்ள யாத்ரீகராம்! இன்று அல்லது நேற்றைய **முஸாபிர்** அன்று. துவர்க்கமின்றிய அநாதிகாலங்கொடுத்து அவர்கள் யாத்ரீகராகப் புறப்பட்டு, **நாஸூத்**— ஆகிய ஸ்தூல லோக நிலையை யடைந்து, இந்த **ஜிஸ்மு** ஆகிய ஸ்தூல தேகத்தின் பிரயாணத்தை சந்தோஷத்துடன் செய்து, இந்த

கல்பு ஆகிய வஸ்துவை அறிந்தவுடன் **மஹ்பூபு** ஆகிய தனது நண்பனை அடையப்பெற்று, பின்னர், இந்த சரீரத்தில் நின்றும் இதன் **மஃனு** வென்னும் வாச்சியார்த்தமாகிய **மலகூத்து** என்னும் சூட்சும வடிவைப்பெற்றுக்கொண்டு இந்த சரீரத்தின்பேரில் மனவெறுப்படைந்தவுடன் **மலகூத்து** எனப்பட்ட பழமையாகிய சூட்சும தேகத்தில்போய் தரித்திருந்தார்கள். இன்னும் மீனை வலையானது சூழ்ந்து கொண்டதுபோல் மனிதரைச் சூழ்ந்துகொண்டு சூட்சுமத்தில் ஏறவிடாது மறதியாகிய தளையைப் போட்டு, இந்த ஸ்தூலத்தின் நிலையிலேயே தடை பண்ணிவிடுமென்பதை அவர்கள் உணர்ந்து, அதனைச் சுட்டெரித்துப்போட்டு **பகீர்** (எளியோன்) என்கிற வெளிச்சத்தில் எப்போதும் குடியிருந்து, ஆகார மூட்கொண்டு **காதலி**யின் நிலைமைக்கு யாதொன்று யோக்கிதையா யிருக்கிறதோ அதை மட்டும் தான் எடுத்து நடந்தபோது மற்ற கொழுகு தலடங்கலும் அவைகளாகவே அவர்களை விட்டு விரண்டோடிப்போய்விட்டன. மேலும், அவர்களுடைய வயது முழுவதிலும் ஓரிடத்திலும் போய் அலைந்து திரியாது **கௌகீசகர்** என்ற பட்டணத்தில் ஓர் சிங்கமானது மலைப்பொதும்பில் குடியிருப்பதைப் போன்று அவர்கள் குடியிருந்து வந்தார்கள். அவர்களுக்கு ரொட்டியும், தண்ணீரும் அந்த நகரத்துடைய புறத்தினின்றும் உண்டாயிருந்ததேயன்றி இன்னகாரணத்தால் தனக்கு வருமென்பதற்கு யாதொரு காரணத்தையும் வெறுத்திருக்க வேண்டி யாதொரு விரிப்பும், தண்ணீர்வைக்க யாதொரு கலயமு மில்லாதிருந்தது; அவைகள் தங்க

ளுக்கு தேவைபட்டால் வானத்திலிருந்து தண்ணீர் குடத்துக்கு பதிலாய் **தல்வு** என்ற மண்டலத்தை இறக்கிக்கொள்ளவும், **பிஸ்தரா** (சுப்பரு) வேண்டு மாயின் **ரிள்வான்** என்கிற வானவர் (மலக்கு) விரைந்துசென்று சுவர்க்கத்தில் **பிஸ்தரா** விரிக் கவும் கூடிய வல்லமையைப்பெற்ற **சுல்ஹு** (இணக் கம்), **தஸ்லீம்** (தாழ்மை), **தவக்கல்** (பரஞ்சாட்டல்) ஆகியவை அவர்களிடத்தில் நிறப்பமாயிருந்தன. அல்லாஹுத்த ஆலாவிடத்தில் அங்கீகரிக்கப்பட்ட பேர்களின் சிரசுகளுக்கு கிரீடமும், **முதவக்கிலீன்** ஆகிய பரஞ்சாட்டுவோர்களின் அரசருமான என் னுடைய குருநாதரே! **பஹ்ரீ** என்கிற நான் எனது உயிரையும், உடலையும் தங்களின் பாதத்துக்கு அர்ப்பணித்துவிட்டு, தங்கள் வாயற்படியைக் கூட் டிப் பெருக்கிக்கொண்டு, தங்கள் பாதத்தின்கீழ் சாஷ்டாங்கமாகக் கிடக்கின்றேன். தங்கள் மீது ஆணையாக நான் தங்களையன்றி பிரிதொரு ஞான தேசிகரையும், நண்பனையும், குடும்பத்தாரையும், பிறரையும் நான் அறியவுமில்லை; தங்களின் இல்லத் தைத் தவிர எனக்கு வேறொரு இல்லம் வேண்டு வதில்லை. அவை இரத்தினுதிகளாயினும், கூழாங் கற்களாயினும் சரி. ஆகையால், தங்களின் 'கிருபா கரம்' என்ற நன்கொடையால் **ஹக்**கை மறந்திருத் தல் என்ற **துன்யா**வில் உண்மையை மறைப்ப தென்கிற வேற்றுமையைவிட்டும், தன்னை **ஹக்கு** (பிர்ம்ம்) ஆக சிந்தித்தல் என்ற மார்க்கத்திலும், என் உள்ளமையை **ஹக்**குடைய உள்ளமையாகத் தரிபடுத்தும் நன்மையிலும், என்னை சதா தரி படுத்தி வைத்தருள்வீர்களாக. ஏனெனில், இவ்

விரண்டும் எளிதிற் கைவசப் படாத பாரிய ஓர் செல்வமாயிருக்கிறது. கத்தி எடுத்து சண்டை செய்வதிலைலும், பதினன்கு வகையான படிப்புகளையும் கற்றுத்தேர்ந்து முதிர்ந்த கல்விவானுக ஆவதிலைலும் கிடைக்கக்கூடியவையன்று. எனவே, எவனொருவன் பிரயாசைப்பட்டு இவ்விரண்டையும் எடுத்துக்கொண்டானே அவனுக்கு அது கிடைப்பதன்றி, அவனிடத்தில் **துன்யாவின்** செல்வமும், **ஆகிரத்து**டைய செல்வமும் ஓர் துரும்புக்கு சமானமாகும். மேலும், எனது எஜமானவர்களே! எனக்கு இந்த **நப்ஸு** மூக்கணங்கயிறு போட்டு, செக்கு மாட்டைப்போல் என்னைனும் என்னைச் சுற்றவைத்துக் கொண்டிருப்பதும் தவிர நான் **கல்பு**டனே சேர்ந்திருந்து அதன் நாட்டம்போல் என்ன கட்டளையிட்டதோ அதன்படி அதன் உத்திரவுபேரில் ஜலத்தில் கற்கண்டு கறைந்து போவதுபோல் அதில் நான் கறைந்து போகலாமென்றால் இந்த **நப்ஸு** ஒரு நாளாவது **கல்பு**டைய புறத்தில் எனக்குப் பாதை விடுவதில்லை. ஏனெனில், நானே துயரமிக்க எளிமையான ஓர் மச்சமாயிருக்கின்றேன். ஏழையை இரட்சித்தருளவல்ல நாயகமவர்களே! தாங்கள் வேட்டையாடும் **ஸையாது** ஆக இருக்கின்றபடியால் தண்ணீரில் விட்டுவைக்கவும், பிடிக்கவும், சுட்டெரித்துப் போடவும், கண்டிதத்தில் வைக்கவும், விடுதலையளிக்கவும் தாங்கள் தெரிந்தெடுக்கப் பட்டவர்களான படியால் என்னைத் தாங்கள் எது செய்திடினும் நான் அதனைப் பொருந்திக்கொள்கிறேன். எனினும், எந்த காரியாதிகளிலும் நீங்கள் என்னை தங்களுடனேயே வைத்துக்கொள்வீர்களாக. ஏனெ

னில், தங்கள் சமுகத்திலிருக்க ஆசித்தவனுடைய ஆசையை நீங்கள் நிறைவேற்றிவைக்க வேண்டு மல்லவா? என்னுடைய ஞானோபதேசிகர் அவர்களே! தங்களின் நற்குணத்தின்மீது நோட்டம் வைத்தவர்களாய், எனது துற்குணத்தின்பால் சிந்தை செலுத்தாமல் என்னுடைய பிராதுக்கு செவிமடுத்து, எனது கோரிக்கையை நிறைவேற்றி வையுங்கள். தங்கள் குணத்தில் **றஹ்மத்து** எனும் அருள்புரியவல்ல நறுமணம் உண்டாயிருக்கிறது. எனது குணமோ பாவமென்ற குப்பைக்கூளமான குவியலாயிருக்கிறது. பாத்துஷா (ஹ்) க்களுக்கெல் லாம் பாத்துஷா(ஹ்)வானவர்களே! ஒரு பார்வை யின் மீது நான் தரிபட்டு என்னையே நான் அடை யப் பெறாமல், தினந்தோறும் என்னில் புது, புது நடத்தைகளையும், வேறுபட்ட பாதைகளையும் காண் கிறேன். ஆயினும், நான் நல்லவனாயிருப்பினுஞ் சரி, அன்றி தீயவனாயிருப்பினுஞ்சரி, எதுவாயினும், நானும், இந்த இரகசியார்த்தங்களைப் பொதிந்த எனது சொற்களும் தங்களுக் குரியனவாயிருக் கின்றன. ஏனெனில் என்னைத் தங்களில் இன் மைப் படுத்திவிட்ட அன்றும், இன்றும், என்றும் சர்வமும், தாங்களும், தங்களுக்குடையனவாயுமிருக் கின்றனவேயன்றி, நானுமில்லை, என்னில் இந்த சொல்லுமில்லை. இந்த இகலோகமும், பரலோகமும் தாங்களாகவே இருக்கின்றபடியால், தங்களின் கிருபைமட்டும் எனக்குண்டாயிருக்கும் பக்ஷத்தில் தான் சகலகாரியாதிகளிலும் எனக்கு வெற்றியுண் டாகும், இல்லாவிடில், நன்மை நீங்கிப்போய் யாவும் தீமை மயமாகிவிடும். நான் குறைபாடுடையவனா

யிருப்பதால், அதனால் ஏற்படும் கேவலமும், வெட்கமும், ஜெயம்பெறாது தோல்வியுருவதாலேற்படும் அபகீர்த்தியும் தங்களுக்குத்தான் உண்டாயிருக்கிறதே தவிர வேறில்லை. இன்னும் தங்களுக்கு அர்ப்பணமாகவும், திருஷ்டிக்கழித்து கொடுக்கப்பட்ட கொடைப் பொருளாகவும் நானிருக்கிறபடியால் என்னைவிட்டும் சகல சோதனைகளையும் போக்கியருள்வீர்களாக. மேலும் எந்த இடத்திலும் எனக்கு யாதேனுமொரு தீங்கு ஏற்பட்டு, அதனால் நஷ்டமடைந்து விடுவேனோ என்று நான் பீதியுறும் வேளை **'என்னுடைய பீரே!'** என்று நான் தங்களையே கூவியழைப்பேன். ஏனெனில், சிருஷ்டிகன், சிருஷ்டி, சிருஷ்டிப்பொருள் என்றழைக்கப்பட்ட, காரணம், சூட்சுமம், ஸ்தூலம், (அல்லது ஆத்மா, மனம், சடம்) என்ற மூவ்வுலகிலும் தங்களுடைய அரசாட்சியே நடந்து வருகிறபடியால், நான் கேட்டையடையாமல் தாங்கள் உடனடியாக எனது கையைப்பிடித்து உதவி செய்தருள்வீர்களாக. மேலும் எனது ஞானாசிரியரே! நான் சர்வத்தையும் துறந்து, ஓர் மூலையைத் தேடியடைந்திருக்கிறபடியால் தாங்கள் எனது கையைப் பிடித்து உதவியருளவல்ல **தஸ்தகீர்** ஆக நீங்கள் எனக்கு ஏற்பட வேண்டும். மேலும், எனக்கு ஏதேனும் துன்ப துயரங்களுண்டாயிருந்தால், தாங்கள் என்னை தங்களது கிருபாநோக்கு கொண்டு பார்த்தருள்வீர்களாக. எனக்கு ஏதேனும் சுகம் கிட்டிவிட்டால், தாங்கள் எனக்கு தங்கள் பாலுள்ள பிரியத்தையும் அன்பையும் அதிகரிப்பீர்களாக.

ஐந்தாவது (பஸ்லு) பிரிவு.

[இந்த **பஸ்லில் ஆகிறு ஜமான்** ஆகிய உலக முடிவு காலத்தின் நடவடிக்கைகளைப்பற்றி பேசப்படுகிறது.]

அருமையானவனே! அறிந்துகொள்வாயாக:—

இந்த உலகு முடியுங்காலமாகிய அந்திய காலத்தில் நன்மை மறைந்து, தீமை மட்டுமே பிரத்தியட்சமாயிருக்கிறதுந்தவிற **சத்தியம்** என்கிற உண்மைக்கு பஞ்சமேற்பட்டு விட்டபடியால் மானிலத்தோரின் ஹிருதயம் தர்ம கைங்கரியங்களை உதிர்த்துவிட்டது. ஆனல் இந்த உலகம் என்ற முகத்துக்கு சத்தியமானது மூக்கைப் போன்றதாகும்: மூக்கின்றிய முகம் வஸீகரப்படாது. இதுமடமைமிக்க அற்பர்களின் காலமாக இருக்கிறபடியால் மனிதர்களுடைய விசுவாசமும், நம்பிக்கையும் மெலிந்து போய்விட; நெறிமுறை என்கிற ஜீவதீர்த்தத்துக்கு பதிலாக அநியாயமும், அநீதமுமாகிய கொடிய விஷம் வியாபித்து, மார்க்க அனுஷ்டானமும், நிர்ணயமும் எவர்மனதிலுமில்லாது போய்விட்டன. மேலும், இக்காலத்தில் ஒரு மெய்யனுக்கு ஆயிரம் பொய்யர்களும் இருப்பதுந்தவிர, கேவலமான அற்பன் கண்ணியவானும், கண்ணியவான் தாழ்மையுடையோனும் கருதப்பட்டு வருகின்றான். இன்னும் குழந்தைக்கு தாயின் ஆதரவும், தங்கைக்கு தமையன் பால் பிரீதியுமில்லை. வெட்கம் அல்லது நாணம் என்ற ஒளியை யாதொரு கண்ணிலும், தர்மம் என்னும் வாடையை யாதொரு திரேகத்திலுங்காணப்படுவது மிக அரிதாகிவிட்டது. யாதொரு விரோதியையும்,

நண்பனேயும் ஒருவனுக்கொருவன் உரோஷமுடைய வனாகக் காணப்படவில்லை. காதலனுக்கும், காதலிக்குமிடையே ஏற்பட்டுள்ள காதலும், ஆசையும் நீங்கிவிட்டன. மேலும் ஒருவன் இம்மை, மறுமைப் பேற்றைப்பெற்று, இறைவனின் சமூகத்தில் அங்கீகாரம் அடைந்திருந்தபோதிலும் அவனை யாரும் ஒப்புக்கொள்வதில்லை. **பீர்** வடக்கு நோக்கிச்சென்றால், **முரீது** தெற்கு நோக்கிப்போவது வழமையாயிருக்கிறது. **துன்யா**விலுண்டான சகல சூழ்ச்சியும், ஏமாற்றுதலும், மாறுபாடும், குபாடமும், **பஸாதும்** இந்தக்காலத்துடைய ஞானதேசிகர்கள் எனப் படுவோரிடத்தில் தான் மலிந்து கிடக்கின்றன. **பீர்** ஆகிய ஞானோபதேசிகரே இத்தாதி லட்சணங்களுடையோராயிருந்தால், **முரீது** ஆகிய சீடனின் நிலைமை எவ்வாறிருக்குமென்பதைக் கூறவும் வேண்டுமோ?

எனவே, சிலர் இத்தகைய வேஷதாரிகளான போலி **ஷெய்கு** மார்களின் சூழ்ச்சியாகிய வலையில் சிக்கி, அவர்களுடைய சொற்களைப் பெரிதும் நம்பி, அங்கீகரித்து, அவர்களையும் நாதாக்களாகவும், மகான்களாகவும் மதித்து வருகிறார்கள். மேலும், அவர்களைப்போன்ற போலி **ஷெய்கு**களின் பொய்யில் சிக்கிய சில போலி சிஷ்யர்கள் மேற்கூறப்பட்ட **ஷெய்கு**மார்களை சூழ்ச்சிக்காரர்கள் என்று அவர்களின் நடத்தைகளை இவர்கள் கண்டித்தும், இவர்களின் நடத்தைகளை அவர்கள் கண்டித்தும் வருவதேயன்றி, தங்கள் தங்கள் சீர்கேடான நிலையை தாங்கள் உற்றுப்பாராது, ஒருவருக்கொருவர்

வசைமொழி கூறிவருகின்றனர். அஃதெவ்வாறெனில், சாராயங் குடித்து போதையடைந்த ஒருவன் தன்னுணர்ச்சி யிழந்து, புலம்பிக்கொண்டு புறக்கடையில் வீழ்ந்து கிடப்பதைக் கண்ணுற்ற மற்றொரு குடிவெறியன், முந்தியவனை நோக்கி சினங்கொண்டு, "அடா, கெட்ட போதையையுடையவனே! இரண்டு **பியாலா** குறைத்துக் குடித்திருக்கும் பக்ஷத்தில், நீயும் என்போல் உணர்வுடனிருந்திருக்கக் கூடுமே," என்று விழித்துக்கூறி, தன்னுடைய சொந்த குற்றத்தைத் தானே உணர்ந்து, வெட்கிப்பதற்கு பகரமாக பிறனை பழித்துக் கூறியதற்கு ஒப்பாகும். ஆகையால், இத்தகைய மடையர்களின் நடத்தைகளை நீ காணநேரிடும்போது **லாஹௌல்** என்று சொல்லிவிட்டு உன்னுடைய சொன்முறை, செயன்முறைகளை செம்மையாக்கிக் கொண்டு, **மக்அது சித்கு** என்ற மெய்க்குடி கொண்ட தானத்தில் நீ இருந்துகொண்டு, உன்னுடைய புராதீன நண்பனின் (**ஹக்**கின்) ஞாபகத்திலேயே சதா நிலைபெற்றிருப்பாயாக. ஆனால் சத்தியார்த்தம் என்பது அறவே இவ்வுலகினைவிட்டு நீங்கியிருக்கும் தீங்குமிகுந்த இந்த காலத்தில் நீ பிறந்திருக்கிறபடியால், உன்னில் நிகழும் எந்த காரியமும் பாவத்தையன்றி பிறிதொன்றுமன்று. நீ விவேகியாயிருந்தாயே யானால் **ஷைத்தானீ**-யான மன ஊசாட்டமும், **நப்ஸானி**யான மன ஊசாட்டமும் (அதாவது, தீய எண்ணங்கள்) நீங்கி **மலக்கானி**யான ஊசாட்டத்தை (அதாவது, நல்ல எண்ணங்கள்) பெற்று வேற்றுமை கிஞ்சிற்றும் வாராது, ஏவப்பட்ட நற்கருமங்களைச் செய்து, விலக்கப்பட்ட

தீய கருமங்களைத் தவிர்த்து, **றஹ்மானியான** ஊசாட்டத்தில் நீ எந்நாளும் தரித்திருந்து, உலகில் நடந்தேறும் கருமங்களில் எதையும் நன்மை, தீமை யென்று பிரித்துக்காணுது, சகலவற்றையும் **ஹக்கு** டைய உள்ளமையும், செயல்களுமாகக்கண்டு, நீ விலக்கப்பட்ட காரியங்களைச் செய்யாது, **பஸ்தகிம் கமாஉமிர்த** என்கிற வேதவசனப்படி உன்னை ஏவப்பட்டதுபோல் தரிபாடாயிருந்துகொண்டால், உன்னுடைய **மக்சூது** எனும் லட்சியார்த்தமான **நூருல் முத்லக்காகிய** சம்பூர்ண ஜோதியை அடை யப்பெறுவாய். அவ்வாறின்றி, சர்வமும் **ஹக்கு** டைய **வுஜூதும்**, செயல்களும்தான் என்றெண்ணி, எதைச் செய்தாலென்னவென்று குறைபட்ட விளக் கத்திஞல் மனம்போன போக்கில் விலக்கான கருமங் களைச் செய்யத் துணிந்தால் மேலான உன்னத நிலையை அடையப்பெருது, தாழ்மையான இந்த சடலோகமாகிய நிலையில் கனத்துப்போய், மடிந்து சாவநேரிடும்; அதற்காகவே விலக்கலை தவிர்ந்து கொள்ளவேண்டுமென்றுசொன்னேம். **ஹலரத்து மஹ்மூது பஹ்ரீ**(கத்) அவர்கள் ஞானபாட்டை யிலுள்ளோர்களுக்கு சொல்வது, யாதெனில்:— "நன்மை தீமை என்ற காணலிற் சிக்கி, பரதவித்து எண்ணிறந்த பக்ஷிகள் மரித்துவிட்டன," என்பதே யாம். ஆதலின், நீ இப்பொழுது உயிருடனிருப் பதைவிட **நீங்கள் மரிக்கு முன்னர் மரித்துவிடுங் கள்— மூது கப்ல அன்த மூதூ** என்று நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமானபடி, **அஜல்** (விதி) ஏற்படுமுன் இறந்துபோவதும், சரீரமென்ற மட் பாண்டம் பலங்குன்றி உடைந்து போவதும், இந்த

சடம் என்ற சட்டையை விட்டும் உயிர்போன பிறகு **கல்பு** என்ற பட்டணத்தில் நீ குடியிருந்து அதை நீடிக்கச்செய்வதும் மிக நலமாகயிருக்கும்.

ஆதலின், மண்ணே! நீ ஜலத்தில் கரைந்து விடு; ஜலமே! நீ அக்கினியில் வற்றிவிடு; அக்கினியே! நீ காற்றில் திசையற்றுப்போய் (இரேகித்து) விடு; காற்றே! நீ ஆகாயத்தில் அடங்கிவிடு; ஆகாயமே! நீ ஒன்றன் பின் ஒன்ருக இந்த ஐந்தின் எண்ணங்களையும் **கல்பை** விட்டும் நீக்கிவிடுவாயாக. **நப்ஸே!** நீ உனது **நக்ஷை** (அமைப்பை) **கல்பு** என்கிற பலகையை விட்டும் அழித்துவிடு; **ரூஹே!** நீ **ஜிஸ்மு** (சரீரம்)உடைய கொழுகுதலே உதரிவிடுவாயாக; **அறிவே!** நீ என்னுடைய **கல்பில்** இன்மையாகிப் போவாயாக.

ஆருவது (பஸ்லு) பிரிவு.

[இந்த **பஸ்**வில் **வஃலு** என்னும் மார்க்க உபன்னியாஸத்தைப் பற்றி விவரித்துப் பேசப்படுகிறது.]

அருமையானவனே! அறிந்துகொள்வாயாக:—

அபரஜத்த மனித்தகத இலாஹஹு ஹவாஹு "தன்னுடைய **ஹவா**வென்னும் இச்சையைத் தனக்கு நாயகனுகத் தெரிந்தெடுத்துக் கொண்ட அந்த ஒருவனை (முஹம்மதே!) நீர் காணவில்லையா?" என்று திருமறையில் இறைவன் கூறுகிருன். அதன்படி **ஹவா** வென்னும் ஆழிய மடுவில் வீழ்ந்து நாசமடைந்தவனே! உன்னுடைய

பாரத்தில் பேராசை என்ற மூள் கைத்திருக்கிற படியால், நீ இச்சை என்ற யானையின்மீதேறிக் கொண்டு உன்மனம் போனவாறு நீ அலைந்து திரிந்தது போதும்; அந்த இச்சையாகிய யானையை அதன் கொட்டுகையில் நீ கொண்டுவந்து கட்டுவாயாக; கட்டுக்கடங்காவிடில் இர்பான் சுயஞானம் என்ற கொருடாவினால் ஒடுக்கி, இன்சாப் (நீதம்) என்கிற சங்கிலியால் அதை இறுகப்பிணைத்துவிட்டு, கடிவாளமின்றிய நப்ஸு என்ற குதிரையை அதன் போக்கில் விடாது, குறைவற்ற நிரப்பமான கருமத்தைத் தெரிந்தெடுத்துக்கொண்டு, நன்மையைச் செய்து, தீமையினின்றும் தவிர்ந்து கொள்வாயாக. இந்த நன்மை, தீமை மஹ்ஷறுடைய இறுதித் தீர்ப்பு நாள்வரையும் தரிபட்டிருக்கும். பமன் யஉமல் மித்கால தர்ரதின் கைரன்யரா வமன் யஉமல் மித்கால தர்ரதின் ஷர்ரன்யரா "யாரேனு மொருவன் அணுப்பிரமாணமான நன்மையை இம்மையில் செய்தால், அதன் பிரதியான நன்மையை மறுமையிலும் காண்பான்; மேலும் அணுவளவு தீங்கை இம்மையில் செய்தால் அதன் பிரதியான தீங்கையும் மறுமையில் காண்பான்," என்று திருமறையில் ஹக்கு திருவுளமாயிருப்பது போன்று உன்னில் உண்டாயிருக்கிற உனது தீய்குணம் யாவும் உன் நாலுக்கு விலங்காயிருப்பதால், உன் நிய்யத்தாகிய எண்ணத்தைப் பரிசுத்தமாக்கி வைத்துக்கொண்டு, உன்மனிதத்தன்மையைக் காப்பாற்றிக் கொள்வாயாக. மேலும் இந்த நாவைப் பொய்யினின்றும் பேணிக்கொண்டு; வாய் மூடியிருக்க அவசியமானதற்கெல்லாம் வாய் மூடிக்

கொள்க. மெய்யுரைத்தற்கு மட்டுமே உன்வாயைத் திற. ஏனெனில், ஒரு பொய் சொல்வதால் இருபதியும் **தஹ்தத்தரா** (பாதாளம்) முதல் **அர்ஷ்** (தெய்வாசனம்) வரை நடுங்குவதன்றி, சகல வஸ்துக்களும் உன்னை **லஃனத்து** செய்து சபிக்கின்றன. **பனஜ்அல் லஃனத்தல்லாஹி அலல் காதிபீன்**– "அந்தோ! அல்லா(ஹ்)வின் முனிவு பொய்யர்கள் பேரிலாகும்," என்று திருமறையிலும், **அல் கத்தாபு லா உம்மதீ** "பொய்யன் எனது கூட்டத்திலுள்ளவனல்லன்," என்று நாயகவாக்கும் வந்திருக்கின்றன.

நிற்க, **ஹஸது** (பொறாமை) மனதில் ஏற்படாவண்ணமிருந்து கொள்வாயாக. ஏனெனில், **அல்ஹஸது யஉகுலுல் ஹஸனாத்து கமாதஉகுலுன்னாருல் ஹதப** "விறகை நெருப்பு தின்பது போன்று, பொறாமை நன்மையான கருமங்களைத் தின்றுவிடும்," என்று நபி(ஸல்) அவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள்; அதாவது, புத்தியை(த் தின்றுவிடும்) போக்கிவிடுமென்பதே. ஆனால் **இன்ஸானுக்**கும் **ஹைவானு**க்குமுள்ள பாகுபாடு புத்தி அல்லது பகுத்தறிவு அல்லது விவேகத்தைப் பொறுத்ததேயாம். விவேகமில்லாவிடில் பேதமையுடைய மிருகாதிகளைப்போல் **தபீஅத்**தாகிய பூதகுணத்துடைய நிலையிலிறங்கி, தாழ்ந்த லோகத்தில் வீழ்ந்து கிடப்பானேயன்றி, **இன்ஸானிய்யா**வான பதவியிலேறி, உன்னத உலகினை அடையமாட்டான். அவனுடைய ரூபம் மட்டும் இன்ஸானைப்போன்றிருக்கும். ஆனால், எத்தனையோ மிருகங்களுக்குங்கூட மனிதரூபம்

கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், குபாடத்தை மனதைவிட்டும் அகற்றிவிடு. அற்பனைப்போன்று **கிப்ரியத்து** என்ற பெருமை அடிக்காதிரு. **கீபத்து** எனும் புறம் பேசுதலையும் விட்டொழி. ஏனெனில் புறம்பேசலை **ஸினு** வென்னும் விபசாரம் புரிதலை விடப் பெரிதாகக் கூறப்பட்டிருக்கிறது. **அல் கீபத்து அஷத்து மினஸ்ஸினு** 'புறம்பேசல் **ஸினு**வைக் காட்டினும் பெரிது,' என்று நபி(ஸல்) அவர்கள் திருவுளமானார்கள். உனக்கு **பிர்தௌஸ்** என்ற சுவனபதி வேண்டியதாயிருந்தால் யாதொன்றையும் **காபி**ரைப் போன்று துன்புறுத்தாதிருப்பாயாக. யாரேனுமொருவன் உன்னிலிருந்து ஒரு துன்பத்தை அனுபவிப்பானேயாகில், அப்போது உன் கைவசத்திலிருக்கிற (நன்மையாலான) பொக்கிஷம் உன்னைவிட்டும் அகன்றுவிடும். அந்த பொக்கிஷம் தான் உனது மெய்ஞ்ஞானமும், தெளிவடைந்த பண்புகளுமாயிருக்கும். மேலும் எவனுக்கு தன் மனதில் இச்சைமிகைத்துக்கொண்டதோ அவனுக்கு **அல்லா(ஹ்)**வும், **ரசூலு**ங் கிடையாது. ஏனென்றால் **அத்துன்யா ஜீபதுன் வதாலிபுஹா கிலாபுன்**— "துன்யாவோ பிணமாகும் (பிணத்தைப்போன்றது), அதைத்தேடுபவன் நாயாகும்," என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் திருவுளமானது போல், அவன் தாழ்மையான லௌகீக வஸ்துக்களின் தேட்டத்தில் ஈடுபட்டிருக்கிருன். மேலும், மனிதர்களை ஆதரவு வைத்து, அவர்கள் உன்னுடைய கோரிக்கையை நிறைவேற்ற வல்லவரென்று எண்ணியவனுக எவனுடைய வீட்டுவாயலிலும் போய் காத்துக்கொண்டிருமல், யாதொரு பேதகமுமின்

றிய ஒரு இடத்தைத் தேடியடைந்து கொண்டு, அவ்விடத்தில் உனது பாதங்களை மலையினைப் போன்று உறுதியாகத் தரிபடுத்திக்கொண்டிருப் பாயாக. மலையானது ஒரே இடத்தில் தரித்து நிலை பெற்றிருந்ததனால்தான் அது உயர்வை பெற்றுக் கொண்டது. இன்னும், உன் சரீரம் எவ்வளவு சோதனைகளாலும், நோய் நொடிகளாலும் தாக்குண்ட போதிலும் யாவற்றையும் உனது சரீரத் தினுள்ளேயே அடக்கிக்கொண்டு பொறுமையைக் கையாள்வாயாக. மேலும், யாரையும்பற்றி குற்றம் கூறாதிருந்துகொள். ஒருவரையும் திட்டி சபிக்காதே. கோபமிகைப்பினால் உன் **கல்பை** பால் பொங்கு வதைப் போன்று பொங்கவிடாதிருப்பதுடன், உன் காரியம் பூராவையும் நாயனிடத்தில் சாட்டிவிடுவா யாக. உன் விஷயத்தில் யாரும் விதர்ப்பமடைந்த போதினும், **ரூஹு** என்னும் **ஆத்மா**வாகிய பாத்து ஷாவின் நியாய ஸ்தலம்வரை அதனைக்கொண்டு போகாமல், உனது **கல்பு** (மனம்) என்ற வீட்டி லேயே அடக்கிக்கொண்டு, **பொறுமை** என்னும் நீதிபதியைக்கொண்டு தீர்ப்பு செய்யப்பெற்றுக் கொள்வாயாக. மேலும், யாரேனும் உன்னை வெறுத் தாலும், விரும்பினாலும் இவ்விரண்டையும் சமமாகப் பாவித்து, சந்தோஷமாயிருக்கின்றதன்றி, இவன் பேரில் வெறுப்புக்குக் கோபமோ, அவன்பேரில் விருப்புக்குப் பூரிப்போ அடையாதிருப்பாயாக. ஏனெனில், இத்தகைய கோபமும், சந்தோஷமு மாகிய **முள்** இரண்டும் எவன் மனதில் தைத்திருக்கி றதோ, அவன் இந்த **கத்ரத்** என்ற **பலது** என்னும் சமுத்திரத்தில் **அன்னியம்** என்னும் அலையினால்

மோதுண்டு, கனத்துப்போய், தாழ்ந்து நாசமடைவா னேயன்றி, அவன் **வஹ்தத்து** என்ற கடலில் மிதந்து நீஞ்சி, **ஜனிய்யத்து** என்னும் **சுயம்** என்ற கரையைச் சேரமாட்டான். மேலும், நீ எந்நேர மும் சரீரத்தையும் அதன் எஜமானனையும் அறி வதின் பேரில் கேட்டமாயிரு. அவ்வாறிருக்கையில், யாராவது ஒரு **ஆரிபு** (மெய்ஞ்ஞானி) தூய்மையான **இர்பான்** (மெய்ஞ்ஞானம்) என்ற விளையாட்டைப் படித்துக் கொடுப்பார். அதைக் கற்றுக்கொண்டு வெறுமனேயிராமல், உனது சொல், செயல், நினைவு, கருத்து, பார்வை, கேள்வி யாவும் **ஹக்கு, ஹக்கு** (மெய்ப்பொருள்) என்று பழக்கமாகும்வரை நீ தெண்டித்து வருவாயாக. இவ்வாறு தெண்டித்து வந்தால், **பனு** (இன்மை செய்தல்) ஆகிய **சிபத்து** (பண்பு) என்ற பெயர்நீங்கி, **ஹக்குதஆலா**வுடைய தரிபாடான, நிலைபெற்ற பண்பாகிவிடும். சதாகால மும் நீடித்திருக்கும் நற்கருமங்கள் யாவும் உண்டாக வேண்டுமாயின் **மஃரிபத்து** (பிர்மஞானம்) என் னும் குகையில் இந்த **கத்ரத்**தை வைத்து உருக்கி, ஒரு திரட்சியான மணியான பின்னர், அந்த குகை யும் ஒரு நிலையில் உருகிக்கறைந்துபோய், **ஷாஹிது** (சாட்சி) என்ற **ஹக்கு** ஆகிய தங்கம் ஒருமணியாய்த் திரண்டுருகி மீதமாயிருக்கும். இந்த சாட்சியாகிய தங்கம் கொழுந்து யாவற்றையும் விட்டு நீங்கியிருக் கும் அரூபமான சம்பூர்ண ஜோதியாகும். ஆனால், இந்த **கத்ரத்** என்ற பொற்காசுகளும் ஒரேமணியாக இருக்கவேண்டுமென்று **வஹ்தத்து** என்ற வெட்ட வெளியிலுள்ளோர் சொல்வதைச் செவிமடுத்த **கத்ரத்** துடைய இச்சைகொண்டவர்கள் மூர்ச்சையாகி விட்

டனர். மேலும், நீ என்னும் உயிர் என்ற பட்சியை **வேறு** என்ற இறையைத்தின்னவிடாது, பக்குவமாய்க் கீர்த்துக்கொண்டு இரவும், பகலும் **இஷ்கு** (காதல்) என்ற இறையை தின்னச்செய்வாயாக. நீ இராக்காலத்தில் விழித்திருப்பதால் இந்த உயிருக்கு மிகுந்தலாபமும், தூங்குவதால் அளவற்ற நஷ்டமும் உண்டாயிருக்கிறது. இந்த **கல்பு 'மஹ்பூபு'** (நாயன்) இருக்குந்தலமாகும். அது இரவு காலத்தில் விழித்திருப்பதால்தான் வெளிச்சமடைகிறது. ஹலரத்து ஹாபிஸ் ஸஅதீ ஷீராஜீ(றஹ்) அவர்கள் இப்போது இல்லாதிருந்தபோதிலும், அவர்களுண்டாக்கிய **ஹாபிஸ் தீவானீ** என்ற (கிதாப்) நூலைப்பார்த்து இராக்காலத்தில் எத்தகைய கிருபை உண்டாயிருக்கிறதென்பதைக் கவனித்துக்கொள். இரவு நேரத்தில் தான் (கைபு) அந்தரங்கத்தின் பார்வையுண்டாயிருக்கிறதுமன்றி, அகமியத்தின் பாதையும் தானுகவே திறந்துகொள்கிறது. **சாலிக்கே!** நீ கீழ்க் காணும் காரியங்கள் யாவையும் விசேஷமாக எடுத்துக்கொள்வாயாக. ஏனெனில் அவையன்றி உன் மனம் பரிசுத்தமடையாது. அவையாவன:— பசித்திருத்தல், விழித்திருத்தல், தனித்திருத்தல், வாய் மூடியிருத்தலாகிய நான்கேயாம். இந்த நான்கில் இரண்டை எடுத்து நடந்துவந்தால் மற்ற இரண்டும் தானுகவே சித்திக்கும். பசித்திருப்பதால் விழித்திருப்பதும், தனித்திருப்பதால் வாய்மூடியிருத்தலு முண்டாகும். மேலும், நீ பெரியநுக்கு ஆவலதை ஆசித்தால் உனது இப்பெருமையைக் கைவிட்டு, மகாப் பெரியோனுகிய **அல்லா(ஹ்)**வின் பேரில் எந்நேரமும் இடைவிடாது காதல் கொண்டிருப்பாயாக. அப்

பொழுதுதான் நீ பெரியவனுக ஆய்விட்டாய் எனக் கூடும். இவ்வாறில்லாது இதற்கு மாற்றமானதோர் பெருமை ஏற்பட்டிருக்கும் பட்சத்தில், சர்வ சிருஷ்டிகளும் உன்னை கேவலமாகவும், அற்பமாகவும் கருதி, மரத்தைக் கரையான் அரித்துவிடுவதுபோன்று, அவைகள் உன்னை அரித்துத் தின்றுவிடும். உஷார்! **பலபிஃஸமத்வல் முதகப்பிரீன்**– "பெருமையடிப்போர் மீளும் தலம் மிக மிகக் கெட்டது," என்று திருமறையில் இறைவசனம் வந்திருக்கிறது. பெருமையானது **அஸாஸீல்** என்பவனைத் தாழ்மைப் படுத்தி, **முனிவு** என்கிற சிறை கூடத்தில் அவனை **இறுதித் தீர்ப்பு** நாள்வரையும் போட்டு விட்டதென்று ஹஸரத்து ஷெய்கு ஸஅதீ(றஹ்) அவர்களும் சொல்லியிருக்கிருர்கள். ஆகையால், எனது நண்பனே! உனது மனதில் பெருமைகொள்ளாதிருப்பாயாக. ஏனெனில், எவனொருவன் பெருமையை விடுத்து, பெருமைக்குரிய தானத்தை சதா மறக்காதிருப்பானுகில், அவனுடைய பெருமையை **அல்லாஹுதஆலா** ஒப்புக்கொண்டு, பெருமையடிப்போரின் பெருமையினும் மேலானதோர் பெருமையை அவனுக்கு நன்கொடையாக அளிப்பான், **ஹக்கு** மட்டிலும் பெருமையையுடையவனுகும்; மற்ற யாவும் தாழ்மையான அற்ப வஸ்துக்களே. இஃதன்றி, அவன் சகல வஸ்துக்களையும் படைக்கிறவனுயிருப்பதால், **முதகப்பிறு** (பெருமையாளன்) என்கிற **இஸ்மு** (திருநாமம்) அவனுக்குத்தான் யோக்கியதையா யிருக்கிறதேயன்றி, யாதொரு வஸ்துக்கும் லாஇக்கானதன்று. நிற்க, எந்த மனதில் **ஹிஜாபுளுல்மானீ**, எனும் பாவத்தின் திரைகள்

ஏழுமாகிய துர்க்குணங்கள் வந்து ஊசாடுகின்றதோ, அந்த மனதில் **இர்பான்** எவ்வாறு தரிபடும்? மேலும், ஆகாயத்தில் பறக்க வல்லவனுயிருப்பினுஞ்சரி, வானவர்களின் வரிசையில் சேர்ந்தோனுயிருப்பினுஞ்சரி, எவனில் இந்த தீய குணங்களுண்டாயிருக்கின்றனவோ அவன் பாதாளத்தில் ஜீவிக்கும் ஷைத்தானுகத்தான் இருக்கமுடியும். ஆனல், நீ அறிவாயாக. இறைவசனம், நாயகவாக்கியம் ஆகிய இவ்விரண்டின் ஆதாரத்தின்பேரில் **இமாம்**களான மார்க்க சட்ட நிரூபணர்கள் அனுஷ்டானத்தைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றனர். அந்த அனுஷ்டானத்தில் நிலைத்திருப்போனே பெரியவன் எனப்படுவான். இல்லாவிடில், பொதி சுமக்கும் எருதைப் போன்ற பெரியவனும். இன்னும், நிறப்பமற்ற, குறைந்த அறிவையுடையவன் பொய்யான கருமத்தை மெய்யானதென்றறிந்த போதிலும், பொய் பொய்யாயும் மெய் மெய்யாயுமிருக்கின்றது. **குல்ஜா அல்ஹக்குவஸஹகல் பாத்திலு இன்னல் பாத்தில கான ஜஹூகா**— (**முஹம்மதே!**) நீர் சொல்வீராக:– "மெய்வந்ததும், பொய் மறைந்துவிட்டது; நிட்சயமாக, பொய் மறையக்கூடியதாயிருக்கிறது," என்று இறைவன் திருமறையில் திருவுளமானது போன்றேயாம். ஆகையால், **முஹம்மதிய்யா**வான **ஷரீஅத்**தாகிய சரியையைவிட்டும் நீ கழுவாது தரிபட்டிருப்பாயாக. இது ஓர் பாரிய வீடாக இருக்கின்றபடியால் இதில் நீ சதாகாலமுமிருந்துகொண்டு, நூதனமான காரியத்தில் உன்னை சேர்த்துவிடாமல் இந்த தொழுகை என்ற கட்டுப்பாட்டுக்குள் நீ அடிமையாக இருந்துகொள்.

நிற்க, **ரமலான்** மாதத்துடைய நோன்பா கிறது **நோன்பு** என்பது மாத்திரமன்றி ஆழ்ந்த தோர் இரகஸியத்தையும் பொதிந்து கொண்டிருக் கிறது. அந்த இரகஸியம் **ஹக்குக்**கேயன்றி மற்ற யாருக்கும் புலனுகாது. மேலும் **கலிமாஷஹாதத்து** என்ற அத்வைத மூலமொழியானது சகல வேற் றுமை, கண்டிப்பு, இணை ஆகியவற்றை விட்டும் உன்னை நீக்கி, **ஹக்**கிலே **ஹக்**காக தரிபடுத்திவிடும். **ஜகாத்து** (ஏழைவரி) **ஹஜ்ஜு** (புண்ய யாத்திரை) இவ்விரண்டிலும் எண்ணற்ற இரகசியங்கள் மறைந் திருக்கின்றன. அதனை விளங்கியறிந்துகொண்டு, **ஷரீஅத்**தின்பேரில் தரிபாடுளாயிருந்துகொள். இன் னும், **ஹகீகத்து**டைய **இல்மை** நீ அறியவேண்டு மாயின் உள்ளா உள்ளபடி திட்டமாய் அறிந்திருக் கிற **ஆரிபு** ஆகிய மெய்ஞ்ஞானிக்கு ஊழியஞ்செய்து அவரிடத்தில் கற்றறிந்துகொள். அதனையன்றி, குறைபாடுள்ள ஞானமுடையவனின் அசுத்தமான சொற்களின்மீது மண்ணைவாரி இறைத்துவிட்டு, அந்த சொற்களுக்கு காது தாழ்த்தாது, **அல்லா (ஹ்)**வுடைய **கலாம்** ஆகிய வேத வாக்குகளைக் கொண்டும், **அஹ்மது(ஸல்)** அவர்களுடைய வாக் கியங்களைக் கொண்டும் பழகியவனுக நீ இருந்து கொண்டு, மரியாதையோடு சகல கட்டளைகளையும் நிறைவேற்றி வருவாயாக. ஆனல், எவரொருவர் **அதபு** என்ற வார்த்தையிலுள்ள **தால்** என்ற அட் சரத்தைப்போல் மரியாதையில் அழுந்தியிருந்தாரே யாகில் அவர் **கபூல்** உடைய **காபு**ஐப்போல் எல்லா விடத்திலும் முதன்மை ஸ்தானம் பெற்றிருப்பார். ஆகையால், இந்த **அதபு** எல்லோர் பேரிலும்

கடமையாயிருக்கும். **அதபு** இல்லாதவன் **தாப்பதுல் அர்ளு** என்கிற மிருக ஜாதியைப் போன்றிருப்பான். ஆனல், உனக்கு மரியாதை வேண்டியதா யிருந்தால் நியாயமான முறையில் நடந்துகொண்டு, சகலவற்றிேேடும் அன்புடையவனுயிருந்து கொள் வாயாக. நீதத்தை எவனெருவன் கைவிட்டு விட் டானே, நிட்சயமாக, அவன் தன்பேரில் அநீ தத்தை சுமந்து கொண்டவனுகும். தேத்தாங்கொட் டை தண்ணீரை சுத்தப்படுத்துவதுபோல் மனிதர் களின் உள்ளத்தையும், திரேகத்தையும் நீதமானது தெளிவுபடுத்திவைக்கும்: "இவனும், அவனும் மற் ருேனும் 'பரிசுத்தம்' **ஸாப்** ஆகவில்லை, **இன்ஸா** **பைத்** தவிர: இந்த சரீரத்துடைய **ளுல்மு** என்ற இருளை **இன்ஸாப்** என்கிற சூரியனின் பிரகாசம் நீக்கிவைக்கிறது," என்று ஒரு கவிஞர் கூறியிருக் கிருர். மேலும் **இன்ஸாபு** (நீதம்) என்பது **நபி**மார் களுக்கு சேனையாகவும், **வலி**மார்களுக்கு **வஸீலா** வாகவுமிருக்கிறது. **இன்ஸாபு** (நீதம்) தெளிந்த நீரைப்போன்றும், **ளுல்மு** (அநீதம்) அடிமண்டி யைப்போன்று மிருக்கின்றன. ஆகையால், **இன்** **ஸாபை** விட்டுவிடுவது மிகபெரும் அநியாயச்செயலா கும். அநீதம் **பளு**வாயும், நீதம் **பகா**வாயுமிருக் கிறதுமன்றி, யாத்திரை செய்தற்கு **இன்ஸாபு** தின் பண்டங்களாகவு மிருக்கிறபடியால், **நீதம்** மேல் படி யிலும், **வழிபடுதல்** (தாஅத்து) கீழ்ப்படியிலு மிருக் கிறது. நீதமே சுயமான வணக்கமாயிருக்கிறது.

ஜீவ இரத்தினமான நண்பனே! நீ அறி வாயாக:—உன்னையே நீ அநியாயம் செய்துகொண்டு,

மஃறூபு என்ற மதிக்கொணா மாணிக்கத்தினுடைய நடவடிக்கையை விடுத்து, உயர்தர வஸ்துவான கோதுமையினால் செய்யப்பட்ட ரொட்டி; **கபாபு** (காய்ந்த இறைச்சி) முதலான ஆகாராதிகளை சேகரிக்கும் விஷயத்தில் உன் வயது பூராவும் கழிந்து விட்டதே! நீ உனக்கே செய்துகொண்ட அநியாயங்களில் இதற்கு சமமான ஓர் அநியாயம் யாதொன்றுமில்லை. இன்னும், எவனொருவன் ஒரு துண்டு ரொட்டிக்காக தனது பெயரைக்கெடுத்துக்கொண்டு, வாணாளை வீணாளாக்குகிறானே, அவனை **ஆரிபீன்** ஆகிய சுல்தான்களும், இவ்வுலகின் உண்மை சக்ராதிபதிகளும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். மேலும், அந்த ரொட்டியைத்தேடுகிற தேட்டத்தில் நீ ஈடுபட்டிருந்தால், நீந்தி இக்கரையிலிருந்து அக்கரை செல்லவியலாது தடைபட்டிருப்பாய். அந்த ரொட்டியானது பாம்பு வளையிலோ, அன்றி, சுத்த வீரியமுடைய வேங்கைப்புலியின் காலிலோ இருந்தபோதிலும் உனது **ஹவா** வென்னும் இச்சை மிகைப்பால் உனக்கு விளையும் அபாயங்களையும் பற்றி சற்றேனும் சிந்தியாது, அந்த ரொட்டியைக் கைப்பற்றிக்கொள்ள முற்படுகின்றாய். உனது தந்திரம் அதிகரித்தால் அந்த ரொட்டியைக் கைப்பற்றிக்கொள்ளக்கூடும்; இல்லாவிடில், நீ உயிரிழக்க நேரிடும். எவனொருவனை **உயர்தர உணவு** என்ற **பிசாசு** பிடித்துக்கொண்டதோ அவனுக்கு அதி கயிறுபோன்றும், அவன் ஆடுபோன்றுமிருப்பான். மேலும், அந்த ரொட்டி தண்ணீரிலிருந்தால் **சிச்சுளி** பறவையைப்போல் அதில் தாவிப்பறந்து, முக்குளிப்போட்டு அந்த ரொட்டியை எடுக்கிறதும், அது

நெருப்பிலிருந்தால் கொசுக்களைப்போல் அதின்மீது விழுகிறதும், அது ஆகாயத்திலிருந்தால் **ஹுமா** என்ற பட்சியைப்போல் பறந்து அதில் குடியிருக்க நாடுகிறதும், அது சேற்றிலிருந்தால் பிள்ளைப் பூச்சியைப்போல் சந்தோஷமாய் அதில் ஓடித்திரிகிறதும், எறும்பைப்போல் இராப்பகலாய்த் தேடியலைகிறதும் போன்ற காரியங்களை எல்லாம் நீ செய்வது கொண்டு வயிறு வளர்ப்பதைத்தவிற யாதொன்றும் உனக்கு பிரமாதமாக சித்தித்துவிடவில்லை. இதனையொட்டி நீ இவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. ஏனென்றால் **மன் ஷக்க பிர்ரிஸ்கி பகத் ஷக்க பித்தௌஹீதி, வமன் ஷக்க பித்தௌஹீதி பகத்கபர பில்லாஹ்**—'எவனொருவன் ஆகாரம் கிடைப்பதைப் பற்றி சந்தேகித்தானோ அவன் **தௌஹீ**தாகிய அத்துவிதத்தில் சந்தேகித்தவனாகும், **தௌஹீ**தில் சந்தேகித்தவன் **அல்லா(ஹ்)**வை நிராகரித்தவனாகும்,' என்று நாயகம் (ஸல்) அவர்கள் அருளியிருக்கிறார்கள். நீ பலரிடத்திலும் வயிறு வளர்ப்புக்காக கையேந்தி நிற்காமல், உன்னிடம் உள்ளதைக்கொண்டு போதுமாக்கிக்கொள்வதை உன் பேரில் அத்தியாவசியமாக்கிக்கொள்வாயாக. **குன்கனிஅன் தகுன் மலிகன்** "நீ உள்ளது போதுமென்று இருந்துகொண்டால், அப்பொழுது நீ ஒரு அரசனாயிருப்பாய்," என்று நாயக வாக்கியம் பிறந்திருக்கிறது. மேலும், உனது விஷயத்தில் உனக்கு ஏற்பட்டிருக்கும் கவலையிலும் மேலாக **ஹக்**குக்கு உன்பால் அதிகக் கவலையிருப்பதால் நீ உன்னுடைய கவலையை விட்டொழிப்பாயாக. அரிசி சோற்றைவிட கம்பங்கூழும், புலவு

சாதத்தைக்காண நொய்யரிசிக் கஞ்சியும் நலவாயிருக்கிறபடியால் **பகீர்** (ஏழை)கள் நொய்யரிசிக் கஞ்சியில் பிரியம்வைத்து, அதற்கு **புலவுசோறு** என்ற நாமமிட்டு வெந்தயக்கீரை முதலான நல்ல கீரைக்கு பதிலாக நெரிஞ்சி கீரையையும், கோதுமை ரொட்டிக்குப்பகரமாக சோள ரொட்டியையும் தெரிந்தெடுத்துக்கொண்டார்கள். ஏனெனில், ருசிகரமான உணவுப் பொருள்களைத் தேடுவதிலுள்ள கவலை அநேகருடைய மேல்நோக்கிய பார்வையை கீழ்நோக்கிய பார்வையாகச் செய்துவிட்டது.

ஹிகாயத்து:— ஹலரத்து மஹ்மூது பஹ்ரீ (ரஹ்) அவர்களுடைய ஆத்ம குருவான ஹலரத்து முஹம்மது பாக்கர் (கத்தஸ.) அவர்கள், எப்போது **பக்ரு** (எளிமை) எனக்கு உதவியதோ அப்போது ஒரு **பகீர்** என்னையும் ஒரு பகீராக ஆக்கிவைத்தார். அதிலிருந்து நூறு வயதுக்குச் சற்றுக் குறைய **பக்ரை** நடத்திக்கொண்டு நான் **பகீர்** ஆகயிருந்தேன். ஆனல் **ஹக்கு**டைய கிருபையினல் இந்த நூறுவருடத்து **பக்ரி**லே மேன்மையான இந்த இரண்டுகாரியம் எனக்கு சித்தியாயிற்று. அவைதெவ்வாறெனில், என்முன்னல் வலிய வந்த யாதொரு வஜீபனம், வஸ்திரம் ஆகியவற்றை சந்தோஷத்துடன் உண்டு, உடுத்துக் கொண்டேனேயன்றி, அதிகமாக நான் மற்றென்றின்பாலும் என் **கல்பு** என்ற முகத்தைத் திருப்பவில்லை. அதாவது, நொய்யரிசிக் கஞ்சியைத்தவிர புல்லையும், முறட்டுப் பிடவையைத்தவிர விலையுயர்ந்த **மக்மல்** பிடவையையும் நான் நினையாது, பழகிவந்ததினல் முறண்பட்டுக்

கொண்டிருந்த அந்த **கல்பு** எனக்கு ஐக்கியப்பட்டது. ஆனால், எனது நண்பனே! இவ்விரண்டும் **சாலிக்கு**டைய பாதையை வழிமறிக்கும் கள்வர்களாயிருக்கின்ற படியால்; (ஊண், உடையாகிய) இவ்விரண்டைவிட்டும் உன்னை மிகவும் சமாளித்துக் கொண்டு, இவற்றின் ஆசையில் உன்னையழித்து விடாமல், இவற்றைத் தேடுவதை விட்டு நீங்கி **இர்பான்** என்கிற ஞான குருவின் உபதேசத்தினை நீ பற்றிப்பிடித்துக்கொண்டு உன்மனதை பல கவலைகளால் அலைந்து சிதறித் திரியவிடாமல், அல்லா(ஹ்)வின்மீது பரஞ்சாட்டியவனாக யிருந்துகொள்வாயாக. ஏனென்றால்; உனது **ரிஸ்கு** உன்பந்துக்கள், சுற்றத்தார், நண்பர்கள் ஆகியோர் வசத்திலில்லை; உன்னுடைய **ஹகீகத்து** (ஆகுமிடம்) ஆகிய **ஹக்கு**த ஆலாவிடத்திலேயே யிருக்கிறது. மேலும், உனக்கு நண்பன் வேண்டுமாயின் **சகாவத்து** என்னும் தர்ம கைங்கரியத்தையும், நாணத்தையும் தேடியடைந்து கொள்வாயாக. **அஸ்ஸகிய்யு ஹபீபுல்லாஹி வ லௌகான பாஸிகா, வல் பகீலு அதுவ்வுல் லாஹி வ லௌகான ஆபிதா**—" தர்ம சிந்தனையுடையோன் பாவியாயிருந்தாலும் அவன் அல்லா(ஹ்)வின் நண்பனேயாகும்; கருமி ஒருவன் வணக்கவாளியாயிருப்பினும் நாயனின் பகைவனே," என்று றசூல்(ஸல்)அவர்கள் திருவுளம் பற்றியிருக்கிறார்கள். **அல் ஹயாவு மினல் ஈமான்**— 'நாணம் ஈமானில் நின்றுமுள்ளது,' என்றும் நாயகம்(ஸல்) அருளியிருக்கின்றார்கள்.

உனக்கு உன்னதமான நண்பன் வேண்டுமானால் **இர்பான்** ஒன்றுமட்டுமே போதும். ஏனெ

னில், இதில் சகல பூங்காவனக்காட்சிகளும் உண்டா யிருக்கிறபடியால், உன்னை இதர வீண்காரியத்துக் காக இந்த **நாஸூத்**தாகிய ஸ்தூல லோகம்வரை கொண்டுவரப்படவில்லை.

" லாஹூத்தில் ஜபரூத்தில் லாமகூத்தில்
நாசூத்தில் நாம் வந்த நாட்டங்கேள்—ஹாஹூத்தாம்
நம்மை நாம் கண்டறிய நாடிவந்ததல்லால்
பொம்மைக் கூத்தாடவல்ல போம்." (இர்பானுஸ்ஸபா)

அல்லாஹூத்தஆலாவையும்; உன்னையும் அறி வதற்காகத்தான் இந்த **நாசூத்து** வரைக் கொண்டு வரப்பட்டது. **வமா கலக்துல் ஜின்ன வல் இன்ஸ இல்லாலி யஉபுதூன்**—'அவர்கள் என்னை ஒன்று படுத்தி வணங்கவேயொழிய மனு ஜின் (ஆகிய இரு) கூட்டத்தினரையும் நான் படைக்கவில்லை,' என்று **திருமறையில் இறைவன்** அருளி யிருக்கிறான். அதன்படி **மஅரிபா**(சுயஞானம்)வின் இல்லமைப் பிடித்துக்கொண்டு, **ஹக்**கை இந்த பிரபஞ்சத்தில் ஒட்டியும், ஒட்டாப்பொருளாயு மிருக்கிறனென் றறிந்து, **ஹூலூல்** (உட்டே நுழைதல்), **இத்திஹாது** (இரண்டறக் கலத்தல்) இன்றியே அவனை இவனா கவும், இவனை அவனாகவும், **ஹக்**கிலே **கல்**கையும், **கல்**கிலே **ஹக்**கையும் (ஷுஹூது செய்து) தெரி சித்துக் கொண்டிருப்பதுதான் பிரபஞ்சத்திலுள்ள சகல கல்விகளுக்கும், பூராயத்துக்கும் சிரேஷ்ட மாகவும், சிரேஷ்டத்தனம் யாவற்றிற்கும் கிரீடமாகவு மிருக்கிறது.

ஏழாவது (பஸ்லு) பிரிவு.

[இந்த பஸ்லில் சர்வ சம்பூர்ண பொருளாகிய **ஹக்குதஆலா**வைத் தேடுகிறதைப்பற்றி விவரிக்கப்படுகின்றது.]

அருமையானவனே! அறிந்துகொள்வாயாக:—

உன் வயதில் அநேக நாட்களை நீ வீணாக செலவழித்து விட்டதால் மீதியிருக்கும் கொஞ்ச நாட்களையும் வெறுமனே கழிக்காது, **மஹ்பூப்** ஆகிய நாயனிடத்தில் **இஷ்கு** என்னும் காதலும் **முஹப்பத்து** என்னும் ஆசையும் வைப்பதானது- சகலவற்றையும் விட விசேஷமானது. உன் உயிருக்கு அவன் தோழனாயிருப்பதன்றி **நான்** என்ற தத்துவத்துக்கு ஜீவனாயுமிருக்கின்றான். இந்த ஒளியையும், இருளையும் தனது ஒரே ஜோதியைக் கொண்டு வெளிப்படுத்திவைத்து, சகலவற்றையும் சிருஷ்டித்து வளர்த்து வருவதில் புஷ்பத்துக்கு கிருபை செய்வதைப்போன்றே முள்ளுக்குங் கிருபை செய்து வளர்க்கிறவனாகவுமிருக்கிறான். ஆனால் அத்தகைய **மஹ்பூ**பை விட்டு எந்த **கல்பு** முகம் திருப்பிக்கொண்டதோ அந்த **கல்பு, துன்யா** வென்ற மறதியை தெரிந்தெடுத்துக்கொண்டு **மஹ்பூ**பைக் கைவிட்டபடியால் அந்த **கல்**பை **கல்பு** எனக் கூற மாட்டோம். ஆனால் அதை **சடம்** என்றுதான் அழைப்போம். மேலும், யாதொரு '**கல்பு**' **மஹ்பூ**பின் பேரில் மோகமாகி, அந்த **மஹ்பூபு** தானாக இருக்கிறதோ அதையே **கல்பு** என்போம்,

ஆகையால் மனமே! நீ ஒரு நண்பனைக் காதலிப்பாயாக. அவனே தனது நண்பனுக்கும், விரோ

திக்கும் சிநேகனுயிருக்கும் அத்தகைய **மஹ்பூ**பாக இருக்கிறான். மேலும், அவன் **ஆலம் உல்வீ**யான் உன்னத உலகில் உனக்கு ராஜரீகத்தின் உடையை உடுத்தி, அலங்கரித்து **ஆலம் ஷஹாதா** வென்கிற (தாழ்ந்த) ஸ்தூல உலகில் சுல்தானுடைய படையிலே உன்னை சுல்தானுக இறக்கி வைத்திருக்க, இப்பொழுது நீ உனது ராஜரீகத்தை விட்டுவிட்டு, கேவலமான அற்பர்களின் பாதையைப் பின் தொடர்ந்து நடப்பது உனக்கு யோக்கியமா யில்லாததால் உன்னுடைய மூலமாகிய மேலான நடத்தையில் தானே தானுயிருந்துகொள். மேலும், உன்னை தண்ணீரைப்போன்று தெளிய வைப்பதின்பேரில் உன் வயதைக் கழித்துவிடாது, வீணுகக்கழிந்துவிட்ட வயதுபோக பாக்கி வயதில் எச்சரிக்கையுடனிருந்துகொண்டு, துன்யாவின்பால் வைத்திருக்கும் உன் இச்சையை அதன்போக்கில் விடாது திருப்பி, **ஹக்**கின்மீது ஆசைவைத்து, அந்த ஆசையை பொங்கி வழியச்செய்து உன்னை யாரென்று உற்றுணர்ந்து பார்ப்பாயாக. அப்பொழுது **நீ** யாரென்றும், உன்னை **இன்ன வஸ்து**வென்றும் அறிந்து கொள்வாய். நீ இரகஸியப் பொருளாகிய **சிர்**ரை நீ அறிந்தவனுயிருப்பின், அல்லா(ஹ்)வின் கிருபையளவில் நீ ஆதரவற்றவனுயிராதே. **லா தக்னதூ மின் றஹ்மதில்லாஹி**—"அல்லா(ஹ்)வுடைய கிருபையைவிட்டும் நீங்கள் ஆதரவு அற்றுப்போக வேண்டாம்," என்று திருமறையில் இறைவன் கூறியிருக்கிறான். மேலும், இன்றையதினம் உனக்கு உண்டாயிருக்கும் யாதொரு பதவியையும், நாளைய தினம் நீ திரும்பப்பெறமாட்டாய். ஆதலின், இன்

றைய தினமே உனது எண்ணம், சொல், செயல் களான நிலைமைகள் யாவையும் நீ சீர்படுத்திக் கொள் வாயாக. ஏனெனில், இவ்விடத்தில் துற்செயல்களா லான பழித்தற்குரிய நிலைமைகளை அடையப்பெற்றி ருப்பவன் சகல லோகங்களிலும் கெட்ட நிலையை யுடையவனுகவே யிருப்பானென்பதிற் கிஞ்சிற்றும் ஐயமில்லை. **மன்கான பீஹாதிஹி அஉமா பஹுவ பில் ஆகிரதி அஉமா வஅளல்லு சபீலா**—“ எவ னெருவன் இம்மையில் தன்னை இன்னனென்று அறியாத அறியாமை (அஞ்ஞானம்) என்ற குருட்டுத் தனத்தினல் குருடனுகயிருந்தானே, அவன் மறுமை யிலும் தன்னை அறியாக் குருடனுகவேயிருப்பதன்றி, பாதையால் வழி தவறியவனுகவுமிருப்பான்,” என்று திருமறையில் இறைவன் அருளியிருக்கிறுன். **அத் துன்யா மஜ்ரஅதுல் ஆகிரா**—**துன்யா**வாகிறது **ஆகிரத்**துடைய ‘வேளாண்மை ஸ்தலம்,’ என்று நபி(ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறூர் கள். ஆதலின், எந்த விஷயம் உனக்கு உண்மை யாகத் தேவைப்படுகிறதோ அது இவ்விடத்தில் கிடைப்பதென்றும், யாதொன்று இவ்விடத்திலிருக் கிறதோ அது பிறிதொரு இடத்திலு மில்லையென் றும் மிகப் பழிப்பாகிய **துன்யா**வென்ற சொற்ப ஜீவிய காலத்தையுடைய உலகில் **மக்ஸூது**(இலட்சி யார்த்தம்) ஆகிய அநேக பிரயோஜனங்கள் உண்டா யிருக்கின்றன வென்றும் நமக்கு தெரியவருகிறது. ஆகையால், உனக்காக வேண்டி நற்காரியங்களை தாமதஞ்செய்து பிற்படுத்தாது, துரிதமாக இவ் விடத்திலேயே அவற்றை செய்து முடித்துக்கொள் வாயாக. ஏனெனில், உன் வயதோ அற்பமும், குழி

நரியின் வேகத்தைவிட அதிவேகமாக ஓடக் கூடியது மாயிருக்கிறது. மேலும், உன் வயதில் ஒரு வருடத்தைக்கூட வீணுக்காதே. உன் வாழ்க்கையின் ஒரு வருடம் ஆயிரவிதமான சம்பத்துகளைக் காண உயர்வான விலையுயர்ந்த முத்து போன்றிருக்கையில், அதன் அருமையைக் கிஞ்சிற்றும் அறியாதவனே! இந்த வலுப்பந்தங்கிய விலையுயர்ந்த முத்தை நீ சோளக் கதிரைவிட குறைச்சலாக மதிப்பிட்டிருப்பதை யோசித்துப்பார்த்தால், அது உனக்கு இலவசமாகக் கிடைத்த வஸ்துவைப் போன்றும், அல்லது, பாதையில் கிடந்தெடுத்தப் பொருளைப் போன்றும், அல்லது, தாய், தந்தையரின் ஆஸ்தியில் நின்றுங் கிடைத்த சொத்து போன்றும், அல்லது, சொற்ப விலைக்கு வாங்கிய வஸ்துபோன்றும், அல்லது, இனமாகக் கிடைத்தது போன்றும் நினைத்துக் கொண்டிருக்கிறாயே யன்றி, அதன் மகிமையின் அளவு உனக்குக் கொஞ்சமும் தெரியாது போய் விட்டது. ஆனல் இவ்வுலகில் சகலவஸ்துக்களும் அபூர்வமானதா யிருந்தபோதிலும், நீயும் உன்னுடைய வயதும் உன்னுடைய **ரப்பு** (நாயனு)ம் அதைவிட அபூர்வமானதா யிருக்கின்றன. எனினும் இந்த சரீரத்தை **ஹய்யுன்** என்ற திருநாமத்தைப்பெற்ற அல்லாஹுத்தஆலா உனக்கு இனமாகக் கொடுத்திருக்கிறபடியால் **மவுத்து** என்ற மரணத்தினல் இந்த சரீரம் போய்விடுமென்று எண்ணுதே. ஆனல் நீ குழந்தையன்று; வயது வந்தவனுயிருந்தும் நீ அதனை அறியாமற் கிடந்து வீணில் இறந்துபோவது சரியன்று. **இதா அரத்த கைரன் பஅஜ்ஜில் வ இல்லா மனஅகஷ் ஷைத்தான்**—" நன்மையைச்

செய்ய நீ நாடுவாயாகில் துரிதமாகச் செய்துகொள், இல்லாவிடில் ஷைத்தான் (அவ்வாறு செய்வதை விட்டும்) உன்னை விலக்கி விடுவான்,'' என்று நபி (ஸல்) அவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்று கிடைக்கவிருக்கும் இலாபத்தை நாளை பெற்றுக் கொள்ளலாமென்று பொடுபோக்கா யிராது, தாமரைப் புஷ்பம் தண்ணீரை விட்டுப் பிரியாதிருப்பது போல் உனது **கல்பை ரப்பு**டனே அமைத்து, **ரப்**பைவிட்டும் பிரியா திருப்பதுந்தவிற உன்னை ஒரு அம்பைப்போன்று நேர்மையாக நிறுத்திக்கொண்டு பின்வரும் ஹிகாயத்திலுள்ள மந்திரியைப்போன்று எச்சரிக்கையாயிருந்து கொள்வாயாக.

ஹிகாயத்து :— அறிவாளியான ஓர் மந்திரி **துன்யா**வுடைய வீண் காரியத்தில் தனது காலம் கழிந்து விட்டதைப்பற்றி சிந்தித்து, அழிந்து போகக் கூடிய சம்பத்துகள்பால் வெறுப்புற்று, அழியாத நித்திய சம்பத்தின்மீது ஆசையுற்றவனாய் **சுல்தான்** இடத்திற்சென்று "சுல்தானவர்களே! ஷைத்தானைப் போன்று கபடஞ்செய்து கலகமூட்டலும், துஷ்ட மிருகத்தைப்போல் சீறிப் பாய்ந்து பீறிக்கொல்வதும், சாகபட்சிணியைப்போல பேரவாக்கொண்டு, இச்சை மிகைப்பால் வயிறு புடைக்கத் தின்பதும், காமம் மீறி கலவிசெய்தலுமே இவ்வுலக இயல்பாக மக்களிடை மலிந்து கிடப்பதாலும், என் வாழ்நாளும் அவ்வாறான கருமங்களி லீடுபட்டு, யாதொரு பயனுமின்றி கழிந்துபோய்விட்ட படியாலும், என் சடம் என்ற சட்டை கிழியக்கூடியநேரம் அடுத்து விட்டபடியாலும், தண்ணொளியும், சரீர

பலமுங்குன்றி, சுவாசம் மட்டும் ஓடிக்கொண்டிருப்பதால் **துன்யா**வுடைய ஆசையை விடுத்து **தீன்** (மார்க்க) இயம, நியமாதிகளில் என் மனதைத் திருப்பி, தரிபடுத்தியவண்ணம் **ஹக்கு**டைய வணக்கத்தில் ஈடுபட்டவனாக ஒரு மூலை(**கல்வத்து** அறை)யிலிருந்துகொண்டு என்னைக் கரைந்துருகச் செய்துகொள்ளவேண்டுமென்ற பேரின்பக்காதல் என்னில் பெருக்கெடுத்து ஓடுவதால், தாமதம் ஏதேனுமின்றி என்னை எனது அலுவலைவிட்டும் விடுவிக்க வேண்டுமென்று உத்திரவு கோரிநிற்க, கடுந் தாகமுடையோனுக்கு தண்ணீரின்பாலுள்ள தேட்டமும், பிரியமும் எவ்வாறிருக்குமோ அதுபோன்ற பிரியத்தை அரசன் தனது மந்திரியின்மீது வைத்திருந்ததால், அவரை எவ்வகையினும் தன்னைவிட்டுப் பிரியாவண்ணம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தால் வெளிப்படையில் அவரிடம் சினந்து கூறுவது போல், "மந்திரியே! நீ உனது இஷ்டப்படி எங்கே வேண்டுமானாலும் போகலாம். ஆனால் எனது இராஜ்ஜியத்தில் நீ சம்பாதித்ததை எல்லாம் திரும்பக் கொடுத்துவிட்டுப்போ," என்று சுல்தான் சொன்னார். அதனைச் செவியுற்ற மிகுந்த விவேகமும், புத்தி நுட்பமுமுடைய அந்த மந்திரி அரசனைப் பார்த்து, 'அரசே! நீங்கள் கொடுத்த சகலவற்றையும் நான் இதோ தங்கள் முன்னர் சமர்ப்பிக்கின்றேன்; அதனைப் பெற்றுக்கொண்டு நான் தங்களுக்குக் கொடுத்த யாவற்றையும் எனக்கு நீங்கள் தந்துவிடவேண்டும்,' என்று பதிலுரைக்க அரசன் கேட்டு கடுஞ் சினங் கொண்டவராய் மந்திரியை நோக்கி, 'ஏ, மந்திரி! சற்றேனும் பயமின்றி என்

சமூகத்தில் இவ்வாறு கூறத் துணிந்துவிட்டாய். ஏழையாகிய உன்னால் தனவந்தனை எனக்கு எதைக் கொடுத்திருக்க முடியும்? எனினும், நான் உனக்கு எத்தனையோ **டப்பி**கள் நிறைந்த இரத்தினதிகளும், ஆஸ்தி, பூஸ்தியும், நிலபலஞ்திகளும், தங்க நகைகளும், மாடிவீடும், தோட்டமும், பல்லக்கும், எனைய சாமான்களும், காதலர்களின் மனங் குவிதற் குரித்தான யௌவன பெண்மணிகளும், தண்ணீரில் நீந்திச் செல்லவல்ல குதிரைகளும், மின்னல் பிரபையையொத்த பட்டா கத்திகளும், மலையினைப் போன்றுயர்ந்த யானைகளும், மற்றும் பலவும் உனக்கு நான் சன்மானம் செய்திருக்கிறேன்.' இது போன்று நீயும் எனக்குக்கொடுத்த சாமான்களின் வகை விபரங்களைக் கூறு,' என்று சுல்தான் கேட்ட போது, மந்திரி பின்வருமாறு சொல்லத் தொடங்கினார். "பாத்துஷாவே! சற்று காது தாழ்த்தி எனது பிரதிவர்தத்தை நீதத்தோடு கேட்பீர்களாக. வயதென்று சொல்லப்பட்ட மேலான வஸ்துவையும், அதன் கிரயத்தையும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். அந்த **வயது** என்ற மேலான **ஜரிகைப் பட்டாடையை** முரட்டு **கம்பளி**க்குச் சரியான உங்களுடைய **தௌலத்து**க்காகவேண்டி நான் செலவு செய்து விட்டபடியால் நீங்கள் என்பால் கிருபை கூர்ந்து எனது கழிந்துசென்ற வயதை எனக்குத் திருப்பிக் கொடுத்தருளவேண்டும். இப்பொழுது நான் **பகீர்** உடைய நிலையிலிருக்கின்ற படியால் நீங்கள் எனக்குக் கொடுத்த எல்லாவற்றையும் நான் உங்கள் சமுகத்தில் கொண்டுவந்து சமர்ப்பித்து விடுகிறேன்,'' என்று சொன்னதும், சுல்தான்

மந்திரியுடைய சொல்லைக்கேட்டு சிந்தித்தவராக, 'நம்மால் வயது என்பதை ரூபகரித்து எவ்வாறு இந்த மந்திரிக்குக் கொடுக்க இயலும்? எனவே, இவரிடம் ஒன்றையும் திரும்பக் கேளாது, அவருக்கு விடை கொடுத்து அனுப்பி விடுவதுதான் மிகவும் நலம்,' என்று முடிவு செய்துகொண்டவராய் அந்த மந்திரிக்கு விடையளித்து அனுப்பிவிட்டார்.

எட்டாவது (பஸ்லு) பிரிவு.

[இந்த பஸ்லில் **பக்ரு** என்னும் ஏழ்மைத் தனத்தைப்பற்றி விவரிக்கப்படுகின்றது.]

அருமையானவனே! அறிந்துகொள்வாயாக:—

நீ விசேஷ முள்ளவனு யிருந்துகொண்டு **விசேஷமாயிருக்கிறேன்** என்ற எண்ணத்தையும் விட்டு நீங்கி, கலப்பற்றவனுக யிருந்துகொள். அஃதெவ்வாறெனில், நாலா பக்கங்களிலும் உனக்கு எண்ணற்ற சிஷ்யகோடிகள் இருந்த போதிலும், அவ்வா றிருப்பதைக்கொண்டு உன் மனதில் யாதொரு ஊசாட்டமும் வையாமல் சகலவற்றிற்கும் அதீதமாக உன்னைத் தனியோனுகக்கண்டு உள்ளந் தெளிந்த **பகீர்** ஆக இருந்துகொள்வாயாக. மேலும், **அன்கா** வென்றும், **சீமுர்கு** என்றும் அழைக்கப் படும் யானையராஞ்சி பட்சி **காபு** மலைச் சிகரத்தை விட்டும் பிரியாதிருக்கிறதுபோல் உன்னுடைய **கல்பை** ஹக்குத ஆலாவில் குடியிருத்திவைத்து, அதனின்றும் ஒரு விநாடியும் பிரியாது, அவனுடைய ஆசை

யிலும், ஞாபகத்திலும் சதா தரிபடுத்தி வைத்துக் கொள்வாயாக. ஏனென்றால், **பகீ**ராயிருப்பவனுக்கு கொஞ்சமேனும் **ஹால்** (நிலை) உண்டாயிருக்க வேண்டும். காவி வஸ்திரத்தை உடுத்திக்கொள்வதால் இஞ்சிற்றும் **கமாலிய்யத்து** (பூர்த்தி) உண்டாகாது. "சிவந்த நிறமாகக் கடையில் வைத்து வியாபாரிகள் விற்கின்ற அதுகாவியாகாது, ஒரு வகை சாயமேயாகும்." ஆதலின், காவி வஸ்திரத்தை அணிந்து கொண்டிருப்பவனே! எதனை காவியென்று சொல்லப்படுகிறதோ அதற்கு இலட்சியார்த்தம் நான்காகும். அவற்றுள் முந்தியது, பொய்யை விட்டுவிடுகிறது. ஏனெனில், பொய் சொல்வதால் உன்னில் **கைரிய்யத்து** (வேற்றுமை அல்லது அன்னியம்) உண்டாகிறது. எவ்வாறெனில், பொய்சொல்வதற்கு மூன்று வஸ்துக்கள் வேண்டும்; **கித்பு, காதிபு, மக்தூபு** (பொய், பொய்சொல்பவன், பொய் சொல்லப்படுகிறவன்,) ஆகிய மூன்று வஸ்துக்களும் உன் **கல்பி**ல் வெவ்வேறாகத் தரிபட்ட பிறகுதான் நீ பொய் சொல்லத் துணிவாய்; இல்லாவிடில், சொல்லமாட்டாய். வேற்றுமைப் பட்ட நிலையில் நீ **ஆரிபு** ஆகிய ஞானியும், **முவஹ்ஹிது** ஆகிய அத்வைதியுமல்ல. **ஆரிபு** வாக இருப்பவன் சகலவற்றையும் தானாகக்கண்டு வருவதால் ஒரு காலும் பொய்யுறைக்கத் துணியான். எனெனில், ஒரு மனிதன் தனக்குத்தானே மறைந்தவண்ணம் ஒரு பொய்யை மொழிவதென்பது அசாத்தியம். இந்த இரகசியத்தை யொட்டியே பொய் சொல்வதை விலக்கப்பட்டிருக்கிறது. மேலும், பொய் ஒன்றைக் கூறுவதால் உன் நாவிலிருந்து பிறக்கும்

சொல் பலங்குன்றிப்போய், பிணத்திற்கு சமான மாக ஆய்விடுகின்றது. ஆதலின் நீ பொய்யை ஆராதிக்காது, மெய்யன் என்ற பெயரைப்பெற்று, மெய்யினும் மெய்யாக இருந்துகொள். எவனொருவன் **சித்தீகு** என்ற சத்தியவந்தனாயிருக்கின்றானோ **அர்ஷு** (தெய்வாசனம்) முதலாக **தஹ்தத்தரு** (பாதாளம்) ஈறாகவுள்ள வஸ்துக்கள் யாவும் அவனுக்குடையதேயாம். ஏனெனில் சர்வலோக இரட்சகனை அல்லாஹுத்த ஆலாவே அவனுக் குடையோனாக ஆய்விடுகின்றபடியால் சகலமும் எப்படி அவனுக் கில்லாதுபோகும்?

இரண்டாவதாக, **ரூஹு** ஆகிய ஆத்மாவினுடையவையாயிருக்கின்ற பிரபஞ்ச வஸ்துக்களில் யாதொன்றையும் உனது கையினாலும், நாவாலும், மனதில் உரோஷம், குபாட்டம் வைப்பதினாலும் நீ நோவினை செய்யாதிருந்து கொள்வாயாக. ஏனெனில், தெய்வாசனம் முதல் பாதாளம் ஈறாகவுள்ள வஸ்துக்களும் உன்னில் நின்றுமுள்ளவையான படியால் (அதாவது, '**நீ**' **குல்லு** எனும் சர்வமாகவும், சமஷ்டியாகவும், அகண்டமாகவும், அரூபமாகவும், **பகா** வாகவும், மற்றும் யாவும் உன்னுடைய **ஜுஸ்உ** எனும் வியஷ்டியாகவும், கண்டமாகவும், சொரூபமாகவும், அணுவாகவுமிருக்கிறதால்) ஒரு மனிதன் தன்னுடைய உருப்பில் நின்றும் ஒரு உருப்பை தானே நோவினை செய்ய எவ்வாறு பொருந்துவான்? இந்த இரகசியத்துக் காகவேதான் ஜீவஜெந்துக்களில் யாதொன்றையும் நோவினை செய்யக் கூடாதென்று ஞானியாகிய முமூட்சுக்கு நாம் சொன்னோம்.

மூன்றாவதாக, கொழுகுதல் யாவையும் விட்டொழிந்து, காற்றின் வேகத்தால் மரங்கள் தன்னில் ஒரு இலையுமின்றி உதிர்த்துவிட்டு, மொட்டையாய்த் தனித்துப்போவதுபோல நீயும்; தாய், தகப்பன், பெஞ்சாதி, புருஷன், பிள்ளைகள், அடிமைகள், ஆஸ்தி, பூஸ்தி, பணங்காசு, ஜாதி, குலம் என்பவை போன்ற கொழுகுதலையும், தாத்து, சிபாத்து, அஸ்மா, அப்ஆல் ஆகியவை உனக்கு உண்டு என்கிற கொழுகுதலையும்; இவையல்லாத இதர கொழுகுதல்களையும் விட்டொழித்து சுதந்திரம் பெற்றவனாய் ஆகி, பின்னர் முடிவில் **சுதந்திரம்** என்பதினின்றும் சுதந்திர மடைந்து தனியே தானாகயிருந்துகொள். "**தாத்திலே** சொல்கிற சொல் பரிசுத்த முடையதாயிருக்கிறது; ஏனெனில், தொடர்புகளை விட்டு விடுதல்தான் **தௌஹீ**தாக இருக்கிறது," என்று பெரியோர்கள் பாடியிருக்கிறார்கள். **அல் பகீரு ஸவாதுல் வஜ்ஹி பித்தாரைனி**— "**பகீர்** இருபதியிலும் முகங் கருத்தவன்," என்று நபி(ஸல்) அவர்கள் திருவுளம் பற்றியிருப்பதாலும், **அஸ்ஸூபி லா மதுஹ பலஹு**—ஸூபியாயிருப்பவனுக்கு **மத்ஹபு** இல்லையென்று சொல்லப் பட்டிருப்பதாலும், மார்க்கங்களின் மூலத்தை எவனொருவன் அறிந்து கொண்டானோ அவன் தன்னை **மத்ஹபு** இல்லாதவனாய்க் கண்டு கொண்டான் என்றும், **மன் தரகல் குல்லு பஹஸல லஹுல் குல்லு** "எவனொருவன் சகலவற்றையும் விட்டுவிட்டானோ அவனுக்கு சகலமும் சித்திக்கும்" என்றும், கூறப் பட்டிருப்பதால் நீ சகல சம்பந்தங்களையும், பற்றுதல்களையும் விட்டு நீங்கி யிருந்துகொள்வாயாக.

நான்காவதாக, உனது சுவாசத்தில் ஒரு மூச்சையேனும் காலியாக விடாது, வேற்றுமையைப் போக்கி, மகா தூய்மையான **கனீ** (தேவையற்றவன் அல்லது பற்றற்றவன்) என்னும் திருநாமத்தையுடைய நாயகனின் ஞாபகத்திலேயே நீ சதா தரிபாடாயிருந்துகொள். **வத்குர்ரப்பக பீ நப்ஸிக தளர்ருஅன் வகீபதன் வதூனல் ஜஹ்ரி மினல் கௌலி பில்குதுவ்வி வல் ஆஸாலி வலா தகுன் மினல் காபிலீன்**— "காலை, மாலை (இரு வேளையிலும்) ஆழ்ந்த துயரத்தோடு, உள்ளச்சமேலிட்டவனாக சொற்கள் வெளிப்படாவண்ணம், மறைமுகமாக உன் தன்னில் தானே, உனது நாயனை நீ தியானிப்பாயாக; மறதியாளர்களிலுள்ளோனாய் நீ ஆய்விடாதே," என்று அல்லா(ஹ்) திருகுர்ஆனில் திருவுளமாகி, அவனை **திக்று** செய்யச் சொல்லி நம்மை ஏவியிருக்கிறபடியால், அவனுடைய ஞாபகத்தில் நீ சதா தரிபட்டிருந்து கொள்வாயாக. இதுவன்றி, மேற்கண்ட சுருதிமொழியில் ஆழிய கருத்தமைந்த இரகஸியார்த்த மொன்றிருக்கிறது. அந்த இரகஸியமாவதுயாதெனில், **'வத்குர் ரப்பக' உனது நாயனை நீ நினைத்துக்கொள்** என்று மட்டும் சொல்லாது, அந்த சொல்லுடனே **பீ நப்ஸிக** என்கிற **எழுத்தையும் இணைத்து, வத்குர் ரப்பக பீ நப்ஸிக**—"உன் (நப்ஸு) தன்னிலே நீ உனது நாயனை நினைப்பாயாக," என்று திருவுளமாயிருப்பதால் **ஹக்**கை உனது **நப்**ஸிலே அறிந்து, **திக்ரு** செய்யவேண்டுமென்று இந்த வேத வாக்கியம் நன்கு அறிவிக்கின்றபடியால், **நப்ஸு** இன்னதென்றும், **ஹக்கு** இன்னதென்றும், **நப்ஸில்**

ஹக்கை **திக்ரு** செய்தல் இவ்விதமென்றும் ஞான குருவிடத்தில் விளங்கியறிந்துகொண்டு, அவருடைய உத்திரவுகொண்டு **திக்ரு** செய்தால் அந்த **திக்ரா**கிறது **தாகிர்** ஆகிய தியானியை **மத்கூர்** ஆகிய **திக்ரு** செய்யப்பட்டவனுக ஆக்கிவிடக் கூடிய பிரயோஜனத்தைக் கொடுக்கும்.

" இலாஹென்று சொன்னதுன்னைத்தான்
அல்லா(ஹ்)வென்று சொன்னதுலகின் ரப்பைத்தான்
*துலாம்பரமாகவே **நீ** தான்*
*இதின் சூட்ச மறிந்திடில் **தாத்து** ஒன்றுதான் "*

" கருவாம் கலிமாதான் சூட்சம்—அதைக்கண்டறிந்
தாலுனக் குண்டாகு மோட்சம்
*திருவாம் **இலாஹு** பதேசம்— அதைத்தேறு*
அல்லா(ஹ்)வல்ல வேறென்றல் மோசம். " (கலிமா)

(ஆனந்தக்களிப்பு—இர்பானுஸ்ஸபா)

" ஆதியொரு பொருளாகவே நிற்கின்ற அற்புதத்தை
ஓது முவமையினு லறிந் தொன்று படுவதற்கு
*காதல் **நப்ஸை** இன்னதென்று கருத்தறிந்தால்*
*சோதி **ரப்பும் நீ**யுமொன்று பட்டாய் நபி சொற்படியே! "*

*" சொல்லும் **நப்ஸை** இன்னதென்று நான் சூட்சுமமாய்*
*வெல்லும் படியா யுரைக்கிறேன் வேத **அறு** வது வாம்*
*கொல்லவுஞ் செய்யும் பிழைக்கவுஞ் செய்திடும் கூறும் **அறு***
*நல்ல குருவா லதின் **ஹகீகத்தை** நயந்தறியே! "*

(களித்துறை—இர்பானுஸ்ஸபா)

இதனை ஞான தேசிகரிடம் கேட்டு விளங்கியறியவேண்டுமேயன்றி, ' தானில்லை, யாவும் **ஹக்கு**தான் ' என்று நினைத்துக்கொள்வதால் மட்டும் பிர

யோஜனங் கொடாது. மேற்சொன்ன நான்கு காரியங்களையும் ஒருவன் எடுத்து வழுவாது நடப்பானுகில் அல்லா(ஹ்)வுடைய கிருபையினல் அவனுக்கு **ஹால்** ஆகிய பேரானந்த அனுபூதி நிலையுண்டாகி வலீயுல்லா(ஹ்)வாகத் திகழ்வான். மேலும், யாரேனும் ஒருவர் இந்த அனுஷ்டானங்களுள் சுருக்கமானதோர் அனுஷ்டானத்தை சொல்லென்று உன்னைக் கேட்டால் அதற்கு நீ மறுமொழியாக, "என்னுடைய நண்பனே! அல்லாஹுத்தஆலா உனக்கு வேண்டியதா யிருந்தால் நீ பொய் சொல்லாதே; எந்த ஜீவனையும் துன்புறுத்தாதே; **ஆரிபு** ஆகிய **பகீருக்கு** இவ்விரண்டு குணங்களும் போதும்," என்று கூறுவாயாக. ஏனென்றால், **துன்யா, ஆகிரத்து** என்று சொல்லப்பட்ட இருபதியிலுண்டாயிருக்கிற நன்மையும், **பீர், முரீது**டைய நன்மையும், உயர்வான நிர்ணய அனுஷ்டானத்தின் நன்மையும், இவ்விரண்டிலும் பொதிந்திருப்பதோடு நில்லாது, இம்மை, மறுமை ஆகிய இரண்டும், இவ்விரண்டுக்கும் அடிமைகளா யிருக்கின்றன. சுகமெனப்படும் அற்ப சுகங்கள் யாவும் இவ்விரண்டிலும் உண்டாயிருக்கிறதன்றி இருபதியிலுண்டாயிருக்கும் நோய் அல்லது பிணிகளின் துன்பத்தை நீக்கி சௌகரியத்தைக் கொடுக்கவல்ல ஔஷதமும், கொடிய விஷங்களை நிவர்த்திக்கக்கூடிய முறையும் இவ்விரண்டு தேவாமிர்தங்களிலும் அடங்கி யிருக்கின்றன," என்று சொல்வாயாக.

ஹிகாயத்து:— களங்கமற்ற கண்ணுடியைப் போன்ற தெளிவினையுடைய **கல்பைப்** பெற்ற ஒரு

பகீர் யாதொரு கவலையுமின்றி நீரோடை யொன்றி னருகே அமர்ந்துகொண்டு தண்ணீரிலுள்ள மீன் களை அவர் கூப்பிட்டவுடன் வருவதும், போகச் சொன்னதும் போய்விடுவதுமா யிருக்கின்றதைக் கண்ணுற்ற ஒரு மனிதன் மிக வியப்படைந்து, **பகீர்** இடம் சென்று இந்த குணம் உம்மில் வெளியாயிருப் பது நீர் பெற்றிருக்கும் தெய்வ சம்மதமான பொருத் தத்தைக்கொண்டா? அல்லது தினசரி நீர் ஓதிவரும் வேத வசனங்களாலா? அல்லது உமக்கேற்பட்ட **விலாயத்**தைக் கொண்டா? அல்லது பெரியோர்களு டைய வழிகாட்டலினலா? வென்று கேட்க, 'எனக்கு இக்காரியம் எதனுலும் நிகழவில்லை; ஆனல், நான் பொய் சொல்லாமலும், எந்த ஜீவனையும் மனே, வாக்கு, காயம் ஆகியவற்றைக்கொண்டு நான் ஹிம் ஸிக்காமலு மிருந்ததினலேயே என்னில் இது வெளி யீடாகக் கண்டீர்,' என்று பதிலிறுத்தார். 'எவன் பேரில் இந்த குணங்கள் வெளியாயிற்றே அவன் மீது ஜீவர்கள் யாவும் நட்பாயிருக்கும்,' எனவும் கூறினர். மேலும், நீர்வாழும் ஜந்துக்களை அவன் நெருப்பில் விழச்சொன்னலும் உடனே அவ்வாறே அவை தாவி விழுந்து விடுமேயன்றி, நெருப்பை நெருப்பென்று பாராது. எனவே உலகிலுள்ள பாம்பு, தேள் முதலான சகல விஷ ஜெந்துக்களும் **பகீர்**களுக்கு **மஹ்பூபு** (நண்பன்)உடைய தன்ன கிர்தாவா யிருக்கின்றன வென்று நீ யறிந்து கொள் வாயாக.

★ முதலாவது அத்தியாயம். ★

[இந்த முதல் அத்தியாயத்தில் **இன்ஸான்** (மானிடன்) எத்தகைய சிறப்பும், மகிமையுமுண்டயோன் என்பதைப்பற்றி விவரிக்கப்படுகிறது.]

அருமையானவனே! அறிந்துகொள்வாயாக:—

கா னல்லாஹுᵘ வலாஷைஉன் மஅஹுᵘ வஹுᵘவல்ஆன கமாகானஅலைஹி— "துவக்கமின்றிய அநாதி காலத்தில் அல்லா(ஹ்) தன்னுடன் யாதொரு வஸ்துவுமில்லாதிருந்தது போலவே, முடிவின்றிய நித்திய காலத்திலும் அவ்வாறிருக்கிறான்," என்ற நாயக வாக்கியத்தின் படியும், **மன் அரப நப்ஸஹுᵘ பகத்அரப ரப்பஹுᵘ** 'எவனொருவன் தன்னை அறிந்தானோ அவன் மெய்யாக தன் நாயன் **தான்** என்று அறிந்துகொண்டான்,' என்று நபி (ஸல்)அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ள படிக்கும், **அல் இன்ஸானு சிர்ரீ வஅனசிர்ருஹுᵘ** 'மானிடன் எனது இரகஸியப்பொருள்; நான் அவனது இரகசியப் பொருளாகும்,' என்று அல்லாஹுᵘத்தஆலா **ஹதீது குத்ஸி**யில் திருவுளமான படிக்கும் **இன்ஸான்** ஆகிய மானிடனை அறியும் ஞானத்தைப்பற்றி இங்கு பேசத்தொடங்குகிறோம். இந்த வாக்கியத்தின் இரகஸியத்தை விளங்கி நன்கு அறிந்தவனுக்கு **அல் இன்ஸானு ஹுᵘவல்லா(ஹ்)** 'மானிடன் அல்லா(ஹ்)வாயிருக்கும்,' என்று ஹழரத்து ஷெய்கு அப்துல் கரீமில் ஜீலி(றலி) அவர்கள் தங்களின் **இன்ஸான் காமில்** என்ற கிரந்தத்தில் கூறியிருப்பதானது திட்டமாய் அறியவரும்.

"அல்லா(ஹ்)விற்குக்கிய **இக்லாஸினில்** அவனும் இன்ஸானும் ஒன்றுமென, சொல்லியிருக்கிற சொல்லைப்பார்க்கில் சிர்ருல் **இன்ஸான்** தானவனுமென்று, எல்லார்க்குமிது வெளியாகுமே இன்ஸான் காமிலில் வந்ததினால், சொல்லாத சொல்லைச் சொன்னபேர்க்கு சுவர்க்கந் தூரமென்றருளிச் செய்தார்."

(ஹகீகத்துமாலை—தைக்கா சாஹிபு அப்பா)

மேலும் அறிவாயாக:— இந்த பிரபஞ்சமும், அதிலுள்ள நவீன சிருஷ்டிப் பொருட்களும் உண்டானது பற்றியும், துவர்க்கமின்றிய அனாதி காலந்தொடுத்து முடிவின்றிய நித்திய காலம்வரை **இன்ஸான்** ஆகிய மானிடன் கறிபூடாக இருந்து வருவது பற்றியும், **லாமகான்** என்ற குறிப்பின்றிய **தாத்து** ஆகிய தத்சொரூபத்துக்கும், **மீதாக்கு** என்கிற ஆன்ம கூட்டத்திற்கும் நடுவில் மானிடன் நான் உயிராக இருக்கின்றான் என்பதை யாரும் அறியவில்லை. இந்த **இன்ஸான்** பேரில்தான் **குன்** (ஆகு) என்ற கட்டளை உண்டானதும், அந்த **குன்** என்ற மதுவைக் குடித்து, போதையாகி **பயகூன்** என்ற **அவ்வாறே ஆகி**யிருப்பதும் இவனேயானபடியால், பூர்வகாலத்தின் பூர்வப்பொருள் இவனேயென்றும், மேலும் சர்வத்திற்கும் **அனாதி**யாகவும், **ஆதி**யாகவுமிருப்பது இவன்தான் என்றும் (அதாவது, இன்ஸானின் வடிவம்தான் **தாத்து**டைய முகத்தில் அகண்ட பரிபூர்ணமாகவும், **சிபாத்து**டைய முகத்தில் **முஹம்மது** (ஸல்) அவர்களின் ஜோதியாகிய **நூரு முஹம்மதீ** யாகவுமிருக்கிறதென்றும்) ஞான

சொரூபிகள் கூறுகின்றனர். இந்த உபதேசத்தின் கருத்தை நன்கு விளங்கியறிந்தவன் **ரூஹுல் குத்ஸு** ஆகிய பரிசுத்த ஆத்மா **இன்ஸான்** தான் என தெரிந்துகொள்வான்.

சிறப்புற்றவனே! அறிவாயாக:— அந்த ரூஹுல் குத்ஸானது எப்பொழுது பல்வேறு ஆன்மாக்களாகப் பிரதி பலிக்கப்பட்டு, அவ்வாறாகப் பிரதிபலித்த ஒவ்வொரு ஆன்மாவும் தன்னை வெவ்வேறாகக்கண்ட அத்தினத்தைதான் **'வாக்குறுதி செய்யப்பட்ட நாள்'** என்றும், அவ்வாறான ஆன்மாக்களை நோக்கியே **அலஸ்து பிறப்பிகும் 'நான் உங்களது நாயனல்லவா'** வென்ற கேள்வி இறங்கினதென்றும், சகல **மன்ஸில்** களான இறங்கும் தானங்களும் உண்டாயிருக்கிறதென அறிந்து கொள்வாயாக. இந்த பிரபஞ்சம் என்ற விருட்சத்துக்கு **இன்ஸான்** வித்தாக யிருக்கிறபடியால் இவன் பூர்வமும், பிரபஞ்சம் இடையிற் றோன்றிய நவீனப் பொருளாகவு மிருக்கின்றன. மேலும் சம்பூர்ண ஞானம் அல்லது பேரறிவுடைய சொரூபம் **இன்ஸானி** யானபடியால் அவனில் என்ன குறை இருக்கப்போகிறது? ஆதியில் இவன் கன்னியவானாயும், இப்பொழுது வலுப்பந்தங்கிய அதிசயப் பொருளாயு மிருக்கின்றான். (அதாவது, சம்பூர்ணத்தை வளர்க்கக்கூடிய இலட்சியப் பொருள்தான் இந்த நிரப்பமான வீட்டில் வந்து குடியிருக்கிறதென்று நீ அறிந்துகொள்.) மேலும், **இன்ஸானுடைய ரூஹு** அல்லது **ஆத்மாவானது** பிரபஞ்சத்துக்கு முதன்மையாகவும், இவனது சரீரம் பிரபஞ்சத்துக்குப்

பின்னல் நிறப்பமாக்கப்பட்டதாகவு மிருப்பதால் இந்த பிரபஞ்சம் இவனுடைய ஆத்மாவுக்கும், சடத்துக்கு மிடையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறதால் மானிடன் மேற்சொன்ன இரு உலகினுக்கும் **மக்ஸூது** ஆகிய இலட்சியப் பொருளாயிருக்கிறனென்றும், இந்த இருலோகமும் ஒரு மனிதனில் உண்டாயிருக்கிறதென்றும் அறியாது சிலர் இந்த மானிடனை அன்னியம் அல்லது வேற்றுப்பொருள் என்று கூறுவதால் இவனுக்கு யாதொரு குறைவுங்கிடையாது; ஆனல் **ஆரிபு** ஆகிய ஞானியிடத்திலோ இவன் **ஐன்** எனும் சுயமாகிய சத்துப் பொருளாகவே இருக்கிறன்.

மேலும் அறிவாயாக:— மானிடன் தன்னைக் கொண்டே தன்னை சம்ரட்சித்தற்பொருட்டு நெடும் பிரயாணமொன்று செய்கிறன். எவ்வாறெனில், அவன் **லாமகான்** ஆகிய குறிப்பற்ற தலத்திலிருந்து ஆன்மலோகத்தில் வந்த பின்னர், சூட்சும உலகை தயார்செய்துகொண்டு, இப்பூவுலகில் வந்திறங்க நாடியபோது தனது தகப்பனின் அன்னபானதிகளான ஆகாரமாகி, சதையாகி, இரத்தமாகி, சுக்கிலமாகி, **ஷஹ்வத்து** என்கிற இச்சையினல் **றஹ்மான்** என்கிற தகப்பனில் உசும்பு தலைக்கொடுத்து, **ரஹ்மு** என்னும் தாயுடைய கர்ப்பக்கோளரையில் வந்து தரித்து, தனது தாயை **ரஹீம்** என்றறிந்து, தனக்கு வேண்டிய யாவற்றையும் தயாரித்துக்கொண்டு சில தத்துவங்களை அடையப்பெற்று, பின்னர், அவனே வெளியில் புறப்பட்டு இந்த சடம் அல்லது தூலம் என்ற அழகிய வீட்டி

னில் புகுந்து வேற்றுமையின் பாதையில் கால்லான்றி பால்குடி பிள்ளையாயிருந்து, அந்தப் போக்கில் பின்னர், குழந்தைப்பருவம் சரீரத்தில் தொடர்ந்து வளர்ந்துகொண்டுவந்து, நாசமடையக் கூடிய இந்த சடலோகமென்ற கண்ணாடியில் புதிய வாலிபம் என்கிற அழகைக் காட்டினன். அஃதெவ்வாறெனில், குறிப்பற்ற **லாமகானு**டைய பதவிக்கும், இந்த ஸ்தூல சரீரத்துக்கும் இடையேயுள்ள எண்ணற்ற திரைகளைக் கீறிக் கிழித்துக்கொண்டு அந்த **தாத்து** என்ற **ஜலால்** ஆகிய மகிமையே இந்த சுயத்தின் (ஜமாலாகிய) பேரழகாகவும்; இந்த **சிபாத்து** என்ற **ஜமால்** ஆகிய பேரழகுதான் அந்த கலப்பற்ற (ஜலாலாகிய) மகத்துவமாகவுமிருக்கின்றன வென்பதை **இன்ஸான்** தோற்றுவித்தான். இத் தருணத்தில்தான் தனக்கு தன்னுடைய தெரிசனமும், சகலவித தத்துவங்களின் பூர்ணத்தன்மையும், பூர்வப்பொருளான **சம்பூர்ண ஜோதி**யும் கிடைக்கப் பெறுகின்றன. **முத்லக்கு** என்ற சூரியனுக்கு **முகையிது** என்ற சந்திரன் நேர்பாடாக வரும் இத் தருணத்தில்தான் நாட்டங்கள் நிறைவேறக் கூடியவையா யிருக்கின்றன.

எனவே, நீ புத்திசாதுர்ய முடையோனாக இருப்பின், இந்த நேரம் தப்பிப் போகாதபடி எச்சரிக்கையோடிருந்து உனக்கு ஆகவேண்டிய காரியம் பூராவையும் இந்த நேரத்திலேயே செய்து முடித்துக்கொள். "உனது மனதில் ரோஜாமலரின் நினைவு செல்லுமேயானால் நீ ரோஜாமலராக ஆய் விடுவாய்; அல்லது நிலையற்ற **புல்புல்** பறவையின்

நினைவு மிகைக்கின் நீ **புல்புல்** பட்சியாகவே ஆகி விடுவாய். நீ **ஜுஸ்உ** வெனும் வியட்டியாகவும், ஹக்கு குல்லு எனும் சமஷ்டியாகவு மிருக்கிறபடி யால் சிலகாலம் உன்னை **குல்லு** எனப்பாவித்து நிதித்தியாஸனம் (அப்பியாஸம்) செய்தா யாகில் நீ குல்லாகி விடுவாய்,'' என்று ஹலரத்து மௌலானா அப்துர்றஹ்மான் ஜாமீ(றஹ்) அவர்கள் பாடியிருக் கிறார்கள். மேலும், **இன்ஸான்** மேற்சொல்லப்பட்ட வாலிபத்துக்குப் பிறகு, நடுவயதென்கிற பருவத்தி லாகி, பின்னர் வயது முதிர்ந்தவன் என்ற பருவத் துக்கு வந்து அதற்கான சாதனங்களைச் சேகரித் துக்கொண்டு, **அனாஸிறு** என்னும் சதுர்ப்பூதங்க ளாலழைக்கப்பட்ட சட்டையைக் கழற்றி எறிந்து விட்டு பிறகு **மலகூத்து உக்ரா** வென்னும் சூட்சும சரீரமாகிய நடுநிலையான **பர்ஜகு**டைய லோகத்தில் போய்க் குடியிருப்பான். அதன் பின்னர் **ஜபரூத்து உக்ரா** வென்னும் காரண சரீரமாகிய ஆன்ம லோகத்துக்குப் போவான். அதன் பின்பு தன் **அஸ்லா**கிய மூலத்தின்பால் வருவான். **இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்** 'திட்ட மாக நாம் அல்லா(ஹ்)வுடையவர்களே, மேலும் நாம் அவனிடமே மீளுகிறவர்களா யிருக்கிறோம்,'— என்று இறைவன் திருமறையில் கூறியிருப்பதும், **குல்லு ஷைஇன் யர்ஜிஉ இலா அஸ்லிஹி**—சகல **வஸ்தும் தத்தம் மூலத்தளவில் மீளும்**—என்ற நாயக வாக்கியமும் இதனைத் தரிபடுத்தி வைக்கின் றன. இவ்வண்ணம் தன் வாழ்நாளை முடித்து, தன் காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு இந்த சரீரம் என்கிற கண்டப்பொருளில் ஏழு பதவிகளின் யாத்

திரைகளையும் செய்துகொண்டிருப்பான். ஆனல் இந்த சரீரத்திலிருக்கும் பொழுதே **ஆலம் இன்ஸான்** ஆகிய மனுவுலகிலிருந்து **அஹதிய்யத்து** (துரியாதீத நிலை) வரையும் யாத்திரை (ஸைர்) செய்து கொண்டிருப்பான். அனுதியாயுதித்த அந்த ஆசை **மூத்லக்கு** என்னும் சம்பூர்ணத்தின் பட்சியாக வேண்டியிருக்கிறது. மேலும் மானிடன் தன் மூல மான குடியிருப்பு தோட்டத்தை விட்டும் புறப்பட்டு அநேக தோட்டங்களைச் சுற்றிப்பார்த்தான். எனி னும், தன் மூலமாகிய தோட்டத்தினது ஆசை அவனை விட்டும் அகலாததால் மீண்டும் தன் சுய மான பூர்வீக தோட்டத்துக்கே திரும்பிச் செல் கிறன் என்று அறிந்துகொள்.

இன்னும் அறிந்துகொள்வாயாக:- இதுவே **தஜத்திதுல் அம்தால்** என்னும் ரூபங்களைப் புதுப் பித்தல் என்பதினுடைய பிரச்னை யாயிருக்கிறது. இதில் உனக்கு சந்தேக முண்டாயிருப்பின் தற் பொழுது உன்னில் எத்தனையோ உடைகளான குழந்தைப்பருவம், பால்யப்பருவம், வாலிபப்பருவம், நடுவயது, கிழவயது என்பவையான பருவங்கள் அமைந்திருப்பதை சற்று சிந்தித்துப் பார்ப்பாயாக. அப்பொழுது உனக்கு நன்கு விளங்கும்.

குல்ல யௌமின் ஹுவ பீஷான் 'நாள் தோறும் அவன் தனது காரியத்தில் ஈடுபட்டிருக் கிறன்,' என்று அல்லாஹுத்தஆலா திருவுளமா யிருப்பது அந்த இரகஸியத்தைக் குறித்தே; அதா வது ஒரு உடையினைக் கழற்றிக்கொண்டு மறு

உடையை அணிந்துகொள்கிறவனா யிருக்குமென்று அறிந்துகொள். எந்த நேரத்திலும் அவன் அணிந்துகொள்ளக்கூடிய உடையானது புதிது புதிதாக இருக்குமேயன்றி, ஒருதரம் உடுத்திக்கொண்ட பழைய உடையை மறுதரம் உடுத்திக்கொள்வதில்லை. மேலும், ஒருவகை உடையை விட்டு பிரிதொருவகை உடையை அணிந்துகொண்டு அந்த புதிய உடையை முந்தியதற்கு முற்றிலும் வேறுபட்ட உடை எனச் சொல்வான். எனினும் ஒவ்வொரு உடையாகிய வேஷமும் வெவ்வேறா யிருக்கிறது. பூராவும் வேஷமேயாம். நீயோ இவற்றை விட்டும் அப்பாற்பட்ட பரிசுத்தவானா யிருக்கின்றாய். மேலும் அந்த வேஷத்தின்பேரில் வெவ்வேறுத் தன்மை யுண்டா யிருக்கின்றதேயன்றி எந்த இடத்திலும் முந்திய வேஷம் இரட்டிக்கப்படவில்லை. ஆதலின் மானிடனின் இரகசியங்கள் மிகவும் உன்னதமானவை. அதை சிலர் அறிந்து வெளியாக்காமல் மறைத்து வைத்தார்கள்.

மேலும் மானிடனை யாரென அறியாது தாய், தகப்பன் அவனை தன் பிள்ளையென்றும், தன்னைப்போல் கோலம் எடுத்திருக்கிறானென்றும், பாட்டன் அவனைத் தன் பேரனென்றும், அவன்பால் தனக்குப் பிரியமுண்டாயிருக்கிறதென்றும், அவனை அல்லா(ஹ்) எங்களுக்கு காப்பாற்றுவானென்றும், சிறிய தகப்பன் அவனை தன் தமையனுடைய வடிவத்தைப்போன்றே சமைந்திருக்கும் தனது தமையனுடைய குழந்தையென்றும்; சிறிய தாய் அவனை தன் தமக்கை மகனென்றும், அவன்மீது தனக்கு

தாயைப்போன்ற இருமையுண்டென்றும் பலவாருக சொல்கின்றனர். ஆனால் இவன் யாரென என்னைப் பார்த்து கேட்கப்பட்டால் நான் அதற்கு அளிக்கும் விடை யாதெனில், யார் யார் என்னென்ன முறையைக்கொண்டு **இன்ஸானை** அழைத்திட்ட போதிலும், அவனுடைய மூலத்தை நோக்க அவன் தாய், தகப்பனில் நின்று முள்ளவனுமன்று, தான் தானுய் உண்டானவனுமன்று, **கைபு ஹுவிய்யத்து** என்ற மறைபொருளைச் சேர்ந்தவனும், அந்த மறைபொருளின் தெளிவாயும் அவன் இருக்கின்றனே யொழிய மற்ற மிருகாதிகளைப்போன்று அவன் இறந்தழியும் பிணமல்லவென்பதை அறிந்துகொள். எனினும், அபூர்வமாக மேலாம்பரத்தி லிருந்து இறங்கி யிருக்கிறனென்று உணர்ந்துகொள். ஆனால், அவன் எந்த ஒரு இடத்திலிருந்தும் கீழிறங்கி வரவில்லை. அவன் எங்கிருக்கின்றனே அங்கேயே இருந்துகொண்டிருக்கிற போதிலும், ஒரு மருட்சியான் பார்வை இடையி லிருந்துகொண்டிருப்பதால் அவனை வருவதாகவும், போவதாகவும் காட்டிவைக்கிறது. இன்னும் அவனுடைய துவர்க்கம், வானம், பூமி ஆகியவற்றிலில்லை.

சோதரனே! **இன்ஸான் காமில்** என்னும் சம்பூர்ண மானிடனின் முடிவான எல்லையை நோட்டமிடுங்கால் இறப்பும், பிறப்பும் இவனுக்கு கிடையாதெனக் கூறவேண்டும். அவனே **அம்ரு** எனும் கட்டளையை யுடையவனுதலால் **மஉமூறு** என்ற கட்டளை யிடப்பட்டவையில் நின்று முள்ளவனன்று. மேலும், மதுவாகவே யிருக்கிறபடியால், அவன்

போதையாக்கப்பட்டவர்களில் நின்றுள்ளவனல்ல. அவன் வானமுமன்று, பூமியுமன்று, சூரியனுமன்று, சந்திரனுமன்று, வானவருமன்று, ஜின்னுமன்று, மண்ணுமன்று, தண்ணீருமன்று, கற்கரடுமன்று, புற்பூண்டுமன்று, மிருகங்களுமன்று, உயிருமன்று, உடலுமன்று; எனினும், இவை யாவும் அல்லா(ஹ்)வின் அம்ரு என்னும் கட்டளையைக்கொண்டு வெளியீடானவை என்று அறிந்துகொள்வாயாக. நாம் இங்கெடுத்தெழுதிவந்த விஷயங்கள் யாவும் காமிலீன் ஆகிய சம்பூர்ணமானவர்களின் சிறப்பான நிலையாகவும், உள்ளங்கள் உயிர்பெற்றிருப்போரின் நடவடிக்கையாகவும், முஹக்கிகீன் ஆகிய பாரமார்த்திக நிலையிலிருப்போரின் இல்மு ஆகிய ஞானமாகவுமிருக்கின்றன.

நஹ்னுல் ஆகிருனஸ் ஸாபிகூன்—'முந்தினோரும், பிந்தினோரும் நாங்களாகவேயிருக்கும்,' என்று றசூல்(ஸல்) அவர்கள் பகர்ந்தருளிய நித்திய நிலையின் இரகசியார்த்தத்தை வெகு அழகான முறையில் யாதொரு மறைவுமின்றி வெளிப்படுத்தி விட்டபடியால், அவ்வல் ஆகிய ஆதியும், ஆகிர் ஆகிய அந்தமும், லாஹிர் ஆகிய வெளியீடும் பாதின் ஆகிய உள்ளீடும் நானுக்கே இருக்கின்றேன் என்று அறிவிக்கின்றது. இதுவுந்தவிர, இப்பொழுதிருப்பதே முன்னர் பூர்வ காலத்தில் இருந்ததென்றும், இனி எப்போதும், முடிவின்றிய நித்தியகாலத்திலும் இருக்குமென்றும் மேற்கூறப்பட்ட நாயக வாக்கியத்தினால் நம்மில் தரிபாடாயிற்று. செய்யிதுல் முர்ஸலீன் ஆகிய நபிகட்

பிரான்(ஸல்) அவர்களுடைய திருவசன மென்கிற **ஹதீது**தான் நமக்கு **சனது** ஆகிய பட்டயமாக்கும், இந்த பட்டயமே நம்மை நமது குற்றங்களை விட்டும் தடுக்கவல்ல மதிற்சுவராகவு மிருக்கின்றது. இந்த **ஹதீது** பிரகாரம் மானிடன் **ஹக்கு** (மெய்ப் பொருள்) என்னும் விளக்காக இருக்கிறபடியால் அந்த மானிடன் ஆகிய தெய்வ விளக்கு ஓர் நித்தியப் பொருளாயிருக்கிறது. இந்த ஸ்தூலமும், பிரபஞ்சமும் அதின் சாய்கையாயிருப்பதால் நிலையின்றிய அநித்திய வஸ்துக்களேயாம்.

ஆகையால், இந்த மானிடன் கடல், அலை என்ற இருதரப்புக்கும் வாரிசாக (அதாவது, அகண்டத்தையும், கண்டத்தையும் உடையவனாக) இருக்கிறபடியால் தெய்வாசன பீடமாகிய **அர்ஷுக்கு** மேற்பட்ட **அர்ஷும்** பாடமிடப்பட்ட பலகையான **லௌஹுல் மஹ்பூ**லுக்கு **லௌஹுல் மஹ்பூ**லும் இவனாக இருக்கின்றான். மேலும் அவ்வில்; ஆகிர், லாஹிர், பாதின் யாவும் இவனுக்கே இருக்கின்றான். இன்றைய தினத்தைப்போன்று நேற்றைய தினமும், நேற்றைய தினமிருந்தது போலவே இன்றும் இருக்கிறானேயன்றி இதற்கு மாற்றமாயில்லை. இன்னும், ஆன்மலோகத்தில் இருந்தவாறே இப்போது மிருக்கிறான்; இப்போதிருப்பதைப் போலவே முக்காலத்திலும், காலவரையறை இன்றிய எக்காலத்திலும் இருக்கிறானென்றறிந்து கொள்வாயாக. இந்த பாதையை எல்லா வழிப் போக்கர்களும் அறியமாட்டார்கள். ஆனால், குகைகள் ஆயிரக் கணக்கி லிருக்கினும், பூர்வப் பொரு

ளான தங்கம் ஒன்றேதான்; பாதைகள் இலட்சக் கணக்கிலிருந்தபோதிலும் வழிப்போக்கன் ஒருவன் தான் என்று அறிந்துகொள். இந்த ஆத்மாவும், சடமும் அதிசயமான வஸ்துக்களா யிருக்கின்றன. **கல்பு** ஆகிறது புதுமையானதாகவும், **மஃபூபு** (நண்பனு)டைய பூர்வீகமான வடிவாகவுமிருக்கிறது. மனிதன் அந்த **கல்பு**டைய வடிவமாக இருக்கிறான். உன்னுடைய **ஹகீகத்து** (அகமியமு)ம், **மக்ஸூது** (இலட்சியார்த்தமு)மான உன் **கல்பை** நீ இன்ன தென்றறிய நான் அதை ஒரு கணக்குப்புள்ளியாக சைக்கினைச் செய்து எழுதியிருக்கிறேன். அந்த **ரம்ஜு** (சைக்கினை புள்ளிக்கணக்கு) வாகிறது கீழ் வருமாறு காண்க:— **ன் 1 ப 2 இ.** இதனைப்பற்றி நீ **முர்ஷிது** இடத்தில் விளங்கி யறிந்துகொண்டு, அறியாதவனைப் போலிருந்து கொள்வாயாக.

மேலும் நீ அறிவாயாக:— வெளியரங்க கல்விகளைக் கற்றறிந்த சாதாரண மக்கள் பல்வேறுபட்ட கல்விகளான **பிக்ஹு** (சட்ட நிரூபணம்), **உஸூல்** (தத்துவ ஞானம்), **மஆனி** (அணியிலக்கணம்), **மன்திகு** (நீதி சாஸ்திரம்), **ஹைஅத்து** (உருவ சாஸ்திரம்), **நுஜூம்** (வான சாஸ்திரம்), **ஹிஸாப்** (கணித சாஸ்திரம்), **திப்பு** (வைத்திய சாஸ்திரம்), **ஹப்ரு** (அகா தத்துவம்), **ரமல்** (சக்கர சாஸ்திரம்), **தஅவத்து** (ஆகருடணம்), **தில்ஸம்** (ஜாலவித்தை) ஆகிய **இல்மு** (கல்வி)களைப் படித்தும், இரத்தினம், **தல்வாறு** (போர்வாள்) முதலான ஆதேயப் பொருட்களை மதிப்பிட்டு இன்னது பெருமென்றும் அறிகின்றார்களேயன்றி, ஆதாரப் பொருளான மானிடனை

இன்னுனென்று அறிவதில்லை; எனினும், அவர்களில் ஒவ்வொருவரும் நான் நன்கு அறிவேன் என்று சொல்வதெல்லாம் மனிதன் மண்ணால் படைக்கப் பட்டவன், மண்ணுக்கு தாழ்மைத்தனமேயன்றி மேன்மையில்லையென்றும், இரத்தமும், இந்திரியமும் அசங்கிதமானவையாயிருப்பதால் அவை சரீரத்தில் பட்டால் கழுவினாலன்றி தொழுகை நிறைவேறாது என்றும், இரண்டு **நஜீஸைக்** கொண்டு இன்ஸானை படைக்கப்பட்டிருக்கிறதென்றும்; நஜீஸான வஸ்துவினால் பெறப்படும் குழந்தையும் **நஜீஸு** தான் என்றும், இவ்வாறான கேவலமானவனுக்கு இல்லாமை என்பதும், தன் விருப்பம்போல் ஒன்றைப் பெற்றுக் கொள்ளக் கூடாததாய் இருப்பதுமன்றி, பெரிய சக்ராதிபத்தியம் அவனுக்கு எவ்வாறு பொருத்தமாகுமென்றும், துக்கமயமானவனுக்கு சுகம் எப்படி கிட்டுமென்றும், இன்மையாயும், செத்திறந்து போவதாயுமிருப்பதால் அவனுக்கு தாழ்மைத் தனத்தைத் தவிர வேறொன்றும் அழகாயிராதென்றும், இவ்வாறான முறையில் தன்னையறிந்த ஒருவன் தன்னுடைய **ஹகீகத்**தான அக்மியத்தை அறிந்து கொண்டானென்றும், இப்படி அறிந்தவனே சிறப்புற்றவனும், **மன் அரப நப்ஸஹு பகத் அரப ரப்பஹு** என்பதின் இரகசியார்த்தத்தை நிட்சயமாக அறிந்தவன் என்று மட்டுமே அறிந்திருக்கிறார்கள். ஆனால், எவனொருவன் தன்னை இம்மட்டோடு அறிந்ததைப் போதுமாக்கிக்கொண்டானே, அவன் நிட்சயமாக என்னிடத்தில் தனது அறிவையும் வெற்றியையும் தோற்றுவிட்டவனேயன்றி அவன் ஒரு போதும் ஜெயித்த மனிதனாகமாட்டான்: ஆனால்,

அவன் சேற்றில் ஜீவித்து, மடியக்கூடிய பெருச்சாளியும், பிள்ளைப் பூச்சியுமாகும். இன்னும், அந்த கொடிய போதையுடையவன் தன்னை எழுந்து நிற்க இயலாதவாறு தன்னுடைய இரு தோள்களையும் தன் இரு கைகளாலும் அழுத்திப் பிடித்துக் கொண்டவனாகும். மேலும், **ஹக்குதஆலா** தனக்கு கொடுத்திருக்கிற பதவியையும், படிகளையும் அறியாமல் விட்டுவிட்டு தங்கமானது தன்னை செம்பு என்று நினைத்துக்கொண்டிருக்கிறது போன்று அவனும் தன்னை ஒரு கேவல வஸ்தாக எண்ணிக் கொண்டிருக்கிறான். ஆனால் அவனை ஓர் குதிரையை ஒப்ப உபமானித்துக் கூறவேண்டுமேயன்றி கழுதைக்கு ஒப்பிடக்கூடாது; கீர்த்திப் பிரபல்யமுடைய சக்ராதிபதியாக அவனிருக்கிறானேயன்றி கேவலம் ஒரு அடிமைத்தொழிலில் ஈடுபட்டவனன்று; அவன் பாதுஷா(ஹ்)வினுடைய **பர்மான்** ஆகிய இராஜ கட்டளையேயன்றி, குடிபடைகளின் **மஹ்ஜர்** எனும் விண்ணப்பப் பத்திரம் அன்று; அவனே ஓர் நலைப் பாகையேயல்லாது, பாதரட்சைகளல்ல: மேலும், எவனொருவன் தன்னையே அசுத்தமான வஸ்தென்று கருதிக்கொண்டிருக்கின்றானோ அவன் எவ்வாறு மற்றவைகளை சுத்தமென அங்கீகரிப்பான்? எவனொருவனுக்கு யுத்தகளத்தில் புறமுதுகு காட்டி ஓடக்கூடிய சுபாவமிருக்கிறதோ, அவன் எப்படி வைராக்கியத்துடனும், தீரத்துடனும் போர்க்களத்தின் வரிசையை எட்டிப்பார்ப்பான்? ஆயினும், தன்னை அசுத்தமாகக் கருதிக்கொள்ளும் ஒருவன் பிறரையும் ஏன் அசுத்தமெனக் கருதிவருகின்றான்? அசங்கிதம் என்ற நினைப்பில் விழுந்து

கிடக்கக்கூடிய மதிப்பற்ற மாணிக்கமே! நீ கேவல மான **நஜீசு** அல்ல. கேசாதி பாதம்வரை நீ இரத் தினமாயிருக்கின்றபடியால், உன்னை **நஜீசு** என்ற எண்ணத்தை விட்டும் நீக்கிக்கொள்வாயாக. ஏனெ னில் **நஜீசு** நஜீசாயும், **இரத்தினம்** இரத்தினமாயு மிருக்கிறது. ஆனல் நீயோ தாழ்மையான **நஜீசு** மல்ல, விலையுயர்ந்த **இரத்தின**முமன்று, அதற் குஷி ரான சுடருமன்று. எனினும், இவையடங்கலும் உன்னில் நின்றுமாயிருக்கின்றன. நீயோ சகல வற்றையும் விட்டுப் புறம்பாய் நீங்கியிருக்கின்ருய். ஆகையால் நீ உயிருமன்று, உடலுமன்று, மூலமு மன்று, கோலமுமன்று, இவை யாவையும் விட்டு உனது அஸ்திவாரம் உன்னதமா யிருப்பதாலும், சிறப்புற்ற கீர்த்தி மிக்கவர்களான வானவர்கள், ஜின்கள், தேவதைகள் முதலானவர்களும், மற்றும் சிருஷ்டிப் பொருள்கள் சகலமும் உனக்கு அடிமை களாயும், அவற்றிற்கு நீ வணக்கப் பொருளாயும் இருப்பதாலும், **அர்ஷு, குர்ஸு, லௌஹு, கலம்,** சூரியன், சந்திரன், இரவு, பகல், பிரபஞ்சமடங்க லும் உன்னுடைய தோற்றமாகவும், உதயஸ்தான மாயும், **'நீ' தாத்து** ஆகிய சுத்தசொரூபத்தின் தோற்றமாயும், உதயஸ்தானமாயு மிருக்கின்ருய்.

'ஆதி தாத்தின் ஷுஹூரது நீயாம்
இந்த ஆலம் சிபாத்தின் ஷுஹூரது நானும்
பூதலத்துக்குயிர் நீயாம்—நல்ல
பூலோகமானது நீ போனல் பாழாம்.' (இர்பானுஸ்ஸபா)

அவ்வா றிருப்பதாலும், **அனமின் னூரில்லாஹி வகுல்லு ஷைஇன் மின் னூரீ**—" நான் அல்லா(ஹ்)

வென்னும் ஜோதியிலுள்ளவன், மற்ற வஸ்துக்கள் யாவும் என்னுடைய ஜோதியில் நின்றுமாயிருக்கும்,'' என்று நபி(ஸல்) அவர்கள் திருவுளம்பற்றி யிருப்பதாலும், ஒவ்வொரு வஸ்துக்கும் உனது திரு நாமத்தைக்கொண்டு பெயர் கொடுக்கப்பட்டிருப்பதாலும், **வஅல்லம ஆதமல் அஸ்மாஅ குல்லஹா** 'நாமங்கள் யாவற்றையும் ஆதமுக்கு அல்லா(ஹ்) கற்றுக்கொடுத்தான்,' என்று திருமறையில் இறைவனல் அருளப் பட்டிருப்பதினுலும், **துன்யா** வாகிறது உனது பாதத்தைச் சேர்ந்த தோற்றமாக இருப்பதினுலும், **தௌராத், ஜபூர், இன்ஜீல், புர்கான்** என்ற நான்கு வேதங்கள், நூற்றிப்பத்து **சுஹ்பு** முதலான இதர வேத கிரந்தங்களும் உன்னுடைய **கல்பில்** நின்றும் வெளியாகி யிருப்பதினுலும், கலப்பற்ற விசேஷமான **கல்பைப்** பெற்றவனே, அறிவாயாக! உன் சிறப்புத் தங்கிய பாதாரவிந்தத்தின்பேரில் சத்தியமாக யாதொரு வஸ்துக்கும் உன் மகிமையைவிட மேலானதொன்று ஏற்பட்டில்லை என்று நான் தைரியமாகச்சொல்வேன். இவ்வாறிருக்க, இம்மை, மறுமையாகிய இருலோகங்களையும் போல் நீ ஏன் **குன்**-ஆகு என்ற வட்டத்திற்குள் அகப்பட்டுக் கொண்டிருக்கிறுய்? ஆனல், **குன்**-உண்டாகு என்ற கட்டளையைப் பிறப்பிக்கும் **அதிகாரம்** உனக்கு உண்டாயிருக்கும் பட்சத்தில் நீ இந்த சேர்மானத்தை விட்டும் நீங்கிக் கொண்டவனக, கிழவனைப்போன்றிராது ஓர் குழந்தையைப் போல் இருந்து கொள்வாயாக. சரியாகக் கூறுமிடத்து, ஒப்புவமை, மட்டுதிட்டம், ரூபாரூபம் ஆகியவற்றிற்கும் அப்பாற்பட்ட பரிசுத்தமாகிய **நூர்** என்

னும் ஜோதியாக இருந்துகொள். மேலும், சகலவற்றிற்கும் பாதுஷா(ஹ்)வாக உன்னை ஆக்கிக்கொண்டால், உனக்கு மேலான கீர்த்தியுண்டாகி, சிருஷ்டிகளிடத்தில் **வலீயுல்லா(ஹ்)**வென்ற புகழ்ப் பெயரையும் பெற்று, அச்சமும், சலிப்புமற்றவனாக ஆய்விடுவாய். **அலா இன்ன ஔலியா அல்லாஹி லா கௌபுன் அலைஹிம் வலா ஹும் யஹ்ஸனூன்**—'உண்மையாக அல்லா(ஹ்)வின் **ஔலியாக்கள்** பேரில் அச்சமென்பது மில்லை, இன்னும், அவர்களுக்கு சஞ்சலமென்பதுங்கிடையாது,' என்று திருமறையில் இறைவன் அருளியிருக்கிறான். மேலும் **ஆரிபு** களிடத்தில் **வலிய்யுல் ஹமீது** என்ற புகழ்மிக்க **வலீயாகக்** கருதப்படுவாய். எனவே, உன்னை சிரசுகள் யாவற்றிற்கும் கிரீடமாக ஆக்கிக்கொள்வாயாக. எனினும், **நீ**தான் அந்த கிரீடத்தின்மீது பதிக்கப்பட்டிருக்கும் **துர்ரதுல் யதீம்** என்கிற தனித்த முத்தாயிருக்கிறாய். ஆகவே, **நீ** என்னும் அந்த முத்தினாலேயே **தாஜ்** எனும் கிரீடம் ஜொலிப்பைப் பெற்றுக் கொள்கிறதென்று நீ அறிந்துகொள்.

வலாபுத்த லிஸ்ஸாலிகி தகல்லுகுன் பிதகல்லு கில்லாஹி; கமா காலன் நபிய்யு சல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தகல்லகூ பிஅக்லா கில்லாஹ்—இன்னும் **ஹக்குடைய** பாதையில் நடப்பவனுக்கு **ஹக்குடைய** குணம் பெறுதல் அத்தியாவசியம் என்றும், "நீங்கள் அல்லா(ஹ்)வின் குணங்களால் குணம் பெறுங்கள்," என்று நபீ (ஸல்) அவர்கள் திருவுளமானது போன்றும், **வஉலம், அன்னபில் ஹதீதி சிர்ரன் தகீகன் வஹுவ அன் தஉதகித அன்னக ரப்புன் வல்குல்லு பீக**

மின்கைரி ஷக்கின்—அந்த நாயக வாக்கியத்தில் ஒரு நுணுக்கமான இரகசியமுண்டா யிருக்கிறது; அதாவது, **'நீ' ரப்** என்றும், யாதொரு ஐயமுமின்றி வஸ்துக்கள் யாவும் உன்னில் உண்டாயிருக்கிற தென்றும் நீ அறிந்து கொள்வாயாக; ஏனெனில், **விஅன்ன கல்கல்லாஹி அன் யுஉலம குல்லுல் அக்வானி ஹுவ லா கைரு பஹுரகாதுக வஸக னுதுக வலாஹிருக வபாதினுக**—அல்லா(ஹ்)வின் சிருஷ்டிகள் பிரபஞ்சம் பூராவுமாம்; அதாவது மனு, ஜின், வானவர் முதலான சகல ஜீவர்களும் அவன் [அல்லா(ஹ்)] தானுக்வே இருப்பானே யன்றி வேறில்லை என அறிய வருவதால், உன்னு டைய அசைதல், ஒடுக்கம், வெளியீடு, உள்ளீடு யாவும், **வகுல்லு மாவுஜித மின்க பஉதகித் அன்னஹு வுஜித மினர் ரப்பி தஆலா**—உன்னில் காணப்படுகிற **திருசியம்** ஆகிய வஸ்துக்கள் **ரப்** ஆகிய நாயனில் காணப்பட்டதாகவே நீ நிர்ணயங் கொள்வாயாக என்றும் **கலிமாத்துன் நாபிஆத்** என்னும் நூலில் ஹலரத்து ஜான் முஹம்மது லெப்பை ஆலிம் அவர்கள் அருளியிருக்கிறார்கள். நாம் இங்கு பேசியவை யாவும் **அல்லா(ஹ்), ரசூலு** டைய **தலீல், ஹதீது** ஆகியவற்றை விவரித்து (பயான் செய்து) வந்தவையாம். இந்த அரும்பெரும் இரகஸியம் உன் விளக்கத்துக்கு மட்டுப்படாவிடின் சரேலென்று அதனைத் தவறு என்று கூறத் துணியாதே. அதனை விளங்கி யறிந்தோரிடம் கேட்டுத் தெரிந்துகொள்வாயாக.

ஹிகாயத்து:— நமது நூலாசிரியர் அவர்களு டைய குருபிரானான ஹலரத்து முஹம்மது பாக்கர்

(கத்) அவர்கள் வீட்டில் ஓர் தினம் **சங்கீதக் கச்சேரி** நடந்தேறியபோது, அன்னாரின் சிஷ்யர்கள் யாவரும் பகியாரி ஆனந்தமாக அல்லா(ஹ்)வின் பாதையில் **ஸைர்** என்னும் அந்தரங்க யாத்திரைச்செய்தவர்களாக இருந்ததோடு, **வஹ்தத்து** என்னும் சின்மயானந்த பேரின்ப அனுபூதி நிலையைவிட்டும் கிஞ்சிற்றும் நழுவாதவாறு இருந்து வந்தார்கள். மேலும் அந்த மேலான சபையில் சிலர் **நப்ஸு**டைய தன்மையைப்பற்றியும், வேறு சிலர் **கல்பு**டைய அகமியத்தைப் பற்றியும், மற்றுஞ் சிலர் **ரூஹு**டைய இரகசியத்தைப் பற்றியும், **நூருடைய** நுட்பத்தைப் பற்றியும், ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டு சந்தோஷமாக இருக்கும் வேளை ஹஸரத்து அவர்கள் மட்டும் உன்னதமான பரவச நிலையில் சொக்கிப்போய் கரக்கமுடையோராக இருந்தார்களே யன்றி மற்றவர்களைப்போல் திரிபுடி (காண்பான், காட்சி, காட்சிப்பொருள் ஆகிய) நிலையில் **மஸ்து** கொண்டவர்களாயில்லை. அதாவது, யாதொரு சம்பாஷணையிலும் அவர்கள் ஈடுபடாதிருந்தபொழுது பொறி, புலனாதிகளொடுங்கியவர்களாயிருந்து வருகையில், திடீரென அந்நிலையை விடுத்து அங்கு குழுமியிருந்தவர்களைப் பார்த்து, கோபாவேசத்துடன் "சகோதரர்களே! இப்பொழுது நீங்கள் சம்பாஷித்துக் கொண்டிருந்த விஷயம் மகா இரகசியமானதொன்றா யிருக்க, இதனை நீங்கள் நாவினால் எவ்வாறு பேசத்துணிந்தீர்கள்? ஏனென்றால் அதியந்தரங்கமான **நப்ஸு, கல்பு, ரூஹு** ஆகிய இம்மூன்றின் விவரத்தையும், பற்றுதல், தொடர்பு, அல்லது சேர்மானம் ஆகிய

வற்றை விட்டும் நீங்கியிருக்கிற நூருடைய விவரத்தையும் ஒன்று திரட்டி, உங்கள் சக்திக்குள் அடங்கச் செய்ய எத்தனித்தவர்களாய் மிகவும் எளிதானதோர் காரியமென நினைத்து இந்த மகா மகா நுட்பமான பிரச்னையை நீங்கள் ஏன் வாய்திறந்து பேசத் துணிந்தீர்கள்? அதுவோ துவர்க்கமின்றிய அனாதி காலத்தையும், முடிவின்றிய நித்திய காலத்தையுங் கொண்ட ஆதி, அந்தமில்லாத மகாப் பெரிய இரகசியமாயிருக்கும். அதனை வாய்திறந்து பகிரங்கமாகப் பேசுபவன் கொடிய விஷமியும், பிசாசுமாகும்,'' என்று கூறி முடித்தார்கள்.

ஆகையால், ஓ **பஹ்ரீ!** இந்த மேலான எச்சரிக்கையுடன் கூடிய சைக்கினை உனக்குப்போதும். இதனை நன்கு விளங்கி அறிந்தவர்கள் தான் சஞ்சலத்தை விடுத்த உலகப் பற்றற்ற மகான்களாவர்; இதற்கு உபமானமாக ஓர் மலர்ந்த புஷ்பத்தை எடுத்துக்காட்டலாம். எவ்வாறெனில், புஷ்பமானது மலரக்கூடிய பக்குவகாலத்தில் தோட்டத்தை விட்டும் நீங்கிப் பிரிந்திருக்கின்றதைப் போன்றாம்.

★ இரண்டாவது அத்தியாயம். ★

[இந்த இரண்டாவது அத்தியாயத்தில் இர்பான் ஆகிய மெய்ஞ்ஞானத்தைப்பற்றி விபரித்து எழுதப்படுகிறது.]

அருமையானவனே! அறிந்துகொள்வாயாக:—

குன்து கன்ஸன் மக்பிய்யன் பஅஹ்பப்து அன் உஉரப பகலக்துல் க்ல்க (பதஅர்ரப்து பபீ அரபூனீ) "நான் அவ்வியக்தப் புதையலாயிருந்தேன், அப்போது என்னை அறியப்பட ஆசித்தேன், சிருஷ்டிகளைப் படைத்தேன்," (என்னைக் கொண்டே என்னை அறிந்தார்களென்று அறியும்படியாகினேன்) என்று **ஹதீது குத்ஸியில்** இறைவன் திருவுளமானபடி, அல்லாஹுத்தஆலாவுக்கு **ஹஸ்தீ** என்றழைக்கப்படும் எந்த ஓர் தத்துவமிருக்கின்றதோ அந்த தத்துவத்தைத்தான் **ஹகீகத்துல்லா(ஹ்)** வென்றும், **கன்ஸுல் மக்பீ** என்றும் அறிந்துகொள்வாயாக. இதுதான் அல்லாஹுத்தஆலாவுக்கு **தாத்து** என்கிற சுயார்த்த ரூபமாயிருக்கின்றது. எவ்வாறென்னில், விருட்சத்துக்கு வித்து **ஹஸ்து** அல்லது **தாத்**தாயிருப்பது போன்றாம். (இவ்விடத்தில் வித்து கெட்டு விருட்சமாகுந் தோஷம் உபமேயத்தை யணுகாது.) அல்லாஹுத்தஆலாவுடைய சொந்தமாகிய **ஹஸ்து** ஆகிறது நம்முடைய **தாத்**தென்னும் **ஹஸ்தி**யைப் போன்றதன்று; **ஹக்கு**டைய **தாத்து** சதாகாலமும் தரிபாடாயுள்ளது. நம்முடைய **தாத்து** என்றது **ஹஸ்தீ** யாகிறது **ஐன்** என்னும் சுயமின்றியதா

யிருக்கிறது. கானல் நீரைப்போன்று தூரப் பார்வைக்கு தண்ணீரைப்போல் தோற்றினும், முடுகிப் பார்த்ததும் அந்த கானல் நீர் காணப்படாதது போன்றுமாம். முன்னர் தோற்ற மளித்ததும், பின்னர் அளிக்காததும் எவ்வஸ்துவென்று சிந்திக்குங்கால் கானல் நீராக தோன்றினது சூரியன் தானென்றும், இந்த சூரியனுடைய உள்ளமையின் தோற்றமே கானலின் உள்ளமையாய்த் தோன்றுகின்றதென்றும் நிச்சயமாக அத்தகைய சிந்தனையாளர்கள் அறிந்து கொள்வார்கள். எனவே, **தர்த்து** என்றும், **வுஜூது** என்றும், **ஹஸ்து** என்றும், பற்பல நாமங்களால் **ஹக்கு**டைய உள்ளமையான அகமியமாகிய **ஹகீகத்**தைதான் அழைக்கப் படுகின்றது.

அறிவாயாக:— அந்த **ஹஸ்திலிருந்து இர்பான்** என்னும் ஏக அறிவுதோன்றி, பிரபஞ்சம் பூராவையும் அது உண்டுபண்ணி, **ஹஸ்திக்குள்** இருந்தவை யடங்கலையும் வெளியீடாகச் செய்தது. மேலும், **ஹஸ்தில்** நின்றும் **இர்பான்** (சுய அறிவு) தோன்றிய அதே க்ஷணத்தில் அது **ஹஸ்து**க்கு **ஹஸ்து** என்ற நாமத்தைச் சூட்டியது. இவ்வாறில்லாவிடில், **ஹஸ்து** என்பதும், பிரபஞ்சம் (ஆலம்) என்பதும் இல்லாதிருக்கும். ஆகையால், திருஷ்டா (ஆரிபு); திரிசியம் (மஉரூபு) ஆகிய இவ்விரண்டையும் இடையிற்றோன்றிய நவீன வஸ்துக்களென்றும், திருக்கு என்படும் **இர்பானை 'கதீம்'** ஆகிய பூர்வப் பொருளென்றுங் கூறுவதோடு அந்த **இர்பானை** நவீனமென்று சொல்வது தவறென்றும், **ஆரிபு**

(ஞானி) தனது ஞானத்தை எடுத்து அதனை மஉரூபு எனும் ஞேயமாகச் செய்து **வுஜூது** ஆகிய உள்ளமையை அடையப் பெற்றுக்கொண்டானென்றும் **இர்பான்** உடையவர்கள் கூறுகின்றனர். ஆனல் **அரபிகள் இர்பான்** என்றும், ஹிந்துக்கள் ஞானம் என்றும் சொல்கிற இந்த ஒரே **இர்பானை**க்கொண்டு எண்ணற்ற வஸ்துக்களை உண்டுபண்ணவல்லோர் எனது **பீர்** ஆகிய ஞான தேசிகரேயாம் (அதாவது **ஆரிபு** ஆகிய ஞான சொரூபியே). ஆகையால், **இர்பான்** விளையுந்தலமே! மதித்தற்கரிய மாணிக்கமே! இந்த இர்பான் (ஏக அறிவு) என்ற இரத்தினத்தை நீ பத்திரமாக வைத்துக்கொள். ஏனென்றால், எவனொருவன் இந்த **இர்பான்** என்ற வீதியைச் சுற்றிப் பார்த்தானோ அவன் சப்த (ஏழு) சமுத்திரங்களிலும் நீந்திச்சென்று, **ஸைர்** என்னும் பாரமார்த்திக யாத்திரையை முடித்துக் கொண்டவனாகும். மேலும், இந்த **இர்பான், லாஹிர், பாத்தின்** ஆகிய வெளியும், உள்ளுமாய் ஒந்தியைப்போன்று பல்வேறு நிற பேதங்களைக் காட்டிக்கொண்டிருக்கின்றது. ஒரு புல்லாங் குழலிலிருந்து துவாரத்துக்கோர் சப்தம் நூதனமாக வெளியாவதைப்போல ஒரே **இர்பானை**க்கொண்டு அநேகவித பூராயங்கள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும், மூதன் மூதலாக உள்வீட்டிலிருந்து வெளிப்பட்டளவில் வந்து, அடிமைத் தனத்தை விண்ணப்பஞ்செய்து பிரஸ்தாபித்தது இந்த **நூரு முஹம்மதீ**யாகிய **இர்பான்** தானென்றும், இந்த **நூரு முஹம்மதீ**யாகிறது **இர்பான்** தானென்றும் நீ அறிந்துகொள்வாயாக. இன்னும் **பாதின்** ஆகிய **கன்ஸுல் மக்பீ** என்னும்

அவ்வியக்தப் புதையலில் மறைந்திருந்தவைகள் யாவற்றையும் இந்த **இர்பான்** தான் கரத்தைப் பிடித்து இழுத்து வெளியில் கொண்டுவந்துவிட்டது. அதாவது வஸ்துக்களின் **தாத்து**கள் ஆகிய ஹக்குத ஆலாவின் **அஸ்மா**க்கள் என்ற உள்ளிடைத் தத்துவ அம்சங்களாக யிருந்த அவ்வளவையும் இந்த **நூருமுஹம்மதீ** தான் வெளிப்படுத்திற்று. ஆகையால், **நாசூத்தும், மலகூத்தும், ஜபரூத்தும், லாஹூத்தும்** (அதாவது, ஸ்தூலம், சூக்கும்ம், காரணம், மகா காரணம்) இந்த **நூருமுஹம்மதீ** யாகவே யிருக்கிறது.

என் உயிரினுக்கொப்பானவனே! **சிபத்து தாத்தீ** யான அரூபத்தின் வர்ணிப்பு என்றும் **சிபத்து சிபாத்தீ**யான ரூபங்களின் வர்ணிப்பு என்றும் அழைக்கப்படுகின்ற யாவற்றிலும் **நூருமுஹம்மதீ** தான் பூர்ணமாய் நிறம்பி யிருக்கிறது: இந்த **நூருமுஹம்மதீ** யாகிய பதவியில் **நூருமுத்லக்** என்னும் சம்பூர்ண ஜோதியாகிய ஹக்குத ஆலா தன்னை அறியாதவனைப்போல் பாவித்துக் கொண்டிருக்கிறான். மேலும், ஒப்புவமையற்ற பரிசுத்தமாகிய **ஹஸ்து, இர்பான்** என்ற யானையைக் கட்டும் முளையாக இருக்கிறது. கர்மேந்திரியங்களைந்தும் **இர்பானு**டைய ஐம்பெரும் இரத்தினங்களா யிருக்கின்றன. சகல இரத்தினதிகளிலும் இந்த **இர்பான்** என்ற சூரிய ஒளி பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. நமது கண் நமக்கு மிகவும் உவப்பானதோர் வஸ்துவாக யிருந்தபோதினும் இந்த **இர்பான்** இல்லையேல் கூழாங்கல்லுக்கு சமானமாகும். ஆகவே,

இந்த கண்ணும் **இர்பானு**கவே இருக்கிறதென்றும், மற்றும் சகல அவயவங்களும், தத்துவாதிகளும், இர்பான் தானென்றும், எனவே, வானலோகத்துக்கு **மக்ஸூது** ஆகிய இலட்சியப்பொருள் அல்லது தேட்டப் பொருளாக இருக்கிறதென்றும், வானவர்களால் சாஷ்டாங்கம் (சஜ்தா) செய்யப்பட்ட வஸ்துவென்றும், அவர்கள் **ஆதமு**க்கு சாஷ்டாங்கம் செய்வது **இர்பானு**க்குத்தான் செய்ததென்றும், இந்த **நூர்**தான் ஆதமுடைய **ஹகீகத்**தாகிய அகமியமாகவும், **கல்பு** என்னும் சுல்தானுக்கு கிரீடமாகவு மிருக்கிறதென்றும் நமக்கு தெரியலாயிற்று. ஆகையால், இந்த இர்பானிலிருக்கிற சக்தி **கான்** என்ற அமீர்களிலும், **காக்கான்** என்ற பாதுஷா(ஹ்)களிலும் காணப்படவில்லை. மேலும், இது சரீரம் என்கிற பட்டணத்துக்கு அரசனுயிருக்கிறது. எனினும், ஒரு உயிர் மட்டுமே அதனுடைய **லிபாஸ்** ஆகிய உடை என்று நீ எண்ணிக்கொள்ளாதே; மூவுலகங்களும் அதன் உடைகளா யிருக்கின்றன. இன்னும், எவனொருவன் **இர்பானை** இன்னதென்றறிந்தானே அவன் சர்வலோகங்களையும் ஒன்றாகக் காண்பான். ஏனெனில், சப்த (ஏழு) பூமிகள், நவக்கிரகங்கள், சதுர்ப்பூதங்கள், பஞ்சேந்திரியங்கள், கற்கறடு, மரங்கள், மேகம், தண்ணீர், வனம், வனுந்திரம், காடு, மலை, நன்மை, தீமை, நரகம், சுவர்க்கம், சந்திர சூரியன், வேதஸ்மிருதி, கணித சாஸ்திரம், புகழ், இகழ், அழகு, அழகீனம், உள், வெளி, மற்றும் யாவும் **இர்பான்**தான் என்று **இர்பானை** உள்ளா வுள்ளவாறு அறிந்த ஞான சொரூபிகள் நன்கு விளங்கி யிருக்கின்றனர். ஆகையால்,

இர்பானை ‘இர்பான்’ தான் அழகு படுத்துவதும், அழகு பண்ணுதிருப்பதும், **அலஸ்து பிரப்பிகும்** என்று கேட்டதும், **காலூபலா** வென்று பிரதி சொன்னதும், தன் கேள்விக்கு தானே பதில் சொன்னதும் இங்கு கவனிக்கத் தக்கவை. மேலும், காதலியும், அக்காதலியைப் பார்க்கும் பார்வையும், கண்ணும் அதுவாகத்தானிருக்கிறது. அழகிலும், அழகின்மையிலும், சகல வீடுகளிலும் அதன் வெளிச்ச முண்டாயிருக்கிறது. தன்னை விட்டுப் பிரிந்திருக்கிற **மஉஷூக்**காகிய காதலியின்பேரில் **ஆஷிக்** ஆகிய காதலன் காதல்மீறி பரதவித்த வனாக வீட்டுவாயிலில் காத்துக்கொண்டிருப்பதும் ஆகிய பல்வேறு பூராயங்களாக இந்த **இர்பான்** தான் வெளியீடாகி யிருக்கிறது. மேலும், சுக போகங்களும், ஜபதபமும், குருசீடனும், ஒளியு மிருளும், ஸிம்மாசனத்தின் மீதமர்ந்து அரசு செலுத்தலும், பிரஜைகளாக இராஜ கட்டளைக்கு அடங்கி நடத்தலும், ஞானியும், அஞ்ஞானியும், விவேகியும், மடையனும், மதுவும், குடிகாரனும், போதையும், உணர்ச்சியும் ஆகிய சகலமும் இந்த **இர்பானா**கவேயிருக்கின்றன. மேலும், பால்குடி பிள்ளைகளெல்லாம் **இர்பான்** என்ற தொட்டிலில்தான் ஆடிக் கொண்டிருக்கின்றன. **இர்பானை இர்பான்**தான் புசிக்கின்றது. **இர்பானில்** நின்றும் **இர்பான்**தான் குழந்தையாகப் பிறக்கிறது; தாய் தந்தையாகவு மிருக்கிறது. இதுவே பருத்தி விதை என்றும், பஞ்சென்றும், நூலென்றும், புடவையென்றும் அழைக்கப்படுகின்றது. இன்னும் **தபசும்**, **சர்போஸும்** நினைப்பும், மறதியும், அறிவும், அறியாமையும்,

சிறிதும், பெரிதும், குடமும், தோண்டியும், புல்லும், பூவும், தோட்டமும், மலர்தலும், காயும், பழமும், கடலும், கரையும், **அர்ஷ்** எனும் தெய்வாசன பீடம் முதல் **தஹ்தத்தரு** வென்னும் பாதாளம்வரை உண்டாயிருக்கும் வஸ்துக்கள் பூராவும் **இர்பானுகத்** தானிருக்கிறதென்று எனது குருமகானாகிய ஹஸ ரத்து ஷா(ஹ்) முஹம்மது பாகர் (கத்தஸ்) அவர்கள் தங்களின் சங்கையான திருமொழிகளால் மேற் கூறப்பட்ட விபரங்களையெல்லாம் சொல்லி, மேலும் **இர்பானைப்**பற்றிச் சொன்னதாவது:— இந்த **இர் பான்** ஆகிய ஏக அறிவு அணுமுதல் ஆகாயம்வரை **லாஹிர்** என்னும் வெளியரங்கமாயும், **பாதின்** என்னும் அந்தரங்கமாயும் வியாபித்திருக்கிறது. இதற்கு இப்பிரபஞ்சம் உதயஸ்தானமா யிருக் கிறது. ஆதலின், ஜின், மனு, மிருகம், புற்பூண்டு, கற்கறடு, தண்ணீர், நெருப்பு, காற்று, மண் ஆகிய வற்றின் அசைதலும், பேச்சும் ஒன்றுபோலின்றி பல்வேறாக முடிவற்றத் தன்மையிலிருக்கும் யாவும் இந்த **இர்பானு**கவும், இதனால் செய்யப்பட்டதாக வும், இதனை ஆதாரமாகப் பெற்றதாகவு மிருக்கின் றன. ஒரு மானிடன் கருங்கல்லின் பேரில் குந்தி யிருந்தால் அந்த கல் தன்பேரில் மனிதனொருவன் சந்தோஷத்துடன் அல்லது துக்கத்துடன் வந்து குந்தி யிருக்கிறானென்று அறிந்து கொள்கிறது. அறிவைப் பெற்றிருக்கும் அந்த கல்லை இந்த அறி வீனர்கள் வெறுங் கல்லென்று சொல்கின்றார்கள். ஆனால், கல்லுக்கும் அறிவிருக்கிறது.

ஆகையால் எனது நண்பனே! இப்பொழுது பலதிக்கிலும் உன் கவனத்தைச் செலுத்தாது,

இர்பானைக்கொண்டு இர்பானைப் பிடித்துக்கொள் வாயாக. இன்னும், நீ **ஆரிபு** என்ற ஞானியாக இருந்து ஞானத்தைக் கெட்டியாகப் பிடித்துகொள். ஏனென்றால், ஞானி **முஹிப்பு** (நேசன்) ஆக விருந்தால், ஞானம் **மஹ்பூபு** (நேசிக்கப்படுவது)வாக விருக்கிறது. ஆகையால், இந்த **இர்பான்** ஆகிய ஞானத்தை நேசித்து இதனுடன் பிரியமாயிருந்து கொள். எனினும், இதனை **கல்பு**டைய உறவின னென்று அறிந்து, சகலவஸ்துக்களின் அறிவுகளை யும் உனது ஞானத்தில் நின்றுமுள்ளவை யென் றும், இந்த அறிவுகள் யாவும் ஒரே ஞானம்தான் என்றும் தெரிந்துகொள். மேலும், ஒவ்வொரு வஸ்தையும் ஞானத்தைக்கொண்டே அறியவேண் டும். ஆனால் ஞானத்தை அறிவதும் ஞானத்தைக் கொண்டுதான் அறியவேண்டும். எனவே, ஞானத் தின் வடிவு என்னவென்று என்னை கேட்கப்படின், நான் கண்டிப்பாக ஞானியைத்தான் காட்டுவேன். ஆகையால் ஞானத்தின் மகிமையையும், பாரத்தை யும் நான் எதுவரையில் விபரிப்பேன்? எனினும், இதனை அறிந்தவன் மட்டும்தான் அறியக்கூடும். ஞானிக்கு எச்சமயம் ஞானம் ஏற்படுகின்றதோ அச்சமயம் இந்த ஞானம் ஞானியை இன்மையாக்கி தன்னைத் தரிபடுத்திவைக்கும்.

ஆகையால், பேரின்பக் காதலே! நீ எங்கு போயிருந்தனை? சுணங்காது, விரைவினில் சூரி யனைப்போன்று மிகுந்த உஷ்ணத்துடன் வந்து, வீண்வாதம், ஆஸ்தி ஆகிய என்னுடைய பலனின் றிய கருமங்கள் யாவையும் சுட்டுப் பொசுக்கி

விட்டு, இக்ஷணமே என் விருந்தாளியாகி, 'கித்தான்' துணியை சந்திரன் துண்டு துண்டாகச் செய்வதுபோல, என்னுடைய சுட்டு அறிவை குறைத்து இன்மையாக்கி விடுவாயாக. ஏனெனில், இந்த மடையர்கள் தங்களுக்கும், ஹக்குக்கு மிடையில் சுட்டறிவு என்ற ஒன்றைக் கொண்டுவந்த படியால் நண்பனாகிய ஹக்கை விட்டும் தூரப்பட்டிருக்கின்றனர். ஆனால், ஏக அறிவானது இந்த சுட்டறிவை விட்டும் மகா தூய்மையானது. மேலும், நம்முடைய ஏக அறிவு அல்லது பேரறிவின் நிலையில் நம்முடைய சுட்டறிவு அல்லது சிற்றறிவின் சிரமீது மண் விழுந்திருக்கிறது. ஏனெனில் சுட்டறிவானது மிகுந்த குறைபாடுடையதா யிருக்கிறது. இந்த சுட்டறிவை தன்னில்தான் நிறப்பமானதென்று கூறுவதால் ஆவதொன்றுமில்லை. குடிபோதையில் ஒருவன் இருந்தாலும், சிரசில் காயப்பட்டாலும், அல்லது சரீரத்தில் ஜன்னி பிறந்தாலும் நமது இச் சுட்டறிவு சரீரத்தை விட்டும் நீங்கிவிடும். ஆகையால்; இந்த சுட்டறிவைக்கொண்டு நமக்குப் பலனொன்றுமில்லை. ஆனால் எந்த அறிவு அறிவுக்கு அறிவென்று பெயர் வைத்ததோ அந்த அறிவினால் தான் சகல பிரயோஜனங்களுமுண்டு. அந்த அறிவோ பற்றுதல்களை விட்டும், திக்குத் திசைகளை விட்டும் பரிசுத்தமாயும், இந்த சுட்டறிவுக்கு அதீதமாயும் (அப்பாற் பட்டதாயும்) இருக்கிறது. ஆனால், நம்மிலும் மூவுலகிலுங் காணப்படும் குறைவுள்ள இந்த அறிவு அறிவன்று. மேலும், சட்ட நிருபணர்களான ஹுக்கமாக்கள் அநேகவித கல்வித் திறமைகளைக் காட்டுவதும்; விஞ்ஞானிகள் மரத்தினால்

குதிரையையும், மனிதனையும் உண்டுபண்ணி அவற்றுள் பொறிகளமைத்து, விசைகளைப் பொருத்தி, யுத்தகளத்தில் சண்டை செய்யும்படி செய்வதும், கருங்கற்களால் மீனை செய்து தண்ணீரில் நீந்திச் செல்லசெய்வதும், வானம், பூமி, சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள், கிரகங்கள் ஆகிய இராசிகளைச் செய்து இந்த பிரபஞ்ச விவகாரம் நடந்தேறுவது போன்று நடத்திவைப்பதும், சித்திர வேலைக்காரர்கள் அழகான சித்திர ரூபங்களை எழுதுவதும், கேட்பவர்கள் மயங்கத்தக்க பாடல்களை பாடகர்கள் பாடுவதும், தம்பூர், சிதார், சுரோடு, வீணை முதலான வாத்தியங்களை நாவினுல் பேசுவது எவ்வளவு எளிதோ அவ்வளவு எளிதாக வாசித்துக் காட்டுவதும், **சாஜ், சூர், அரத்** ஆகிய இம்மூன்றும் பிசகாது, சரியான முறையில் நாட்டியம் ஆடுவதும், அபிநயக்காரர்கள் வெகு உன்னத முறையில் அபிநயஞ்செய்து காட்டுவதும், வேஷக்காரர்கள் வெகு சாமர்த்தியமாக வேஷம் போட்டுக்கொள்வதும், எழுத்தாளர்கள் அழகிய முறையில் வியாசங்களை எழுதிக்காட்டுவதும், ஆசிரியர்கள் புத்தகங்களில் பொருத்தமான சொற்களைக்கொண்டுவந்து படிப்போரின் மனத்தை ஈர்க்கச்செய்வதும், வேதஸ்மிருதிகள் சொற்புணரிலக்கணம் (நஹ்வு), எழுத்துச் சொல் விலக்கணம் (ஸர்பு), அணி யிலக்கணம் (மஆனி), நீதி சாஸ்திரம் (மன்திகு), வைத்திய சாஸ்திரம் (திப்பு), கணித சாஸ்திரம் (ஹிஸாபு) ஆகியவற்றைக் கற்றுத்தேர்வதும், புராண காவியம், சாஸ்திர ஆகமங்கள், ஆரூடம், ஜோதிடம் சொல்லலுமான மற்றும் பல்வேறுபட்ட பல திறமான பிரபஞ்ச

அறிவுகள் பூராவும் மெய்யறிவு அன்று. எனினும், மேற் கூறப்பட்ட அறிவுகள் யாவும் ஏக அறிவு ஒன்று உண்டு என்பதைச் சுட்டிக்காட்டி அறிவிக்கும் சாதனங்களான சாட்சிகளாயிருக்கின்றன. ஆனால், அக்லு) புத்தியும், (பஹ்மு) விவேகமும் சிற்றறிவே. இந்த சிற்றறிவின்பால் நோட்டமிட்டுப் பார்க்கும் அறிவுதான் சத்ஞானம், அல்லது மெய்ஞ்ஞானம் எனப்படும். இந்த அறிவாகிறது எஜமானனை ஹக்குதஆலாவின் சம்பூர்ண அறிவின் சாய்கையாகும்; அஃதன்றி ஸ்தூல, சூட்சும, காரணம் ஆகியவற்றின் சாய்கையன்று. ஆனால், யாதொரு அறிவு இந்த அறிவை அறிகின்றதோ அந்த அறிவு தன்னை தான் அறிவு என்று உணரும். அந்த அறிவை பிரபஞ்சத்தின் உயிர் என்று உணர்ந்து கொள்வாயாக. மஹ்பூபுடைய சொரூபம் அந்த அறிவுதான். எந்த தாத்தை ஹஸ்தீ (உண்டு) என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களோ அதற்கு இந்த அறிவுதான் உள்ளமையாகிய சரீரம் என்று அறிந்துகொள்வீர்களாக. அந்த அறிவு என்னும் வானவெளியில் அல்லது மைதானத்தில் எந்த சூரியனுண்டாயிருக்கிறதோ அந்த சூரியன்தான் இந்த பிரபஞ்சத்துக்கு வெளிச்சங் கொடுப்பதாயிருக்கிறது. அதாவது இந்த சரீரத்தைப் படைத்த சிருஷ்டிகர்த்தாவாயிருக்கிறது. ஆனால் மனிதப் பிறவியில் அவ்வக்காலத்தில் விவேகிகளாயமைந்த இரண்டொருவரே சுட்டறிவை விடுத்து, விவேகமிகுந்த ஆராய்ச்சியினதும், புண்ணியத்தினதுமான பலனாய் அந்த ஏக அறிவை இன்னதென விளங்கியிருந்தார்கள். அறிவினாலேயே இருபதியும் நிறம்பி

யிருந்தபோதினும் யாவரும் அறிய இயலாதிருக்கின்றனர். **உண்டாகு** என்னும் கட்டளைக்குட் சிக்காது, குணநீதமாயும், சரீரத்தைவிட்டு அப்பாற் பட்டதாயும், அறிவு, **ரூஹு** (ஆத்மா) ஆகியவற்றினின்றும் நீங்கி பரிசுத்தமாயும் உன்னுடைய யாதொரு அறிவு மீதமாயிருக்கிறதோ அதுதான் ஆதியான உன் அறிவு. அந்த அறிவுடனே சமீபித்த நேசனுயிருப்பதே எனது இலட்சியம்.

என்று உள்ளமையின் **ஹகீகத்**தாகிய அகமியமாயிருக்கின்ற **முத்லக்** காகிய அகண்டமும், **முகையிது**வான கண்டமு மல்லாத **முத்லக்**கான அகண்ட பரிபூர்ண நாயகனே! எனக்கு அந்த அதி தூய்மையான அறிவை அறியும் அறிவைக் கொடுத்தருள்வாயாக. இந்த இரகசியத்தை நான் அடையப் பெற்று கோசபாசத்தினுல் எனக்கு விளைந்திருக்கும் **மறதி**யை அகற்றிக்கொள்ள நான் இடைவிடாது நித்தியமாக அனுசந்தானம் செய்துவருவதற்கு உதவி புரிந்தருள்வாயாக. ஆமீன்!

உத்லுபுல் இல்ம வலௌகான பிஸ்ஸீன் 'சீன தேசத்திலிருந்தாலும் நீ அறிவைத் தேடியடைவாயாக,' என்று நாயகம்(ஸல்) அவர்கள் திருவுளமாயிருப்பது அந்த **இல்மு முத்லக்**கான சம்பூர்ணமாகிய ஏக அறிவைக் குறித்தேயாம்.

ஹிகாயத்து:— ஒரு உண்மை சிஷ்யர் தன்னுடைய ஞான குருவிடத்தில் "**எனது பீர்** அவர்களே! கரிய நிறமுள்ள ஒரு சிற்றெறும்பு இருள்மிக்க

அமாவாசை இரவில், ஓர் கருங்கல்லின்மீது ஊர்ந்து சென்றபோதினும் அந்த நடை சப்தத்தை அல்லாஹுத்தஆலா தான் கேட்டுக் கொண்டிருக்கிறனென்று **ஹதீது** வந்திருக்கிறது. ஆனால், எறும்பின் நடையோ ஓசையற்றது; அல்லாஹுத்தஆலாவும், கர்மேந்திரியங்களுள் ஒன்றான காதை விட்டும் அதீதமாயிருப்பதால் தாங்கள் எனக்கிருந்தும் அந்த மர்மம் எனக்கு விளங்காததால் அதிகக் கவலையுண்டாயிருக்கிறது. எனக்கு அது தெளிவாக விளங்கியபோதுதான் என் மனக்கவலை என்னை விட்டும் அகலும். எனவே அதனை தயைகூர்ந்து புல்லறிஞனான எனக்கு அறிவித்தருளவேண்டும்," என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, குரு சிஷ்யரைப் பார்த்து, "நீ கேட்கும் விஷயம் மகா இரகசியமானதொன்றானபடியால் அதனை பகிரங்கமாகச் சொல்லப்படுவதன்று. நீ விரும்பி கேட்கின்றதால் நான் அதனை ஒரு சைக்கினையாய் உனக்கு எடுத்துக் காட்டுகிறேன், விளங்கி யறிந்துகொள்; **ஹுவல் அவ்வலு வல் ஆகிறு வல்லாஹிறு வல் பாதினு வஹுவ பிகுல்லி ஷைஇன் அலீம்** 'அவனே துவார்க்கமும், முடிவும், வெளிபீடும், உள்ளீடுமானவனாகும். மேலும், அவன் ஒவ்வொரு வஸ்து அடங்கலைக் கொண்டும் அறிபவனாகும்,' என்று **ஹக்கு த ஆலா** திருவுளம்பற்றி யிருக்கும் இரகசியார்த்தம் உனக்கு நன்கு விளங்கும். வேறு சில உவமானங்களும் யான் கூறக் கேட்பாயாக. அதாவது, யானையின் காலடி சப்தம் கேட்காததால்தான் அதற்கு மணி கட்டப்பட்டிருக்கிறது. ஏனெனில், இந்த மணி சப்தங்கேட்டதும் யாரும் அதன் காலில் மிதிபடாது

ஒதுங்கிக்கொள்வதற்கேயாம். மற்றவர்கள் காதுக்கு யானையின் காலடி சப்தம் விழாவிடினும், அந்த யானையின் காதுக்கு தன் காலடி சப்தம் கேட்கத் தான் செய்யும். யானையின் உவமானத்தை விடுத்து உன்னை எடுத்துக்கொள்வோம். நீ அடிமீது அடி வைத்து எவ்வளவு சந்தடியின்றி நடந்தாலும் மற்றவர்கள் காதுக்கு கேட்காத உன் காலடி சப்தம் உன் காதில் விழத்தான் செய்கிறது. அவ்வாறு கேட்பது உனக்கு எளிதாயும் ஏனையோருக்கு கஷ்டமாயுமிருக்கிறது. இது போன்றே எறும்பின் காலடி சப்தமும் பிறருக்கு கேட்காவிட்டாலும் எறும்பின் காதுக்கு கேட்பதாயிருக்கிறது. எனவே சகல வஸ்துக்களின் அந்தரங்கத்தின்மீது **ஹக்குதஆலா** எனும்ரன்னும், ஒவ்வொரு **கஸ்பு** ஆகிய மனதைக் கொண்டு அவன் **அலீம்** என்னும் அறிவுடையவனாயிருக்கின்றபடியால், பிரபஞ்சமெனப்படும் இது உண்மையில் பிரபஞ்சம் (ஆலம்) அன்று; **இல்மு** என்னும் அறிவுடைய பிரகாசம் அல்லது பிரதிபிம்பமாகும். மேலும், **ஆலம்** உடைய **அஸிபு**ஐக் கொண்டு **இல்மு**டைய **லாம்** ஆனது விஷயங்களைத் தன்னுள் பொதிந்து கொண்டிருக்கிறது போன்றே, **இல்மு**டைய **லாம்** ஐக்கொண்டு **ஆலம்** உடைய **அஸிபும்** விஷயங்களை அடக்கிக்கொண்டிருக்கிறது. இந்த **ஆலம்** ஆகிறது **அலீம்** உடைய **இல்மு** ஆகயிருக்கிறது. இந்த **இல்மு**க்கு **ஆலம்** ஆகிறது **ஆதமீ**யான **இன்ஸான்** ஆகயிருக்கிறது. என் தோழா! இது பேசற்குரிய ஒரு பேச்சன்று. இந்த சம்பாஷணையை இப்பொழுது விட்டுவிடுதல் நலமாயிருக்கும். ஆகையால், நீ இந்த விளங்கியறிய

நாடினால் இந்த தாயிரா வென்னும் வீட்டத்தைப் பார்த்து அறிந்துகொள்வாயாக.



★ மூன்ருவது அத்தியாயம். ★

[இந்த மூன்ருவது அத்தியாயத்தில் சிருஷ்டி கர்த்தாவாகிய **ஹக்கு**க்கும் சிருஷ்டிப் பொருட்களான **கல்கு**க்கும் உள்ள சம்பந்தா சம்பந்தத்தைப்பற்றி விவரித்து கூறப்படுகிறது.]

அருமையானவனே! அறிந்துகொள்வாயாக:—

ஸ்ரீகுஹாதீதமான பராபர வஸ்து எத்தகையதெனில், அதனைக்கொண்டுதான் எண்ணற்ற சிருஷ்டிப்பொருட்களுமுண்டாயிருக்கின்றன. பல்வேறு நிறபேதங்களும், குணபேதங்களும் உண்டாயிருந்தபோதிலும், மனிதனுடைய கண், மூக்கு, காது, வாய் முதலானவைகளைப்போல் ஒரே சங்கிலித்தொடர்பாக அது கொழுகியிருக்கின்றது. பகல், இரவென்றும், ஒளியென்றும், இருளென்றும், வெய்யிலென்றும், நிழலென்றும் எண்ணற்ற நாமங்களைப் பெற்றிருப்பவை யாவும் ஒரே சூரியனின் ரூபங்களென்று அறிந்து கொள்வாயாக. ஆனல் **கல்பு** என்ற நேத்திரத்துக்கு **இஷ்கு** காதல் என்ற அஞ்சனமையைத் தீட்டிக்கொண்டு பார். அச்சமயம் நீ சிருஷ்டிகன் என்ற உயிரினுக்குயிரா யிருப்பதும், சிருஷ்டிப்பொருள் என்ற சரீரமா யிருப்பதும் உனக்கு தெரியவரும். உனது தற்போதத்தை விடுத்து ஒரு தினமாவது நீ வெளிவந்து பார். அப்பொழுது இந்த பிரபஞ்சம் உனக்கு எவ்வாறு தெரிகிறதென்று நீ அறிந்துகொள்வாய். வியஷ்டியாகிய நாட்டங்கள் (இராதீத்து) யாவும் ஒன்று சேர்ந்தால் **ஹக்கு**டைய சமஷ்டியாகிய ஒரே நாட்டமாகும். **இல்மு** ஆகிய வியஷ்டியான அறிவுகள்

யாவுங் கூடினால் அவனுடைய சமஷ்டியாகிய ஏக அறிவாகும். சூத்ரத்தாகிய வியஷ்டியான தத்துவம் பூராவும் ஓரிடத்தில் சேகரமானால் அவனுடைய சமஷ்டியானதோர் சூத்ரத் ஆகும். இந்த இரகசியத்தை அகப் பார்வையுடையோர் அறிந்திருக்கின்றனர். எவ்வாறெனில், தண்ணீரால் நிரம்பியிருக்கும் ஓர் குளத்தில் கல்லெறிந்தால் அந்த ஒரு தண்ணீர்தான் பல திவலைகளாகச் சிதறி விழுந்து, பல திறப்பட்ட திவலைகளாக ஆனபோதிலும் மீண்டும் அக்குளத்திலே ஒரே தண்ணீராகக் கலந்து குள நீராகத் தெளிவுபெற்று பிரகாசிக்கிறது. ஒரே நெருப்பினால்தான் பந்தம், தீவட்டி, விளக்கு, அடுப்பு, லாந்தர் என்று பல்வேறு யழைக்கப் படுபவை யாவும் உண்டாயிருக்கின்றன. ஒரு தோட்டத்திலிருக்கும் விருட்சங்கள் அநேகமா யிருப்பினும், (அதற்கு உயிர்போன்ற) தண்ணீர் ஒன்றே; அந்த ஒரே தண்ணீரைக் கொண்டுதான் விருட்சங்கள் யாவும் தழைத்து, பூத்து, காய்த்து, பழுத்து இருக்கின்றன. கடல் என்பதை தண்ணீருக்கும், அந்த கடலின் அலை, நுரையாதிகளை நீர் குமிழிக்கும் ஒப்பிட்டுப்பார். அவனே தண்ணீரைப் போன்றும், இவன் நீர் குமிழியைப்போன்றுமாகும். அந்த அலை அல்லது நுரை நாம ரூபமாகிய கண்டிப்பில் மட்டும் அகப்பட்டிருக்கிறதேயன்றி யதார்த்தத்தில் தண்ணீராகத் தானிருக்கிறது. இந்த பாதையைக் காட்டுபவர் ஞானகுரு ஒருவரேயாம். தன்னை கேசாதி பாதம்வரை ஒருவன் பார்த்தறிந்த போதினும், தனக்கு தன்முகம் தெரியாததால் மனக் கவலை மேலிட்டு சிந்தித்தவனாகப் பெரிதும் முயன்று

ஒரு கண்ணாடியைத் தயாரித்து, அதில் தன் வதனத்தைக் கண்டு மிகவும் ஆனந்தித்து தன் கவலையைப் போக்கிக்கொண்டான். ஆனால், ஒன்று தன் யதார்த்த முகமும், மற்றொன்று கண்ணாடியில் தோன்றும் முகமுமாக தன் முகத்தை இரண்டாகக் கண்டபடியால் மனதில் அந்த இரண்டு (துவிதம்) எனும் கவலைமீறி அந்த கண்ணாடியை நொறுக்கி விட்டால் நாம் **இரண்டு** என்பதை விட்டும் நீங்கி விடக்கூடுமென் றெண்ணியவனாக கண்ணாடியை உடைத்து விட்டபோது அந்த கண்ணாடி பல்வேறு துண்டுகளாகச் சிதறி, துண்டுக்கோர் முகமாய், யதார்த்தமான ஒரேமுகம் கற்பனையான பல முகங்களாய்ப் பிரதிபலித்தது. இதுபோன்றே **வஹ்தத்து** ஆகிய ஏகம் (அல்லது ஒன்று) என்பதை இரண்டாகப் பிரித்துக்கொண்டவேளை பல்கோடி பிரபஞ்ச வஸ்துக்களாகத் தோற்றமளிக்கின்றன. எனினும் **குத்ரத்** எனும் சக்தி, அல்லது கத்துவம், **இல்மு** எனும் அறிவு அல்லது ஞானம், **உலூஹியத்து** எனும் நாயகத் தன்மையாகிய இம் மூன்றை விட்டும் ஒரு சிருஷ்டிப்பொருளும் நீங்கியிருக்கவில்லை. எனவே உன் பார்வை என்னும் துடைப்பத்தினால் **குத்ரத்** (கத்துவம்) என்ற குப்பையை **இல்மு** என்ற அறிவை விட்டும் வெளியிற் கூட்டித்தள்ளி, எரித்து சாம்பலாக்கி விடுவாயாக; அதாவது குறிகுணதீதமான அல்லாஹுத்தஆலாவுடைய **தாத்**தாகிய சுயார்த்த ரூபத்தில் அதனை இன்மையாகச் செய்துவிடுவாயாக. இவ்வாறு செய்தவனே நிச்சயமாக, **அவ்வல்** ஆகிய ஆதியும், **ஆகிர்** ஆகிய அந்தமும், **லாஹிர்** ஆகிய வெளி

Q7:3
N52

யரங்கமும், **பாத்தின்** ஆகிய அந்தரங்கமுமா யிருக்கின்றான்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
144236

இந்த இகலோக வியோக சாதனங்களை பெற்ற பிரபஞ்சம் பிரபஞ்சமன்று, எனினும் **இல்மு** ஞானம் என்ற அறியலாகும். இன்னும் இப்பிரபஞ்ச லீலைகளை மெழுகினால் செய்யப்பட்ட **ஷத்ரஞ்சீ** என்னும் சதுரங்க விளையாட்டிற்கு உவமானித்துக் கூறுவோம். சாதாரண மக்கள் இதனை மெழுகு என்று அறியாது, மெய்யாகவே நீதி மன்றமும், ராஜவீதியும், மன்னனும், மந்திரியும், சேவகனும், யானையும், குதிரையும், ஒட்டகமுமாக சமைந்து தோன்றும் வஸ்துக்கள் முற்றினும் மெழுகினுக்கு வேற்றுமையானவை யென்றும், மெழுகன்று என்றும் தங்களின் பேதபுத்தியால் நிர்ணயங் கொண்டிருக்கிறார்கள். ஆனால், யதார்த்தத்தில் இவைகள் மெழுகினுக்கு அன்னியமான வஸ்தல்ல; மெழுகுமட்டுமே திரிகாலத்திலும் அவற்றின் உள்ளும் புறமுமாக சமைந்திருக்கிறது என்று அனுபவித்துணர்ந்தவர்களாய் மக்களுள் விசேஷமானவர்கள் திட நிர்ணயங்கொண்டிருக்கின்றனர். ஆகையால், மெழுகைத்தவிர சித்திரமும், ரூபமும், அதன் இனமும், பெயரும் முக்காலத்தும் பொய் யென்றும், சூரியனைத்தவிர இரவும், பகலும், வெய்யிலும், நிழலும் கற்பனை யென்றும், இந்த நாமங்கள் யாவும் மெழுகு அல்லது சூரியனுடைய நாமங்கள் **அஸ்மா** என்றும்; இந்த சித்திரம் மெழுகினுடைய சித்திரமென்றும், நம் முன்னிலையில் அதி பிரத்தியட்சமாய்த் தோன்றும் சித்திரம் யதார்த்தத்தில் மெழுகே

யன்றி மெழுகின் கோலம் அன்று என்றும் அறிந்துகொள்.

ஆனால் மெழுகுக்கு மெழுகு என்ற நாமமே **அஸ்லான** மூலமாகவும், **தாத்து** எனும் சுயமாகவும், அதனைத்தவிர உள்ள இதர நாமங்கள் யாவும் பிரிவாகவும், **சிபாத்தீ**யாகிய வர்ணனையாகவு மிருக்கின்றன. இவ்வாறேதான் அல்லா(ஹ்) என்ற நாமமும் **இஸ்முதாத்தீ**யான சுயார்த்த நாமமாக விருக்கிறது.

மேலும் அறிவாயாக:— **மன்ஸில்** களென்னும் இறங்கும் தானங்களின் இரகசியத்தை சற்று பேசுகிறேன். இப்பொழுது நீ இதற்கு காது தாழ்த்தி, இதனாலேனும் **தாத்து**டைய இரகசியத்தை அறிந்துகொள். **நாசூத்து** எனும் ஸ்தூலம், **மலகூத்து** எனும் சூக்குமம், **ஜபரூத்து** எனும் காரணம், **லாஹூத்து** எனும் மகாகாரணம் ஆகிய **மர்த்தபா** (பதவி)கள் நான்காகும். ஆனால் **லாஹூத்து** எனும் மகா காரணம் தன்னில்தான் சம்பூர்ணமுடையதா யிருந்தால் **ஜபரூத்து** என்ற காரணத்தின்பால் நினைவு எழாதிருக்கும். இந்த இரண்டாம் பதவியில் தனது **ஹகீகத்**தாகிய அகமியத்தைப் பெற்றுக்கொள்வதா யிருந்தால் **மல்கூத்து** என்ற சூக்குமம் ஏற்பட்டிராது. இந்த மூன்றும் பதவியில் காரியசித்தியுண்டா யிருக்கும் பட்சத்தில் நான்காம் பதவியாகிய **நாசூத்து** என்ற ஸ்தூல சாதனங்களை தயார்செய்ய நாடியிராது. இந்த நான்காவது பதவியும் நிறப்பமின்றி யிருந்தால் அப்

போது ஐந்தாவது வீட்டிலிறங்க நேரிடும். ஆனால், இந்த நான்காம் பதவியில் சகல கேட்டங்களும் நிறைவேறக்கூடியவையா யிருக்கின்றபடியால் இத்துடன் சேர்ப்படுத்தப்பட்டது. ஆகவே, மகான்கள் **லாஹூத்து** என்னும் தலத்தை சிறு குழந்தைக்குச் சமானமாயும், **நாசூத்து** என்ற முடிவான தலத்தை வாலிபனுக்குச் சமானமாயும் அறிந்தார்கள். ஆனல், எது அளவுக்கும், மட்டுதிட்டத்துக்கும், கண்பார்வைக்கும், ஸ்பரிசத்துக்கும் (தொடுதற்கும்) அகப்படுவதா யிருக்கின்றதோ அதனை ஸ்தூலம் என்றும், இந்த ஸ்தூலத்தைப்போன்ற மாதிரி வடிவமாக அணுர்ப்பூதமாய் உள்ளீடாக யிருப்பதை சூட்சும மென்றும், யாவுமிருந்து யாதொன்றும் விளங்காதபடி ஏக இருளாயிருக்கின்ற தானத்தை காரணம் என்றும், எவன் அந்த இருளினூடே பார்க்கின்றானோ அவனை மகா காரணம் என்றும் நாமமைப்போம். ஆயினும், இந்த ஸ்தூலத்தை ஸ்தூலமாகக் கருதாது, மூலமாகக் கருதிக்கொள். ஏனெனில், **மலகூத்து, ஜபரூத்து, லாஹூத்**தாகிய மூன்றுக்கும் இந்த **நாசூத்து**தான் பாத்துஷா(ஹ்)வாக இருக்கிறது. இந்த **நாசூத்து** ஆகிறது **ஸிக்கா** வென்ற முத்திரையாக இருக்கிறது. குழந்தை பருவத்துக்கும், கிழத்தன்மைக்கு மிடையில் வாலிபமானது எவ்வாறு சுயார்த்த உயிராகயிருக்கிறதோ அவ்வாறே **அஜல்** என்னும் அவர்க்க மின்றிய அனாதிகாலத்துக்கும், **அபது** என்னும் முடிவின்றிய நித்தியகாலத்துக்கு மிடையில் **நாசூத்து** என்னும் ஸ்தூலமாகிறது ஸ்தூலம் யாவற்றிற்கும் **அஸ்லு** என்னும் மூலமாகயிருக்கிறது. ஏதனாலெனில், மகா

காரணமான **லாஹூத்**தே இந்த சரீரத்தை எடுத்துக்கொண்டு இவ்விடம் வந்திருப்பதை **நாசூத்து** என்று அழைக்கிறோம். ஆயினும், அது போக்கு வரவற்றதா யிருப்பதால் எங்கிருந்ததோ அங்கு தானிருக்கிறது. இந்த சொல்லின் பூராயத்தை ஞானியாகிய ஒருவர்தான் அங்கீகரிப்பார்.

அறிவாயாக:— ஜீவித்திருப்பவன் மட்டுமே இவ்வுலகில் தடைபட்டிருப்பான்; அவன் மரணித்தால் இந்த உலகத்தைவிட்டும், அதன் போக சாதனங்களான வானம், பூமி, மனையாட்டியுடன் சம்போகித்தல், ஊண், தீன் முதலானவற்றை விட்டும் அகன்றுவிடுவான் என்று அபக்குவிகளான சாதாரண மக்கள் கூறுகின்றனர். ஆனால் எனது கருத்துப்படி, அவ்வாறானவன் இவை யாவற்றையும் விட்டுவிட்டு வேறொரு இடத்துக்கு போகான். ஏனெனில், திரிசியம் ஆகிய உனது அல்லது அவனது சரீரம் உனக்கு அல்லது அவனுக்கு நீ அல்லது அவன் அரசுசெலுத்தும் ஒரு பட்டினம் போன்றதே; இந்த ஒரே பட்டினம்தான் உண்டென்று எண்ணாதே. ஆனால் நீயோ அல்லது அவனோ எங்கிருப்பினுஞ்சரி அங்கு இகபரமாகிய இருபதியும் பிரசன்னமா யிருக்கின்றன. ஏனென்றால் சகல சிரசுகளுக்கும் உன்னுடைய அல்லது அவனுடைய பாதாரவிந்தம் தான் இலட்சியப்பொருளான **மக்ஸூது**வாக யிருக்கிறது. இந்த புறச் சரீரத்தைப் போன்று அகத்தே ஒரு சரீரம் உண்டாயிருக்கிறதை அறிந்துகொள். அத்தகைய உள்ளிடை சரீரத்துக்கு பட்டினங்கள் தோறும் வீடுகளிருக்கின்றன.

என் சிறப்புமிக்க சோதரனே! அறிவாயாக:— இந்த **அனுஸிறு** என்ற சதுர்ப்பூதங்களால் சமைந்த சடமானது யாரும் பரிமாறி மீதப்படாத சகல போகபாக்கியங்களாலும் நிறைந்த மறைவுலகிலுள்ளதோர் பாத்திரமாயிருக்கின்றது. அது எத்தகைய பாத்திரமென்றால், தேவையாகும் யாதேனுமொரு வஸ்து அதில் காணப்படாது குறைவுள்ளதாயிருப்பதன்று. ஆனால், நவகிரகங்களினுடைய பாக்கியங்கள் யாவற்றையும் தன்னுள்பெற்று அது நிரம்பியிருக்கிறது. எவ்வாறு சடமானது சித்து அல்லது ஆத்மாவின்றி குறைச்சலுடையதா யிருக்கிறதோ அவ்வாறே ஆத்மாவும் சடமில்லாவிடில் கீர்த்தியின்றியதா யிருக்கிறது. மேலும், இச்சரீரம் தங்கத்காலான பாத்திரம் போன்றும், ஆத்மா பாத்திரத்தினுள்ளிருக்கும் ஆகாரம் போன்றுமிருக்கிறது; இந்த பாத்திரத்துக்கு ஆகாரமானது ஆகாரப் பொருளாயிருக்கிறது. ஒன்றிருந்து மற்றொன்றில்லாவிடில் ஒன்றினைவிட மற்றொன்று குறைவுள்ளதாயிருக்கும். **நாசூத்து** என்னும் ஸ்தூல தேகமானது மாமியார் வீட்டைப் போன்றிருக்கிறது. எஜமானனின் வணக்கத்தில் நீ மருமகளைப் போலிருந்து கொள்வாயாக. ஏனெனில், மாமி வீடாக இச்சரீரமிருக்கிறபடியால் மருமகளாகவிருக்கும் நீ உன்னுடைய மாமியார் வீட்டுக்கு எஜமானனாகிய உனது புருஷனுடைய பக்தியை உன் வீடாகக்கொள். மேலும், புருஷன் உனது **மஹ்பூப்** ஆகிய நண்பன்தானே என்று இலேசாகக் கருதி விடாது, அன்னையின் மடியை விட்டு நீங்காது இருப்பதுடன் மாமியார் இல்லத்திலும் சமாளிப்

போடு நடந்துகொள்வாயாக. இவ்விடத்தில் **இபாதத்து** ஆகிய வணக்கம் உன்மீது **வாஜிபு** ஆகிய அவசியமாயும் **உபூதிய்யத்**தென்னும் அடிமைத் தனத்தின் வழக்கம் உனக்கு அத்தியாவசியமாயு மிருக்கிறது. உன்னுடைய தங்கடமாகிய **இல்லத்**தை எறித்துப் பொசுக்கிவிட்டு, மார்க்க வழி யாகிய **மில்லத்**தில் நீ எச்சரிக்கையோடு நடந்தேற வேண்டும்.

இங்கிருந்து எழுந்து, நீ **மலகூத்து** என்ற சூட்சும தேகத்துக்குப் போனால் உன் அன்னையின் வீட்டிற்கு நீ போனதற்கு ஒப்பாகும். அப்பொழுது தான் நீ சுதந்திரம் பெற்றவனாவாய். **யப்அலு மாயஷாஉ—இன்னல்லாஹ யஹ்குமு மாயுரீது** "அவன் நாடினதைச் செய்வான். மேலும் அவனுடைய நாட்டப்படியே தீர்ப்புச் செய்வான்," என்று திருமறையில் ஹக்குதஆலா திருவுளமாயிருக்கிறான். மரத்தை விடுத்து வித்தை விரும்புபவன் அந்த மேலான வித்தைப் பெற்றுக்கொள்ளுதற் போன்று **ரப்** ஆகிய இரட்சகனைப் பெறுவான். ஆனால் இந்த மரத்துக்கு ஓர் வித்துண்டு; அந்த வித்தில் வித்தாக இருப்பதுதான் **ரப்** என்ற வித்தாகும். எனினும் இம்மரமும், உலகமும், பார்வையிலும், எழுத்திலும், வாசகத்திலும் அகப்படும். அந்த மரத்தின் வித்தாகிறது **ஹக்கு** ஆகிய **நூரு முஹம்மதிய்யா**வாக யிருக்கிறது. அந்த வித்துக்கு வித்து **நூருமுத்லக்** என்னும் சர்வ சம்பூர்ண ஜோதியாயிருக்கிறது. அதனை குறிகுணதீதமான **அஹதிய்யத்து**டைய **நூர்** என்றழைக்கப்படும்.

அவ்விடத்தில் காரணம், காரியம், கொலை, பழி ஆகியவை கிடையாது. அத்தகைய **தாத்து** என்ற **ஹஸ்தி**யிலிருந்து இந்த பிரபஞ்சத்துக்கு வித்தாகிய **தாத்து** முளைத்து வெளிப்படுகின்றது. இந்த **தாத்து முகையிது** ஆகிய கண்டிதமான தத்சொரூபத்திலிருந்துதான் பிரபஞ்சம் பூராவும் உண்டாகியிருக்கிறது. சிறப்புற்றவனே! வித்து என்னவென்றும், வித்தில் வித்தாகிறது என்னவென்றும் நீ என்னைக்கேட்டால், வானதிபூதமும் தானகநிற்கும் ஞானசொரூபியின் வரிசையில் தகுதிவாய்ந்த வதனத்தையுடைய எனது குருபிரான் அவர்களின் கிருபாகடாட்சத்தால் நான் அழகுபடச் சொல்வதை சற்று செவிமடுப்பாயாக. இந்த மரம் முளைத்திருக்குமிடம் நன்றோ, தீதோ, நாகூரிலுள்ளதோ, லாஹூரிலுள்ளதோவென என்னை விவரித்துக்கேட்டால், எவ்விடத்திலுள்ளதென்று எனக்குத் தெரியாதென்றே நான் பதிலளிப்பேன். அதாவது, இந்த **துன்யா**வானது மிகவும் ஆச்சரியமானதொன்றாயிருக்கிறது; இதைப்படைத்தவன் யாரென்றும், இது எப்பொழுது உண்டாயிற்றென்றும், இதை இன்னான், இன்ன வஸ்துவென்றும் யாரால் அறிய இயலும்? ஆனால் இந்த மரம் மரமன்று; அது வித்தின் தோற்றம் (தெளிவு) ஆக இருந்தபோதிலும், அதன் **ஹகீகத்**தாகிய அகமியமாய் யிருக்கிறது. இந்த மரத்துக்கு ஆலமாகிய பிரபஞ்சம் இலையும், பூவுமாயும், **ஆதமீ**யான **இன்ஸான்** (மானிடன்) பழமாயுமிருக்கிறான். மீண்டும் அந்த **இன்ஸான்** கனியில் அனதி பூர்வப்பொருளாகிய வித்து ஏற்பட்டு, தன்னை பலவந்தப்படுத்தி மறைத்துக்கொண்டது.

அவ்வாறு மறைவிலிருந்த வித்துக்களில் இரண்டொன்று அந்தப் பழத்தை உடைத்துகொண்டு, வெளியில் வந்து தன்னுடைய **ஹஸ்தை** பகிரங்கமாகப் பிரஸ்தாபித்துச் சொல்லுகிறதாவது பின்வருமாறு:—

இந்த மரம் என்னுடைய **ஜிஸ்மு** ஆகிய சரீரம்; இந்த மரத்தின் சகல அம்சங்களிலும் நான் **ஸைர்** என்ற யாத்திரை செய்து வருகிறேன். மேலும், மரமும், பணரும், வேரும், தூரும், இலையும், துளிரும், பூவும், பிஞ்சும், காயும், பழமும் ஆகிய யாவும் எனது ஒப்புக்கொள்ளப்பட்ட தானங்களாகும். ஆனால் மரமும் நான்தான், பழமும் நானே; வித்தும் நான்தான், வித்துக்கு வித்தும் நானே. இப்பொழுது நான் நினைவுறுத்திய இவ்விஷயம் யாருக்கும் விளங்காது. இதனை நீ நன்கு விளங்க நாடினால், ஹலரத்து ஷெய்கு ஹஸைனிப்னு மன்ஸூருல் ஹல்லாஜ்(றலி) அவர்களிடம் சென்று நீ கேட்பாயாக. இது விஷயத்தை அவர்கள் தெள்ளத் தெளிய உணர்ந்திருக்கிறார்கள். புஷ்பம் என்ற நாமந்தரித்த புஷ்பம் யாவற்றிலும் நறுமணங்கமழுவதில்லை. சிற்சிலவற்றில்தான் அவ்விதம் உண்டாயிருக்கின்றது. இன்னும், தைலம் போன்ற திரவபதார்த்தம் எல்லாவற்றிலும் வாசனை யுண்டாகியில்லை; **அதார்** (றஹ்) அவர்களுடைய **அத்ரில்** மாத்திரம் தான் அந்த நறுமணம் ஏற்பட்டிருக்கிறது. இவைபோன்றே மானிடர்கள் எல்லோருக்கும் இந்த **இல்மு** ஆகிய ஞானம் உண்டாகவில்லை. மெய்ஞ்ஞான சொரூபிகளெனப்படும் **ஆரிபீன்**களுடைய

மனதில்தான் இது தரிபட்டிருக்கிறது. எனவே, மனிதர்களெல்லாம் மறதியாளர்களா யிருக்கின்ற படியால், தன்னை இன்மையாக்கி, தனக் கன்னிய மாகியதோர் ஹக்காகிய நாயனைத் தேடுகிறார்களே யன்றி, தேடுபவன் யாரென்பதை அறிவதில்லை. இருப்பதொன்றாயிருக்க இவர்கள் அறிவது வேறாக யிருக்கிறது. ஒரு வஸ்தை வேறு வஸ்தாகப் பாவிக் கின்றனர். இதனை நீ நன்கு விளங்க பின்வரும் ஹிகாயத்தில் குடிகாரனுடைய நடத்தையை சற்று கவனிப்பாயாக.

ஹிகாயத்து:— ஒரு மதுபானன் குடி மயக் கத்தோடு ஒரு சமயம் ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் பிரயாணப்பட்டவனாகச் சென்றுகொண் டிருக்கையில் வழியில் விடுதியொன்று வைத்திருக்கும் ஒரு பெண்மணியின் வீட்டையடைந்து, அவள் நற் குணமுடையவளாயிருக்கக்கண்டு அவளிடம் கிடைக் கும் ரொட்டியும், சாப்பாட்டிடமும், படுக்கையறை யும், அவளது விடுதியும் அவனுடைய மனத்தை கவர்ந்ததும் அந்த விடுதியில் இரவுகாலத்தை கழித் துப்போக நாடி அவ்விடத்தில் தங்கினான். அன் றிரவு மற்றொரு வழிப்போக்கனும் அங்குவந்து தரித்தான். இவ்விருவருக்கும் மிகுந்த நட்புண்டா யிற்று. எனவே, இருவரும் மனம்போனபோக்கில் புசித்துவிட்டு, தத்தம் தலைப்பாகையைக் கழற்றி அருகே வைத்துவிட்டு சயன அறையில் படுத்து உறங்கிவிட்டனர். பொழுது விடியுமுன்னர், அந்த குடிகாரன் மதுவைக்கடைந்து குடித்தவனாய் மஸ் தாகி இருட்டாக இருக்கையிலேயே சேவல் கூவும்

சப்தத்தைக் கேட்டு அவசரத்தில் தன் தலைப் பாகையை எடுக்காது; தன் நண்பனுடைய பட்சி யின் சிறகு சொருகப்பட்ட தலைப்பாகையை எடுத்து தன் தலையிலணிந்துகொண்டு வெய்யிலுக்கு முன் புறப்பட்டு அதிவேகமாகச் செல்கையில் ஆதவன் வானவெளியில் உதயமாகி பிரகாசிக்கத் தொடங்கி யதும் ஸ்தூல சரீரத்தில் நின்றும் சூட்சுமம் தெரிவது போன்று வஸ்துக்களின் சாயைகள் பூமிமீது விழ வும் தலைப்பாகையின்பேரில் வைக்கப்பட்ட சிறகின் சாய்கையைக்கண்ட குடிகாரன் தன்னை தானல்ல, தன்னுடன் விடுதியில் தங்கியிருந்த தனது நண்பன் என்று நினைத்து, தன்னை இழந்துவிட்டோமே என்று கவலையால் வாடியவனாக, தன்னைக் காண் பதற்கு மீண்டும் தான் தங்கிவந்த விடுதியை நோக்கி ஓடிப்போய்ச்சேர்ந்து அங்கிருந்த விடுதிக்காரியான அப்பெண்மணியை வெறிபிடித்தவன் போலும், கொதிக்கும் சோற்றினைப்போலும் பொங்கி கொந்த ளித்தவனாக கடுஞ்சினங்கொண்டு வாயில் வந்தவாறு திட்டினான். மேலும் அவளைப் பார்த்து, "ஏ! நாற் றப் பிண்மமே! நீ அந்த ஹரிகாரனை மட்டும் அதி காலையில் தூக்கத்தை விட்டும் எழச்செய்து, வெய்யி லில் வாடாதபடி அனுப்பிவிட்டு சூரியனுதயமாகி இவ்வளவு நேரமாகியும், என்னைத் தடவிக்கொடுத்து ஆழ்ந்த நித்திரையில் மூழ்கியிருக்குமாறு செய்து வருவது, என்னைக் கடும் வெய்யிலில் சிக்கவைத்து வாட்டுவதற்கே; ஆதலின், உனது இம்மாதிரி நடத்தையால் நீ என்னைப்பார்க்கிலும் ஹரிகாரன் மீது அதிக கிருபை காட்டுகிறாய் என்பதை அறியப் படவில்லையா?" என்று பலவாறாக தன் குடி

மயக்கத்திஞல் பிதற்றினன். என்னே அவனின் விபரீதப் போக்கு!

அது போன்றே நீயும் அவித்தையினுல் மறைக்கப்பட்டு உலக ஆசாபாசங்கள் மிகைத்து மாயையினுல் கற்பிக்கப்பட்ட பஞ்சகோசங்களை உனது பாசத்தின் விளைவாக மெய்யெனக்கருதி **தான்** ஆகிய யதார்த்தமான உன்னை இழந்தவனுக, மதிமயக்கமுற்றவனுய் உலகில் தடுமாற்றங்கொண்டு திரிந்து வருகின்ருய். இந்த கைசேதமான உனது அனர்த்த நிலையைத்துறந்து யதார்த்தத்தில் **நீ யார்** எனக்கண்டு தெளிமின். உஷார்!

★ நான்காவது அத்தியாயம். ★

[இந்த நான்காம் அத்தியாயத்தில் **மலகூத்து** என்னும் சூட்சும சொரூபத்தையும், இதர விஷயங்களைப்பற்றியும் விவரிக்கப் படுகின்றன.]

அருமையானவனே! அறிந்துகொள்வாயாக:—

ஆன்மாவில் **மலகூத்து** ஆகிய சூட்சும சரீரம் எவ்வாறு உறைந்திருக்கிறதென்பதை சற்றுக் கூறுகிறேன். இந்த **நாசூத்து** ஆகிய ஸ்தூல சரீரத்தில் **மலகூத்து** ஆகிய சூட்சுமசரீரம் தந்தி கம்பியில் சப்தமிருப்பது போன்று நிறைந்திருக்கிறது. எவ்வாறெனில், மந்திரவாதி ஒருவன் ஒரு பெட்டியில் பாம்பினது தோலைவைத்து மூடி, வாயால் (மகுடி) ஊதி, பெட்டியைக் கையினல் தட்டித் திறந்து உயிருடன் கூடிய நிறப்பமானதோர் பாம்பாக ஜனங்களுக்கு காட்டுவது போன்ரும். மேலும், சத்தியப் பிரமாணத்தின் காலம் ஆகிய **ரோஜ்மீதாக்**கில் அந்த சூக்கும சரீரம்தான் பல்வேறாக இருந்தது. இந்த (ஸ்தூல) சரீரம் சூக்குமம் இருக்கும் ஸ்தலமாக இருக்கிறது. மரணத்துக்கு அந்த (சூக்கும) சரீரத்தோடு நட்பில்லை. அதுபோன்று நித்திரைக்கும் அதன்பேரில் தத்துவமில்லை. இந்த (ஸ்தூல) சரீரம் அழுக்காகவும், அந்த (சூக்கும) சரீரம் அழுக்கின்றி சுத்தமாயும், இது உறையைப்போன்றும், அது வாளைப்போன்றும், இந்த (ஸ்தூல) சரீரம் புதியதாகவும், அந்த (சூக்கும) சரீரம் பூர்வீகமாகவும், இது பலவீனமாயும், அது உறுதியாயும், இந்த (ஸ்தூல) சரீரம் குர்ஆனுக்கு போடப்பட்டிருக்கும் அட்டை

யைப் போன்றும், அந்த (சூக்கும) சரீரம் குர்ஆனைப் போன்றும், அந்த (சூக்கும) சரீரம் வித்து போன்றும், இந்த (ஸ்தூல) சரீரம் அதை மூடி காப்பாற்றும் தோலாகவுமிருக்கிறது. இன்னும் இச் சரீரம் சரீரமன்று; ஆனால், பாம்பின் தோலாகிய சட்டையைப்போல் ஒரு உறையாகிய தோலாகவும், அந்த சரீரத்தின் உயிரோ சதாகாலமும் தரிபடுவதாயுமிருக்கிறது. ஆன்மாவாகிறது இந்த சரீரம் என்ற விறகில் அக்னியைப்போல் பற்றி எரிந்துகொண்டிருக்கிறது. இந்த (ஸ்தூல) சரீரமாகிறது இரத்தினமுமன்று, அது விளையுந் தலமுமன்று; மரத்தை மூடிக்கொண்டிருக்கும் பட்டையைப் போன்றிருக்கிறது. என்னுடைய சகோதரனே! அறிந்து கொள்வாயாக, இந்த சரீரத்தை எவ்வளவு சவரட்சனைப்பண்ணி, பக்குவப்படுத்தி வைத்தபோதிலும், அவ்வாறு செய்யாது பொடுபோக்கா யிருந்துவிட்டாலும் இந்த சரீரம் விழுந்துவிடுவது நிட்சயம். ஆகையால், அந்த (சூட்சும) சரீரத்தை இதைப் போல் நன்கு தரிபடுத்தி வைக்கவேண்டும், இதற்காகவே அந்த சரீரத்தின்பேரில் இரவும், பகலும் நோட்டம் வைத்துக்கொண்டிருப்பாயாக. எனவே, இந்த (ஸ்தூல) சரீரத்தை அறவே மறந்துவிடு. ஜப தபம், **தருது, அவ்ராது, திக்ரு, பிக்ரு,** கேள்வி, பார்வை, பேச்சு, மூச்சு முதலான சகல கர்மானுஷ்டானங்களையும் சூட்சும சரீரத்தி லிருந்து கொண்டே செய்துகொண்டுவா. **மலகூத்து**டைய சரீரம் உனக்கு சித்திக்கும்வரை இவ்வித அப்பியாசங்கள் உன் பழக்கத்திலிருந்தால், சூட்சுமத்தைக் கொண்டு செய்யப்படும் காரியாதிகள் யாவும்

வெற்றி பெறும். இந்த அனுஷ்டானத்தைக் கொண்டே காரிய சித்தியாகிறது. எனவே, ஸ்தூலம் உள்ளழுந்தி சூட்சுமம் வெளிப்படுமாறு நீ அப்பியாசிக்க வேண்டும். எவ்வாறெனில், இலையுதிர் காலத்தில் மரங்களிலுள்ள பூ, இலையாதிகள் உதிர்ந்துவிட்ட பிறகு புது இலைகளும், பூக்களும் செழிப்பாகவும், நேர்த்தியாகவும் வெளிப்படுவதைப் போன்று உனது மனதினால் ஸ்தூலத்தை சூக்குமமாகவும், சூக்குமத்தை ஸ்தூலமாகவுஞ் செய்து, ஸ்தூலத்தை மறைத்து, சூக்குமத்தை வெளிப்படுத்திப் பார்ப்பாயாகில் உனது நாட்டம் பூராவும் நிறைவேறிவிடும். இந்த **நாசூத்து**டைய சரீரத்தில் மனதைப் பூட்டி யிருப்பவனுக்கு **மலகூத்து**டைய சரீரம் தெரிவது மகா கடினம். இதுபோன்று **லாஹூத்து**டைய சரீரமான **ரூஹு** ஆகிய ஆத்மாவில் எவன் லயித்திருக்கிறானோ அத்தகையோனுக்கு ஸ்தூலம் தெரியாது. யார் தனது கல்பை **திக்ருரூஹீ** யாகிய ஆத்ம தியானத்தில் சொக்கும்படி செய்து, சதா அதில் தரிபட்டிருக்கிறாரோ அவர் பிறிதொன்றையும் உணரமாட்டார்; ஸ்தூலங்களினது மூளை போன்ற மூலமான சூட்சுமம் பூராவும் அன்னாருக்குத் தெரியும்.

அறிவாயாக:— **நாசூத்து**க்கும், **ஜபரூத்து**க்கு மிடையிலுள்ள நடுநிலை **மலகூத்து**தான். அங்கிருந்து இங்குவரும் யாவும் சூட்சுமத்தின் வாயிலாகவே வந்துசேரவேண்டும். ஆனால் **பர்ஜக்** ஆகிய நடுநிலையைப்பற்றி (யாரும் அவ்வளவாக விவரித்துக் கூறாததொன்றை) நான் இப்பொழுது சற்று

விளக்கிக்காட்டுகிறேன். நிற்போனுக்கும், படுத்திருப்போனுக்கும் இடையிலுள்ள நடுநிலைதான் உட்கார்ந்திருத்தல். **மக்ஸூது** ஆகிய இலட்சியப் பொருள் சூட்சுமத்தில்தான் நிறைவேறக்கூடியதாயிருக்கிறது. **நாசூத்து**க்கும், **ஜபரூத்து**க்கும் **மலகூத்து** எவ்வாறு தேவையாகின்றதோ அது போன்றே நிற்றல், படுத்தலுக்குமிடையில் உட்கார்தல் தேவைப்படுகின்றது. நிற்பவன் படுக்க நாடினால் நின்றவாக்கில் படுத்துவிட முடியாது. ஆனால், உட்கார்ந்த பிறகுதான் படுக்கவேண்டும். நின்ற நிலையிலிருந்த வண்ணம் உட்காராது, படுக்கத் துணிந்தால் சிரசும், இதர அவயவங்களும் காயப்பட்டு உடைய நேரிடும். உட்கார்ந்த பிறகு படுத்தலே சுகத்தை யளிக்க வல்லது. இதுபோன்றுதான் படுத்திருப்போனும், உட்காராதவண்ணம் ஒரே அடியாக எழுந்து நின்றுவிட முடியாது. ஆகையால், படுத்திருப்போனுக்கும், நிற்போனுக்குமிடையில் உட்கார்தல் அவசியப்படுவதுபோல் வருகிறவனுக்கும், போகிறவனுக்கும் **மலகூத்**தாகிய சூட்சுமம் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. அதாவது ஒரு வஸ்து **ஆலம் அர்வாஹு** எனப்படும் ஆன்மலோகத்திலிருந்து **ஆலம் அஜ்ஸாம்** ஆகிய சடலோகத்திற்கு வரவும், சடலோகத்திலிருந்து ஆன்மலோகத்துக்குப் போகவும் **ஆலம் மிதால்** ஆகிய **சூட்சும லோகம்** இன்றியமையாதது. புறக்கண்ணுக்குக் காணப்படும் இந்த ஸ்தூலம் என்ற தோலைத் தவிர, மற்ற யாவும் புத்திக்குப் புலப்படுவது **மஉகூலு**வாக இருக்கிறது. ஆகையால், இந்த அறிவும், குணமும், பூராயமும், **ஹதீது**

குத்ஸீயும், **நபவீயும்**, **நுக்தாவும்** மறைவுலகிலிருக் கின்றன. மேலும், இந்த சரீரம் என்ற தோட்ட மும்; அதன் நேர்த்தியும் மறைவில்தானிருக்கின் றன. ஆனால் அந்தரங்கமும்; பகிரங்கமும் ஒன்றுக் கொன்று வேறுபட்டதல்ல. உன்னுடைய நெடுங் கால சுபாவமான வழக்கத்தை விடுத்து நீ பார்ப்பா யாகில் உனக்கு இவ்விரண்டும் ஒன்றே எனப் புலனாகும். அல்லாஹுத்தஆலா யாவருடைய உள் ளத்தையும் பிரகாசிக்கச் செய்வானாகவும். இந்த ஸ்தூலத்தைவிட்டு சூட்சுமம் வேறன்று, **நாசூத்தை** தவிர **மலகூத்துக்கு** ஸ்தானங் கிடையாது. மேலும், ஸ்தூல சரீரம் எவ்வாறு வெளியீடாயிருக்கின்றதோ அவ்வாறே சூக்கும சரீரம் உள்ளீடாயிருக்கிறது. பார்வைக்கு இரண்டாகத் தோற்றினும் அவற்றுள் பூராயத்தையும் நுட்பத்தையும் புகுத்தப்பட்டிருக் கின்றன. சூட்சுமலோகம் ஸ்தூல லோகத்தைப் போன்றிருக்கிறதேயன்றி, இது வேறாகவும், அது வேறாகவுமில்லை. கடலுங் கரையும், காடும் மலையும், வானமும் பூமியும், இரவும் பகலும், தோட்டமும் தோட்டக்காரனும், **புல்புல்** பறவையும் புஷ்பமும், சுகமும் துக்கமும் ஆகிய யாவுமாக சமைந்த இப் பிர பஞ்சம் **வாஹிதிய்யத்துடைய** சாய்கையாயிருக் கிறது. இதனை நன்கு சிந்தித்துப்பார். எவனுக்கு எப்பொழுது **மலகூத்து** ஆகிய சூட்சும சரீரம் கை வசமாயிற்றோ, அவன் **பகா**வாகிய நித்தியத்தின் பால் மீண்டு, **பனா**வான அநித்தியமான நாசச் சரீத்தை விடுத்து, **ஒளலியாக்களின்** கூட்டத்தி லாகி, சகல கோணங்களுக்கும் **சுல்தானாகி**, வேற் றுமை, பகைமை யாவற்றையும் விட்டு நீங்கி, பரவை

முதலான சகல வஸ்துக்களிலும் புகுந்து ஸைர் என்னும் யாத்திரையைத் தொடர்ந்து செய்து கொண்டிருப்பான்.

ஹிகாயத்து:— **அரபு** நாட்டிலுள்ள ஓர் **அரபீ** ஒரு **ஆரிபாக** இருந்தார். அவர் **மலகூத்** தாகிய சூட்சுமத்தை எடுத்துக்கொண்டு தான் நாடிய விடத்திற்குப் போய்வரக்கூடிய பழக்கத்தை அனுஷ்டித்து வந்தார். அன்னாரைக் காண்பதற்கு சிஷ்யர்களுள் சிலர் வந்தபோது, அந்த **ஆரிபு** இம் மையின் வீட்டை விடுத்தவராய்; இந்த சரீரம் என்ற வீணையை உடைத்து நொறுக்கிவிட்டு, **ரூஹு** ஆகிய ஆத்மா என்கிற கம்பியை எடுத்து வாசித்துக் கொண்டு **ரூஹு**டைய ஆலத்துக்குச் சென்றுவிட்ட தைக் கேள்வியுற்ற அன்னாரின் சீடர்கள் தங்கள் குருவின் அன்பை நினைத்து அழுதவர்களாய் சஞ் சலம் மேலிட்டு, அவருடைய **கப்ரு** ஆகிய சமாதி யருகே படுத்திருந்தனர். அந்த சிஷ்ய கூட்டத்தில் ஒரு **முரீது சாதிகு** இருந்தார். அவரிடம் ஓர் ஒட்டகக் குட்டியிருந்தது. அப்போது **கப்ரு** என்ற **பர்ஜகு** டைய ஆலத்துக்கு விசேஷமான பாத்துஷா(ஹ்) வாகிய அந்த ஒலியுல்லா(ஹ்) இவ்வாறு தன் சமாதி யருகே பட்டினிகிடப்போர் மீது கிருபை கூர்ந்து, தன் கப்ரை விட்டு வெளிப்பட்டு அந்த ஒட்டகைக் காரருடைய சொப்பனத்தில் போய், "நீங்கள் என்னைக் காண்பதற்காக வந்து என்னையும் காணக் கிடைக்காது, வீணில் பட்டினிகிடப்பது எனக்கு மிக்க துயரத்தைக் கொடுக்கிறபடியால், உம்முடைய ஒட்டகத்தை அறுத்து அவர்களுக்கு விருந்தளிப்ப

தற்காகவேண்டி அதை நீர் எனக்கு கொடுப்பீராக. என் மகனிடத்திலிருக்கும் சொத்தில் நின்றுமுள்ள ஒட்டக மந்தையிலிருந்து உமக்கு ஓர் ஒட்டகத்தை என் மகன் தவராது உம்மிடம் கொண்டுவந்து கொடுப்பார்; இது சத்தியம்,'' என்று சொன்ன போது, இக்கூட்டத்தினரிடம் தன் ஒட்டகைக் குட்டியை அவிழ்த்துக் கொண்டுவந்து கொடுத்து, 'நீங்கள் இதை உங்கள் இஷ்டம்போல் சமைத்து சாப்பிடுங்கள்,' என்று சொன்னார். இது பூராவும் சொப்பன நிகழ்ச்சியே. இது நிற்க, அந்த மகான் இங்கு சொன்னதுபோல் யாதொரு குறைவுமின்றி தன் மகனுடைய மனுமிலும் பிரசன்னமாகி சொல்லிவிட்டுப் போய்விட்டார். ஒட்டகைக்காரர் சொப்பனத் தினின்றும் விழித்ததும், ஒட்டகம் அறுக்கப் பட்டிருந்ததைப் பார்த்த அவர் 'இஃ தென்ன! வெகுப்பமானதோர் ஆச்சரியமாயிருக் கிறது! மரணித்தோர் ஜீவித்திருப்பவர்களுக்கு விருந்து செய்வதுமுண்டோ!' என்று அதிசயித்த வர்களாய் அதை சமையல் செய்து எல்லோரும் பசியாறி படுத்திருந்தார்கள். அந்த ஒளலியாவுடைய மகனார் தன் தகப்பனாருடைய உத்திரவுப்படியே பொழுது விடிந்ததும் ஒட்டகைக்காரருக்கு சலாம் கூறி, பொருத்த மரியாதைசெலுத்தி, விலையுயர்ந்த ஓர் ஒட்டகத்தை அவருக்குக் கொடுத்தார். அவர் ஒட்டகையைப் பெற்றுக்கொண்டு, “என் நண்பரே! நீர் எவ்வாறு என்னைத் தெரிந்து என்னிடத்தில் ஒட்டகையைத் தானாகக் கொண்டுவந்து கொடுத் தீர்?'' என்று வினவவும், அதற்கு விடையாக மக னார், “எனது முன்னிலைப் பொருளான என்து

தந்தை அவர்கள் இது விஷயத்தை எனக்கு தெளிவு படுத்தி வைத்தார்கள். எவ்வாறெனில், உம்போன்ற ஒருவரை என் முன்பாக நிறுத்தி, எவனொருவன் இம்மாதிரி உனக்குத் தோன்றுவானே அவனுடைய பொருள் இந்த ஒட்டகம் என்று எனக்கு மனதில் அறிவித்த அடையாளத்தின்படி உம்மை நான் விளங்கிக்கொண்டு இக் காரியத்தை நிறைவேற்றினேன்,'' என்று கூறினர்.

ஆரிபு ஆகிய ஞானியே! அறிவாயாக:—இதனை நன்கு விளங்கினுல் காதலிமீது காதல் கொண்டிருக்கும் காதலன் மரணிப்பதில்லை; ஆனல் சதாகாலமும் அவன் ஜீவித்திருப் பானென்று அறிய வருகிறது. **வலாதகூலூ லிமன்யக்துல் பீஸபீலில்லாஹி அம்வாதுன் பல் அஹ்யாஉன் வலாகின் லாதஷ்உறூன்** அல்லா(ஹ்)வின் பாதையில் வெட்டி வீழ்த்தப்பட்டோரை மரணித்தவர்களென்று நீங்கள் சொல்லவேண்டாம்; அவர்கள் ஜீவிப்புடையோராகும்; எனினும், நீங்கள் (இதனை) உங்களின் பஞ்சேந்திரியங்களால் அறியமாட்டீர்கள்,'' என்று திருமறையில் இறைவன் அருளியிருக்கிறபடி, அனுபவியான ஒரு **ஆரிபு** ஆகிய ஞானிக்கு மரணமென்பது கிடையாது. **அலா இன்ன ஔலியா அல்லாஹி லாயமூதூன பல் யன்கலிபூன மின்தாரின் இலாதாரின்** மெய்யாக, அல்லா(ஹ்)வின் **ஔலியா**க்கள் மரணிப்பதில்லை; எனினும் அன்னோர் ஒரு இல்லத்திலிருந்து மறு இல்லத்தளவில் மீளுவர்—அதாவது, அவர்கள் நாடிய போது மீண்டும் **ஸைர்** எனும் யாத்திரைச் செய்வதில் ஈடுபடுவார்கள் என்பதை அறியவும்.

★ ஐந்தாவது அத்தியாயம். ★

[இந்த ஐந்தாவது அத்தியாயத்தில் **தெள்ளிய முத்துக்கள்** மூன்றைப்பற்றி விவரிக்கப்படுகின்றது.]

அருமையானவனே! அறிந்துகொள்வாயாக:—

இவ்வுலகில் பலதிறப்பட்ட தொழிலாளிகளிருக்கின்றனர். அவற்றுள் ஒரு வகைத் தொழிலாளி யாரெனில், பட்டினங்கள் தோறும் அலைந்தவர்களாய், ஒவ்வொரு பட்டினத்திலுமுள்ள சில முக்கிய இடங்களிலிருக்கும் மண்ணைத் தோண்டி எடுத்து, ஒரு பாத்திரத்தில் அதனைப் போட்டு, தண்ணீர் விட்டு கழுவி, சுத்தம் செய்து பார்க்கையில் அதிலிருந்து அகப்படும் பொன், வெள்ளி, செம்பு, பித்தளை, ஈயம், இரும்பு முதலானவைகளை எடுத்து பரிசோதித்து, அதிலிருக்கும் **பொன்** தூளை மட்டும் எடுத்து ஒரு குடுக்கையில் போட்டு உருக்கி ஒன்று சேர்த்து நாணயக் கடையில் விற்று விடுவதுபோல, சர்வக்ஞஞான **ஹக்கை** அடையப்பெற்ற **மகான்கள்** இந்த சரீரம் என்ற மண் குவியலை **அறிவு** என்ற தண்ணீரினால் பரிசுத்தப்படுத்தி பார்க்குங்காலை மூன்று பொற்றுண்டுகள் அவர்கள் கைக்குட் சிக்கின. அவற்றுள் முந்தியது **ரூஹு**, இரண்டாவது **கல்பு**, மூன்றாவது **நப்ஸு**, ஆனால், அம்மகான்களில் சிலர் **நப்ஸு** தான் மற்ற இரண்டையும்விடச் சிறந்ததாயும், எல்லாவற்றிற்கும் மூலமாயுமிருக்கிறதென்றும், **கல்பும், ரூஹும்** அதனாலேயே உள்ளமைப் பெற்றிருக்கிறதென்றும், அஃதிருந்தால் மட்டுமே மற்ற எல்லாமுண்டு, இல்லாவிடில் தேடுவோன்,

தேட்டம், தேட்டப்பொருள் ஆகிய மூன்றும் பொய் யென்றுஞ் சொன்னார்கள். ஏனெனில், **நப்ஸு** ஆனது **வஹ்தத்து**டைய பதவியின் தீர்க்கமாயிருக் கிறபடியால் அவர்கள் **நப்ஸு**தான் **அஸ்லு** (மூலம்) என்று முடிவு கட்டி, பூர்ணமாக அங்கீகரித்துச் சொன்னார்கள். இன்னும், சிலர் **ரூஹு**தான் யாவற் றிற்கும் பெரிய பாத்துஷா(ஹ்)வா யிருக்குமென் றும், அதனைக்கொண்டே ராஜரீகமடங்கலும் நடக் தேறி வருகிறதென்றும், **கல்பு, நப்ஸு** ஆகிய இவ் விரண்டும் அந்த ரூஹினைக்கொண்டே சித்தியாகிற தென்றும் சொன்னார்கள். ஏனெனில், **நூர்** ஆகிய **ஜோதி** என்ற சமுத்திரத்தில் யாதொன்று குறிப் பாக இருக்கிறதோ, அந்த குறிப்பு **ஹக்கு**டைய சமூகத்தைக் குறிக்குஞ் சொல்லாயிருக்கிறது. அத னால் தான் அவர்கள் **ரூஹை** **'அஸ்லு'** என்று சொன்னார்கள். மேலும் அவர்களுள் சிலபேர் **கல்பா**கிறது **அஸ்லு** என்றும், மற்ற யாவும் அதன் நிழலென்றும், **கல்பு** என்ற சூரியன் ஒன்றைக் கொண்டே தோற்றங்கள் யாவும் உண்டாயிருக்கிற தென்றும், இஃதில்லாவிடில் தோற்றங்களெல்லாம் வெளிப்படாது ஏக இருளாயிருக்குமென்றும், எனி னும், இன்மையானதை உண்மையாக்கி வைத்தது **கல்பு** ஆனபடியால், அதனை **வுஜூது ஹகீக்கீ** 'யதார்த்த உள்ளமை' என்றும், ஒரு **தாயிரா**வான வட்டப்பரையை உடைத்து, அதன் நடுமையக் கோட்டின் மீதிருந்து இரு வில்களாக செய்வித்த **அறிவு** என்றும் அந்த **கல்பை**ச் சொன்னார்கள். ஆனால் **ரூஹை** **'முத்லக்'** என்றும், கல்பை ரூஹில் நின்றும் நடு மையமாகப் பிளக்கப்பட்டதென்றும்

சொல்கின்றனர். அச்சொல் உண்மையேயாயினும், இப்பொழுது நான் சொல்வது யாதெனில்:— அந்த **ரூஹும் கல்பாகத்** தானிருக்கிறது என்பதே. ஏனெனில், இவை யாவும் மெய்யாகவிருந்த போதினும், **கல்பு 'பாத்துஷா(ஹ்)'**வாக இருக்கிறது. ஆகையால், விவகார நிமித்தம் பிரித்துக் காட்டப் பட்ட இம்மூன்றையும் நீ வெவ்வேறான மூன்று வஸ்துக்கள் என்று கருதாதிருப்பாயாக. ஆனால், ஆத்ம ஞானியுடைய பார்வையில் இம் மூன்றும் வீணை, கம்பி, சப்தம் ஆகிய மூன்றும் எவ்வாறான சம்பந்தத்தைப் பெற்றிருக்கின்றனவோ, அவ்வாறாகவே இருக்கின்றன.

மேலும் அறிவாயாக:— இந்த அறிவினைக் கொண்டு **அனானிய்யத்து** என்னும் **அகங்காரம்** உண்டாகி இருக்கிறது; இல்லாவிடில், இந்த அகங்கார மில்லாதிருந்திருக்கும். இந்த அறிவில் எதுவரை **கத்ரத்**தாகிய பலவற்றின்பேரில் திரும்பக் கூடிய சுபாவமுண்டா யிருக்கின்றதோ அதுவரை **அனானிய்யத்**தாகிய **அகங்காரம்** இந்த சரீரத்தை வம்பித்து, இழுத்துக்கொண்டே யிருக்கும். ஆனால், இச்சிற்றறிவை விட்டும் எப்போது அது நீங்கிக் கொள்ளுமோ, அப்போது **மஹ்பூபா**கிய நண்பன் தன் அழகிய வதனத்தைக் காட்டாதிருந்தால் புதுமையானதொன்றேயாம். எவன் மீது இந்த புதுமை வெளியிடா யிருக்கின்றதோ அவன் நெருப்பில் வேகான்; ஜலத்தில் தாழான்; மரணம் என்ற வாள் அவனை வெட்ட சக்திபெறாது; மரணம் அவனுக்கு பயந்து நடுங்கி ஓடிவிடும். ஆனால், உன்

அறிவை சம்பூர்ணமாக்கிக் கொள்வாயாக. **அல்லா(ஹ்)**வின் மீது சத்தியமாக அதனை குறைபெறச் செய்யாதே. அந்த அறிவு எப்பொழுது தன்னைத் தான் பார்க்குமோ, அப்பொழுது அது தன்னை ஜெயம் பெற்றவனாகக் காணும். பல்வேறு குறைந்துள்ள அறிவு யாவும் தன்னை தோல்வியுற்றவனாய்ப் பார்க்கும். மரியாதையினிமித்தம் இதனை விரிவுபடுத்திப் பேசவிலை விடுத்தனம். எனினும், மரியாதையின் பொருட்டே நான் மன்னிக்கப்பட்டவனாக இருக்கிறேன். ஏனெனில், மரியாதையானது சகல காரியங்களையும் விட தலைசிறந்ததா யிருப்பதால் அது எனக்கு தேவையாகிறது.

ஹிகாயத்து:— நண்பர் ஒருவரிருந்தார்கள். அவர்கள் தங்கள் நண்பனாகிய **ஹக்குத ஆலா**வை அறிந்தோர்களாயும், மறைவுலகின் இரகசியங்களை உணர்ந்தோர்களின் நாயகராகவும், **ஹக்**கை அறிந்தோருக்கு எஜமானனாயு மிருந்தார்கள். அவர்களுடைய கேசாதிபாதம்வரை **நூர்** ஆகிய ஜோதி நிரம்பியிருந்தது; எவ்வாறெனில், அவர்களுடைய ரூபம் ஒரே ஜோதிமயமாயிருந்தது. அவர்களுக்கு விருந்தளிக்க நாடி, அவர்களை விருந்துக்கழைக்கும் எவராயினுஞ்சரி, **சுப்ரா**வில் விருந்தாளிகள் யாவரும் உட்கார்ந்த பிறகு, முதன் முதலில் அவர்களுடைய கைக்கு தண்ணீர் வார்த்த பிறகுதான் மற்றவர்களுக்கு வார்க்கவேண்டும். இல்லாவிடில், அவர்கள் பசியாராது எழுந்து போய்விடுவார்கள். போகும் பொழுது அவர்கள் "மடையர்களும், பித்தர்களுமான இவர்கள் நான் யாரென்றும், இன்னனென்

றும் எவ்வாறு அறிவார்கள்? ஆனால், சதுர்ப்பூதங்களால் சமைந்த இந்த பூத உடையில் இன்னான் தானிருக்கிறான் என்பதை அறிந்த ஆத்மஞானி மட்டும் மரியாதை செலுத்துகிறார். எந்த ஒன்றை **நூருமுத்லக்** என்ற சம்பூர்ண ஜோதி என்றழைக்கின்றனரோ, அந்த ஒன்றாகிய நானே **நான்** ஆக இருக்கும். பஞ்சகோசங்களால் சமைந்த நான் என்பதெல்லாம் யதார்த்த நானன்று," என்று கூறிவிட்டு எழுந்து போய்விடுவார்கள். மேலும் இதனை நன்கு தெளிவுபடுத்த **இர்பானுஸ்ஸபா**விலிருந்து கீழ்வரும் பாடலை இங்கு எடுத்து எழுதப் படுகிறது:—

"இந்த நான் நானல்ல, இறைவன் நிழலாகும்
அந்த **நான்** என்பதுவே ஆதியாஞ்—சொந்த **நான்**
தூய **ஹகீகத்**தாய், சூட்சாதி சூட்சமாய்,
நாயகமாய் நிற்கின்ற **நான்**."

"நானென்றால் நானல்ல நாட்டிலே சொல்வதுபோல்
நானென்றால் நாயனதுவாமே—நானென்றால்
நானாயிருக்கின்ற நாதாந்த வேதாந்த
நானாயிருக்குமே **நான்**."

★ ஆறுவது அத்தியாயம். ★

[இந்த ஆறும் அத்தியாயத்தில் **தாத்து** ஆகிய தத்சொரூபம், **நுஸூல்** என்னும் பகிர்முகமாய் இறங்கிவந்த அல்லது தோற்றமான விவரத்தையும், அறிவு, பார்வை, பார்வையுடையோர், ஹக்குடன் ஐக்கியமடைதலான **வஸ்லு** ஆகியவற்றின் விவரத்தையும் **பயான்** செய்யப்படுகிறது.]

அருமையானவனே! அறிந்துகொள்வாயாக:—

பால், தயிர், மோர், வெண்ணெய் ஆகிய திரைகள் நான்கிலும் நெய்யானது மறைந்து உள்ளீடாயிருந்து, **ஸைர்** என்னும் யாத்திரையை தனது சகல நிலைகளிலும் நடத்தி வருதலைப்போன்றே **தாத்து** என்ற நெய்யும் கோடானகோடி திரைகளில் மறைந்தவண்ணம் யாத்திரை செய்தும், அவ்வித செயலைவிட்டு நீங்கியுமிருக்கின்றது. நெய் தன்னை வெளிப்படுத்தி தனது **சிர்ரு** ஆகிய இரகசியத்தைப் பிரஸ்தாபிப்பதைக்கொண்டு தன்னில் தானே தனது கண்ணால் சில சௌகரியங்களைக் காண நாடியபோது, அந்த நெய் மிகுந்த அறிவையுடையதாயிருந்தபடியால், தனது யாத்திரையின் முதல் நிலையான பாலை 2-வது நிலையான தயிராக மாற்றி, பின்னர் அந்த தயிரை உடைத்து 3-வது நிலையான மோராகச் செய்து, அந்த மோரைக் கடைந்து அதனின்றும் 4-வது நிலையாகிய மிருதுவான வெண்ணெயைக் கழற்றி எடுத்தது.

அவ்வாறு திரண்ட வெண்ணெய் **நாசூத்து** ஆகிய ஸ்தூலத்துக்கு ஒப்பவும், மோர் **மலகூத்து**

ஆகிய சூக்சுமத்துக்கு ஒப்பவுமிருக்கின்றன. **லா ஹூத்து** என்னும் மகா காரணத்துக்கு உவமானிக்கப்பட்ட பாலும், **ஜபரூத்து** என்னும் காரணத்துக்கு உவமானிக்கப்பட்ட தயிரும் தங்களுடைய இரு **ஜிஸ்மு** என்னும் சூட்சும, ஸ்தூல சரீரங்களில் அந்தர் முகமாய் உறைந்திருக்கின்றன. சூட்சுமம், ஸ்தூலம் ஆகிய இவ்விரண்டும் **பதனீ** யாகிய ஜட சம்பந்தமாகவும், மகா காரணம், காரணம் ஆகிய அவ்விரண்டும் **இல்மீ** யாகிய சித்து (அறிவு) சம்பந்தமாயுமிருக்கின்றன. முந்திய இரண்டும் **நிஷானீ** யான அடையாளமாகவும், பிந்திய இரண்டும் **நாமீ** யான நாமமாகவுமிருக்கின்றன. பிந்திய இரண்டு மின்றி, முந்திய இரண்டும் அகப்படாது. பிந்திய இரண்டையும் முந்திய இரண்டைக் கொண்டுதான் சேரவேண்டும்.

ஆனல், மற்றொரு வகையாகக் கூறுமிடத்து **லாஹூத்து, மலகூத்து, ஜபரூத்து** ஆகிய மூன்றும் சரீரத்தைப்போன்றும், **நாசூத்து**தான் அவற்றிற்கு உயிர்போன்று மிருக்கின்றது. அந்த உயிருக்கு உயிர்தான் ஒப்புக்கொள்ளப்பட்ட **இன்ஸான்** ஆகிய மானிடனாக இருக்கிறான். மேலும், நெய்யானது பாலி லிருந்தபோது நான்கு திரைகளால் மறைந்திருந்தது. இந்த திரைகளின் நடுவிலிருக்கையில் தன்னைக்காண நாடினல் அந்த நெய் எவ்வாறு தன்னைக் காண முடியும்? பாலிலே நான்கு திரைகளும், தயிரில் மூன்றும், மோரில் இரண்டும், வெண்ணையில் ஒன்றுமிருக்கின்றன. எனினும் அந்த வெண்ணையில் நெய் மட்டுமே இருக்கின்றது.

ஆகையால், ஒரு திரையை மட்டுமுடைய வெண்ணெயிலிருக்கும் நெய்யாகிய தன்னைக் காண்பது புதுமையன்று. மற்ற மூன்றைப் பார்க்கிலும் வெண்ணெயே தெளிவடைந்த கண்ணாடியாக யிருக்கிறபடியால், எனது நண்பனே! அறிவாயாக, இந்த வெண்ணெ நான் **அஸ்லு** ஆகிய சுயார்த்த நெய்யாக இருக்கிறது. வெண்ணெயை நெய்யாகச் செய்தல் கடினமன்று. அது உருகி நெய்யாவதற்கு பக்குமாக சூடு காட்டப்படுவதொன்றே அவசியப்படுகின்றது. ஆனால், நெய்தான் மேற்சொல்லிவந்த **மர்த்தபாக்**களான பல்வேறு பதவிகளில் பல்வேறு நாமங்களைத் தரித்ததாயும், யாதொரு அன்னியமின்றியும் வெளிப்பட்டிருப்பதை நீ **ஸைர்** என்னும் 'பரிமார்த்த யாத்திரை' செய்து தெரிந்துகொள்வாயாக. மேலும், வெண்ணெயை **நாசூத்து** ஆகவும், நெய்யை **ஹக்குத ஆலா**வாகவும் உவமானித்துக் கூறப்படுகின்றன. எனவே, ஹக்கு யாவற்றையும் **முஹீத்து** என்னும் சூழ்ந்தறிபவனும், யாவற்றையும் விட்டு **முத்லக்**காகிய அகண்ட பரிபூர்ண ஏகமாயுமிருக்கின்றான். பாலாகக் கூறப்பட்டதை **அஹது** என்றும், தயிராகச் சொல்லப்பட்டதை **அஹதிய்யத்து** என்றும், மோர் என்றழைக்கப்பட்டதை **வஹ்தத்து** என்றும், வெண்ணெ என்று பிரஸ்தாபிக்கப்பட்டதை **வாஹிதிய்யத்து** என்றும் அறிந்துகொள். **அஹதிய்யத்து, வஹ்தத்து, வாஹிதிய்யத்து** என்ற மூன்று (பதவிகளு)ம் புதுமையானவையாயும்; மூன்று உலகங்களையும், மற்றும் யாவையும் தம்முள் அடக்கிக்கொண்டவையாயுமிருக்கின்றன. அவற்றுள் ஒன்று **ஜிஸ்மு**

என்ற சடமாயும், மற்றொன்று **ரூஹு** என்ற ஆத்மா வாயும், மூன்ருவது இவ்விரண்டினுக்கும் **மஃறூபு** ஆகிய நாயகனுயுமிருக்கின்றன. அளவுக்கும்; மட்டு திட்டத்துக்கும், கூடுதற் குறைதற்கும்; எந்த ஒன்று இசைந்ததாயிருக்கின்றதோ அதனை **ஜிஸ்மு** அல்லது சடமென்றும், யாதொன்று இவ்வித தோஷங்களின்றி முக்காலமும் **கமால்** என்ற சம்பூர்ணத்தைப் பெற்றிருக்கின்றதோ அதனை ரூஹு அல்லது 'ஆத்மா' வென்றும் அறிந்துகொள். இந்த **ரூஹு**தான் சதாகாலமும் சம்பூர்ணத்தைப் பெற்றுக் கொண்டிருக்கும். ஆனல் பூர்ணம், குறைவு என்பனவற்றிற்கும் அதீதமாய் எக்காலமும் எது ஒரே நிலையிலிருக்கின்றதோ அதனை **ஹக்கு** அல்லது **மஃறூபு** என்று அழைக்கப்படுகிறது **ஹக்கு**டைய **நூர்** ஆகிய ஜோதிதான் சர்வத்திலுமுண்டாயிருக்கிறது. அந்த **நூரு**டைய **லுஹூர்** என்னும் தோற்றம் அல்லது உதயமே சகல வஸ்துக்களாயும் வெளியீடாயிருக்கின்றன. அதனை உவமானித்து கூறுமிடத்து, பல துவாரங்களிடப்பட்ட ஒரு மட்குடத்தினுள் ஒரு விளக்கேற்றி வைத்தால்; ஒவ்வொரு துவாரத்தின் வழியாயும் அந்த விளக்கின் ஒளிக்கிரணம் வெளிப்பட்டு, தன்னை வெவ்வேருகக் கண்டதில் பல்வேறுபட்ட பெரிது, சிறிது, நேர், கோணல் ஆகிய துவாரங்கள் பலவாயிருப்பினும், சகல துவாரங்களின் வாயிலாயும் காட்சியளித்துக் கொண்டிருப்பது அந்த ஒரே **நூர்** ஆகிய ஜோதிதான். துவாரங்களைப் பொறுத்தவரை அந்த நூர் பலதாகத் தோன்றினுலும், துவாரங்களை நீக்கிப் பார்க்குமிடத்து அகண்ட பரிபூர்ணமாயும், ஒட்பாப்

பொருளையும், யாவற்றையும் விட்டு நீங்கியிருக்கிறது; எனினும், அது துவாரங்கள் யாவற்றிலும் சங்கிலித் தொடர்போன்று ஒழுகுதலைப் பெற்றிருக்கின்றது. ஆகையால், எவனொருவன் **நூர்** என்னும் ஜோதியில் தன்னை எரியச்செய்து, **பனா** நிலையை அடையப்பெறுகின்றானோ, அவன் தன்னை **இன்ஸான் காமில்** என்று கூறிக்கொள்வான். மட்குடத்திலிடப்பட்ட துவாரங்களின் வழியாய் வெளிப்பட்ட **நூர்** என்னும் ஜோதியை பின்வரும் **ரம்ஸு** (சைக்கினை) என்னும் கணக்குப்புள்ளியின் வாயிலாய் சுட்டிக் காட்டப் படுகிறது. [51ப27] இதுவே **நூருடைய ரம்ஸு.** ஜோதியைக் கொழிக்கும் மட் பாண்டத்தினுள் வைக்கப்பட்ட விளக்குதான் **நூருக்கு நூர்** ஆகிய **நூருமுத்லக்கு** என்னும் **சம்பூர்ண** ஜோதியாகும். அதனைக் கீழ்வரும் **ரம்ஸு** என்னும் கணக்குப் புள்ளியால் விளங்கிக் கொள்ளலாம். [த219ப] இதுதான் விளக்குடைய **ரம்ஸு.** இந்த **நூருமுத்லக்கு** புதிதுமன்று, பழையதுமன்று; கூடுவதுமில்லை, குறைவதுமில்லை; சதாவும் ஓரே நிதானமாயிருக்கும். அதனைத்தான் **மஹ்பூபு** அல்லது **ஹக்கு** என்று அழைக்கப்படும்.

அறிவாயாக:— **ஸப்உஸிபாத்து** எனப்படும் ஏழு **சிபத்து**கள் என்று எதனை அழைக்கப்படுகின்றதோ அதனை **சிபத்து தாத்தீ** என்று கூறுகிறோம். **ஹயாத்து, இல்மு, இராதத்து, குத்ரத்து, சம்உ, பஸரு, கலாம்** என்ற ஜீவியம், அறிவு, நாட்டம், தத்துவம், கேள்வி, பார்வை, பேச்சு ஆகிய ஏழினைத் தவிர மற்ற யாவும் **சிபத்து**

சிபாத்தீயாகும். (**சிபத்து தாத்தீ**—**தாத்து**டைய வர்ணனே; **சிபத்து சிபாத்தீ**—**சிபாத்து**டைய வர்ணனே) **சிபத்து தாத்தீ** பூர்வீக **சிபத்**தாயும், **சிபத்து சிபாத்தீ** பூர்வீக **சிபத்**தின் **சிபத்**தாயுமிருக்கின்றன. பசுமை வஸ்துவிலும், காய்ந்த வஸ்திலும் இந்த ஏழு **சிபத்து**களின் சாய்கை உண்டாயிருக்கின்றது. மேலும், ஏழிலும் **இல்மு** (அறிவு) இரேகித்திருக்கின்றது. இங்கு கூறப்பட்ட ஏழிலும் **இல்மு** ஆனது உன்னதத்தைப் பெற்றிருக்கின்றது. சகலவற்றின் பண்புகளிலும் இந்த **இல்மு** ஆகிய அறிவு எள்ளில் எண்ணெயைப் போன்று நிரம்பி, நடுநிலையைப் பெற்றிருக்கின்றது. ஆகவே, யாதொரு செவியில் இந்த **இல்மு** (அறிவு) நுழைந்து பிரகாசிக்கவில்லையோ, அந்த செவி செவியன்று; இரத்தினம் விளையாத வெறும் சுரங்கத்தைப்போன்றதாம்; முத்து இன்றிய சிப்பியைப் போன்றும். இன்னும், இந்த **இல்மு** என்ற தராசில் நிறுக்கப்படாதவரை யாதொன்றையும் இன்ன வஸ்துவென்று சுட்டிக் காட்ட முடியாது. ஆகையால், இந்த **இல்மு** என்ற அறிவு வீணையின் நாதத்தைப்போலும், **நகாரா**வாகிய முரசு சப்தத்தைப்போன்றும் மேன்மை பெற்றதாயும், மற்ற **சிபாத்து** ஆகிய வர்ணனைகளெல்லாம் புல்லாங் குழலின் கீதத்தைப்போல் தாழ்ந்ததாயு மிருக்கின்றன. இன்னும் எந்த கண்ணில் இந்த **இல்மு** தென்படவில்லையோ அந்தக் கண் மயக்கவெறி யளிக்காத மதுவைப்போலும், பூவரசன் பூவில்லாத தோட்டத்தைப் போலுமிருக்கும். மேலும், கண்ணுக்கெதிரே யாதொன்றை வைத்தாலும் இந்த **இல்மு** இல்லாது அதனே

இன்னதென்று விவரித்துக் கூறமுடியாது. இந்த **இல்மு**டைய பொரிசைக்கொண்டுதான் சிவப்பு, கருப்பு, மஞ்சள், பச்சை, வெள்ளை என்ற பல்வேறு நிறங்களெல்லாம் அறியப்படுகிறது. ஆகையால்; சகல வஸ்துக்களிலும் அறிவு இருக்கிறதென்றும், கண்ணானது எல்லா வஸ்துக்களையும்விட உன்னதமானதென்றும் அறிந்துகொள். இந்த **இல்மு** என்ற அறிவு **நூருமுத்லக்கி**லும், **நூருமுத்லக்**கானது **இல்மி**லும் நிறம்பி பூர்ணமாயிருக்கிறது. **லாம்** என்னும் **அரபி** அட்சரத்தில் **அலிபு** சேர்ந்திருப்பதைப் போலும், பாலில் நெய்யிருக்கிறது போன்றும், ஈரமண்ணில் தண்ணீர் இருப்பதைப் போலவும் தோன்றினும், அவற்றைப் பிரித்து இரண்டெனக்கொள்வதை முற்றும் விலக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால், நெருப்பினுள் காற்றானது நிறம்பி யிருப்பதைப்போன்று **இல்மு** என்ற அறிவு **நூருமுத்லக்கில்** சேர்ந்திருக்கிறது. ஆனல், நெருப்பை விட்டு காற்றையும், **நூர்** என்ற ஜோதியை விட்டு **இல்மு** என்னும் அறிவையும் பிரித்தெடுக்க வல்லவன் எவனோ அவனே வலுப்பந் தங்கியவன் என்று கூற நான் சற்றும் பின் வாங்கேன்.

ஆரிபு ஆகிய ஞானியே! உனக்கு நான் இவ்விஷயத்தில் இப்போது அதிகமாக கூறத் தேவையில்லை. விளக்கின் சுடரை நீ பார்ப்பாயாக. காற்றுப்படாது எவ்வகையில் அந்த விளக்கை நீ மறைத்துவைத்தபோதிலும் அந்த விளக்கு தன்னில் தானே காற்றைக்கொண்டு நிறம்பியிருப்பதால்

அந்த விளக்குத்திரியினின்று எரியும் ஜுவாலையின் அசைதல் கிஞ்சிற்றும் ஓயாது. இவ்வாறே, இந்த அறிவு பார்வையிலிருக்கிறவரை (அதாவது பார்க்கப் படுகின்றவரை) பார்வை நிலை பெற்றதாயிராது. ஆகையால், இந்த அறிவு பார்வையை விட்டும் எப்பொழுது நீங்குமோ, அல்லது, தானே அதில் உருகிக் கறைந்துவிடுமோ அப்பொழுது பரிசுத்தமான அகண்டமாகிய **நூர்** எனும் சம்பூர்ண ஜோதியாகிவிடும். **தீர்க்க நிலை**யாகிய இந்த **நூர்** என்ற ஜோதியைத்தான் **முஹக்கிகீன்** என்னும் **பிர்ம ஞானிகள் 'தாத்து முத்லக்கு'** என்ற **அகண்ட பரிபூர்ண தத்சொரூபம்** என்றழைக்கின்றனர். இன்ஸானுக்கு இதற்கு மேலிட்ட யாதொரு தீர்க்கமான பதவியுங்கிடையாது. ஆனால், இந்த பதவியில் அறிவும், அறிவுடையானும் தன்னில்தான் சொக்கிக் கறைந்திருப்பர். அந்தர்முகத்திலும், பகிர்முகத்திலும் இந்த தெளிந்த, தீர்க்கமாகிய நிலையைத் தவிரவுள்ள மற்ற யாவும் **முகையிது** என்ற மட்டிடப்பட்ட குறிப்புகளேயாம். ஆகையால், இந்த **பார்வை**யிலிருப்பதுதான். தீர்மானப் பதவியாயிருக்கிறது. இதனைத்தான் மகான்கள் **பாதின்** ஆகிய **அந்தரங்கம்** என்று சொல்கின்றனர். இதற்குமேல் யாதொரு பதவியுமில்லை. எவன் இந்த **மர்த்தபா**வை அடையப் பெற்றானோ அவன் **கன்ஸு மக்பீ**யான **மறைந்த புதையலை**ப் பெற்றுக் கொண்டோனாகும். இந்த **மர்த்தபா**வை நீ ஒரு ஞானசொரூபரின் வாயிலாய் அறிந்துவிட்டாயாகில், நிட்சயமாக, நீ **உன்னை**யும், **ஹக்குதஆலா**வையும் **இல்முல்யகீன்** என்ற நிட்சய ஞானத்தால் அறிந்து

கொண்டவனுகும். **ஐனுல்யகீன்** என்னும் நிர்ண யப் பார்வையைப்பெற்று **ஹக்குல்யகீன்** என்ற நிட்சய அனுபவத்தை யடைந்து, தான் அடைந் ததை மற்றவர்களுக்கு விளக்கிவைக்க ஆசித்தால் **மஹ்பூபு**டைய வடிவிலே நீ ஒரு **முர்ஷிதை** அடை யப் பெற்று, அன்னரின் மூலம் அத்தகைய பார்வை யையும், அனுபவத்தையும் அடைதற்கு நீ தெண்டிப் பாயாக. **மன்கஸத ஷைய்அன் ஜத்த வஜத** "எவ னொருவன் (ஒரு வஸ்தை நாடி) தெண்டித்தானே அவன் தன் **மக்ஸூது** ஆகிய நாட்டப்பொருளை அல்லது இலட்சியத்தை அடையப்பெறுவான்," என்று நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார்கள். அதன்படி, எவனொரு வன் முன்வைத்த காலை பின்வாங்காது, எந்தெந்த காரியத்தில் பிரயாசை யெடுத்துத் தெண்டித்தானே அவன் அந்த காரியத்தை சந்தேகமின்றி பெற்றுக் கொள்வான். எனவே ஞானதேசிகரின் உத்தாரங் கொண்டு இரவும், பகலும் மனங்குளிர்ந்த ஆசை யோடு **கல்பு** என்ற மனத்தின் கண்ணுல் **முஷாஹி ததுர் ரூஹு** ஆகிய **ஆன்ம தெரிசனம்** பெறுவா யாக. எவ்வாறெனில் உண்ணும்போதும், உடுத்தும் போதும், நடக்கிறபோதும், இருக்கிறபோதும், குடிக்கிறபோதும், கொடுக்கிறபோதும், துணி தைக் கிற போதும், மற்றும் எத்தகைய **ஹால்** ஆகிய நிலை யிலும் அந்த **ரூஹு** ஆகிய **ஆத்துமா**வை நீ பார்த்துவா. அவ்வாறு பார்த்துப் பழகிவருகிற வேளை, **நாளிறு** என்னும் நோட்டமிடுபவனுடைய **நள்று** என்ற நோட்டம் திடப்பட்டுவிடுமாயின் **மன்ளூர்** ஆகிய நோட்டப்பொருளை **நள்று** என்

னும் நோட்டத்தை விட்டும் களைந்தெறிந்து விட்டு, அதன் பின்னர், **நாளிறு** என்னும் நோட்டமிடு பவன் அல்லது பார்ப்போனையே நீ பார்த்துவா. அந்த **நாளிறு**தான் **மஹ்பூபு** என்ற பிரியப் பொருளாகும். இதில் பழகிய சில நாட்களுக்குப் பின்னர் இந்த **நாளிறை**யும் பிடுங்கி எறிந்துவிட்டு **மக்ஸூது** ஆகிய நாட்டப்பொருளை **திருஷ்டி** மயமான பார்வையில் சம்பூர்ணமாகச் செய்துவிடு. இந்த **திருஷ்டி** யாகிய பார்வையானது எல்லையற்ற சமுத்திரமாயிருக்கிறது; இந்த சமுத்திரமானது பல்வகை இரத்தினநிதிகளால் நிறம்பியிருக்கிறது. **முஹக்கிகீன்** ஆகிய **பிர்மஞானிகள்** இப் பார்வையை ஆபத்துகளேதும் அணுக வியலாத பாதையையுடைய பார்வையென்றும், **ஆலமுல் லதாபதி** என்ற **அதிசூட்சும உலகு** என்றும், **ஹக்குல்யகீன்** என்னும் **பிரத்தியட்ச அனுபவ அநுபூதி நிலை**யென்றும், **கமாலுல் யகீன்** என்கிற 'பிரத்தியட்ச திட அனுபவ அநுபூதி நிலை' யென்றும் பல்வேருக கூறியிருக்கிறார்கள். இப்பொழுது நாம் கூறிவந்த யாவும் **சிர்ரு** ஆகிய மர்மமான விஷயங்களாகும். இவை சாதாரண, வெளியரங்க, வேதாகம சாஸ்திரக் கல்வியன்று. சைக்கினையால் விளக்கப்படவேண்டிய **ரம்ஸு** என்னும் கணக்குப் புள்ளியைக் கொண்டு தான் இதனை அறிவிக்கப்படவேண்டும். ஆனல் இத்தகைய மேன்மை பொருந்திய மனோநிம்மதியை அளிக்கவல்ல உன்னத சிகரத்தின் மீது ஏறிச் செல்வது மாபெரும் ஆச்சரியமன்ரோ? நீ ஏறிச் செல்லவேண்டுமாயின், பூராயமிக்க இந்த உபதேசத்தை நீ நிர்ணய அறிவால் நன்கு விளங்கி

யறிந்து, **தஸ்தகீர்** ஆகிய குருபரனை அடுத்து, அன்னாரிடமிருந்து அறிந்துகொள். பக்குவமடைந்த ஆணிமுத்து போறகொற்ற (ஆத்மஞானத்)தை அந்த குருபரனுடைய இல்லத்தில் உன்னை அர்ப்பணித்துவிட்டுப் பெற்றுக் கொள்வாயாக. ஒரு **முரீது** ஆகிய சிஷ்யனுக்கு அன்னுனின் **பீர்** ஆகிய ஞானோபதேசிகர் சர்க்கரை, கற்கண்டு ஆகியவற்றினும் மேலான இன்பத்தையுடையவர்.

"**அல்லா(ஹ்)** வாகிறவன் ரோஜா மலரைப் போலும், **நபி** (ஸல்) அவர்கள் சர்க்கரையைப் போலும், **குருபிரான்** பூவும், சர்க்கரையுங் கலந்த இன்பமும், மணமுமுடைய **குல்கந்து**வைப் போன்றுமிருக்குமென்று நீ அறிவாயாக," என்று ஒரு பாரசீகக் கவிஞர் பாடியிருக்கிறார்.

"எவனொருவன் குருபிரானையும், **அல்லா(ஹ்)**வின் **தாத்து** ஆகிய சுயார்த்த ரூபத்தையும் ஏகமாகக் காணவில்லையோ அவன் **முரீது** ஆகிய உண்மை சிஷ்யனுகான்! உண்மை சிஷ்யனுகான்!! உண்மை சிஷ்யனுகான்!!!" என்று மௌலானு ஜலாலுத்தீன் ரூமி(றஹ்) அவர்கள் தங்கள் **மத்னவீ ஷரீபு** என்ற கிரந்தத்தில் கூறியிருப்பதற்கொப்ப **அல்லா(ஹ்)**வும்; **ரசூலும் பீர்** ஆக இருக்குமென்று நிர்ணயங்கொண்டு, எந்த ஒரு **முரீது** பீரிடத்தில் முகம் பூரித்திருக்கிருரோ அவரை நான் ஒரு **பீர்** எனக் கருதுவேனேயன்றி, ஒரு முரீதாகவன்று.

அறிந்து கொள்வாயாக:— எவனொருவன் **இஷ்கு** என்னும் காதலாகிய மதுவைக் குடித்து

மதிமயக்கங்கொண்டு போதையாகி, **நோட்டம்** என்ற வாயலில் இருக்கிறானோ, அவனது **கல்பில்** தான் **அல்லாஹுத்தஆலா**வுடைய இன்பம் உண்டாகி யிருக்கும். அத்தகைய இலட்சணம் பொருந்திய **பீரு**டைய கையினால் அவிழ்தமாகிய குளிகையைக் கையேற்று நீ தின்பாயாகில் அது உனக்கு பேரின்ப மயக்கத்தைக் கொடுத்துவிடும். அவ்வித மயக்கம் **மஹ்பூப்** ஆகிய நாயகனைத் தவிரவுள்ள யாவற்றையும் வெட்டி வீசிவிடக்கூடிய வாளாகவும், **இல்மு** என்ற அறிவைக் கறைத்துவிட்டு பிராணனைப் போன்ற **ரூஹை** மிகவும் தெளிவாக்கி வைக்கத் தக்க வஸ்துவாகவும்; **முஹப்பத்து** ஆகிய ஆசையை அதிகரிக்கவல்ல வசிய மையாகவும், **கதராத்** ஆகிய **ஊசாட்டங்கள்** யாவற்றையும் தனக்குக் கிடைத்த உணவுப் பொருளைப்போன்று சாப்பிட்டு விடக்கூடிய சிங்கமாகவுமிருக்கிறது. மேலும் அறிவாயாக:— பூமியில் சாய்கைபடாத உன்னத சிகர உச்சி அளவுக்கு எவனது பார்வை உயர்வைப் பெற்றிருந்ததோ அத்தகைய பார்வை அந்த சிகர உச்சியில்தானே தரிபட்டிருக்கும்; அந்த **ஹால்** ஆகிய நிலையில் அவனில் நிகழும் பேச்சுகள் யாவும் இடைப்பிறழ்ந்தவையல்ல வென்றும், **ஹக்கு** இடமிருந்து இறங்கிய மேலிடத்து சொற்களென்றும், **கலாமுல் கலாம்** ஆகிய பேச்சுகளின் மூலமான இன்பம் பொருந்திய பேச்சு என்றும் அறிந்து கொள். ஆகையால், **ஆரிபு**டைய சொல் மெய்யான தொன்றேயாகும். **ஜாஹில்** என்ற அறிவீனனுக்கு **ஆரிபீன்** ஆகிய அறிஞர்களிடத்தில் வேலையில்லை. **ஆஷிக்** என்ற தெய்வீகக்காதலன் தன் **மஉஷூக்**

கான **கர்தலி** முன்பு கைகூப்பியவண்ணம் ஒரே நிலையாக நிற்கிறான். **கைர்** ஆகிய **வேற்றுமை** என்னும் வியாதி பிடித்தவன் பூமிமீது விழுந்து கிடக்கிறான். படுத்திருப்போன், நிற்போன் ஆகிய இருவருக்கும், **இர்பான்** என்ற மெய்ஞ்ஞானமாகிய வானத்தின்பேரில் ஏறினவனுக்கு மிடையில் பாரதூரமான வித்தியாசமிருக்கின்றது. எனவே, நீ பலரிடத்திலும் உபதேசம்பெற விரும்பாதே. இந்த பாதையின் இலட்சணத்தை மட்டும் சிலர் ஏட்டு ஞானமாகப் பெற்றிருக்கின்றனரேயன்றி, தீர்க்கமான அனுபவ ஞானத்தைப் பெற்றவர்களன்று. பூர்வகால **முஹக்கிகீன்** ஆகிய மகான்கள் 'சுல்தான் இஸ்கந்தர் துல்கர்னைனு'டைய சட்டவரம்புக் கொப்ப **ஹக்**கை அறிந்து, **ஹக்கிலே வாஸில்** என்ற ஐக்கிய முக்தி பெற்று, **ஹாகிம்** ஆகிய அதிகாரியாக ஆகி **முக்தாருல்குல்லு** எனும் சுய ஆட்சியைப் பெறவேண்டி, சில **தரீக்கு** அல்லது **மார்க்க பாட்டை** என்னும் சட்ட வரம்பை உண்டுபண்ணியிருக்கிறார்கள். எவனொருவன் அந்த சட்ட வரம்பைக் கடவாது, அதன்படி நடந்தால் அப்போது அந்த நன்மை யாவும் அத்தகைய சிறப்புற்றோனுக்கேயாம். அவன் கெட்ட பாதையில் நடவான். அவ்வாறான கெடுதலான பாதையாகிறது பகுத்தறிவின்றிய சீர்கெட்டவனுக்கா யிருக்கும்.

அறிவாயாக:— யாரேனும் **மஜாஸீ**யாகிய தன் சொரூபம் அல்லது தன் குருவினது சொரூபம் இன்றி **ஹகீகீ**யாகிய பரிபூர்ணப் பொருளான **மஹ்பூபு**டைய ஐக்கியத்தை அடையப்பெற்றேனென்று

சொல்வானுயின் அந்த சொல் சரியாகாது. ஆனால் அவ்வாறு ஆனபோதிலும் அது ஓர் புதுமையல்ல. எனினும், அக்காரியம் **மஜாஸீ**யான **சூட்சும ரூப தெரிசனை** யன்றி இடம்பாடாகாது. ஏனெனில் சுயார்த்தத்தில் **ஹகீகீ**யாகிய அந்த உள்ளமைப் பொருளான **மஹ்பூபு**தான் **மஜாஸீ** என்ற **லிபாஸு** ஆகிய உடையைத் தரித்துக்கொண்டு வெளியீடாயிருக்கிறது; இன்னும் சுயார்த்த உள்ளமையே வெளிப்பட்டு, தன்னை **மவுஜூது** ஆகிய சிருஷ்டிப்பொருளாகக் காட்டிக்கொண்டிருக்கிறது. **பரிபூர்ணமான அகண்டப் பொருள்**தான் வெளியாகி தன்னைக் **கண்டப்பொருளாக்** காட்டிக் கொண்டிருக்கிறது. ஆனால் கண்டிதப்பொருளான **(மஜாஸீ), வுஜூது** ஆகிய உள்ளமைக்குப் புறம்பான அன்னியப்பொருளாக இருக்குமானால் **கமாலிய்யத்து** என்னும் **பூர்ணத்துவம்** எவ்வாறு ஏற்படும்? ஆகையால் **ஐக்கியமே** யாவற்றினும் தலை சிறந்தது. சகல வாயினுள்ளும் நுழையவல்ல ஆகாரக் களவமன்று அந்த **வஸ்லு** ஆகிய **ஐக்கியம்.** எத்தகைய காரணங்காட்டி இதனை விவரித்தெழுதினபோதினும் **ஐக்கிய முக்தி** பெற்றவனுடைய நிலை சகலவற்றையும் விட்டு அதீதமாயிருக்கிறது. மர்மமாகிய இதனை நான் விவரித்துக் கூறுவதால் வௌவால் கண்ணுக்கு சூரியன் தெரியாததுபோல், அறிவிலிகளுக்கு எங்ஙனம் **ஹக்கு**டைய தெரிசனங் கிடைக்கும்? வௌவால் குணம் படைத்த இவர்களும், வௌவால் எங்ஙனம் சூரியன் தனக்கு தெரியவில்லையென்று கூறுமோ அங்ஙனமே, தங்களுக்குத்தானே தீங்கிழைத்துக்கொண்ட வண்

ணம் தங்களுக்கு ஹக்குடைய தெரிசனைக் கிடைக்க வில்லை என்று சொன்னால் அந்த வௌவாலையும், அந்த வௌவால் குணம் படைத்தோரையும் அவர்கள் போக்கில் விட்டு விட்டு, நீ யாவற்றுடனும் ஒற்றுமையா யிருந்துகொள். வௌவாலையும் தொந்திரவிலாக்கி, நீயும் தொந்திரவடையாதே. அந்த வௌவால் எத்திசை செல்லினும் நீயும் அத் திசையில் போ; வெளியில் போனால் வெளியிலும், வீட்டினுள் போனால் வீட்டினுள்ளும் நீ அதனைத் தொடர்ந்துசெல்; ஏனெனில், கண்டு தெரிசித்தவனுக்கும், காணுத கட் குருடனுக்கும் என்ன பேச்சிருக்கிறது? இனிமையான சர்க்கரையைக் கசப்பான விஷத்துடன் கலந்துவிடாதே.

இந்த **ரூஹு** ஆகிய **சித்துப்பொருளும், ஜிஸ்மு** ஆகிய **சடப்பொருளும் இலாஹிய்யா** வாகிய தெய்வீக விநோதமாயிருக்கின்றன. இக்காரியத்தை யாவரும் விளங்கியறிய சக்தி பெறமாட்டார்கள். எவனுக்கு இது விளங்கிற்ரே அவன் மட்டும் **காமில்** என்னும் பூர்ண புருஷனுயிருப்பான். சரீரத்தில் **கல்பு** ஆகிய உள்ளம் மறைந்திருப்பது போன்று, தன்னை சகலருக்கும் மறைத்துக் கொண்டு, பூந்தோட்டத்தைப்போல செழிப்புடையோனுய், கவலை கிஞ்சிற்றுமின்றி சதாவும் ஆனந்தமாக இருப்பான்.

ஹிகாயத்து:— ஒரு மனிதன் வெகு நாட்களாக தோட்டம் பார்க்கவேண்டுமென்ற ஆசையினுல் பூங்காவனத்தை விட்டுப்பிரிந்த பிரிவாற்

ரூமையை சகிக்காத **புல்புல்** பறவையைப்போன்று வாட்டமுற்றிருந்ததால், ஒரு சிறந்த மனிதர் அவனை ஒரு தோட்டத்துக்கு அழைத்துச்சென்று, **இது தான் தோட்டம்,** பார்க்கவேண்டியவற்றை எல்லாம் நீ நன்கு சுற்றிப் பார்த்துக்கொள்,'' என்று சொன்னார். தோட்டம் பார்க்கவந்தவன் நிர்மூடனாக யிருந்ததால் **தோட்டம்** யாதென்று விளங்காது, "குளம், கிணர், தண்ணீர், வாய்க்கால், தென்னை, பின்னை, மாதுளை, வாழை, இலந்தை, முந்திரி, மல்லிகை, முல்லை ஆகியவைகள்தானே தென்படு கின்றன; **தோட்டம்** என்பது யாது? எங்கிருக் கிறது? அதனை எனக்குக் காட்டிவைக்கவேண்டும்,'' என்று அவன் கேட்டபோது, மற்றவர் திகைத்துப் போய், 'உனக்கும், இதற்கும் சம்பந்தமில்லை; வெளியே போ,' என்று அவனைக் கோபித்து, தன்னை விட்டும் விரட்டிவிட்டார்.

★ ஏழாவது அத்தியாயம். ★

[இந்த ஏழாம் அத்தியாயத்தில் ரூஹு முத்லக் என்ற ஏக பரிபூர்ண ஆத்மாவையும், ஹக்கு தஆலாவின் அஸ்ரார் எனப் படும் இரகசியங்களையும் பற்றி விவரித்துப் பேசப்படுகிறது.]

அருமையானவனே! அறிந்துகொள்வாயாக:—

வஸ்அலூனக அனிர்ரூஹி குலிர்ரூஹு மின்அம்ரி ரப்பீ வமாஊதீதும் மினல் இல்மி இல்லா கலீலா "(முஹம்மதே! உம்மைக் கேட்டவர்களிடம்) ரூஹு ஆகிறது எனது நாயனுடைய அம்ரு என்னும் கட்டளையில் நின்றுமாயிருக்கும்; மேலும், ரூஹை அறியும் அறிவை உங்களில் வெகு சிலருக்கேயன்றி அளிக்கப்படவில்லை என்று நீர் சொல்வீராக," என்று திருமறையில் இறைவன் அருளியிருக்கின்றான். **மன் அரப ரூஹஹு பகத் அரப நப்ஸஹு வமன் அரப நப்ஸஹு பகத் அரப ரப்பஹு வமன்அரப ரப்பஹு பகத் ஜஹில நப்ஸஹு** "எவனொருவன் தன் ரூஹை அறிந்தானோ அவன் நிட்சயமாக தன்னை அறிந்தான்; தன்னை எவன் அறிந்தானோ அவன் திட்டமாக தன் நாயனை அறிந்தான்; தன் நாயனை அறிந்தால் (தனியே தனக்கோர் உள்ளமை உண்டு அல்லது) தான் உண்டு என்ற சுட்டு அறிவை இழந்தவனாகும்," என்று நமது நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். ஆகையால் **தலீல்** ஆகிய சுருதிப் பிரமாணத்தின்படி, **ரூஹு** ஆகிறது **ஆலமுல் அம்ரைச்** சேர்ந்ததென்றும், **ரூஹை** அறியும் அறிவை உங்களுள் வெகு சிலருக்கே அளிக்கப்

பட்டிருக்கிறதென்றும் வெளியாகி யிருப்பதால், அந்த **ரூஹை** **ஆரிபீன்களான** **ஆத்ம ஞானிகள்** தான் அறிவர். மேலும், **ரூஹினை** **அம்ரு** என்று சொன்னதன் கருத்தை இமாம் கஸ்ஸாலி (றஹ்) அவர்கள் சொல்படி கீழ்வருமாறு காண்க. அதாவது:— 'எதுவொன்று அளவுக்கும், மட்டுதிட்டத்துக்கும் உட்பட்டதாயிருக்கிறதோ அதனை **கல்கு** என்றும், **ஆலமுல் கல்கைச்** சேர்ந்ததென்றும், அளவுக்கும், மட்டுதிட்டத்துக்கும் உட்படாததை **அம்ரு** என்றும், **ஆலமுல் அம்ரைச்** சேர்ந்ததென்றும் அழைக்கப்படும்.'

நிற்க, நாயக வாக்கியத்தின்படி **ரூஹை** அறிவதே **ஹக்கை** அறிவதாகுமென்று நாம் தெரிந்துகொண்டோம். இந்த **ரூஹுல்முத்லக்கான** அகண்டேகரச பரிபூர்ண ஆத்மா **பஹ்ராம்** என்ற சக்ராதிபதியைப் போன்றும், அகில பிரபஞ்சமும் அந்த சக்கரவர்த்தியின் வாகனமாகிய குதிரையைப் போன்று மிருப்பதால் இந்த பிரபஞ்சத்துக்கு **ரூஹுல்முத்லக்கினு**லேயே சகல அலங்காரங்களும், சோடனைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. இன்னும் சரீரம் என்ற இராஜதானிக்கு **ரூஹு** அரசனாகவும், **நள்ரு** என்னும் **பார்வை** அந்த இராஜதானியில் வீற்றிருந்து அரசு புரிதற்குரிய சிம்மாசனமாகவுமிருக்கிறது. மேலும், **ரூஹானது** **நள்ரு** என்னும் பார்வை ஆகிய **ஜன்னலில்** சதாவுமிருந்துகொண்டு, ஒருபுறம் **ஸ்தூலம்** என்ற தோட்டத்தையும், மற்றொருபுறம் **சூட்சுமம்** என்ற பூங்காவனத்தையும் பார்த்தவண்ணமிருக்கிறது. தீர்க்க

மான நள்ரு என்ற தெரிசனையைப் பெற்ற மகான்கள், 'ஒப்புவமை, ரூபாரூபம் யாதேனுமின்றிய சர்வ சம்பூர்ணமான முத்லக்கானது கண்டிதப் பொருட்களான முகையிதாத்துகளை அனுபவித்த தற்பொருட்டு இந்த நள்ரு என்னும் தெரிசனையாகிய பாதையின் வாயிலாய் வெளியிடா யிருக்கிறது,' என்று கூறுகின்றனர். ஆனல் சுயார்த்தத்தில் இந்த திருஷ்டியானது தஷ்பீஹு எனும் கண்டிதம், ஒப்புவமை ஆகியவற்றை விட்டும் நீங்கி பரிசுத்தமாயிருக்கிறபோது மீண்டும் அதனை தஷ்பீஹு செய்யவேண்டிய அவசியம் யாதிருக்கிறது என்று சொன்னர்கள். வதாமுத்லகு லாமுத்லகுன் வலா முகய்யதுன் வகான பிஹாதைனின் னகீளனிஷாமிலா—முத்லக்காகிய அகண்ட பரிபூர்ணம் முத்லக்கான அகண்டமும்; முகையிதான கண்டமுமன்று; (முத்லக், முகையிது என்ற) இவ்விரண்டையும் பொதிந்து கொள்கின்ற அகண்ட பரிபூர்ணமாகிய முத்லக்காகும் என்று ஷெய்குல் அக்பர் முஹ்யியத்தீனிப்னு அரபீ (றலி) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஆகவே, நோக்கு என்ற இந்த பார்வை மயமாகிய திருஷ்டியை ரூஹுமுத்லக்கு (அகண்ட பரிபூர்ண ஆத்மா) என்றும், வுஜூது முத்லக்கு (அகண்ட பரிபூர்ண உள்ளமை) என்றும் அழைக்கப் படுகின்றது. அறிவாயாக:— யாரொருவர் தனது கேசாதி பாதம்வரை திருஷ்டியாகிய பார்வை மயமாக ஆகியிருப்பாரோ அவருடைய சரீரம் என்ற கப்பல் பழுதடைந்து, அழிந்துபோகாது. சேர்ம்

பேறிகள் தங்களிருப்பிடத்தை விட்டு வெளிவரா திருப்பதுபோல் **ஆரிபு** ஆகிய **'மெய்ஞ்ஞானி' ரூஹு** முத்லக்காகிய வீட்டில் சதா குடியிருந்து கொண்டிருப்பான். கண்ணுடைய அந்தரங்கத்தை நீ அறிந்தவனாயிருக்கும் பக்ஷத்தில் அந்த கண்ணின் கருப்பு விழி முதல் வெள்ளை விழி ஈறாகப் பார்வையிடு; அத்தகைய **பார்வை** புலவர்களைப் போல் வர்ணித்துக் கொண்டிருக்கின்றது. ஆகையால் சரீரமும் அடிமையாயும், இந்த **பார்வை** மட்டும் எஜமானனாயு மிருக்கிறது. மேலும் இந்த **நஸ்ரு** என்ற இராஜதானியில் யாதொன்று சம்பூர்ணமாயிருக்கிறதோ அதனை பதினான்கு லோகத்தில் தேடித் திரிந்தபோதிலும் நீ அடையப்பெறமாட்டாய்.

நெருப்பினில் காற்றும், காற்றில் நெருப்பும் இருப்பதைப்போன்று **கண்பாவையில் பார்வை**யும், **பார்வையில் கண்பாவை**யும் அமைந்திருக்கிறது. மேலும் இருள் மயமான ஓர் ஸ்தலத்தை அல்லாஹுத்தஆலா இதற்கு நன்கொடையாக அளித்திருக்கிறான். **மாஉல் ஹயாத்து** என்னும் ஜீவதீர்த்தத்துக்கு **ளுல்மாத்** என்ற இருள் மயமான பூமியைக் கொடுக்கப்பட்டிருப்பது போன்றும். மேலும் **கண்பாவை**யானது **கல்பி**ல் கருப்பு **நுக்தா** வென்னும் **புள்ளி** உண்டாயிருத்தற் போன்றும், மறைவுலகில் **மும்தனிஉல் வுஜூது** (கற்பனா உள்ளமை) என்ற இருள் சூழ்ந்த மாளிகை இருப்பதைப்போன்றும் தன்னில் கரிய நிறத்தைப் பெற்றது. கண், காது, மூக்கு முதலான கர்மேந் திரியங்கள் ஐந்தும், மற்றும் இதர கருவிகரணங்

களும் அந்த **ரூஹுமுத்லக்குக்கு** தோழிப் பெண்களாக இருக்கின்றன. சுலைமான் (அலை) அவர்களைப் போலிருந்துகொண்டு தோழிமார்களோடு சுபசோபனமாக **ரூஹுமுத்லக்கு** நிர்வாகம் செலுத்திக் கொண்டிருக்கிறது. வீடுகள் தோறும் விளக்குகளிருந்துகொண்டு அழகுபடுத்தற்போன்று **ரூஹுமுத்லக்கும்** செய்துவருகின்றது.

ஆகையால் சரீரம் என்ற வீட்டில் எரிந்துகொண்டிருக்கும் **நள்ரு** என்னும் விளக்கை எடுத்து, மாளிகையின் மேன்மாடிமீது வைத்து பிரகாசிக்கச் செய்வாயாக. அந்த உன்னதமான தலமோ மெழுகுத் திரியும், நெருப்பும் தேவைப்படாததொன்றும். மேலும் அதனின் வேருக அதற்கொரு நண்பனும் அவ்விடத்திலில்லை. மாளிகையின் மேன்மாடி உச்சியில்தான் அதன் ஸ்தானமுண்டாயிருக்கிறது. ஆகையால், எத்திசையில் நின்றும் **கத்ராத்** ஆகிய மனோ ஊசாட்டங்களான கொசுக்கள் அந்த விளக்கின்மீது பறந்துவந்து விழுந்தாலும், அவ்விளக்கின் சுடரைக்கொண்டு பொசுக்கப்பட்டுவிடுகின்றது. மேலும் சகல மனோ ஊசாட்டங்களையும் இந்த **பார்வை** ஒன்றுதான் கைதியாக்கி, கள்வனை சிறைப்படுத்துதற்போன்று அவற்றின் கைகளை இறுகக் கட்டிவிடும் சக்திவாய்ந்தது. இந்த **திருஷ்டி**தான் **ரூஹு** எனப்படும் **ஆத்மா.**

இந்த **ரூஹுக்கு** பல்வேறு நாமங்களும், தானங்களுமுண்டாயிருக்கின்றன. இந்த **ரூஹு**தான் உனக்கு சகலவற்றையும் தோற்றுவிக்கும்

கண்ணுடியாக இருக்கிறது. ஆகவே, **பார்வை** எனப்படும் **ரூஹு**க்கு மேல் **மஹ்பூபு** என்னும் **ஹக்கு** இருக்கிறுனென்று அறிந்துகொள். எவ ஞெருவன் **ரூஹு**டைய **ஜமால்** ஆகிய பேரழகைக் கண்டானே அவன் சந்தேகமின்றி **ஹக்கு**டைய **கமால்** என்னும் பூர்ணத்துவத்தை பெற்றுக் கொண்டவனும். மேலும் **ஜிஸ்மு** ஆகிய சரீரத்தை **நூர்** எனும் ஜோதியே என்றும், **ரூஹு** ஆகிய ஆத்மாவை **றப்** எனும் நாயன் தான் என்றும் எவன் அறிந்திருக்கிறுனே அவன் **ஹக்குதஆலா**வுடைய சமுகத்தைப் பெற்றுக்கொண்டவனுகும்: இவ்வா ருன சொல் சர்வ கிரந்தங்களினுடைய உயிர் போன்றிருக்கின்றது. (எவ்வாறெனில், சூரியனுக்கு அதன் **நூர்** உயிராக இருப்பதைப்போன்ரும்.) எனி னும் இந்த **ஜிஸ்மு** ஆகிய சரீரத்தை நாங்கள் **நூர்** என்று சொல்லமாட்டோம். பரவச நிலையில் சொக் கிப் போயிருக்கும் **மஜ்தூபு**கள் **ஷரஇல்** மன்னிக் கப் பட்டவர்களா யிருக்கிறபடியால் அவர்களுக்கு அவ்வாறு சொல்வது ஆகுமாயிருக்கிறது.

மேலும் அறிவாயாக:— அந்த **சிர்ரு** ஆகிய **இரகசியம்** ஒருவேளை மங்கிமேர்யும், மற்ருெரு சமயம் அகண்டமாய் விரிவாயும், விசாலமாயும் தெரிகிறது. யாதொன்றை **சிர்ரு** எனப்பட்டதோ அது அதி உன்னதமான ஒன்ரும். அதனை **ஹக்கு** என்று அறிந்துகொள்வாயாக. மேலும் எவனெருவன் **ரூஹு** என்ற (வீணையின்) கம்பியை வாசிக்கின் ருனே அவனை **சர்க்கார்** ஆகிய **ஹக்குதஆலா** வென்று அறிவாயாக.

என் உயிர் போன்றவனே! தனித்தனியான ஒவ்வொரு **ஆன்மாவும்** கம்பியாகவும், **ஜிஸ்மு** ஆகிய சரீரம் ஒவ்வொன்றும் வாத்திய கருவியாகவு மிருக்கின்றன. ஆனால் அவற்றை வாசிப்போன் ஒருவனே தான். எனினும், அவன் பல்வேறு வகையில் வாசித்தபோதிலும் ஒரே சப்தம்தான் யாவற்றிலும் நிரம்பியிருக்கின்றது. எனவே, எவனொருவன் **ரூஹு** என்பதை இன்னதென்று அறிந்து விட்டானோ, அவன் திட்டமாக **ஹக்குத ஆலாவை** அறிந்து விட்டவனாகும். என்றாலும் யார்தான் ரூஹை அறியவல்லார்? மேலும் எவனொருவனுக்கு தன்னுடைய ரூஹை மட்டும் அறியும் திறமை உண்டாயிற்றோ, அவனுக்கு பிரபஞ்ச ரூஹுகள் யாவும் நன்கு தெரியவரும். ஆனால் ரூஹு என்பது ஒன்றேயன்றி இரண்டு, மூன்றல்ல. அறிவு விளையும் தானமே! நீ அறிவினைக்கொண்டு அறிவை அறிந்து பார்த்துக்கொள்வாயாக. காலை வருடி சந்தோஷிப்பதையும், கிள்ளி, புண்படுத்தி வருத்துவதையும் எவன் ஒன்றுபோல் பாவித்து, இந்த இரு செயல்களையும் அவனின் வேறான அன்னிய வஸ்திடமிருந்து பிறவற்றின்பால் நிகழவில்லை என்பதை நன்கு உணர்ந்தானோ அவன்தான் மேலான **அனுபோகி** என்று நீ கருதிக்கொள். எனவே உன் அறிவை சந்தேகத்தின் வசம் ஒப்புவிக்காது, மேலான நிர்ணயங் கொண்டவனாய் இந்த விவரத்தை நன்கு ஆராய்ந்து அறிந்துகொள்.

அறிந்துகொள்வாயாக:— ரூஹுடைய அகமியத்தை எவராலும் வர்ணித்துக் கூறவும், **இத்**

ராக்கு என்கிற அறிவுடைய இயந்திரத்தினல் அறிந்து பார்க்கவும் முடியாது. ஏனென்றால் அது யாதொரு வஸ்துவைப் போன்றுமில்லை. **தாத்து**டைய சாய்கையாயிருக்கிறது. மேலும் அதனுடைய அதி நுட்பமான தன்மையால் அது சந்தேகம், ஒப்புவமை ஆகியவற்றை விட்டும் **தாத்**தைப்போல் தூய்மையாயிருக்கின்றது. ரூஹூக்கு எண்ணற்ற **சிபத்து**களான வர்ணிப்பு அல்லது பண்புகளுண்டு. அத்தகைய **சிபத்து**களினின்றும் மூன்று சிபத்து களை மட்டும் பொறுக்கி எடுக்கப்பட்டது. அவை யாவன:— **முத்ரிகு, முதஹர்ரிகு, முதகல்லிம்** என்பனவாம். **ஜமாதாத்து** என்கிற தாதுவர்க்கம் **முத்**ரிகு எனப்படும் அறிவை அடையப்பெற்றதாயும், **நபாத்தாத்து** எனப்படும் தாவர வர்க்கம் **முத்ரிகு** எனப்படும் அறிவு பெற்றிருப்பதுடன் **முதஹர்ரிகு** எனப்படும் உசும்புதலையும் பெற்றதாயும், **ஹைவானத்து** என்கிற ஜீவ வர்க்கம் **முத்ரிகு** எனப்படும் அறிவு பெற்றிருத்தலும், **முதஹர்ரிகு** எனப்படும் உசும்புதலும், **முதகல்லிம்** எனப்படும் பேச்சும் பெற்றிருக்கின்றன. எனினும் **இன்ஸான்** ஆகிய மானிடன் இதர ஜீவர்களைக் காட்டினும் மிகத் தெளிந்த, தீர்க்கமான நிலையைப் பெற்றவனுயும், சகலவற்றையும் தன்னுள் சேகரித்துக்கொண்ட எண்ணத்தின் **சமஷ்டி** யாகிய தொகைப் பொருளாயுமிருக்கிறுன். பிரபஞ்சத்தில் தோன்றி யிருப்பன யாவும் **இன்ஸானில்** காணப்படுகின்றன. இன்ஸானிலிருக்கும் அந்த ஒன்று பிரபஞ்சத்திலில்லை.

மஆனி என்ற ஆன்மலோகத்துக்கு **இன்ஸான்** தான் யதார்த்தத்தில் **பாத்துஷா(ஹ்)**வாகும்;

ஆனல் நீ மட்டும் **இன்ஸானுக** இருக்கும் பட்சத்தில் **கல்பு** என்ற சிம்மாசனத்தின்பேரில் **இன்ஸானிய் யத்**தாகிய 'மானுஷீகத் தன்மை'யை நிலை நாட்டி வைப்பாயாக.

"இன்ஸானுடைய கோலம் உன்னுடைய உயிரை அதன் வடிவாக கிரகித்துக்கொண்ட அவ்வேளையில்தான் நீ **இன்ஸான்** ஆகின்றாய்; இல்லாவிடில், இதனிலும், அதனிலும் சேராத இரண்டுங் கெட்ட நிலையில் ஒன்றுமில்லாதவனுய் யிருப்பாய்."

மேலும் யாரேனும் உன்னை **ரூஹு** என்பது என்னவென்று கேட்கும் பட்சத்தில்; ரூஹு என்பது யாதென்ற கேள்வியைக் கேட்கும் அந்தவஸ்து தான் இப்பொழுது அந்த கேள்விக்கு விடையு மளிக்கிறது என்று நீ பதிலிறுப்பாயாக. **அர்ஷு** என்னும் தெய்வாசனம்; **பர்ஷு** என்னும் இரத்தின கம்பளம், **அஜல்** எனப்படும் துவக்கமின்றிய அனதி காலம், **அபது** எனப்படும் தீர்க்கமின்றிய நித்திய காலம், **கைபு** என்னும் அக்ஞரலோகம், **ஷஹாதத்து** என்னும் பகிருலகு ஆகிய யாவும் ரூஹு என்னும் **ஆத்மா**வாக இருக்கும். ரூஹு என்பது ஒன்றே. உதாரணமாக அடுப்பு, விளக்கு, தீவட்டி, பந்தம் ஆகியவற்றில் நெருப்பு உண்டா யிருப்பதுபோன்று தோற்றங்கள் பல திறப்பட்டும், பல்வேறுபாடு மிருந்தபோதிலும் ரூஹு தான் அவ்வாறு தோற்றமளிக்கிறது. **அர்ரூஹு வாஹித துன் வன்னஷாஉ முக்தலிபுன் வதாக ஸிர்ருன்**

லிஅஹ்லில்லாஹி யன்கஷிபுன் ரூஹூ ஒன்று யும், அதன் தோற்றங்கள் ஒன்றுக்கொன்று பேதப்பட்டதாயு மிருப்பதோடு, அது **அஹ்லுல் லா(ஹ்)**க்களான **ஆரிபு**களுக்கு வெளியாகக் கூடிய இரகசியமாயுமிருக்கிறது.

ஹிகாயத்து:— ரூஹைப்பற்றி நன்கறிந்த ஒரு வாலிபர் ரூஹை அடுத்து, 'ரூஹே! நீ இன்ன வஸ்தென்றும், உனது மூலம் இன்னதென்றும் எனக்கு அறிவித்துத் தரவேண்டும். ஏனெனில் **நாசூத்து, மலகூத்து** ஆகிய இரண்டினுல் மட்டும் எனது காரியம் சித்திபெறுவதா யில்லை. எனது முடிவற்ற முடிவான நிலையை உன்னுடைய **அஸ்லு** என்ற மூலத்தைக்கொண்டே அடையப்பட வேண்டி யிருக்கிறது. ஆகையால் தயை கூர்ந்து எனக்கு அறிவிக்கவேண்டும்,' என்று வேண்டிக்கொண்ட போது, ரூஹானது கீழ்வருமாறு அதற்கு பதிலளித் தது. அதாவது:— நான் என்ற (ஜீவ அகங்காரம் என்னும்) வீட்டினில் நீ குடியிருந்து வருவதை விடுத்து, **ஏகம்** என்ற ஸ்தலத்தைப் பற்றிப் பிடித் துக்கொள்; அப்போது அலங்காராதிகள் முதல் சோட சோபனங்கள் ஈருய் **லாஹிரு** என்ற பகிர் முகத்திலும், **பாதின்** என்ற அந்தர் முகத்திலும் **நாஞகவே** யிருக்கக் காண்பாய். **ஜிஸ்மீ** ஆகிய சரீர சம்பந்தமும், **வுஜூதீ** என்ற உள்ளமை சம்பந்தமும் பெற்ற சகல தோற்றப் பொருட்களும் என்னுடைய இருப்பிடம் என்று நீ அறிவாயாக. நீ இப்பொழுது என்னை யாரெனக்கேட்டால் "நான் **நான்** ஆக யிருக்கிறேன்," என்று பதிலிறுப்பேன்.

ஆனல் இந்த **'நான்'** **நம்ரூது, ஷத்தாது** பேரற் கொற்றவர்கள் சொன்ன நான் அன்று. ஆகை யால் அசுத்தமும், சுத்தமும், ஆகாயமும், நெருப் பும், காற்றும், தண்ணீரும், மண்ணும், மற்ற யாவும் **நான்**தான். இன்னும் இடி, மின்னல், மேகம், மழை, அரிசி, விறகு, பாத்திரம், நெருப்பு, சீனத்து, அரசன், ஆண்டி, ஜரிகைப்பிடவை, பாய், மதங் கொண்ட யானை, அதனை அடக்கியாளும் மாவுத்தன் ஆகிய சர்வமும் **நான்**தான். மேலும் **புல்புல்** பற வையும், புயற்காற்றும், பூங்காவனமும், தோட்ட மும், மற்றும் யாவும் **நான்**தான்.

ஆகையால் எனது தோழா! ஒரே ரூஹைத் தான் இத்தாதி ரூபங்களாகக் கண்டிக்கப்பட்டிருக் கிறதென்றும், அந்தந்த ரூபத்துக்கு மேலும், கீழு மிருப்பது ரூஹூதானென்றும், ஒவ்வொன்றின் நடுவிலு மிருந்துகொண்டு சப்தித்துக் கொண்டிருப் பதும் இந்த ரூஹூதான் என்றும் நீ அறிந்து கொள்வாயாக.

★ எட்டாவது அத்தியாயம். ★

[இந்த எட்டாம் அத்தியாயத்தில் **கல்பு, ரூஹு, நப்சு** ஆகியவற்றின் இரகசியத்தை விவரித்துப்பேசப்படுகிறது.]

அருமையானவனே! அறிந்துகொள்வாயாக:—

இன்ஸான் காமில் என்ற சம்பூர்ண மானிடர் ஒருவர் ஒரு புறம் **ஹக்கை**யும், மற்றொருபுறம் **கல்பை**யும் சுட்டிக்காட்டி, அவ்விரண்டில் உனக்கு தேவையான, நீ மேலானதாகக் கருதும் எந்த ஒன்றையேனும் எடுத்துக்கொள்ளென்று என்னைப் பார்த்து சொல்வாராயின், நான் **கல்பைத்**தான் விசேஷமாகத் தெரிந்தெடுத்துக் கொள்வேன். ஏனெனில் அது **மஹ்பூபு** தானாகவே இருக்கின்றது. மேலும் **கல்பா**கிறது **அல்லாஹுத்தஆலா**வுடைய **அர்ஷு** எனும் கொலுபீடமும், நபி (ஸல்) அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பார்வையாகவுமிருக்கிறது. ஆனல் **மஹ்பூபு** ஆகிய **ஹக்குத்தஆலா**வைத் தவிர வேறு யார்தான் மனதை பராக்குக் காட்டி, தரிபடுத்திவைக்கக்கூடும்? ஆகையால் மனதை மனதளவில் லயிக்கச் செய்பவனே **ஆரிபு** எனப்படுவன். இன்னும் **மஹ்பூபு** ஆகிய நாயன் மனதில் சதா தரிபட்டிருக்கையில் ஏன் இந்த மனம் தன்னை விட்டும் அவனைப் புறம்பில் தேடியலைந்து பரிதவிக்கின்றது? இந்த **கல்பை** நீ ஒரு கல்பு என்று மட்டும் கருதிவிடவேண்டாம்; இது ஓர் ரம்மியமான பூங்காவனமாக இருக்கிறது. இலட்சக் கணக்கான நிரங்களைப்பெற்ற புஷ்பங்களும், அந்த புஷ்

பங்கள் ஒவ்வொன்றின் மீதும் தேனைப் பருகிக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான **புல்புல்** பறவைகளும் நிறைந்திருக்கும் அவ்வளவு பெரிய பூங்காவனமாகும் அது. மேலும் **ரூஹா**கிறது **ஜமால்** ஆகிய பேரழகைப் பெற்றதாயும், அதாவது **'ரூஹு'** **ஹக்**காகிய ஆண்டவனுயும், சரீரம் **தெளபா**வென்னும் **பாவ மன்னிப்பைத்** தேடும் அடிமையாயுமிருக்கின்றது. இந்த **கல்பு** புதுமைகள் வெளிப்படுந் தலமான **மஸ்ஹருல் அஜாயிபு** ஆகவும், மாபெரும் நடுநிலையாகிய **பர்ஜகுல் குப்ரு**வாகவுமிருக்கிறது. **கல்பா**னது ஒரு மலையின் எடையைப் பெற்றதாயும், சரீரம் ஒரு தோலாவின் எடையுள்ளதாயுமிருக்கிறது. **கல்பு** நாகரத்தினத்தைப் போன்றும், சரீரம் நாகத்தைப் போலவுமிருக்கிறது. பாம்புகள் பல்வேறாயிருப்பினும், அந்த பாம்புகளின் வாயிலிருக்கும் மாணிக்கங்கள் இனத்தில் ஒன்றாகவேயிருக்கின்றது. **கல்பு** என்ற நாட்டியத்துக்கு சரீரம் ஒரு நாட்டியக்கூடமாயிருக்கிறது. **கல்பு** சூரியனும், சரீரம் அந்த சூரியனின் ஒளியாகவுமிருக்கின்றது. மேலும் **கல்பு** என்பது **அல்லாஹு**த்த**ஆலா**வுடைய அழகிய வீடாகவும், நமது நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களுடைய அதி பரிசுத்தமான **நூர்** என்னும் ஜோதியாகவு மிருக்கிறது. இன்னும் **பிரபஞ்சம்** எனப்படும் **கோப்பை**யில் **கல்பு** என்பது ஒரு பானத்தைப் போன்றும், **ஹகீகத்து முஹம்மதிய்யா** தானுகவுமிருக்கிறது. **கல்பு** அறிவு என்ற இரத்தினம் விளையுந்தானமாயும், அந்த அறிவுக்கு எஜமானனுயு மிருக்கிறதென் றறிந்துகொள். எந்த ஒரு **கல்பு 'கத்ரா'** ஆகிய ஊசாட்டம் அல்லது நினைவு

கள் அற்றதாய் களங்கமற்றிருக்கின்றதோ அது **தாத்து**டைய **மல்ஹறு** என்னும் தோற்றமா யிருக்கும்; அதாவது, அலையற்ற தண்ணீர் கண்ணாடியைப் போன்றிருப்பதுபோல் அந்த **கல்பா**னது **தாத்**துடைய தன்மையைப் பெற்றிருக்கும். "நினைவற்ற மனம் **தாத்து** வெளியீடாகும் தானமாகவும், அலையின்றிய ஜலம் கண்ணாடியாகவு மிருக்கிறது," என்று **ஆரிபீன்**கள் கூறியிருக்கிறார்கள். இன்னும் **கல்பா**னது சரீரம் என்ற லோகத்துக்கு நீதிபதியாக யிருக்கிறது. அந்த **கல்பு 'ராஸீ'** என்னும் பொருந்திக் கொள்கிறதாயும்; மற்றும் தத்துவங்களும், அவயுவங்களும் **மர்ளீ** என்ற பொருந்திக் கொள்ளப் பட்டவையாயு மிருக்கின்றன.

மேலும் **கல்பு** அறிபவனும், **ரூஹு** பார்க்கிறவனுயு மிருக்கின்றன. ஞான, கரும சாதனங்களின் வாயிலாய் இகபர போக பாக்கியங்களை அனுபவித்து வரும் ஜீவனின் பல்வேறு செயல்களையும் **நப்ஸு** நோட்டமிட்டு வருகின்றது. **நப்ஸு** என்பதோ மனித வர்க்கத்தின் கோலத்தில் நின்றுமுள்ளதன்று; ஆனால் மனிதனின் **அஸ்லு** எனும் மூலமாகிய தந்தையா யிருக்கிறது. இன்னும் **ரூஹு**ம், **கல்பும்** இந்த **நப்ஸு**டைய குணத்தைப் பெற்றவை. எவ்வாறெனில், **நப்ஸு** ஒரு **தாயிரா**வாகிய கொட்டு போன்றும், **ரூஹு**ம், **கல்பும்** அந்த கொட்டுடைய சப்தத்தைப் போன்றுமாகும். **நப்ஸு** நீங்கலாக மற்றுமுண்டான குணங்கள் யாவும் அதன் **சிபத்து**களென்னும் பண்புகளென்று அறிந்து

கொள்வாயாக. **நப்ஸு, கல்பு, ரூஹு, நூர்** என்ற நான்கும் ஒன்றுக்கொன்று தூரமின்றிய அதிசமீப நிலையைப் பெற்றிருக்கின்றன. ஆனால் **நப்ஸு** மட்டும் அசைதலின்றி இருந்துவிட்டதாயின் **மஹ்பூபு** எனப்பட்ட **நாயகி** கதவைத் திறந்து வெளி வராது, தன்னுடைய பூர்வீகம் என்ற அறையினுள்ளேயே தங்கி யிருந்திருப்பாள். அவ்வாறு இருந்து விடின், இந்த **ஆலம்** (பிரபஞ்சம்) என்ற பூங்காவனமும், பூமி எனும் விளை நிலமும், வானம் எனப்பட்ட மாடியும், நட்சத்திரம் என்ற விளக்கும், சந்திர, சூரிய கலைகளென்ற சுவாசமும் எவ்வாறு ஏற்பட்டிருக்க முடியும்?

அறிவாயாக:— **தாத்து** முதன் முதல் அசைந்த அசைதலை அல்லது அதன் 'முந்திய அலை'யை **நப்ஸு** என்று **ஆரிபீன்கள்** அழைக்கின்றனர். அந்த **நப்ஸு**தான் **நான்** என்று சொல்வதும், இந்த சரீரத்தில் **நான்** என்பதை இச்சிப்பதுமாயிருக்கும். "யாதொன்று **அஸ்லு** என்னும் மூலஸ்தானமாயிருக்கிறதோ அதுதான் உயிரையும், உடலையும் உறையச்செய்தது என்று கூறப்பட்ட சொல் ஒரு உபதேச மொழியேயன்றி பிரிதொன்று மல்லவென நான் கூறுவேன்," என்று பெரியோர்களுள் சிலர் சொல்லியிருக்கின்றனர். **நப்ஸு**தான் மூலஸ்தானமா யிருக்கிறதென்று **ஹகீகத்தை** பக்குவமாக அறிந்தோரைப் போல் நீயும் அறிந்துகொள். சம்பூர்ணர்கள் அதனை தரிப்படுத்த வேண்டுமென்றும், பூர்ண மடையாதோர் அதை அழித்துவிட வேண்டுமென்றும் சொல்கிறார்

கள். எனவே, நீ அழித்தற்குரியதை அழித்து விட்டு, தரிபடுத்தற்குரியதை தரிபடுத்தி, அதனுடன் ஐக்கியமடைந்துகொள். அதாவது, **நப்ஸு** ஆகிய தன்னை விட்டும் புறம்பே தேடாதே. ஏனென்றால் அதுவே **நீயாகவும்**, இந்த **சரீரம்** என்ற வீட்டுக்குத் தூண் போன்ற ஆதாரமாகவுமிருக்கும்.

ஹிகாயத்து:—

மார்க்கம், **மத்ஹபு** ஆகியவற்றின் பிடிப்புகளை விட்டும் சுதந்திரமடைந்த உண்மை **பகீர்** ஒருவர், தனது கண்ணிலிருந்து ஜோதியைக்கொழித்தவராய், இராப்பகலாய் **பரவசம்** எனப்பட்ட வீட்டில் **மஸ்து** எனும் **பேரின்ப மயக்கத்**தால் மிகைக்கப்பட்டு, கருணையும், ஈகையும், காருண்யமும் நிறைந்த உள்ளத்துடன் நாவன்மையும் பெற்று, கத்தி, அம்புகளின் அச்சந் தீர்ந்து, சரீரத்தின் கவலையை முற்றும் துறந்து, இலட்சியார்த்தப் பொருளாய் விளங்கிவந்தார். (தனது கோலத்தாலும், ரூபத்தாலும் மட்டும் தன்னை **பகீர்** என வேஷமிட்டுக் காட்டிக் கொள்பவனுக்கு மனித கோலத்திலிருக்கும் ஒரு குரங்கை உவமானித்துக் கூறலாம்.) மெய்யான அந்த **பகீர்** ஹலரத்து முஹம்மது பாக்கர் (கத்தஸ்.) அவர்களை வந்து தெரிசித்து, மிகவும் புகழ்ந்து பேசியவராய் கீழ்வருமாறு மரியாதையோடு வினவினர். அதாவது:—

“சமுத்திர ஜலம், கப்பல், நூஹு (அலை) ஆகியவற்றிற்கு ஒப்பான **நப்ஸு, கல்பு, ரூஹு** எனும் இம்மூன்றும் ஏகமான ஒரே வஸ்தா?

அல்லது, மூன்றும் ஒன்ருகக் கலந்து ஒன்ருகத் தோன்றுகின்றதா? அல்லது, ஒன்று மற்றென்றைப் பொதிந்திருக்கிறதா? அல்லது, இவற்றிற்கிடையில் யாதேனும் **பர்கு** என்னும் **பிரிவினை** யுண்டா? அல்லது, மூன்ருக இருப்பதால் இந்த மூன்றும் பதவியில் சமமானவையா? அல்லது, இவற்றிற்கிடையில் ஏற்றத் தாழ்வு உண்டா? அப்படி ஏற்றத் தாழ்வு உண்டாயிருப்பின், அதில் நாயகத் தன்மையுடைய ஆண்டவனும், அடிமைத்தனமுடைய அடியானும் இன்னின்னவையென்று எனக்கு விளக்கி யருளவேண்டும்,'' என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கு ஹலரத்து அவர்கள், "பகீரே! நான் இப்பொழுது எங்கிருக்கின்றேன்? இந்த **மந்ஹபும்** எனக்கு ஏது? **மஃரிபத்து** ஆகிய மெய்ஞ் ஞானமும் எனக்கு எங்கிருக்கிறது? அதனை அறிய மூளை என்ற ஒன்றும் என்னிடமேது? இதனை விவரித்துக்கூறி, அதன் இரகசியார்த்தத்தை விளக்கிக்காட்டியருள ஏழையாகிய நான் அறியாதிருந்தபோதிலும் தங்களின் கிருபாகடாட்சத்தால் **ரூஹுக்கும், கல்புக்கு** மிடையேயுள்ள சில மறைவான விஷயங்களை தங்களுக்குத் தெளிவாகவும், பகிரங்கமாகவும் சொல்லிக்காட்டுகிறேன். எனினும் **நப்ஸு**டைய விஷயத்தையும், அதன் நுட்பத்தையும் என்னிடத்தில் கேட்கவேண்டாம். ஏனெனில், அதனை அறியும் வகையில் நான் திகைப்படைந்தவனும், எனது **விளக்கம்** என்னும் **அருவி** வரண்டதாயுமிருக்கிறது,'' என்று கூறினர்கள்.

இதனைச் செவியுற்ற **பகீர்** அவர்கள், 'ஷைகே! நீர் தெளிவாகக் கூறாது, அதற்கு மாற்றமாய்ச் சொன்னீர். ஏனென்றால் இந்த **நப்ஸ்ஸை** என்பதை சிறப்புற்ற மகான்களும், சாதாரண மக்களும் அறிந்தே இருக்கின்றனர். ஆனால் **ரூஹை**யும், **கல்பை**யும் உலகில் இரண்டொருவர்தான் அறிந்திருக்கிறார்கள்,' என்று சொன்னபோது, **ஷைகு** அவர்கள், "நீங்கள் எவ்வளவுதான் கேட்டுக் கொண்டபோதிலும் **நப்ஸ்ஸு**டைய **சிர்**ரை என்னால் சொல்ல இயலாதிருக்கிறது; **ரூஹு, கல்பு**டைய இரகசியார்த்தத்தை எனக்கு தெரிந்தவரை நான் சொல்கிறேன். ஆகாயமானது உன்னதத்தைப் பெற்று, பூமியின்மீது அதனுடைய பலாபலன் உண்டாயிருப்பதன்றி, அந்த பூமி சுற்றுவதால் பஞ்ச பூதங்களும் உற்பத்தியாகி, அதனால் **துன்யா**வென்ற பூலோகம் ஏற்பட்டு, பஞ்ச பூதங்களின் சேர்க்கையைக்கொண்டு பூமண்டலத்துக்கு அடையாளமும், பூமண்டலத்தின் சேர்க்கையைக்கொண்டு பஞ்ச பூதத்துக்கு அடையாளமும் உண்டாயிருக்கக் கூடிய அத்தகைய **ஆகாயம்** ஒன்றாகவும், புத்திக்கு எட்டாததாகவும், பூமியின்மீதுள்ள யாவற்றையும் அவ்வவற்றின் விநோதமான தத்துவங்களுடன் சேர்த்து பொதிந்து கொண்டிருக்கக்கூடிய **சமுத்திரம்** மற்றொன்றாகவும், எந்நாளும் உலக இருளை நீக்குவதும், வான சாஸ்திரங்களால் உலகத்தின் **அஸ்லு** என்னும் மூலமென்று கணிக்கப்பட்டதும், ஸ்தூலங்களின் உற்பத்தி அதனைக்கொண்டே நிகழ்கின்றது என்று கூறப்பட்டதுமான **சூரியன்** பிரிதொன்றாகவும், **அல்லாஹுத்தஆலா**வின் பிரதி

நிதியும், சர்வ நுட்பமும், சூட்சுமமுமான விஷயங்கள் யாவற்றையும் தன்னுள் பொதிந்து கொண்டிருக்கக் கூடிய சம்பூர்ண காரியஸ்தனுமாகிய **ரூஹு** என்னும் **ஆத்மா** சகலவற்றையும்விட அதி விசேஷமான ஒன்றாயுமிருப்பதைச் சற்று கவனிக்கவும். அந்த **ரூஹைக்**கொண்டுதான் (ஸ்தூல, சூக்கும, காரணமாகிய) மூவுலகிலும் யாதொரு குறைவுமின்றி வியாபார ஸ்தலத்தில் விற்றல், வாங்கலாகிய தொழில் துரிதமாய் நடப்பதுபோன்று நடந்து கொண்டிருக்கின்றன. **நூர்** என்ற **ஜோதி** தனது காரியம் பூராவையும் **ரூஹு**டைய ஆக்ஞையின் கீழ் விட்டுவிட்டு, சும்மாயிருந்தபோதிலும் அந்த **நூரைக்**கொண்டே இந்த ரூஹு வெளியீடாயிருக்கின்றது. அந்த **நூர்** ஆகிய ஜோதி **முத்லக்** என்ற அகண்ட பரிபூர்ணத்தைச் சேர்ந்தது. **முத்லக்**காகிய அகண்ட பரிபூர்ணம் யாவற்றிற்கும் அதீதமாயிருந்தபோதினும், அந்த **முத்லக்**கைக்கொண்டே சகலமும் வெளியீடா யிருக்கின்றது, இத்தாதி மேன்மையைப் பெற்ற ஆகாயம், சமுத்திரம், சூரியன் போன்ற வஸ்துக்களெல்லாம் உண்டாயிருந்தும், இவற்றையெல்லரம் விடுத்து விண்டலத்திற்கும், மண்டலத்திற்கும் பாதுஷாவான முஹம்மது (ஸல்) அவர்கள், **மன் அரப நப்ஸஹு பகத் அரப ரப்பஹு** 'எவன் தன் நப்ஸை அறிந்தானோ, நிட்சயமாக, அவன் தன்னுடைய நாயனை அறிந்து விட்டான்,' என்று கூறியிருப்பது இங்கு சிந்திக்கத் தக்கது. ஆகையால், எந்த ஒன்றை அறிவதால் தன் **மஹ்பூபு** ஆகிய நாயனை அடையப்பெறுவதாயிருக்கிறதோ, அத்தகைய அதி உன்னத வஸ்து

வின் செய்தியை என்றால் எப்படி விவரித்துக் கூற முடியும்?'' என்று **ஷெய்கு** அவர்கள் சொன்னார்கள். அதனைக் கேட்டதும் அந்த **பகீர், ஷெய்கு** அவர்களிடமிருந்து **நப்ஸு**டைய சில **ஹகீகத்**தான அந்தரங்க விஷயங்களைக் கேட்டு விளங்கி, மிகுந்த சந்தோஷத்துடன் **ஷெய்கு** அவர்கள்மீது **இறுதித் தீர்ப்பு** (கியாம) **நாள்**வரை 'சுபசோபனம் உண்டாகக்கடவது,' என்று **துஆ** வென்னும் பிரார்த்தனையுடன் ஆசிகூறியவர்களாய் உத்திரவு பெற்றுக் கொண்டு அவ்விடத்தை விட்டும் போய்விட்டார்கள்.

அல்லாஹுத்தஆலா **ஹதீது குத்ஸி**யில் பின்வருமாறு திருவுளமாகிறான். அதாவது:—

'**ஆதமு**டைய மகனின் வயிற்றிலுள் **மாளிகை**யொன்று கட்டினேன்; அந்த மாளிகைக்குள் நெஞ்சை உண்டாக்கினேன்; அந்த நெஞ்சினுள் **கல்பை** உண்டுபண்ணினேன்; அந்த **கல்பு**க்குள் **அக்லை** உண்டாக்கினேன்; அந்த **அக்லு**க்குள் நினைவை உண்டுபண்ணினேன்; அந்த நினைவினுள் **உதிப்பு** எனும் **ரூஹை** ஏற்படுத்தினேன்; அந்த **ரூஹு**க்குள் **லுப்பு** என்ற அகமியத்தை உண்டாக்கினேன்; அந்த **லுப்பு**க்குள் **சிர்ரை** உண்டுபண்ணினேன்; அந்த **சிர்ரு**க்குள் **நான்** இருக்கிறேன்.' இந்த **ஹதீது குத்ஸி**யாகிறது மேற்சொல்லப்பட்ட **நான்** என்ற நப்ஸைப்பற்றிய **சைக்கினை**யாக இருக்கிறது.

ஆரிபீன் எனும் **மெய்ஞ்ஞான சொரூபிகள்** இந்த **நான்** எனும் **நப்ஸை இன்ஸான்** ஆகிய

மானிடனுக்கு ஹக்குத ஆலாவினல் ‘அமானிதமாக அளிக்கப்பட்ட வஸ்து’ என்று கூறுகின்றனர். மேலும் ஷைய்குல் அக்பர் முஹ்யியத்தீனிப்னு அரபீ (ரலி) அவர்கள் தங்களுடைய **புசூஸுல் ஹிகம்** என்ற கிரந்தத்தில் வரைகின்றதாவது:—

வலாகின் மூதஉன் பீஹி
ஷிஹாதா ஸூரதுன் ஹக்குன்—

“எனினும் ஹக்குத ஆலாவை **கல்கு** ஆகிய சிருஷ்டிப் பொருளிலே **அமானிதமாக** வைக்கப் பட்டிருக்கின்றது,” என்று அருளியிருக்கிறபடி, நீங்கள் உற்றுணரும் வேளை அந்த அமானிதப் பொருள் **நப்ஸு**தான் என்று நன்கு புலப்படும். அந்த **நப்ஸு ‘நான்’** என்றழைக்கப்படும் வஸ்தாகும். அந்த **நான்**தான் **இன்ஸான்** ஆகிய மானிடனின் **தாத்து** ஆகிய ‘சுயார்த்த ரூபம்,’ அல்லது, **வுஜூது** என்ற உள்ளமைப்பொருளா யிருக்கிறது. அதனை அறிவதே நமது மாபெருங் கடமை.

★ ஒன்பதாவது அத்தியாயம். ★

[இந்த ஒன்பதாம் அத்தியாயத்தில் தாவில்லாதிருப்பதினுடைய இரகசியத்தையும், ஹலரத்து மன்சூருல் ஹல்லாஜ் (ரஹ்) அவர்களுடைய இரகசியத்தையும், **அனல் ஹக்கு** என்பதினுடைய இரகசியத்தையும் பற்றி விவரித்துப் பேசப்படுகின்றன.]

அருமையானவனே! அறிந்துகொள்வாயாக:—

"நான் என்பது இன்மையாகப் போனலொழிய, **மஹ்பூபு** என்ற **நாயகி** தெரிசனைக் கொடுக்கமாட்டாள்; எனவே, **நான் உண்டு** என்ற **ஷிருக்**காகிய இரவு போன்ற **இணை**யைப் போக்கி வைக்கும் சூரியன் **அவன்** என்பதாக இருக்கிறது," என்ற சில பெரியோர்கள் சொல்லும் வார்த்தையை நான் அங்கீகரித்தேன்; எனினும் அது ஒரு மூடலான சொல்லாக இருப்பதால் அது எனக்கு விளங்கவில்லை. ஏனென்றால், தான் இன்மையாகப் போவதென்பது தன்னை விட்டும் தான் கைக்கழுவி, தன்னை இழந்து விடுவதாயிருக்கிறது. ஆனல் தன்னை பிரபஞ்சத்தினர் யாவருக்கும் மறைத்துக் கொண்டபோதிலும், தனக்கே தன்னை மறைத்துக் கொள்ளுதல் என்பது அசாத்தியமானதொன்று. ஏனெனில் ஜலத்தில் முதலை உண்டாகியிருப்பதைப் போன்று **உயிர்** என்ற தண்ணீரில் அறிவு வெளியாயிருக்கிற வரையில் **தான்** இன்மையாக ஆய்விடுவது எவ்வாறு நிகழும்? மேலும் **தான்** உண்டென்பதும், இல்லையென்பது மாகிய இரண்டும் ஒரே இடத்தில், ஒரே தருணத்தில் சேர்ந்திரா. ஏனெனில், எப்பொழுது **இன்மை** ஏற்பட்டதோ,

அப்பொழுது **உண்டு** என்பது நீங்கிவிடுகின்றது. இன்னும் கத்தியாலேனும், நஞ்சைக் கொண்டே னும், மற்றும் எதனைக்கொண்டாகிலும் தன்னைக் கொல்லப்பட்டால் **தான்** உண்டென்பது போய், **இன்மை** ஏற்பட்டுவிட்டதென்று நீ கருதிக்கொள் கிறாய். நான் சொல்வதை சற்று கவனத்துடன் காது தாழ்த்திக் கேட்பாயாக. புலிக்கு நீ இறை யாய்ப் போனபோதிலும், நெருப்பில் வெ.ந்து கரி யாக ஆய்விடினும், நீ ஒருகாலும் **பனா** வென்னும் அழிவையடைந்து, இன்மையாகாது, சதா தரிபாடா கவே யிருப்பாய். இன்னும் நீ இம் மண்டலத்திலே னும், மற்றும் எம் மண்டலத்திலேனும் இருந்த போதிலும் உன்னை விட்டும் **தான்** என்பது நீங்கி யிராது. தூய்மையானவனே! பரிசுத்தமுடைய **நீ** என்பதுதான் **நான்** எனவுமிருக்கின்றது. அது மட்டும் அகன்றுவிட்டால், வேறென்ன இருக்கும்? ஒன்றுமிராது. **அஸ்லு** ஆகிய சுயார்த்தத்தில் இந்த **நான்** என்பது மனிதனுக்குடையதன்று. இதனைக் கற்றுக்கொடுத்த **உஸ்தாது** எனும் ஆசிரியன் **ஹக்குதஆலா**வா யிருக்கிறான். ஆகையால், இந்த பிரபஞ்சத்தில் சிறப்புற்றவன் மனிதனாகும். இவ னில் சிறப்புற்றது **நான்** என்னும் **ஹஸ்து** என் பதே. பார்க்குந் தன்மையைப்பெற்ற **ரூஹு**ம், அறியுந்தன்மையுடைய **கல்பும்** அந்த **நான்** என்ற எஜமானனுக்கு பணிவிடையாட்களா யிருக்கும். ஆகையால், இந்த **ஜிஸ்மு** ஆகிய சடம் என்ற மண் **வஸ்லு** என்னும் ஐக்கியத்தைப் பெற்றுக்கொள்ள மாட்டாது; அந்த **ஹஸ்தீ**யாகிய **நான்** என்பது தான் அத்தகைய ஐக்கியத்தை அங்கீகரித்துந்

கொள்ளுகிறது. எனவே, அந்த **நான்** என்பது நீங்கிவிட்டால் எவனுக்கு **வஸ்லு** என்னும் ஐக்கியமுண்டாகும்? ஆனால், எவனொருவன் தனக்கன்னியமின்றிய **தான்** தானென்று சொல்வானோ, அவனுக்குத்தான் அந்த **வஸ்லு** எனும் **ஐக்கியம்** கிட்டும். எனவே **நான்** என்பது இன்மைப் பெற்று அழிதல் எவ்விதமெனில், அந்த **நான்** என்ற **ஹஸ்து** அல்லாஹுத்த ஆலாவுடைய **நூர்** ஆகிய ஜோதியே யாகுமென்று அறிதலாயிருக்கும். இந்த இராஜவீதியில் எவனொருவன் வந்து சேர்ந்தானோ, அவனுக்கு இத்தகைய **பனா** வென்னும் இன்மையாகிய தலத்தை அல்லாஹுத்த ஆலா கொடுத்தருள்வான். இன்னும் நீ என்னை இது சம்பந்தமாக உபதேசிக்கச் சொன்னால், **அல்லா(ஹ்)**வின் பேரில் சத்தியமாக நீ அந்த **நான்** என்ற **ஹஸ்தி**யைக் கடைபிடித்துக் கொள்ளென்றுதான் கூறுவேன். ஏனென்னில், எவனொருவன் **ஹஸ்தி**யுடன் சிறப்புற்ற சொந்த நண்பனாயிருக்கின்றானோ, அவனிடத்தில் **தான்** என்பதின்றிய **அல்லாஹுத்த ஆலா** தானிருக்கின்றான். மேலும் அந்த **நான்** எனும் **ஹஸ்து**தான் அவனில் **ஆலிம்** என்ற அறிபவனும், **பஸீர்** என்ற பார்க்கிறவனும், **காதிர்** என்ற தத்துவமுடையவனுமிருக்கின்றது. ஏனென்றால், **ஹஸ்து** ஒரு விதையைப்போன்றும், மற்றவை அந்த **ஹஸ்து** எனும் வித்திலுடைய கிளை, இலை, பூ ஆகியவற்றைப் போன்றும், அது இரத்தினத்தைப் போன்றும், மற்றவை அதன் சுடரைப் போன்றும் இருக்கிறபடியால், கிளை, இலை பூவை வித்திலும், அழகு, நிறம், சுடர் ஆகியவற்றை

இரத்தினத்திலும் அழித்துவிடுவாயாக. **வஹ்தத்து** எனும் **ஏகத்தன்மை** உனக்கு வேண்டுமாயின், இத்தகைய முறையில் உனது அறிவினால் அறிந்து, உன்னை தயார்செய்து பக்குவப்படுத்திக் கொள்வாயாக. இங்கு நாம் விவரித்துக் கூறியிருப்பதைப் போன்று எவனொருவன் தன்னை **முஜ்மல்** ஆகிய **சமஷ்டி** அல்லது தொகுப்பாகவும், **முபஸ்ஸல்** ஆகிய **வியஷ்டி** அல்லது வகுப்பாகவும் இந்த **இல்மு** ஆகிய கல்வி ஞானத்தை அடையப்பெற வில்லையோ அவனுடைய **தௌஹீது** என்னும் **அத்துவிதத்தில்** மாசு படிந்திருக்கிறதென்று உறுதி கொள்வாயாக.

நண்பனே! எவனொருவன் இன்மையைக் கொடுத்து உண்மையை வாங்கியிருக்கிறானோ, அத்தகையோனுக்கு மட்டுமே இந்த அறிவைக் கற்றுக் கொடுப்பதன்றி, இதராருக்கு கூறவேண்டாம். ஏனெனில் இப் பாதையோ எத்தகையோனும் கீழும் மேலும் பார்த்துத் திகைப்படையக் கூடிய தட்டழித லாகிய பாதையாயிருக்கிறது. எனவே, இப் பாதை நடப்பவன் உயிரைத் திரணமாக மதித்தவனும், **சரீர பண்பு**கள் யாவற்றையும் மிறந்தவனும், சுத்த வீரியத்தைப்பெற்ற பேரர் வீரனும், **ஹிம்மத்** தென்ற வைராக்கியத்திலும், விரைந்து பறப்பதிலும் இராஜாளிப் பறவையைப் போற்கொத்தவனும் இருக்கவேண்டுமேயன்றி, சோம்பேரி ஒருவன் இதற்கு அருகதையானவனல்லன். ஆனால் ஹல ரத்து மன்சூருல் ஹல்லாஜ் (ரலி) அவர்களைப் போன்றவனாயிருந்தால் அவனுக்கு வெற்றிக் கிடைப்பது

ஓர் புதுமையன்று. மேலும் **துன்யா** வென்ற **இக லோகம்** எந்த சூரியனால் பிரகாசத்தை அடைகின்றதோ அந்த சூரியன்போன்று எவனுடைய **கல்பு** ஆகிருக்கிறதோ அந்த ஒருவனின் **கல்பும்**, இறப்பு, பிறப்பைப் பொருட்படுத்தாத சுத்த வீரத்தன்மையுடையவனின் **கல்பும் மன்சூர்** ஆகவே இருப்பதைக் கவனி. ஹலரத்து மன்சூருல் ஹல்லாஜ் (ரலி) அவர்கள் மட்டும் **வஹ்தானிய்யத்**துடைய அறிவில் தரிபட்டவர்களென்று நினைக்காதே. யார்யார் இந்த அறிவில் தரிபட்டிருக்கிறாரோ அவர் ஒவ்வொருவரும் தத்தம்மிடத்தில் **மன்சூர்** ஆகவே இருக்கிறார். எதனாலெனில், தானே தானாய், தன்னையன்றிய அன்னியமில்லாதோனா யிருக்கிறதினாலேயாம்.

ஆகையால், **சுப்ஹானீ மாஅஉளம ஷானீ** "நான் தூய்யவன், என்னுடைய காரியம் மகா வலுப்பமானது," என்றும், **லைஸ பீஜுப்பதீ ஸிவல்லா(ஹ்)** "என்னுடைய சட்டையில் அல்லா(ஹ்)வைத் தவிர வேறில்லை" யென்றும் ஹலரத்து சுல்தானுல் ஆரிபீன் பாயஸீது புஸ்தாமி (ரலி) அவர்கள் திருவுளமானதுபோல் எத்தனையோ மகான்கள் இவ்வாறான சொற்களைக் கூறி, அந்த **சொல்** என்ற திரையில் **அனா**வாகிய **நான்** என்னும் **உள்ளமை**யை வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். அந்த சொல்லை சொல்கிறவர்களை நீ யாரென்று அறியாயோ?

அறிவாயாக:— **அனல்லா(ஹ்)** 'நான் அல்லா(ஹ்)வாகும்,' என்று **அல்லா(ஹ்)**வைத் தவிர

வேறு எவர்தான் கூறவல்லார்? **இன்னனீ அனல் லாஹு லாஇலாஹ இல்லா அன பஉபுத்னீ** "நிட்சயமாக நான் அல்லா(ஹ்)வாகும்; என்னையன்றி யாதொரு **வுஜூது** எனும் உள்ளமையு மில்லை; எனவே நீ என்னை வணங்குவாயாக," என்று அல்லாஹுத்தஆலா திருகுர்ஆனில் திருவுளமானது போல, அந்த **நான்** என்ற ஒரு **அனு**விலேயே யாவருக்கும் **நான்** எனுந் தன்மையுண்டா யிருக்கிறது; இல்லாவிடில், யாருக்கும் **நான்** என்ற **தன்மைச்சொல்** ஏற்படாது. **ஹக்குடைய அனு** சூரியனைவிட பிரகாசமாயும், **கல்குடைய அனு** நட்சத்திரத்தைப் போன்று அந்த சூரியனிட மிருந்து பிரகாசத்தைப் பெறுவதாயு மிருக்கின்றது. முந்திய **அனு** எப்பொழுது பிரகாசித்ததோ அப் பொழுது பிந்திய **அனு**வாகிய நட்சத்திரங்கள் யாவும் இன்மையாய்விடும்.

ஆகையால் **முஹக்கிகீன்** ஆகிய பிர்ம ஞானி களின் விஷயத்தில் ஹலரத்து மன்சூருல் ஹல்லாஜ் (ரலி) அவர்கள் **அனு**வாகிய நான் என்ற சிறப்ப மான சொல்லைச் சொன்னது கொண்டும், **வஹ் தத்து** ஆகிய ஏக அறிவின் கதவைத் திறந்து விடு கிறதைக் கொண்டும் பேருபகாரமொன்று செய் திருக்கிறார்கள். மேலும் அந்த பாதையில் தரி பட்டவர் **நான்** என்று சொல்வதெல்லாம் **ஷிர்கு** என்ற இணை வைத்தலை போக்குதற் பொருட்டே யன்றி, பிறிதொன்றைக் கருதியன்று. அவ்வாறான சொல் இணையாகிய பிணியைப் போக்கவல்ல சஞ் சீவியா யிருக்கிறது. எனவே, அன்னாருடைய **இர்**

பான் ஆகிய மெய்ஞ்ஞானத்திலும், அனுஷ்டானத்திலும் சதாகாலமும் **ஹக்குத ஆலா**வுடைய கிருபா மாரி பொழிவதாகுக. **ஹக்**கை அன்னியமாகக் கருதி, **நான் பெரியவன்** என்று எவன் சொல்லிக் கொண்டிருக்கிறனே, அவன் எண்ணெயில் வெந்து கருகிப்போன ஓர் **வடை**யைப் போன்றவனாகும்; அல்லது, நானே அடிமை, **அல்லா(ஹ்)**தான் பெரியவன் (எஜமானன்) என்று எவனொருவன் கூறுகிறனே, அவன் சுரைக் குடுக்கையைப் போன்று இலேசாகிவிடுவான். ஆகையினால் **நான், நீ** என்ற எண்ணத்தை விட்டும் நீங்கியவன் தன்னுடைய இலட்சியத்தை அடையப்பெறுவான். ஆரிபீன்கள் இவ்விரண்டையும் சிந்திக்கவில்லை.

" அறிந்தவர் **நான்** என்று சொன்னால்—அவர்க்
காதியருளுண்டாம் தௌஹீதொளிவால்,
மறந்தவர் **நான்** என்று சொன்னால்—அவர்
ஆருவார் மாண்டிட வெந்த கரிபோல்;
நான் **பனு மக்லூக்கு** வென்றும்—மேலாம்
நாயனே **காலிகு உள்ளது** வென்றும்,
நான்வேறு **ரப்பு** வேறென்றும்—நின்றோன்
தாழ்ந்த பதர்ப்போ லாகுவா னென்றும்,
ஆரிபிரண்டையும் விட்டு—விட்டு
ரூஹை யறிந்தவர் ரூஹாக நின்று
பாரில் **அனல் ஹக்கு** வென்று—சொல்வார்
பாவி அவரைப்போல் ஆவரோ கண்டு. " (கலிமா)

(பாடல்—மெய்ஞ்ஞானத் தெளிவு.)

மேலும் அவர்கள் தன்னை இன்மையாக்கிக் கொள்ளவு மில்லை. எனவே, எவனொருவனுக்கு ரூஹானது தெளிவாயும், மறைவின்றியும் பார்வைக்குத்

தெரிந்ததோ அவன் **நான்** என்று சொல்வதைக் கொண்டு பாவமேதும் நிகழவில்லை, அவனுடைய நிலைமை மிகைத்து அந்த சொல் எற்பட்டபடியால் அவன் **ஷரஉ**டையவர்களிடத்தில் மன்னிக்கப்பட்டவனுயிருக்கிறன்; அவன் பாவியாகான். ஆகையால், **வஹ்தத்து** எனும் ஏகஅறிவினது வித்தாகிறது **நூருமுஹம்மதிய அகண்ட பரிபூர்ண ஜோதி**யாயிருக்கின்றது. அந்த **நூருல் முஹம்மதை** இந்த **ரம்ஸு** என்ற கணக்குப் புள்ளியால் காட்டலாம். அதாவது:— *[1511381]* என்பதாம்.

" நானென்று சொன்னது **ஹஸ்து**—இந்த
நாலுமுழ மனுவல்ல விடுத்து
நானென்ற தாத்தை யறிந்து—கொண்டால்
நான் வேறு என்ற நினைவுபோ மற்று;
வஹ்தானியத்தின் அறிவு—இது
மாதவமான பேரின்ப மகிழ்வு
அஹதிய்யத்தான ஒளிவு—மிக
ஆசையுள்ளோர்கள் தெளிந்த தெளிவு."

" **நான்** என்பது ஜாமிஆச்சு—இந்த
நான் என்பதெல்லாப் பதவியுமாச்சு
மோன **ஹகீகத்து** மாச்சு—எங்கும்
முட்டியும், முட்டாவகண்டமு மாச்சு;
வஹ்தத்தின் விதை **நூருமுஹம்மது**—அந்த
வாசமா **முஹம்மது** கிந்த அனல் ஹக்கு
சருதி **திக்ரி**திற்சொக்கு—மேலாம்
இஸ்முல் அஃலம் தனிலே நீ புக்கு."

" இலாஹென்று சொன்னதும் **நான்**தான்—**அல்
லா(ஹ்)**வென்று சொன்னதும் வேறில்லை **நான்**தான்
குலாவு **முஹம்மதும் நான்**தான்—மிக்கக்
கூப்பிட்டழைத்த றசூலதும் **நான்**தான்;

நூரென்று சொன்னதும் நான்தான்—நல்ல
நூரின் சுடரான ரூஹதும் நான்தான்
பூரண கல்பதும் நான்தான்—மிகப்
பூர்வீகமான நபுஸதும் நான்தான்." (கலிமா)

(மெய்ஞ்ஞானத் தெளிவு)

அனல்குர்ஆனு வஸ் ஸப்உல் மதானீ
வரூஹுர் ரூஹு லாரூஹுல் அவானீ
புஆதீ இன்த மஷ்ஹூதீ முகீமுன்
யுஷாஹிதுஹு வஇன்தகுமு லிஸானீ.

"குர்ஆன் எனப்படும் தாத்தும், ஸப்உல் மதானீ யாகிய பாத்திஹா வென்னும் ஏழு சிபாத்து ஆகிய பண்புகளும், இந்த ஜிஸ்மானியாவான ரூஹுக்கு அதீதமாகிய ரூஹுகளுக்கு ரூஹாகிய வஹ்தத்து என்கிற ஹகீகத்து முஹம்மதீயாவும் நானாகவிருக்கும். எனது கல்பு என்னுடைய தெரிசனையில் நிலைத்திருந்து அந்த உள்ளமையைத் தெரிசித்துக் கொண்டிருக்கிறது. என்னுடைய நாவு உங்களிடத்திலிருக்கிறது," என்று ஆரிபு பில்லா(ஹ்) வாகிய செய்யிதினா அலிய்யுன் கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் திருவுளம்பற்றியிருக்கிறார்கள்.

ரூஹுல் வுஜூதுல் கபீரு ஹாதல் வுஜூதுஸ் ஸகீரு;
"பெரிய வுஜூது என்னும் ஆலமடங்கலுக்கும் இந்த சிறிய வுஜூது (உள்ளமை) ரூஹாகயிருக்கிறது."

லௌலாஹு மாகால இன்னீ அனல் கதீருல் கபீரு;
"இது இல்லாதிருக்கில் அது நான் கதீர் என்னும் சத்துவமுள்ளவன், கபீர் என்னும் பெரியவன் என்று சொல்வதில்லை."

லாயஹ்ஜிபன்க ஹூ தூ தீ வலல்பனு வன் நுஷூரு;

"நான் நவீனமாயிருப்பதும், பனுவான அழிதலைப் பெறுதலும், அப்பால் என்னை எழுப்பி கேள்வி கணக்குக்காகப் பரத்துவதும் உன்னை தடுத்துவிடவேண்டாம்."

பஇன் தஅம்மல்து அன்னீ அனல் முஹீதுல் கபீரு;

"ஆராய்ந்து பார்த்தாயாகில் நிட்சயமாக நான் சகலவற்றையுஞ் சூழ்ந்துகொண்ட பெரியோனாயிருக்கும்."

பலில் கதீமி பிதாத்தீ வலில் ஜதீதி லுஹூரு;

"பூர்வீகமானவற்றிலும், புதியவற்றிலும் என்னுடைய உள்ளமையைக்கொண்டு வெளியாவதுண்டு."

வல்லாஹூ பர்துன் கதீமுன் லாய உதரீஹி குஸூரு.

"அல்லா(ஹ்)வென்பது பூர்வமான தனிப்பொருளாகும்; அதனை யாதொரு குறைவும் குறுக்கிடாது."

என்று நமது நாயகம் ஷெய்குல் அக்பர் (றலி) அவர்கள் சொல்லியிருக்கும் மேற்கண்ட **பைத்து**களும், இவற்றைப்போன்ற இதர **பைத்து**களும் அவர்கள் பரவசத்தால் மிகைக்கப்பட்டே மற்றவர்கள் சொல்கிறதுபோன்று சொல்கின்றார்களென்று எண்ணி, அநேகர் ஷெய்குல் அக்பர் (றலி) அவர்களுடைய பேச்சை விளங்காது போயினர். நீ அத்தகையோர்களைப்போல் அவ்வாறு ஆகாமல் இவற்றிடங்கியுள்ள அறிவை நன்கு விளங்கிக் கொள்வாயாக.

எவனொருவன் அந்த **நான்** என்பதை இவ்வாறாக விளங்கியறிந்தானோ அவன் நிட்சயமாக ஒரு

மெய்யனுகவே யிருக்கிருன். ஏனெனில், எந்த காரியமும்அந்த **நான்** என்ற ஏக அறிவைக்கொண்டு தான் முடிவைப் பெற்றிருக்கிறது.

ஹகாயத்து:— எனது குருபிரானிடத்தில் ஒரு **பகீர்** வந்து **முன்தஹீ** யாகிய தீர்க்கமான தேர்ச்சிபெற்ற ஓர் பக்குவமடைந்தவரின் நிலை எவ்வாறிருக்குமென்று கேட்டதற்கு, **ஷெய்கு** அவர்கள், "நான் என்பது தானுகி, மற்ற யாவற்றையும் பெண்ணுக்கி, **நான்** என்ற தன்னை மாப்பிள்ளையாகச் செய்துகொள்ளவேண்டும்," என்று பதிலிறுத்தார்கள். ஏனெனில், தன்னை நினைத்தல் **ஹக்**கை நினைத்தலா யிருப்பதினுலேயாம். எனினும், இந்த பாடத்தைக் கற்பித்துக்கொடுக்கவல்ல ஆசிரியர் மிகவும் அரிதாகவே காணப்படுகிருர். ஆகவே, **ஹக்**கையன்றி யாதொரு வஸ்துவுக்கும் **வுஜூது** என்னும் உள்ளமையும், **ஹஸ்**தியுமில்லை. ஏனென்ருல், **லாஹிரு** என்ற புறத்திலும், **பாதின்** என்ற அகத்திலும் அவன்தான் **ம்வுஜூது** ஆக உண்டாயிருக்கின்றபடியால், அவனுக்கு அன்னியமாக யாதொன்றுமில்லை. எனவே, இந்த அத்தியாயத்தில் **அனு** வென்னும் **நான்** என்ற அறிவை **வஹ்தத்து**டைய அறிவென்று சொல்லியிருப்பதால், அதனை அறியவேண்டியது எவ்வாறெனில், **லாத அய்யுன்** என்ற **குறிப்பற்ற தாத்து** ஆகிய **அஹதிய்யத்**தின் முந்தின தோற்றம் **நான்** என்னும் அறிவாகும் என்பதே. இதனை **வஹ்தத்து** என்றும், இதனின்றும் உண்டான சகல வஸ்துக்களையும் பொதிந்த நிலைக்கு **வாஹிதிய்யத்**தென்றும்

அழைக்கப்படுகின்றன. (அஹதியத்து-பிர்மாகாசம்; வஹ்தத்து-சிதாகாசம்; வாஹிதியத்து-பூதாகாசம் என்று விளக்கத்திற்காகவேண்டி இவ்வாறு பிரிக்கப் பட்டிருக்கிறது.) எனவே, **அல்லாஹுத்த ஆலா** நம் யாவருக்கும் இந்த அறிவை தனது கிருபையைக்கொண்டு நன்கொடையாக அளித்தருள் புரிவானாகவும். ஆமீன்.

*" நானென்னும் மெய்ப்பொருள் நாயன் தானாயிருக்க
கோனவனை வேறாகக் கூறுவதேன்?—ஆனால்
அரசனார் நீயாகும் ஆலமெல்லாம் உன்னிழலாம்
பரமனார் வேறுண்டோ பார்."*

*" ஆலச்சுவரி லெழுதும் படமதுபோற்
றாலச் சொரூபந்தானாகையான்
மூலமதற் காதி வுஜூதாகும்—ஆன ரூபங்களுக்கு
ஆதமீ நானென்றால் யார்?"*

*" நீ வேறாயிப்போது நீங்கியிருப்பதெல்லாந்
தேவாதி நானென்னுந் தேவனே—கோவே நீ
வேறென்றும் வேறொரு றப்புண்டென்றும் நின் மனதின்
மீறியதோர் ரெண்ணத்தால் விள்."*

(மெய்ஞ்ஞானத்தெளிவு)

★ பத்தாவது அத்தியாயம். ★

[இந்த அத்தியாயத்தில் **நூர்** ஆகிய ஜோதியைப்பற்றியும், நினைவு, மறதி ஆகியவற்றைப்பற்றியும், **கைபு** என்னும் அந்தரங்கத்தின் அழைப்பு, அதன் பொக்கிஷம், அதன் பாதை ஆகியவற்றைப் பற்றியும் விவரித்துப் பேசப்படுகின்றன.]

அருமையானவனே! அறிந்துகொள்வாயாக:—

சிலர் நான் என்பதை **அவன்** என்பதிலும், **அவன்** என்பதை **நான்** என்பதிலும் **பனா** வென்னும் இன்மையாக்குவார்கள். **கமாலிய்யத்து** என்னும் பூர்ணமாகிய பார்வை உனக்கு ஏற்பட்டிருக்கும் பட்சத்தில், முந்தியது இருந்தபோதிலும் பிந்தியதின்பேரில் நோட்டம் வைப்பாயாக. ஏனெனில், முந்தியது **நுபுவ்வத்**தைச் சேர்ந்த பார்வையாயும், பிந்தினது **விலாயத்**தைச் சேர்ந்த நிறமாகவுமிருக்கிறது. ஆகையால், **நான்** என்பதை விட்டும் நடந்தாயாகில் **ரூஹு** இருப்பதைக் காண்பாய். அந்த ரூஹை விட்டும் நடந்து தெளிவான **நூர்** என்ற கப்பலில் **நூஹு** (அலை) அவர்களைப்போன்று ஏறி இருந்துகொள். இந்த ஸ்தானத்தில் வணக்கமும், வணக்கப் பொருளும், வணங்குபவனுங் கிடையாது. அதாவது ஆண்டவன், அடிமை, **இபாதத்து** என்ற இம் மூன்றுமில்லை. மேலும் தண்ணீர், கப்பல், கப்பலோட்டி; விதை, பஞ்சு, நூல், பிடவை; மழை, மரம், மேகம் என்ற சம்பந்தம் யாவற்றையும் விட்டு இந்த **நூர்** என்ற ஜோதி நீங்கியிருக்கின்றது. எனவே, இந்த பாதையில் இல்லாமை என்பது உண்டாயிருக்கிறது; ஆனல், இங்கு அந்த **இல்**

லாமை என்பதும் இன்மையாகத்தானிருக்கின்றது. இல்லாமையின் இல்லாமை என்பது தனக்குத்தான் தெரிந்த ஒன்ருகும். ஏனெனில், இந்த இல்லாமையில் **நான்** என்பது தரிபட்டும், **தான்** என்ற ஆசை உண்டாயிருக்கிறபடியாலுமாம். ஆகையால், இந்த **நான்** என்பது எப்பொழுது அற்றுவிடுமோ அப்போது **மஹ்பூபு** ஆகிய நாயகி உன்னை மிகவும் காதலிக்கத் தொடங்குவாள். இத்தகைய **இன்மை** தான் என்றும் நீங்கிவிடாத தரிபாட்டைப் பெற்றது. இவ்விடத்தில் **நான்** என்பது அற்றுப்போயிருக்கிறது மேலும் இந்த நீக்கற்கரிய **நான்** என்பதை நீக்கிக்கொள்ள நாடினல், **நான் இல்லை** என்ற தீயில் விழுந்து சதாவும் வேகவேண்டும். இந்த **நான்** என்பது **விலாயத்து** என்ற அறிவாகயிருக்கிறது. எனவே, இந்த அறிவை **நான்** என்பதாக அறிந்துகொள். ஆகையால், இந்த அறிவு எதுவரை உருகிப்போகவில்லையோ, அதுவரை நீ யாது செய்திடினும் இந்த **நான்** என்பது நீங்கமாட்டாது. ஆனல், இந்த அறிவு உருகுவதற்கு உனது பூர்வகால நண்பனை **ஹக்குத ஆலா**வுடைய கிருபை உனக்கு அத்தியாவசியமாய்த் தேவைப்படுகின்றது. எனினும், சங்கைமிக்க **கரீம்** ஆகிய நாயன் உன்னளவில் அவனைச் சேர்த்துக்கொள்ள அதி தூரத்திலில்லை. **வஹுவமஅகும் அய்னமாகுன்தும்** 'நீங்கள் எங்கிருப்பினும் அவன் உங்களோடிருக்கிறன்,' என்று அல்லாஹுத்தஆலா திருமறையில் அருளியிருக்கிறன். ஆனல், பெரியோர்கள் இந்த நிலையை **மர்மமாகிய பதவி** யென்றும், இணையை இருநான்

போக்குகின்றதென்றும், மனிதர்களுக் கேற்படும் **உரூஜ்** என்ற **படி ஏற்றம்** இந்த ஸ்தானம் வரை தான் உண்டென்றும், இதற்குமேல் தானமில்லை யென்றும் கூறுகின்றனர்.

அறிவாயாக:— திரிசியமாகிய காணப்பட்ட இவ்வுலகினைப் போன்று எண்ணற்ற உலகங் களை சிருஷ்டிகர்த்தா படைத்திருந்தாலும், இந்த **நாசூத்து** ஆகிய ஸ்தூல உலகு சிருஷ்டிகள் யாவற் றிற்கும் உயிர்போன்றிருப்பதால் இதற்கு சர்வ உலகங்களிலும் குடியிருப்பு ஸ்தானம் உண்டா யிருக்கிறது. இன்னும் மற்ற உலகங்களைப் பார்க் கினும் இந்த ஸ்தூல உலகு விநோதமானதாயும், பொறுக்கி எடுக்கப்பட்டதாயு மிருக்கின்றபடியால், சர்வலோகங்களின் நடுவிலும் இந்த ஸ்தூலம் (**நாசூத்து**) வெளியீடாயிருக்கிறது. இந்த **நாசூத் து**டைய முடிவாகிய **தீர்க்க ஸ்தானம் இன்ஸான்** ஆகிய மானிடன்தான். மானிடனின் உள்ளமையின் தீர்க்கம் **கல்பு** (மனம்); கல்புடைய தீர்க்கம் **ரூஹு** (ஆத்மா); ரூஹுடைய முடிவு **நூர்** (ஜோதி); இதற் குப் பின்னர் **நூரை**த்தவிற வேறொன்றுமில்லை.

மேலும் அறிவாயாக:— **நாசூத்து** (ஸ்தூலம்) ஆகிறது **லாஹூத்து** (மகாகாரணத்து)க்கு நேரிட் டதாயிருந்தபடியால் **கமால்** என்னும் பூர்ணப்புதவி யைப் பெற்றுக்கொண்டது. அஃதெவ்வாறெனில், சந்திரனது சூரியனுக்கு நேர்கோட்டில் வரும் பொழுது பூர்ண சந்திரனாக ஆதல் போன்றும். ஆனால் சூரியனையன்றி கிஞ்சிற்றும் சந்திரனுக்கு

ஒளி யென்பது கிடையாது. இதுபோல் **நாசூத்**துக்கு **லாஹூத்**தின்றி **வுஜூது** என்னும் உள்ளமை கிடையாது. எனினும், அவரவரின் விளக்கத்திற்கேற்ப, சிலர் **சாய்கை** என்றும், வேறு சிலர் சுயார்த்த **ஹக்கு** என்றும் அறிந்திருக்கின்றனர். ஆகவே ஸ்தூலத்தை முக்கிய ஸ்தலமென்றோம். **நூர்** ஆகிய ஜோதி சொரூபங்களின் வாசஸ்தலமாயிருக்கிறது; பிரகாசம் தரித்திருப்பதற்கு இரத்தினம் வீடாக இருத்தற் போன்றும். சூரியனைக் கொண்டு பகற்பொழுது உண்டாயிருத்தற்போன்று **நூர்** ஆகிய ஜோதிக்கு யாதொரு அழகும், சப்தமும், ரூபமும் இல்லாதிருந்தபோதிலும் ரூபங்கள் யாவும் அதனுல்தான் உண்டாயிருக்கிறது. ஆயினும் யதார்த்தத்தில் பகற்பொழுதுடன் சூரியன் சேர்ந்துவிடவுமில்லை, சூரியனின்றி பகற்பொழுது வெளிப்படவுமில்லை. பகற்பொழுது எவ்வாறு சூரியனைக் கொண்டு வெளியீடாயிருக்கின்றதோ, அவ்வாறே இந்த **மஜாஸீ** யாகிய ஸ்தூலம் **மஃனவீ** யாகிய **நூர்** என்ற ஜோதியைக்கொண்டே தோன்றியிருக்கிறது. பஞ்சவர்ணக் கிளியும், காகமும்; செம்மரமும், கருங்காலியும்; சந்தனக்கட்டையும், பீநாறிக் கட்டையும்; மற்றும் யாவும் அந்த **நூரை**ச்சேர்ந்ததாகவே யிருக்கின்றன.

இன்னும் அறிவாயாக:— இந்த நூரை மேன்மையான வஸ்திலும், தாழ்மையான வஸ்திலும் பார்த்தறிய இயலாது. பால்குடி குழந்தையைப் பார்த்து அறிந்துகொள். குழந்தையாகிறது மெய்யாக தானிருந்தும் இன்மையாயும், பிறரைத் தெரி

யாததுபோன்று தன்னையும் தனக்குத் தெரியா திருக்கிறது. இன்னும் தானிருப்பது தனக்குத் தெரிந்தால் நன்மை, தீமை இன்னவை என்றும், லாபநஷ்டம் இன்னவை யென்றும், உற்ருரும், மற்ருரும் இன்னுரென்றும் அறிந்திருக்கக்கூடும். இஃதன்றி, தன்னை நோவினை பண்ணும் பாம்பு, தேள், புலி முதலான விஷஜந்துக்களை க்கண்டால் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள எத்தனியாததால் அக் குழந்தை நான் என்ற மதத்தை விட்டும் பரிசுத்தமா யிருக்கிறது. இந்த காரணங்களைக் கொண்டுதான் பாலகனைப் பெரியோர்கள் **நூர்** என அழைக்கின்றனர்.

வினு:— **இர்பான்** என்ற **அறிவு** இன்றி எவ்வாறு ஓர் குழந்தை பால் குடிக்கும்? **நான்** என்பதும் அதற்கு எவ்வாறு உண்டாகும்?

விடை:— **அறிவு, நான்** என்ற இவ்விரண்டும் குழந்தையின் **தாத்து**டைய குணமாயும், மற்றவை அதன் **சிபாத்து** என்னும் பண்புகளாயு மிருக்கின்றபடியால், **தாத்தை**ச்சேர்ந்த இவ்விரண்டும் அறவே நீங்கிவிடுதலென்பது அசாத்தியம்; அவற்றின் **கத்ரு** எனும் அளவுக்குத் தக்கவாறு இல்லாது போகாது. ஆனல் அவை நாள்தோறும் விருத்தியடைந்து கொண்டேவரும். குழந்தைப் பருவத்தினின்றும் நாளடைவில் வளர்ச்சி பெற்று வந்து, வாலிபப் பருவத்தை யடைந்ததும் இவ்விரண்டும் பூர்ணத்தையடையும். **இர்பான்** வளர வளர **நான்** என்பது **கமால்** எனும் பூர்ணத்தைப் பெற்றுவிடும். இது குறைய குறைய **நான்** என்பதும்

அத்துடன் சேர்ந்துவிடும். இன்னும் வாலிப மடைந்தவேளை **அறிவு** வாலிபமாயும், அப்பொழுது மறைந்திருந்த **ஜமால்** ஆகிய **நான்** என்ற உள்ளமை வெளியினில்வந்து தன்னை சிறப்பமுடைய தாகவும் காட்டும். வயோதிகமானல் இந்த **அறிவு** குறைந்து **நான்** என்பது அற்றுப்போகும்.

அறிவாயாக:— எப்பொழுது **நூரில்** அறியுந் தன்மை உண்டாகுமோ அப்பொழுதே **நூர்** என்ற பெயர் நீங்கி **ரூஹு** என்ற பெயரை அடையப் பெறுகிறது. எப்பொழுது அறிவு அற்றதோ அப் பொழுது இந்த **நான்** என்பதும் எடுபட்டுவிடும். அவ்வேளை **ரூஹு** தன்னை **நூர்** என்பதாய்ப் பெற் றுக் கொள்ளும். **நூர்** என்பது **அறிவு, அறி யாமை** யாகிய இவ்விரு பண்புகளையும் விட்டு நீங்கி யிருக்கிறது; எனினும் **அறிவும், அறியாமையும்** அதனைக் கொண்டுதான் சமைந்திருக்கின்றன. மேலும் சகல ஜீவர்களிலும் அந்த **நூர்** இருக்கிறது; இன்னும் சரீரங்கள் யாவும் அதனைக்கொண்டே பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. ஆனல் சிலர் ஸ்பரிச அறிவைக்கொண்டு சரீரத்தை **நூர்** என்று அறிந்திருக்கின்றனர். வேறு சிலர் அறிவையும், உயிரையும் **நூர்** என்று பெயர்வைத்திருக்கிறார்கள். சிலர் எப்பொழுது அறிவு அற்றுப்போகுமோ அப் பொழுது அந்த நிலையை **நூர்** என்றும் தங்கட் தங்களுக்கு தெரிந்தவரை பலவாறக அறிந்திருக் கின்றனர். எனினும், அந்த **நூர்** சகல வஸ்துக் களின் 'அறிவினுக்கும் அதீதமாகிய மேன்மை' யைப் பெற்றதாய் சிறிதினும் சிறிதாகவும், பெரி

தினும், பெரிதாகவும், முன்னிருந்தவாறுபோல் சதாகாலமுமிருந்து இந்த கண்டத்தில் சேர்ந்திருக்கின்றதென்று அறிந்துகொள்கிறதன்றி, கண்டப் பொருளாக அவ்வேளை ஆய்விட்டதென்று நான் கூறத்துணியேன். அவ்வாறு சொல்வதைவிட்டு மௌனமாயிருத்தல் நலம்.

மேலும் அறிவாயாக:— **நப்ஸு**, **ரூஹு**, **கல்பு** என்ற மூவ்வுலகங்களையும் **இர்பான்** ஆகிய **அறிவு** என்னும் செக்கில்போட்டு ஆட்டி எண்ணையை எடுத்தாயாகில், அதுவே **நூர்** ஆகயிருக்கும். இந்த **நூர்** ஒன்றே ஆணிமுத்தைப் போன்றும், மற்ற யாவும் கொட்டைப் பாசியைப் போன்றுமாகும். ஆகையால் எவனொருவன் இந்த **நூரைக்** கொண்டு **நூர்** ஆகிவிட்டானோ அவனுக்கு **மரணமின்மை** என்ற முத்து கைவசமாகிவிட்டது. அந்த நேரத்தில் நன்றியும், நன்றி செலுத்துபவனும் இல்லாததா யிருக்கிறபடியால் தியானமும், ஞானமும் அற்றுப்போய், ஜபமும், தபமும் எறிந்துபோய், ஒருவகை **மறதி** மனதில் வரும். இந்த தானத்தில் நினைவைவிட **மறதி** நலமாயும், **மஹ்பூபு** ஆகவுமிருக்கிறது. ஆகையால் **நீ நினைவற்றிருப்பாயாக;** ஏனெனில் இந்த நினைவுதான் **நான்** என்பது உண்டாகும் அஸ்திவாரமாயிருக்கிறது. இந்த **நினைவு** உயிராகவும், **மறதி** நூராகவுமிருக்கிறது. நினைவு மறதியிலிருந்து உண்டாயிருப்பதன்றி, மறதி நினைவிலிருந்து ஏற்பட்டில்லை. ஏனெனில் மறதி முந்தியும், நினைவு பிந்தியுமிருப்பதால்தான் **மனம்** நினைவு வந்தபிறகே சந்தோஷமடைகின்றது. ஆகையால்

சிறப்புற்றவனே! மறதி உருகிய பின்னரே நினைவு ஏற்படுகின்றபடியால் இந்த நினைவை அநியாயமாக வீணில் செலவழித்துவிடவேண்டாம்.

அருமையானவனே! அறிவாயாக:— **கைபு** என்ற மறைவிலிருந்து ஒரு **தொனி** சதாவும் மாறுதலின்றி முழங்கிக்கொண்டிருக்கிறது. எனினும், அந்த இராகத்தைக் கேட்பதற்கு தகுதிபெற்ற செவி எங்கிருக்கிறது? ஆகவே அந்த **கைபு** என்னும் மண்ணிலிருந்து ஏற்படும் **தொனி**யை மட்டும் கேட்கமுடிகிறதேயன்றி அது உண்டாகும் தலத்தைக் காணப்படவில்லை. இந்த **தொனி** எல்லா தொனிகட்கும் எஜமானனாயும், மற்ற தொனிகள் யாவும் **பகீர்** ஆகவுமிருக்கிறது. **கனீ** தேவையற்றதாகவும், இந்த உலகினுக்கும், இஃதன்றிய மூவுலகினுக்கும் வித்துபோன்றும், வித்து விளையுந் தானமாயுமிருக்கின்றது என்று மகான்கள் கூறுகின்றனர் இந்த தொனியை. ஆனால் இந் நூலின் நுட்பத்தை உனக்கு யாரேனும் விளக்கிக் காட்டாதவரை இந்நூலை ஏட்டு ஞானமாக ஓதிவருவதால் உனக்கு காரியம் எவ்வாறு சித்திக்கும்? இந்த **ஷுக்லு** ஆகிய **சாதனை** சகல சாதனைகட்கும் அரசனாயிருக்கிறபடியால் **அல்லாஹுத்தஆலா** இதனை தான் நாடியோருக்கு அளித்தருள்வான்.

சத்தம் பிறந்தவிடத்தில் சகல கலையும் பிறக்தும்
அத்தனுக் கீசனமைந்த விடம்—அத்தன்
சத்தமே சத்தம் சஞ்சலம் வேறெண்ணாதே
சத்தமே சுத்த சிவம்.

சிறப்புற்றவனே! அறிவாயாக:— சிற்சில வேளை மனிதன் திகைப்படைந்தவனாய் யாதொரு கோலமும், நிறமும், குணமுமின்றி யிருக்கையில், அவனில் அறிவும், பார்வையும், சுகமும், துக்கமும், அச்சமும், ஆதரவும், இரவும், பகலும், சந்திரனும், சூரியனும் மற்றும் விவரங்கள் யாதேனுமின்றி இருக்கிறான். எனவே, எந்த **வக்து** என்னும் நேரத்தில் **இல்லை** என்பதும், **உண்டு** என்பதும் இல்லாதிருக்கின்றதோ அது எத்தகைய **நேரம்** என அறிவாயாக. அவ்வாறிருக்கையில் திடீரென **இர்பான்** என்ற அறிவு முளைக்கிறது: அதில் **நான்** என்பதுண்டாகி, அதிலிருந்து ஒரு செயல் நிகழ்ந்து முறையாக வெளியீடாகிறது. இவ்வாறாக வெளியினில் வந்து, ஒரு கோலங்கொண்டு, தனக்கே தன்னைக் காண்பித்துக்கொள்கிறது. இந்த பாதையோ சகல வஸ்துக்களும் வெளியீடாதற்குரிய பாதையாயிருக்கிறது. யாவருக்கும் இது அறிவிக்கப் படக்கூடாததோர் பாதையாகவு மிருக்கின்றது. ஆகையால் இதற்காகவேண்டி யாயினும், அந்தரங்கமாகிய மறைபொருளை நீ விளங்கியறிந்துகொள். **வஹ்மு** என்ற விபரீத புத்தியுடையவனாக நீ ஆகி எதற்காக வீணில் துன்பப்பட்டு உழல்கின்றாய்?

மேலும் அறிவாயாக:— வர்ணிக்கப்படவியலாத பரிசுத்தமான மேன்மையினைப்பெற்ற **கன்ஸுல் மக்பீ** எனும் **லாதஅய்யுன்** ஆகிய குறிப்பற்ற பராபரப் பதவியில் **இல்லை, உண்டு** என்பதும், நான், நீ என்பதும், சடம், உயிர் என்பதும், அறிவு, அறிவின்மை என்பதும் இன்மையாயிருக்

கின்ற அவ்விடத்தின் இரகசியத்தை என் சிநேகிதர்கள் தன்னில்தான் நோட்டமிட்டு உற்றுணர்ந்து எழுதினரேயன்றி சொப்பனத்தில் கண்டு எழுதினதன்று. ஏனெனில் கனவில் காணும் விஷயங்களின் உண்மையில் விதர்ப்பமேற்பட்டிருக்கிறது. ஆனால் அனுபவத்தாலறிந்த இதில் எக்காரணத்தாலும் பிசகேற்பட வழியில்லை. எனினும் எவரொருவர் தனது **முகையிது** ஆகிய கண்டத்தை **முத்லக்** என்ற அகண்டமாகக் கண்டிருக்கிறாரோ அன்னாருக்கு அவருடைய **கல்பு**தான் மஹ்பூபாக இருக்கிறது. நாயனருளால் கிடைக்கப்பெற்றாலே யொழிய இந்த **வஹ்தத்து**டைய பாதை எளிதில் சித்திக்கமுடியாத அவ்வளவு கஷ்டங்களால் நிறம்பியுள்ளதாகும். நாயனின் அருள் இன்றேல் தரிபாட்டற்றோரின் கழுத்தில் **வஹ்தத்து** என்கிற பூமாலை எவ்வாறு விழும்?

ஹிகாயத்து:— **மத்ஹபு**, குப்ரு, **தீன்** முதலான யாதொன்றுமின்றியும், **மஹ்பூபை**த் தவிற யாதொன்றையும் அறியாதவராயும், சரீரத்தில் பூர்ணத் தன்மையின் அடையாளம் பெற்றவராயும், யாதொரு ஆதாரமும், ரூபமுமின்றி பரிசுத்தமானவராயுமிருந்த விபரீதமின்றிய தெளிந்த சின்மயானந்த பேரின்ப அனுபூதி நிலையில் தரிபட்ட ஒரு **பைராகி** ஒருவர் இருந்தார். அந்த மகான் எனது **ஷெய்கு** அவர்களுடைய இல்லத்துக்கு வரவே, அங்கே குழுமியிருக்கும் ஏனைய மகான்கள் ஒருவருக்கொருவர் சம்பாஷித்துக் கொள்ளாமல் மரியாதையுடனும், ஒழுக்கத்துடனும் மௌனித்

திருந்தனர். அப்போது திடீரென்று ஷெய்கு அவர்கள் அந்த மகான் அவர்களைப்பார்த்து, "அந்தரங்கத்தின் பாடத்தை பாராமல் பாடமிட்டுக்கொண்டவர்களும், ஹக்குடைய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டவர்களுமான தங்களுடைய திருமொழிகளைக் கேட்க நானும், எனது நண்பர்களும் ஆசித்தவர்களாயிருக்கின்றோம். ஆகையால் ரூஹு என்ற கண்ணாடி ஒளிவைப்பெற்று, மஹ்பூபைத் திரையின்றி காணும்படியான கணக்குப் புள்ளியையும், நுட்பத்தையும் தாங்கள் எங்களுக்கு தெளிவு படுத்திக் கூறவேண்டும்," என்று கேட்டார்கள். அதற்கு அந்த மகான் அவர்கள் "நான் சொல்லவேண்டிய விஷயங்கள் மகா நுட்பமுடையனவாயிருக்கின்றன. அவற்றை நான் அனுபவமாகப் பார்த்தறிந்தும், பிறர் கூறக்கேட்டும், கிரந்தவாயிலாய்ப் படித்தும் இருக்கிறதன்றி சில பாடல்களான பைத்துகளும் கோர்வை செய்திருக்கிறேன். அவற்றை வெளிப்படுத்த சிறிது தயங்குகிறேன். எனினும், வற்புறுத்துவதால் இப்பொழுது சொல்லக் கேட்பீர்களாக. வஹ்தத்து என்ற பாதை நான் நடந்தேறமுடியாததொன்றேயாம்; ஏனெனில், அந்த பாதையில் முந்தின பாதத்திலேயே என்னை நான் பார்த்தால் நான் என்பது காணாது போய்விடுகின்றது. ஆகையால் பேச்சு, வார்த்தை; கவி முதலானவற்றை மறந்துவிட்டு, சும்மாயிருப்பதுவே சுத்த பரிபூர்ணமாயிருக்கிறது," என்று பதிலளித்தார்கள். அதற்கு ஹலறத்து அவர்கள் நாம் சும்மாயிருந்து விடக்கூடாதென்றெண்ணியவர்களாய் முந்தின பாதமாகிறது என்னவென்று கேட்டார்கள். அதனை

விளக்கவேண்டுமென்று கேட்டபோது மகான் அவர்கள், "அது நன்மையாயும், இது தீமையாயும், அது பரிசுத்த **நூர்** ஆகவும், இது நெருப்பாகவும், அது மார்க்கத்தின் நண்பனுயும், இது விரோதியாயும், அது **ஆரிபு** ஆகிய ஞானியாயும், இது **முஷ்ரிகு** ஆகிய இணைவைப்பவனும், அது **செய்யிது** ஆகவும், இது **ஷெய்கு** ஆயும், அது **முத்லக்**காகிய அகண்டமாயும், இது **முகையிது** ஆகிய கண்டமாயுமிருக்கின்றன. எனவே இதனை நீங்கள் அறியீரோ? ரூபாயையும், பணத்தையும், காசையும் விராகனினுள் காண்பதைப்போன்று பிரபஞ்ச அணுக்களாகிய **காணப்பட்டவை** யாவற்றையும் அகண்டேகமாக்குதற்கு ரூபம், அரூபம், தத்துவம், செயல்கள் ஸகிதம் **நான்** என்ற தத்துவத்தில் நின்றும் எடுத்துக்கொள்கிறேன், அல்லது என்னை யாவற்றிலும் இழந்தவனுய் பரிசுத்தமாக இருக்கிறேன்," என்று கூறினூர்கள்.

எங்கள் இறைவனே! எங்கள் **நூர்** ஆகிய ஜோதியை எங்களுக்காக சம்பூர்ணப்படுத்துவாயாக. மேலும் எங்கள் குறைகளையும் பொறுத்துக்கொள்வாயாக. நிட்சயமாக நீயே சகல வஸ்துக்களின் மீதும் சக்தியும் அதிகாரமுமுள்ளவன்.

★ பதினென்ருவது அத்தியாயம். ★

[இந்த பதினென்ரும் அத்தியாயத்தில் **இர்பான்** என்ற மெய்ஞ்ஞானத்தை அடையப்பெற்ரேருடைய விவரத்தையும், **நுபுவ்வத்**தென்னும் தீர்க்க தரிசனம், **விலாயத்**தென்ற வலித்தனம் ஆகியவற்றின் விவரத்தையும், **நள்ரு** என்னும் பார்வை, **சாஹிபுந் நள்ரு** என்ற பார்வையுடையோர் ஆகியவற்றின் விவரத்தையும்பற்றி விரிவாகப் பேசப்படுகின்றன.]

அருமையானவனே! அறிந்துகொள்வாயாக:—

இர்பான் என்ற மெய்யறிவு அல்லது மெய்ஞ்ஞானம் எவனொருவனுக்கு சித்தித்து, சந்தேகம் நீங்கிய நிறப்பத்தை அடைந்தானே அவன் இந்த **துன்யா**வுடைய பாதையையும், நடத்தையையும் விட்டு முற்றும் நீங்கியிருக்கக்கூடிய அறிகுறியைப் பெற்றிருப்பான். எப்பொழுது இந்த அறிவு அற்றுப்போய் அறியாமை ஏற்படுமோ அப்பொழுது அவனுடைய காரியாதிகள் சம்பூர்ணத்தைப்பெறும். ஏனெனில், இந்த அறிவு **முகையிது** எனும் கண்டத்தையும், அறியாமை **முத்லக்கு** எனும் அகண்டத்தையும் சேர்ந்திருக்கின்றன.

இன்னும் அறிவாயாக:— **அபது** என்பதிலுள்ள **பே** என்ற அட்சரத்தைப்போன்று **அஜல்** என்பதும், **அஜல்** என்பதிலுள்ள **ஜே** என்ற அட்சரத்தைப்போல் **அபது** என்பதும் அகப்படவேண்டும். வானம் பூமிக்குத் தாழ்ந்து, பூமி வானத்துக்குமேல் உயர்ந்து போகவேண்டும். நித்திரை விழிப்பிலும், விழிப்பு நித்திரையிலும் மறைந்துவிட

வேண்டும். காரணலோகமாகிய **ஜபருத்து** சூட்சும லோகமான **மலகூத்**தில் சேர்ந்துவிடவேண்டும். வயிற்றில் கெர்ப்பந்தரிப்பதுபோல் சூட்சுமமானது ஸ்தூலத்தில் வந்துவிடவேண்டும். இவ்விதமாகவே **ஆரிபீன்** ஆகிய ஞானசொரூபிகளின் **மிஅராஜ்** ஆகிய **படி ஏற்றம்** ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய இராஜரீகம் **ஆரிபீன்**களுக்கன்றி பிறருக்கில்லை. **ஆரிபீன்**கள் அந்தரங்க அரசர் அல்லது **ஹகீகி**யான சுல்தானுயிருக்கின்றனர். **மஜாஸீ** என்ற வெளியரங்க சுல்தான் இந்த சடலோகத்தின் காரியாதிகளை மட்டும் சரிவரச் செய்துகொண்டு தன்னை அறியாமலும், தன் காரியத்தைச் செய்யாமலும், தன்னை மறந்து வீண்காரியத்தில் பிரவேசித்து ஒரு நாட்டைப்பிடித்தும், மற்றொரு நாட்டைப்பிடிக்க கவலை கொண்டும், தன்மீது வெற்றியடைந்து ஜெயித்தவனை விட்டு விலகியும், தன்னுல் ஜெயிக்கப்பட்டு தோல்வியுற்றவனை தனக்கு ஆகுமாக்கிக் கொண்டுமிருக்கிறான்.

" **துன்யா**வுடையவர்கள் முத்லக்கான **காபி ரா**வர்; அவர்களின் தொழிலோ வாய் ஓயாது தின்பதும், வாய்மூடாமல் வீண்பேச்சு பேசுகிறதுமாயிருக்கும். "

" **துன்யா**வென்பது **ஹக்**கை மறந்திருத்தலன்றி, பல்வேறு நிறமுள்ள வஸ்துக்களும், பொன், வெள்ளி, பெண் ஜாதி பிள்ளைகளுமன்று," என்று மௌலானு ஜலாலுத்தீன்ரூமி (கத்தஸ) அவர்கள் தங்கள் **மத்னவீஷரீபி**ல் கூறி யிருக்கிறார்கள்.

அல்மாலு வல்பனூன ஸீனதுல் ஹயாத்தித் துன்யா ‘ஆஸ்தியும், பிள்ளைக்குட்டிகளும் இக லோக வாழ்க்கையை அழகு படுத்துபவை யாகு’ மென்று **அல்லா(ஹ்)** தனது திருமறையில் கூறி னேயன்றி, ஆஸ்தி, பூஸ்தி, பிள்ளைக்குட்டிகளை **துன்யா**வென்று சொல்லவில்லை. ஆகையால் இந்த **துன்யா**வுடைய அரசர்களை ஏனையோர் அரசர் களென்று அழைத்திட்டபோதிலும் நான் அவ்வாறு கூறத்துணியேன். எனினும், **இர்பான்** என்ற ஞானத்தை பூர்த்தியாக அடைந்தோரை நான் **சக்ரவர்த்தி** என்று கூறத்தயங்கேன். வருவதும், போவதும், **ஹஸ்தீ** என்னும் நகாராவை அடிப்ப தும் அவர்களாயிருக்கின்றபடியால் அவர்களது பேச்சைத் தவிற மற்றவர்களின் பேச்சைப் பேசு வதே மிலேச்சத்தனமாகும். ஏனெனில், அவர்கள் புஷ்பத்தைவிட மணமிக்க மேன்மையையும், ஏனை யோர் சருகினைப்போன்ற தாழ்மையையும் பெற் றிருக்கின்றனர். அவர்களை உன்னைப்போன்று மதித்துவிடாதே. அவர்கள் மகிமை வாய்ந்தோரா யிருப்பதால் அவர்களை மகத்துக்களென்றெண்ணிக் கொள். மேலும் அவர்கள் **அல்லா(ஹ்)** (ஜல்) **ரசூல்** (ஸல்) ஆகியோரால் நேசிக்கப்பட்டோர்களாகும். அவர்களின் சரீரம் வெறும் சரீரமட்டுமன்று; இரத் தினம் விளையுந்தலமாயும், இரத்தினம் வீற்றிருக்கும் **பங்களா**வாயுமிருக்கின்றது. ஆகையால் ‘இரத்தி னத்துடைய இன்பம் அவர்களுக்கே உண்டாயிருக் கிறது. சிவந்த நிறமுடைய யாவும் இரத்தினமன்று. பஞ்ச பூதமாகிய பிசாசு பிடித்தவன் அவர்களை பைத்தியக்காரர்களென்று எண்ணி வருகிறன்.

அவர்கள் கொடுமையும், பெருமையுமின்றி போலியையும், யதார்த்தத்தையும் சமமாகப் பாவிக்குந் தன்மையைப்பெற்றவர்கள். சூரியனையும், தாமரையையும் ஒரே அளவாகக் காண்போராவார். யாரிடத்தும் யாசகங்கேட்கவோ, அன்றி, மனிதரிடத்து குணவந்தராவதை ஆதரவுவைக்கவோ மாட்டார்கள். ஏனெனில், இவ்வாறு ஆதரவுவைப்பதால் **நான்** என்ற அகம்பாவமுண்டாகி, அவர்கள் சம்பாதித்து வைத்திருக்கும் **கமாலியத்து** என்ற பூர்ணத் தன்மை எரிந்துபோகின்றபடியால், சீசா, மதுபானம், கோப்பையென்று பாகுபடுத்தாது, **ஹக்**குக்கு அன்னியமான யாவற்றையும் **ஹராம்** ஆகிய விலக்கப்பட்டவையென்று அறிந்திருக்கின்றனர். மேலும் அவர்கட்கு நினைவு இன்னதென்றும், மறதி இன்னதென்றும் விளங்காது. அவர்களுடைய நினைவில் மறதி என்பதே கிடையாது. இன்னும் அவர்கள் நினைவைச்சேர்ந்தோ அன்றி நீங்கியோ இருக்கிறதில்லை. தங்கள் முகத்தை **மஹ்பூபு**டைய திசையில் திருப்பிக்கொண்டவர்களாகும் இன்னோர். அவர்களின் சரீரம் நாசத்தையடையாது. ஏனென்னில்; **ஹக்குதஆலா** அவர்களின் சரீரத்தை சரியான முறையில் தனது கரத்தினால் பதப்படுத்தியிருக்கின்றான். மேலான அறிஞன் என்று தங்களை அழைப்பவன்பேரில் மகிழ்ச்சியடைவதையும் சர்வ மூடன் என்று கூப்பிடுபவன்பால் கோபிப்பதையும் அவர்களிடம் எதிர்பார்க்க முடியாது. **இஷ்கு** (காதல்) என்ற தீயில் அவர்கள் வெந்துபோய் அதே **இஷ்கு** ஆகிய ஆற்றில் விழுந்து நீர்ச்சுழியினால் இழுத்துச் செல்லப்பட்டபோதினும், மேன்மை

பெற்ற கடலுக்கும், தாழ்மையான மீனுக்கும் நல வாகவும், சரிசமமாகவுமிருப்பார்கள். ஏனெனில், யாவற்றையும் தானுகக்கண்டு பழகியிருக்கையில் பகையும், நட்பும் அவர்களில் எவ்வாறு தொனிக்கும்? மேலும், ஓரிடத்திலிருந்து இவ்விடத்திற்கு வரவும், இவ்விடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் போவதுமில்லை. இவ்விடத்தில் எவ்வாறிருந்தனரோ அவ்வாறேதான் அவ்விடத்திலு மிருக்கின்றனர். ஆனால் அவர்கள் யாரெனவும், எத்தகையோரென வும் நீ என்னைக் கேளாதே. மேலும் இம்மார்க்கம், **மதுஹபு** ஆகியவற்றின் **அஸ்லு** ஆகிய மூலம் எப்பொழுது அவர்களுக்கு கைவசமாயிற்றோ, அப்பொழுது அவர்கள் அம்மார்க்கம், **மதுஹபு** ஆகியவற்றை ஒப்புக்கொண்டு நடக்கமாட்டார்கள். ஏனெனில், எவன் மார்க்கங்களின் மூலத்தை அறிந்திருக்கின்றானோ அவன் தன்னை யாதொரு மார்க்கமின்றியவனாக அறிந்திருப்பான். மார்க்கம் பலதாயிருந்தபோதிலும் அவற்றில் தர்மநீதி காணப்படுவதில்லை. அப்படியிருப்பினும் பொருள் ஒன்றாயும், விவகாரம் மிகுந்துமிருக்கின்றன; எனவே, இந்த சரீரத்தில் **கல்பு** என்றழைக்கப்படும் தூய்மையான மார்க்க மொன்றிருப்பதால் இந்த சரீரத்தின் மார்க்கத்தின்பால் **ஆரிபு**கள் ஏறிட்டுப்பார்ப்பதே இல்லை.

மேலும் அறிவாயாக:— **நுபுவ்வத்து, விலாயத்து** ஆகிய இவ்விரண்டிலும் இந்த சரீரத்தின் பேரில் **நுபுவ்வத்து** அடையாளமாயும், **விலாயத்**தென்பது **இர்பான்** என்ற அறிவாகவுமிருக்

கின்றன. **நுபுவ்வத்து** சரீரமாகவும், **விலாயத்து** உயிராகவுமிருக்கின்றன. அது கையாயும், இது வாளாயுமிருக்கின்றன. அது **ஜபரு** ஆகவும், இது **ஜேர்** ஆகவுமிருக்கின்றன. ஆனால் ஒவ்வொரு **ஹர்பு** ஆகிய அட்சரத்துக்கும் இந்த இரண்டும் தேவைப்படுகின்றன. **ஜேர்** ஆகிறது **ஜேருடைய** தானத்திலும், **ஜபரு** ஆகிறது **ஜபருடைய** தானத்திலும் இருந்தபோதிலும், இராஜாளிப் பறவை ஓர் காடையைப்போன்று ஆவதைப்போல் சிலவேளை **ஜேர்** ஆகிறது **ஜபரு** ஆக மாறுகிறது. இன்னும் இந்த **ஜபரு, ஜேர்** ஆகியவற்றின் வடிவம் ஒன்று போன்றிருந்த போதிலும் **ஜபருஜ** விட **ஜேரு** வலுப்பமுடையதா யிருக்கிறது. ஏனெனில் **ஜபரில்** ஒரு **நுக்தா** வாகிய புள்ளி குறைவாயிருக்கின்றது. ஆனால், இவ்விரண்டும் **காதிமுன்னபீ** யாகிய இறுதி தீர்க்கதரிசிக்கும், மற்றும் ஏனைய தீர்க்கதரிசிகளுக்கு முடையதாயிருக்கின்றன.

அல்லாஹுதஆலா யாரை **நபியாக்கி** வைத்தானோ அவர்களுக்கு **விலாயத்தை** முந்தி கொடுத்து, பின்னர் **நுபுவ்வத்தையுங்** கொடுத்து, இவ்விரண்டின் தத்துவமும் அவர்களுக்கு ஏற்பட்டவுடன் ஜனங்களை இஸ்லாத்தின்பால் அழைக்கச் செய்து **நபி**மார்களின் வாயிலாய் இஸ்லாமை உயிர்ப்பித்து வைத்தான். **குப்பார்** ஆகிய அவிசுவாசிகளைத் தங்களின் **குப்ரை** விட்டும் நீங்கச்செய்து, அவர்களுடைய **கல்பு**களை **விலாயத்து**டைய பலத்தைக் கொண்டு **நபி**மார்கள் தரிபடுத்திவைத்தார்கள். ஏனெனில், **விலாயத்து** நெருப்பைப்போன்

ஹும்; **நுபுவ்வத்து** திரியைப்போன்று மிருப்பதால், நெருப்புக்குத் திரி அவசியப்பட்டபோதிலும் நெருப்பினைக் கொண்டே அந்த திரி அழகாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. **நூருக்**காகத்தான் திரியை நாடினதன்றி; திரிக்காகவேண்டி லோகத்தைக் காப்பாற்றவல்ல **நூரை** நாடவில்லை. **நுபுவ்வத்து** சிரசைப்போன்றும், **விலாயத்து** அதின்பேரில் வைக்கப்பட்ட கிரீடத்தைப்போன்றும் **ஹகீகத்**தாகிய அகமியத்தில் ஒன்றுக்கொன்று தேவைப்பட்டதாயிருக்கின்றன. **அஸ்லு** என்னும் மூலத்தில் **விலாயத்து** அந்தரங்கத்தையும், பகிரங்கத்தையும் கற்றுக் கொடுக்கின்ற **அல்லா(ஹ்)** வென்னும் **வலீ**க்கு உடையதா யிருக்கின்றது. **வஹுவல் வலிய்யுல் ஹமீது**—"அல்லா(ஹ்)வாகிறவன் புகழப்பட்ட **வலீ**யாக இருக்கின்றான்," என்று திருமறையில் இறைவன் திருவுளமாயிருக்கிறானேயன்றி, **நபி**யாக இருக்கிறானென்று திருவுளமாகவில்லை. ஆகையால், **நுபுவ்வத்து** முடிவடைந்து விட்டது; **விலாயத்து** எப்பொழுதும் முடிவின்றி நடந்து வரக் கூடியதா யிருக்கிறபடியால் இதனை மகான்கள் தரிபாடாக இருக்குமென்று கூறியிருக்கிறார்கள். காற்று நீங்கிவிட்டதும் நெருப்பும் நீங்கிவிடுதல் போன்று **விலாயத்து** நீங்கியதும் பிரபஞ்சமும் போய்விடும். ஆகையால், இந்த **விலாயத்து** மூடிவாகிறபோது பிரபஞ்சத்துக்கு ஒருவித குணமுண்டாகும்: மேலும் இந்த **விலாயத்து** முடிவடையும் நாள் வந்துவிட்டதும் பூமியில் மறைந்திருக்கும் புதையலடங்கலும் தாயுடைய வயிற்றை விட்டு பிள்ளை வெளிவருதல்போன்று வெளியாகிவிடும்.

அப்பொழுது பிரபஞ்சத்தில் ஒரு ஏழையும் இருக்க மாட்டான். அவரவர்களின் வீடுகளில் புதையல்களிருப்பதால் எல்லோரும் தனவந்தரா யிருப்பார்கள். ஆனால் எவனுக்கு **இர்பானும்**, அதன் அனுபவமுமில்லையோ அவனே ஏழையாயும், இர்பானை அறிந்த அளவுக்கு அனுபவமுடையோன் பணக்காரனுமாயுமிருப்பர். **இர்பான்** தான் புதையல்களாயிருக்கும். அந்நாளில் லோகத்தினர் யாவரும் இர்பானுடையவராயும், தன்னுடைய பூர்ணத்தை அறிந்தோராயுமிருப்பர். அந்நாளில் நான்குபேர் சூழுமிருக்கும் ஓர் இடத்திலும் **இர்பானு**டைய பேச்சைப் பேசப்படுவதன்றி பகை பாராட்டல், பிணக்கு, சண்டை, சச்சரவு ஆகியவைகள் நிகழுவதில்லை. ஆனால் எந்தவிடத்தில், எதுவரை **இர்பானு**டைய பேச்சு நடக்கிறதோ அதுவரை அந்த சபை **துன்யா**வன்று; **மஅரிபா** வென்கிற பள்ளிக்கூடமாயிருக்கின்றது. இன்னும் எல்லா பட்டினங்களிலும் இந்த **இர்பானு**டைய பாதையைத் தவிர மற்றுமுண்டான பாதைகள் யாவும் கருகித் தேய்ந்து போகும். ஆகையால் எந்த வஸ்துவின்பேரில் பூர்த்தியுண்டானதோ அதன்பேரில் குறைவு என்பது சின்னபின்னமாகிவிடும்.

மேலும் அறிவாயாக:— **ஒளலியா**க்கள் **மௌத்**தாவதில்லை என்பது உண்மையே; ஏனெனில், அந்த விளக்கை **மௌத்து** என்ற காற்று தூர்ந்து போகச்செய்ய சக்தி பெறமாட்டாது. **ஒளலியா**க்களுடைய பார்வை எவன்மீது உண்டாயிருக்கிறதோ அத்தகைய பார்வை அவர்களுடைய

தல்ல; எனினும் அது **அல்லா(ஹ்)**வுடைய பார்வை யாயிருக்கும். அத்தகைய பார்வை ஒன்றைக் கொண்டு இந்த உயிர் **நூர்** ஆகிவிடும். அவ்வித பார்வைப் பெற்றோரின் பார்வையால் சகல நோய் களும் அகன்றுவிடும். ஆனால் அந்த பார்வையை நீ கேவலம் ஒரு பார்வைதானே என்றெண்ணி விடாதே; ஏனெனில், அதில் ஓரிலட்சம் ஜ்வலிப்பு கள் உண்டாயிருக்கின்றன வென்பதை அறிந்து கொள். மேலும் அந்த பார்வை கேவலமான துரும் பினை ஒரு க்ஷணப்பொழுதில் பாரிய மலையாகவும், மலையைத் துரும்பாகவும், தண்ணீரை நெருப்பாக வும், நெருப்பை தண்ணீராகவும் செய்யவல்லது, இன்னும் அந்த பார்வையினால் **நாகிஸ்** ஆகிய குறை வுள்ளோர்கள் **காமில்** ஆகிய பூர்ணத்தைப் பெற் றோராயும், மூதேவிகள் யாவரும் சீதேவிகளாகவும் ஆகிவிடுவார்கள். ஆகையால் ஒருவனின் வயது பூரா வுக்கும் அவர்களுடைய ஒரே பார்வை போதுமான தாயிருக்கிறது. இன்னும் சடத்தை **கல்பு** ஆக மாற்றி வைக்கக் கூடியதாயுமிருக்கிறது. **அல் லா(ஹ்)**வைத் தேடுகிறவனின் தேட்டம் நிறை வேறுதல் இந்த பார்வையைக்கொண்டா யிருக் கிறது. இன்னும் இந்த பார்வைப்பட்டதினால் சரீர மடங்கலும் உயிர்ப்பெற்றுவிடும். **ஹபீபு** உருகி **மஹ்பூபு** ஆகிவிடுவான். ஆனால் **மஹ்பூபு** என்று சொல்வதில் ஒன்றுபடுத்தல் இல்லாது போய்விடும். ஏனென்றால் மூன்று வஸ்துக்களின் சேகரத்தால் அது உண்டாகின்றது. முந்தினது, **மஹ்பூபு** ஆகிய நாயகன்; இரண்டாவது, அவ்வாறு அழைப்பவன்; மூன்றாவது, முன்னிலையானவன் என்பனவாம்.

ஆகையால் **நான்** என்பது **நீ** என்பதைக் கொண்டா யிருக்கிறது. **நீ** இல்லாவிடில் **நானு** மில்லை. அன்னியமாக ஒருவன் இல்லாமல் **நான்** என்று என்னால் எவ்வாறு சொல்லமுடியும்? ஆகவே, இந்த **நான், நீ** என்பனவற்றை உனது **கல்பை** விட்டும் வேறுடன் களைந்தெறிந்து விடுவதன்றி, இந்த **நான், நீ** எனப்படும் கழுமரத்தில் உன்னை தூக்கிலிட்டுக் கெடுத்துக் கொள்ளாமல், உன்னைக் கொண்டு உன்னை **ஹக்குடைய தாத்**தில் சொக்கிக் கரைத்துவிடுவாயாக. வீண் பேச்சு பேசுவதில் சொக்கிவிடாதே.

ஹிகாயத்து:— ஹலரத்து ஷெய்கு சஅதீ ஷீராஸீ (கத்தஸ) அவர்கள் உலகில் ஓர் வழிகாட்டி யாயும், **ஆஷிகீன்** ஆகிய பேரின்பக் காதலர்களுக்கு தந்தைபோன்றும், **சிர்ரு** என்ற இரகசியத்தின் **வீராஸு**க்கு சக்ராதிபதியாயும், சம்பத்துகளைப் பெற்ற மன்னர்களின் கிரீடத்துக்குமேல் வைக்கப் பட்ட முத்துபோன்று மிருந்து வந்தார்கள். அவர் களோ அன்னியனொருவனுமின்றிய தனித்த ஓரி டத்தில் தன்னந்தனியே இருந்துகொண்டு இரண்டு (துவிதம்) என்ற குப்பையை தீ மூட்டி, பொசுக்கி எரித்து, சாம்பலாக்கிவிட்டு, **தான்** என்ற **சிர்**ராகிய அகமியப்பொருளை சதா நோட்டமிட்டு வந்தார்கள். அந்த **சிர்ரு** அச்சமும், ஆதரவுமற்ற ஒன்றாகும். அவ்வாறிருக்கையில், வித்தின்மேல் மூடிக்கொண் டிருக்கும் தோலைப்போல் ஒரு நெருங்கிய நண்பர் மிகுந்த மரியாதையுடன் **சலாம்** கூறியவராய் **ஷெய்கு** அவர்களிடம் வந்து சேர்ந்து, **நான்** என்

பது இன்மையாதற்குரிய இரகசியத்தை தாங்கள் எனக்கு அறிவித்துத் தரவேண்டுமென்றும், எவ்வளவு காலமாய் தாங்கள் தனித்திருக்கிறீர்களென்பதை எனக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் கேட்டார். அதற்கு **ஹலரத்து** அவர்கள், " **நான்** என்னும் பொருளை **ஹக்**குடையதென்று அறிவதே உம்மை இல்லாமையாய்ச் செய்தலாகும். மேலும் நீர் எப்பொழுது இங்குவந்தீரோ, அப்பொழுதிருந்து நான் தனித்திருக்கிறேன்," என்று பதிலிறுத்தார்கள்.

★ பனிரண்டாவது அத்தியாயம். ★

[இந்த பனிரண்டாம் அத்தியாயத்தில் **மெளத்து மஜாஸீ**யான இயற்கை மரணத்தைப்பற்றியும், **மெளத்து ஹகீகீ**யான விசேஷ மரணத்தைப்பற்றியும் விவரித்துப் பேசப்படுகின்றன.]

அருமையானவனே ! அறிந்துகொள்வாயாக:—

எவனொருவன் மரணத்தின் அகமியத்தை அறிந்திருக்கிறானோ அவன் எப்பொழுதும் சாகாமல் நித்தியவாழ்வைப் பெற்றிருப்பான். ஆனால் **மெளத்து ஹகீகீ** என்பது **அல்லா(ஹ்)**வின் கிருபையையும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கிருபையையும் பெற்ற ஒன்றேயன்றி, கேவலம் **மரணித்தல்** என்று பொருள்படாது. **மெளத்து மஜாஸீ** என்பதோர் **மஹ்பூபு** ஆகிய நாயகனின் தூதனல்லவென்கினும், யாரும் விரும்பாதிருக்கையிலேயே வலியவந்து இழுத்துச்சென்றுவிடக்கூடியு நியமிக்கப்பட்ட ஒரு நண்பனயிருக்கும். இருவருக்கு மிடையில் கப்பலும், தோணியுமின்றிய **நாசூத்**தாகிய ஸ்தூலம் என்ற கடல் இருக்கையில் நண்பனை நண்பன் சந்திப்பதற்கும், ஒருவனை ஒருவன் கட்டித் தழுவுதற்கும் சந்தர்ப்பம் எவ்வாறு கிடைக்கும்? ஆனால் **மெளத்து** என்ற தோணி இடையில் இல்லாவிட்டால் இகலோக கருமங்கள் யாவும் கசப்பாகத் தோணுவதன்றி **மஹ்பூபு**டைய தெரிசனத்தை ஒருவரும் பெற்றுக்கொள்ள இயலாது. உயிர் போன்ற வணக்கத்தை யாரும் செய்யார். மேலும் இந்த அபிமானங்கள் இன்மையாகி, ஒழிந்து

போகாவிடில் **தௌஹீது** என்ற அத்துவிதம் எவ்வாறு கைவசப்படும்? மரணம் என்ற ஒன்று இல்லாவிடில் இந்த அபிமானம் அல்லது கொழுகுதல் நீங்க மாட்டாது. மரணம் என்ற வாளைக்கொண்டேயன்றி அதனைத் துண்டித்து நீக்குபவன் யாருமில்லை. மேலும் **வஸ்லு** என்ற ஹக்குடன் ஐக்கியமடைதலுக்கு மற்ற அபிமானங்கள் கொடிய பகையர்களாயிருக்கின்றன. உலகிலுண்டான சங்கடங்கள் யாவும் **மௌத்து** என்ற சங்கடத்துக்கு முன்னால் ஒரு திரணமே யாகும். ஆனால் இந்த **கல்பு** சகல சிக்கல்களையும் பெயர்த்தெரிந்து விட்டபோதினும் மரணம் என்ற பாதையிலுள்ள சிக்கல்களைமட்டும் அவிழ்க்க ஏலாதுபோய்விட்டது. மயிரில் முடிச்சு விழுந்தபோதிலும் கல்பானது அதனை அவிழ்த்துவிட வல்லது எனினும், **மௌத்து** என்ற முடிச்சைப் பார்த்ததும் **கல்பு** தட்டழிந்துவிட்டது. ஆனால், **மௌத்து** என்னும் முடிச்சை அவிழ்க்கும் நிபுணர் ஒருவர் உனக்குக்கிட்டிய அக்ஷணமே அந்த முடிச்சு தானாகவே அவிழ்ந்துவிடும்.

இன்னும் அறிவாயாக:— நான் ஒருநாள் என்னுடைய **கல்பி**னிடத்தில் கேட்ட ஓர் கேள்விக்கு என் **கல்பு** என்னைப்பார்த்து பின்வருமாறு கூறத்தொடங்கிற்று. அதாவது, என் **மஹ்பூபே!** இதுவரையும் நீ **மௌத்து** யாதென விளங்கியறியவில்லையா? **மௌத்து** மூன்று வகைப்படும்; முந்தினது, விழித்திருப்போன் தூங்குவது போன்றும்; இரண்டாவது, தூங்குபவன் திடீரென விழித்தெழுதல் போன்றும்; மூன்றாவது, விழிப்பும், நித்திரையு

மின்றி இரண்டுக்கு மிடையிலிருப்பதுபோன்றும். அதற்கு **நுஆஸ்** என்று பெயர். அது நித்திரைக்கும் விழிப்புக்குமிடையிலிருக்கிறது. **அன் நுஆஸு பைனன் நௌமி வல்யக்ளதி**—**நுஆஸ்** என்பது நித்திரைக்கும், விழிப்புக்கு மிடையிலிருக்கிறது. **ஹால்** என்று அழைக்கப்படுவது இந்த நிலையைத்தான். இந்த நிலையாகிய **ஹால்** என்பதோ நித்திய காலமும் தரிபாட்டினைப்பெற்ற ஒன்று. இதனை வடமொழியில் **துரியம்** என்றழைப்பர். இத்தகைய நிலையை அடைந்லாகிய **மௌத்து** என்னும் மரணத்தை யுண்டயோனுக்கு வேறு யாதொன்றும் ஒவ்வாது. வானம், பூமி ஆகியவற்றுடன் அவன் இங்கு எவ்வாறிருக்கிருனே அவ்வாறே எங்குமிருப்பதோடு, இந்த சரீரம் என்ற வீடும், **நர்சூத்து** ஆகிய சடலோகமும் அவனுடையனவர்யிருக்கும். முதலாவது வகை மரணத்தை சாதாரண மக்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. **அன்நாஸு நியாமுன் பஇதாமாதூ இன்தபஹூ**—“மனிதர்கள் யாவரும் தூங்குகின்றனர்; மரணித்ததும் விழிப்புண்டுவர்,” என்று நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளம்பற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆனல் சாதாரண ஜனங்கள் மரணமடைந்ததும் தன்னை அறிந்து கொண்டபோதிலும், அந்த அறிவு ஒரு நொடிப்பொழுதே நீடித்து, விரைவில் மறைந்து விடக்கூடியது.

இன்னும் இதனைப்பற்றி மகான் **மஷாயிகு சாஹிபு** அவர்கள் தங்கள் **உடலறிஞானம்** என்ற நூலில், பின்வருமாறு கூறுகிறார்கள்:—

"எப்போதும் நில்லாது இந்த பஞ்ச பூதவுடல்
தப்பாமற் செத்துத் தன்னையறியுமப்போது
அப்போ தறிவாரவனை மிவனென்றறிந்து
செப்படிக்கும் வித்தைப்போற் க்ஷணத்தில் மறப்பரே."

ஆகையால் தன்னையறியும் அறிவை இவ்வுலகிலிருக்கையிலேயே அறிந்து கொள்ளுதற் கடமையாகும்.

இரண்டாவது வகை மரணத்தை சிறப்புற்ற ஜனங்களுக்கு சந்தோஷமாக அளிக்கப்பட்டிருக்கிறது.

மூன்றாவது வகை மரணத்தை அதி விசேஷமான ஜனங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஜனங்கள் சீதேவித்தனத்தைப் பெற்ற **மஹ்பூபை** யுடையவர்கள்.

ஹயாத்து (ஜீவியம்) ஆனது தன்னையே மறந்து, போதையாகிவிடக்கூடிய இவ்வித **மௌத்தும்**, அந்த மௌத்தையுடையவர்களும் வெகு அரிதாகவே காணப்படுகின்றனர்.

இன்னும் எவனொருவன் மரணமென்ற மிருகத்தை வேட்டையாடிக் கொண்டானோ அவனுக்கு **உமர், ஸைது**டைய வயதைப்போன்று நீடித்த வயதைக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இவ்வாறான **மௌத்**தை அடைபவர் யார்? மற்றெல்லா மரணங்களுக்கும் இந்த மரணம் எஜமானனாயிருக்கிறது. மேலும் பல்வேறு அறிவுகளை அடைவதிலும்

இவ்வாறான அறிவைப்பெறுதல் வலுப்பமானதா யிருக்கிறது. **இத்யுகஷ்ஷீகுமுன் நுஆஸ அமனதம் மின்ஹு** "முஹம்மதே! சொல்வீராக. உங்களுக்கு நித்திரை மயக்கம் வரும்வேளை அதில் நின்றும் சுகமிருக்கிறது." இதனை விளக்கமாகக் கூறுமிடத்து, **மவாஸிஉ ஞஹூரி அவாஇலு அஷ்காலில் முகாஷிபாதி**—யாரேனு மொருவன் **நுஆஸி**லேயே (நித்திரைக்கும் விழிப்புக்குமிடை யில்) இருந்தால் அந்த **நுஆஸா**கிறது ஆதி தொடுத் துள்ள சொரூபங்கள் யாவும் திறந்து தெரிகின் றதைதவீப்ரிக்கின்ற இடமாயிருக்கும். **வஇஸ்மாஇ ஹவாதிபல் கைபிய்யதி மின் ஆலமில் மலகூத்தி** அந்த **நுஆஸி**லிருக்கிறபோது **ஆலம் மலகூத்தி**ல் பேசப்படும் பேச்சுகள் யாவும் செவியில் விழும். **யரௌனஹா பிகுலூபிஹிம் பின்நுஆஸி** அந்த **நுஆஸி**ல் அவர்களுடைய **கல்புக்** கண் கொண்டு அவர்கள் கண்டார்கள். **அன் நுஆஸு மின்பை னின் ஔமி வல்யக்ளதி** அந்த **நுஆஸ்** ஆகி றது நித்திரைக்கும், விழிப்புக்குமிடையில் (நடுவில்) இருக்கும். **வபாஇதுன் நுஆஸி பரீஹுதுன் கைபிய்யதுன் வதூரிதுஸ் ஸகீனத வத்தமானி யத வல்அம்ன**—**நுஆஸு**டைய பிரயோஜனம் யாதெனில், மறைந்திருப்பன யாவும் வெளிச்சமாய்த் திறந்து தெரியும். அவ்வாறாக தெரிசித்தபேர் களெல்லாம் அச்சமற்ற வாழ்க்கையைப் பெற்றுக் கொள்வர். (ஐ) **அம்னம் மின்ஹு மின்ஸியாததில் இம்திஹானி**—அதில் சுகமாவது யாதெனில், பெரு வாரியாக வரக்கூடிய **அல்லா(ஹ்)**வுடைய சோதனை களில் நின்றும் அச்சமற்ற வாழ்வுக்கு அருகதை

யாவார்கள். **வகலபதுன்னப்ஸி வஷ்ஷைதானி** (**ஹவா** என்னும் இச்சை, **கவாதிர்** என்னும் ஊசாட்டங்களால் ஏற்படும்) **நப்ஸு**டையவும், ஷைத்தானுடையவுமான மிகைப்பும், ஆசாபாசங்களும் **நுஆஸி**லிருக்கிற வேளையில் அகன்றுவிடும். **ஷைஅன் மினல்கைபி லம்யகுன் பீதாலிகல் வக்தின் நுஆஸி**—கீழ், மேல், பாதாளம் ஆகியவற்றில் மறைக்கப்பட்டிருக்கின்ற பல்வேறு வஸ்துக்களும் அந்த நுஆஸில் தரிபட்டிருக்கும் நேரத்தில் அதிபிரத்தியட்சமாகிவிடும். **நுஆஸ்** என்பதை **துரியம், சிற்றுறக்கம், அறிவின் துயில், நடுநிலை, முக்திநிலை, ஞானசுழுத்தி** என்று பல வாருயமைழக்கப்படும். மேலும் இதற்கு தூங்காமல் தூங்கும் நிலையென்றும், **நடுத்தொழுகை** யென்றும் பெயர். இந்த நிலையைப் பெற்றவர்களை **ஸாஹிபுல் ஹால்–ஹாலு**டையவர்களென்றும் அழைக்கப்படும்.

அறிவாயாக:— இந்த **நுஆஸை**ப் பெற்றுக் கொள்வது பசித்திருப்பதைக் கொண்டே சித்திக்கிறது. அந்த பசியின் சிறப்பை நமது **நாயகம் (ஸல்)** அவர்கள் தங்கள் திருவாயினுல், "நீங்கள் பசித்திருக்கவும், தாகித்திருக்கவும் உங்களோடு போர்புரியுங்கள். அதின் நன்மை **காபிர்**களோடு சமர் செய்வதைப்போன்றது என்றும், பசித்தும், தாகித்தும் இருப்பதைவிட **அல்லாஹுத்தஆலா**வுக்கு அதிக பிரியமான எந்த ஒன்றுமில்லை," என்றும் அருள் செய்திருக்கிறார்கள். "மேலும் எவனொருவன் தொப்பையை நிறப்புகிறனே அவ

னுக்கு பரலோகத்தில் இடங்கொடுக்கமாட்டார்களென்றும், இன்னும் ஆராய்ந்து நோட்டமிடுதல் அரை இபாதத்து என்றும், ஊணைச்சுருக்குவது முழு இபாதத்து," என்றும் அருளியிருக்கிறார்கள்.

ஹலரத்து அபூசுலைமானுத்தாரானீ (ரவி) அவர்கள் "வயிறு நிறம்ப தின்பது துன்யாவின் திறவுகோல், பசித்திருப்பது ஆகிரத்துடைய திறவு கோல்," என்று கூறியிருக்கிறார்கள்.

ஹலரத்து ஸஹல் துஸ்தரீ (ரவி) அவர்களிடம், "இன்ன மனிதன் ஒரு நாளைக்கு ஒரு விடுத்தம் தின்கின்றான்," என்று ஒருவர் சொன்னபோது அவர்கள் "அது சித்தீக்குகளுடைய தீன் என்றும், இரண்டு தடவை தின்பது முஉமீனுடைய தீனென்றும்," பதிலிறுத்தார்கள். மூன்று தடவை தின்பதைப் பற்றிக் கேட்கப்பட்டபோது அவர்கள், "அவன் பெஞ்சாதியிடம் அவன் மலங்கழித்தற்கு ஒரு தனி கக்கூஸ் கட்டிவைத்துக் கொள்ளும்படியாகச் சொல்லிவிடும்" என்று சொன்னார்கள்.

ஹலரத்து யஹ்யப்னு மஆது (றவி) அவர்கள் பின்வருமாறு கூறியிருக்கின்றார்கள். அதாவது:— "பசி என்பது ஒளி, வயிறு நிறைதல் என்பது நெருப்பு, இச்சை என்பது விறகு, அந்த (வயிறு நிறைதல் என்ற) நெருப்பினால் அதனை அடையப் பெற்றவன் கருகிப் போய்விடுவான். பசியோ தெண்டிப்பின் பாதைக்கு அவசியமான கடமையில் முந்தின கடமையாகும். சுலூக்குடையவர்கள் பசித்

திருப்பதைப் பழகிக்கொண்டு சிறுகச்சிறுக ஆகாரத்தைக் குறைத்து வருவதின் பயனாய் பூராயம் என்ற ஊற்றுக்கண் கொப்பளித்து வரக் காண்பர்," என்பதே.

இப்னு சாலிம் (றஹ்) அவர்கள் சொல்கிறதாவது:—"பசியை பழகிக்கொள்வதற்கு நடக்க வேண்டிய ஒழுங்கு யாதெனில், வழக்கமாய்த் தின்று வரும் ஆகாரத்தில் நின்றும் பூனையினுடைய காதினளவுபோல் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைத்து வரவேண்டும்," என்றும்,

ஹுக்கமாக்களான சட்ட நிருபணர்களுள் சிலர், "ஒருவனுக்கு தின்பது மிகுந்தால் குடிப்பது மிகுதமாகும்; குடிப்பது மிகுந்தால் நித்திரை மிகுதமாகும்; நித்திரை மிகுந்தால் சரீரத்தில் கரி மிகுதமாகும்; கரி மிகுந்தால் **கல்பு** வன்னெஞ்சமடையும்; அப்படி வன்னெஞ்சனுகி விட்டவன் பாவங்களுள் மூழ்கிக்கிடப்பான்," என்று சொல்லியிருக்கின்றனர்.

"நாயகம் (ஸல்) அவர்களுடைய காலத்துக்குப் பின் ஏற்படக்கூடிய **பித்அத்**தென்னும் நூதனங்களுள் முந்தியது வயிறு நிறைய சாப்பிடுவதே," என்று சொல்லப்பட்டிருக்கிறது.

எனவே, இந்த **நுஆஸ்** ஆகிய அறிவின் சுழுத்தியை அல்லது **தூரியநிலை**யை அடைதற்கு பசியின் சிறப்பைப்பற்றி இவ்விடத்தில் கூறப்பட

அவசியமேற்பட்டதால் இங்கு கொஞ்சம் அதனைப் பற்றி எழுதப்பட்டிருக்கிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அருளியிருப்பதுபோன்று மரித்தோனின் நிலை இவ்வாறிருப்பதால் இத்தகைய சிறப்பினைப்பெற்ற **மௌத்து ஹகீகீ**யை வெகுசிலரே அடையப்பெறுகின்றனர்.

ஹிகாயத்து:— தக்கண சமஸ்தானத்தில் பிரபல்யமுடையவரும், **இர்பானில்** தனக்கிணையின்றியவரும், தனது சொல் என்ற வாள்வீச்சு வீணாகாதவருமான ஒரு மகான் தனது சிஷ்யர்களுடன் ஒருநாள் எனது ஆசிரமத்தில் வந்து தங்கினர். **மஅரிபத்து** சம்பாஷணையன்றி வேறு பேச்சுக்களை பேசாதவர் அவர். அவரோ **இர்பான்** என்ற கடலில் முத்துக்குளிப்பவர். அவ்வாறான அவரும், நானும் ஓர் இரவு தனித்திருக்கையில் என்னிடத்தில், "**காமில்** என்ற சம்பூர்ணர் ஒவ்வொருவரும் தத்தம் மனதை **மஹ்பூபி**ல் கட்டுப்படுத்தி யிருக்கிறபடியால் தன்னுடைய **மௌத்**தையும், பாக்கியிருக்கிற நாளையும் அறிந்திருப்பார்கள். ஆகையால், தங்களின் சதுர்ப் பூதங்களாலான உடையானது கழன்று விடுதற்கு எவ்வளவு நாட்களிருக்கின்றன வென்பதை எனக்கு சொல்ல வேண்டும்," என்று அவர் கேட்டபோது நான், "அதற்கு பதிலளிக்கக் கூடியோர் இவ்வுலகை விட்டும் அகன்றுவிட்டனர்; நான் பதில்கூற அருகதையற்றவனாயிருந்தபோதினும் அந்த நேரத்தில் என் **கல்பு** வானலோகத்தின்பேரில் ஏறி,

மாஉல் ஹயாத்து என்ற **ஜீவதீர்த்தம்** தானாக யிருப்பதால் சகல சரீரங்களின் நிலைமைகளும் தமக்கு நன்கு தெரிந்திருக்கின்றன. ஆகையால், என்னிடத்தில் வேறு நுட்பமான விஷயங்களைப் பற்றிக் கேட்பீராக. செத்திறந்து போவோனிடத்தில் மரணத்தைப்பற்றி வினவிக்கொண்டிரும்," என்று பதிலிறுத்தேன்.

★ பதிமூன்றுவது அத்தியாயம். ★

[இந்த பதிமூன்றும் அத்தியாயத்தில் இராகம் கேட்கிற முறையைப்பற்றி விவரித்துப் பேசப்படுகிறது.]

அருமையானவனே! அறிந்துகொள்வாயாக:—

எவரொருவருக்கு இராகம் கேட்பதில் அளவு கடந்த பிரியமுண்டாயிருக்கின்றதோ அவரை நீ ஒரு **ஒளலியா**வென்றறிந்து கொள்வாயாக. அவ்வித இராகமானது சாதாரண இராக மட்டுமன்று; எனினும், உன்னை எரித்து சாம்பலாக்கிவிடக்கூடிய நெருப்பாகவும், உன்மீது சீறிப்பாய்ந்து, பீரிக் கொல்லவல்ல ஓர் புலியாகவுமிருக்கின்றது. இத்தகைய இராகம் கேட்டலால் சரீர சம்பந்தமான சகல நோய்களும் நீங்கிவிடுகின்றன. மனம் ஐக்கிய முக்தியை அடையப்பெறுகின்றது. யாவருக்குமே இராகங் கேட்பதாலுண்டாகும் இன்பம் ஏற்படுகின்றபோதினும்; அதே இன்பம் **ஆஷிகீன்** ஆகிய பேரின்பக் காதலர்களுக்கு இரட்டிப்பாக இருக்கிறது. எதுபோலெனில், சீனியானது யாவருக்கும் இன்பத்தை அளித்தபோதிலும், அதே சீனி **அபினி** தின்பவனுக்கு ஆயிரமடங்கு இன்பத்தைக் கொடுக்கிறது. இராகமென்பது **பக்ரு** என்ற எளிமையின்பால் சேர்த்துவைக்கக்கூடியதா யிருப்பதால், இதனுடைய கிரயம் **பக்ரு** என்ற இன்மையாகவே யிருக்கிறது. மேலும் அது ஆலங்கட்டி மழைபோன்று கருங்கல்லையும் கரைத்துவிடக் கூடியது. கரிய நிறமுள்ள கரியையும் ஒளிபொருந்

திய நெருப்பாக்கிவிடும். இராகமானது உயிருக்கு ஆகாரமாயும், உயிர் **மஹ்பூபு**க்கு ஆகாரமாயு மிருக்கின்றன. மேலும் எந்த ஒரு ஜீவன் **காதல்** என்ற வலையினுள் சிக்கி, துயரத்தில் மூழ்கி, கவலையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றதோ அது அந்த இராகத்தினல் தேய்பிறைச் சந்திரன் நாளுக்கு நாள் குறைந்து போவதைப்போன்று கறைந்து போயும், நெருப்பினிற் கிடக்கும் அகிற்கட்டை மீதமின்றி எரிந்து சாம்பலாய் விடுவதுபோன்று எறிந்துபோயும் விடக்கூடியதான அந்த ஒன்று தான் இராகம் கேட்பதற்கு அருகதையுடையதாயிருக்கிறது. அந்த இராகம் நெருப்பாயும், ஜீவன் அவ்விராகமென்ற நெருப்பினல் வற்றிவிடக்கூடிய தண்ணீராயுமிருக்கின்றன; ஜீவன் நெருப்பைப் போன்றும், இராகமானது புயற்காற்றைப் போன்று மிருக்கின்றன; இராகம் நெருப்பைப் போன்றும், ஜீவன் குப்பையைப்போன்று மிருக்கின்றன. இவ்வாறாக இருக்கவல்ல ஜீவன் மட்டுமே அந்த இராகத்தைக் கேட்கும் பக்குவத்தைப் பெற்றிருக்கிறான். இன்னும் இராகத்தினல் பிரபஞ்சத்துக்கு அழகும், மன்னர்களுக்கு அந்த இராகத்தின்பேரில் ஆசையும் ஏற்பட்டிருக்கின்றன. அந்த இராகம் **ரூஹு**க்கு ஆகாரமாகவுமிருக்கிறது. ஆகையால், எந்த ஒரு ஜீவனுக்கு இராகமானது பிடிக்கவில்லையோ அந்த ஒரு ஜீவன் நெருப்பில் பொசுங்கிப்போய்விடுவது நலம்; அந்த **ஜீவன்** மானிடன் **(இன்ஸான்)** அன்று; அவன் சதை, எலும்பு, இரும்பு, மலை இவற்றைப்போன்றிருப்பான். ஆனபடியால், அந்த இராகத்தினல் **கல்பு**க்கு

ஆசைப் பெருக்கு எவ்வாறு உண்டாயிருக்கின்றதோ, அதுபோல் ஆண்பிள்ளையாயிருப்போனுக்கு அந்த இராகத்தைக் கொண்டுதான் புளகாங்கிதமும், ஆனந்தமும் ஏற்படுகின்றன.

ஹிகாயத்து:— ஹலரத்து ஜுனைது பக்தாதீ (ரலி) அவர்களுடைய **மஜ்லிஸில்** கேசாதி பாதம்வரை இஷ்கு என்றபேரின்பக்காதல் மிகுந்த ஒரு மனிதரும் இருந்தார். அவ்வேளை **கவ்வால்** என்னும் பாடகர்களின் பாட்டுகள் நூர்ந்துபோன **இஷ்கு** என்ற நெருப்பை மீண்டும் மூட்டிவைத்தன. இஃதன்றி, அவர்களின் ஒவ்வொரு சொல்லும் நெருப்பினைப்போன்று சூடாயும், வாளைப்போன்று வெட்டுவதாயு மிருந்தது. அந்த **கவ்வால்கள்** ரபாபு, வீணை, சிதார், சுரோடு முதலான வாத்தியக் கருவிகளை மேன்மையோடு பிரதானமான **தால், சூர்** தப்பாமல் வாசிக்கின்ற இராகம் உயிர்பிச்சை யளிக்கவல்ல ஒன்றாயிருந்தபடியால், அங்கு குழுமியிருந்த யாவருடைய கண்ணிலும் கண்ணீர் ஓடிக் கொண்டும், சரீரங்கள் அசைந்துகொண்டும் சூரியனது பிரகாசிக்கையில் நட்சத்திரங்கள் மறைந்திருப்பதைப்போன்று அவர்கள் யாவரும் இராகத்தில் சொக்கி மறைந்திருந்தனர். அப்போது அந்த **ஆஷிக்** ஆகிய பேரின்பக்காதலர் இராகத்தையும், **இஷ்கு** ஆகிய காதல் நெருப்பையும் சகிக்க மாட்டாது, **தம்பூர்** வாத்தியத்தின் கம்பிகள் தட்டப்பட்டு, வாசிக்கப்படும்வேளை அந்த **தம்பூர்** உடைய கம்பிகளைப்போல் தனது சரீரம் துளும்பியவராயிருக்க காதல் நெருப்பு மின்னலைப்போன்ற பிர

காசத்துடன் பற்றி எறிந்துகொண்டிருந்தது. அச்சமயம் அவர் கோடை இடியினைப்போன்ற சப்தத்துடன் **ஆஹ்** என அலறினர். அந்த சப்தத்தால் ஹலரத்து ஜுனைதுல் பக்தாதீ (றலி) ஆண்டகையவர்களுக்கு சற்று ஆயாசமுண்டாகி, முகம் சோர்வடைந்து பின்வருமாறு சொன்னர்கள். அதாவது:—

"**அதபு** என்றமரியாதை இல்லாதவனுடைய இஷ்க்கைத் தவிற ஏனையோருடைய இஷ்கு மெய்யானதொன்றே." இவ்வாறு கூறியதைக் கேட்ட அந்த **ஆஷிக்** யதார்த்தத்தில் நெருப்பாகவே யிருந்தார். இராகம் காற்றைப்போன்றிருந்தது. அதனல் அந்த காதல் நெருப்பின் சுடர் **ஆஹ்** என்ற அலரிய சப்தம் என்னும் பாதையின் வழியால் வெளியாகி; அந்த காதல் என்ற நெருப்பு ஆறிக்கொண்டிருந்தது. அதனல் அந்த காதலருக்கு மிகுந்த நன்மை ஏற்பட்டுக்கொண்டிருந்தது. இல்லாவிடில், அவரின் சரீரம் பற்றி எறிந்து சாம்பலாகியிருக்கும். ஹலரத்து அவர்கள் சொல்லைக் கேட்டதும் வாயை மூடிக்கொண்டு ஒரு மூலைக்குச்சென்று கோதடி (கம்பளிப்போர்வை)யால் தன்னைப் போர்த்திக் கொண்டவராய் படுத்துவிட்டார். **ஆஹ்** என்ற சொல்லை அடக்கிக்கொண்டபோதிலும் **கல்பு** ஜூரி பாடின்றி யிருந்ததால், காதல் நெருப்பு கண்ணின் வழியாய் தண்ணீராக ஓடிக்கொண்டிருந்தது. அவ்வாறிருக்கையில் இராப்பொழுது கழிந்து பொழுது விடிந்ததும், படுத்திருக்கும் **ஆஷிக்**கிடஞ் சென்று அன்னரை படுக்கையினின்றும் எழுப்ப கோதடியை

அகற்றிப்பார்க்கிறபோது வெறும் சாம்பல் குவியலொன்றே காணப்பட்டது; அவரோ காணப்படவில்லை.

" ஆகையால் நாயனே! **பஹ்ரீ**யுடைய குற்றத்தின்பால் நீ நோட்டமிடாது, அத்தகைய காதல் நெருப்பை நீ அவனுக்கு நன்கொடையாகக் கொடுத்தாயாகில் **பஹ்ரீ**யானவன் அந்த நெருப்பினின்றும் ஒரு பொறியைப்பெற்று, கேசாதி பாதம்வரை எறிந்துபோகிறதன்றி, அவன் எவ்விடத்திலிருப்பினும் அந்த நெருப்பு அவனது தோழனுயிருந்து கொண்டு கொள்ளிக்கட்டையை எறிப்பதுபோன்று இராப்பகலாய் அவனை எறித்துக்கொண்டிருக்கும். மேலும் அவன் விறகைப்போல் எறிந்துகொண்டிருப்பானேயன்றி, பூந்தோட்டங்களிலுள்ள புஷ்பங்களைப் போலிருக்கமாட்டான். ஹஜரத்து மஹ்ரூது பஹ்ரீ (கத்தஸ) அவர்கள் தங்கள் ஹக்கில் கேட்ட இந்த பிரார்த்தனையைப்போல், இந்த நூலை எழுதிய மௌலா முஹம்மது கௌது சாஹிபுடைய பாவத்தின்பேரிலும், இதனைப் படிப்போரின் பாவத்தின்பாலும் நோட்டமிடாது உனது கிருபா (றஹ்மத்து) நோக்கினுல் பார்த்து **இஷ்கு** ஆகிய காதல் நெருப்பை மௌலா முஹம்மது கௌது சாஹிபுக்கும், ஏனையோருக்கும் **ரிஸ்கு** ஆகிய உணவு பொருளாகக் கொடுத்தருள்வாயாக என்று பிரார்த்திக்கின்றான். ஆமீன்.

ஹிகாயத்து:— **பீர்** ஒருவரிருந்தார். அவர் பேரின்பக்காதலில் மூழ்கியவர். இராகங் கேட்கை

யிலேயே பரவசமடைந்து விடுவார். இன்னாரின் **கான்வாதாவில்** பகிரங்க **திக்று** முழக்கம் நடந்தேறுவது வழக்கம். இவர் எந்நேரமும் நன்மையை தங்க விலங்குபோன்றும், தீமையை இரும்பு விலங்குபோன்றும் பாவிப்பார். யாரேனும் எதனைக்கொண்டுவந்து கொடுத்தபோதிலும் அதனை யாதொரு பாகுபாடின்றியே சமமாக பங்கிட்டுக் கொடுப்பார். நேசனையும், பகைவனையும் இவர் ஒன்றுபோல் கருதுவார்.

★ பதினான்காவது அத்தியாயம் ★

[இந்த பதினான்காவது அத்தியாயத்தில் இஷ்கு ஆகிய பேரின்பக் காதலைப்பற்றி விவரித்துப் பேசப்படுகின்றது.]

அருமையானவனே! அறிந்துகொள்வாயாக:—

அல் இஷ்குநாருன் இதாவகஅ பில்கல்பி யஹ்ரிகு மாஸிவல் மஹ்பூபி—"இஷ்கு ஆகிய பேரின்பக்காதல் ஒரு நெருப்பாயிருக்கிறது. (அந்த நெருப்பு) எந்த ஒரு கல்பில் உண்டாகின்றதோ? அதானது, **மஹ்பூபு** நீங்கலான ஏனைய வஸ்துக்களை சுட்டெரித்து விடும்."

அத்தகைய இஷ்கு என்ற மதுவை யருந்தி அதின் இன்பத்தை அறிந்தவனே! இஷ்கு என்னும் நெருப்பில் எரிந்து போனவனே! நீ கேட்பாயாக. அந்த பூர்வப்பொருளான இஷ்கு ஆகிறது யாவற்றிற்கும் ஆதியாயிருப்பதோடு, அந்த ஒரே அட்சரத்தினால்தான் பிரபஞ்ச முதலான ப்ாரிய புத்தகங்கள் வெளிப்பட்டுமிருக்கின்றன. இஷ்கு தான் **இர்பான்** எனும் பேரின்ப ஞானத்துக்கு பேராசிரியரா யிருக்கிறது. எவ்வாறெனில், இரும்பினது வாயினுள் உருக்கு அல்லது கலப்பு உலோக மிருப்பது போன்றேயாம்; ஆகையால் **குன்து கன்ஸன் மக்பிய்யன் பஅஹ்பப்து** என்று **ஹதீது குத்ஸி**யில் இறைவன் திருவுளம் பற்றியிருக்கும் விஷயமாக சகல **ஹபீபு** என்னும் நேசர்களும் விளக்கமாக **பயான்** செய்திருக்கிறார்கள். அந்த இஷ்கு ஆகிறது யாவற்றிற்கும் அஸ்திவாரமாயும்,

இர்பான் என்ற சொக்கட்டான் காயை கடைந்தெடுக்கும் கடசல்காரனுகவு மிருக்கிறதென்றும், இன்னும் அந்த **இஷ்கு** என்னும் வித்து **ஆலம்** என்ற பிரபஞ்சத்தை உண்டுபண்ணிக் காட்டி, கடைசியில் அந்த வித்தே மீண்டும் வெளிப்பட்டிருக்கிறது. ஆகையால், உன்னுடைய **ஷாஹிது** என்ற சாட்சியை நீ வேட்டையாட விரும்பினுல் **இஷ்கு** என்னும் பேரின்பக்காதல் என்ற வேட்டைக்காரனைக் கொண்டு நீ வேட்டையாடவேண்டும். மேலும் உனது நாயன் இஷ்கு என்ற கோப்பையில் மதுரசத்தைப்போல வெளியீட்டையடைகின்றுன். எனவே, இஷ்குடைய உதவியின்றி **மஹ்பூபு** வரையும் போய்ச்சேர்ந்தவன் எவனிருக்கிறுன்? மேலும் **இஷ்கு** என்ற இரதத்தின்மீது ஏறிச்சென்றேயொழிய இந்த பாதையைக் கடந்தவன் எவனுயிருக்கமுடியும்? சரீரமானது பார்வையைப் பற்றிக்கொண்டதும், பிரபஞ்சம் தோன்றியிருப்பதும் **இஷ்கு** என்ற பேரின்பக் காதலினுலேயே என்றறிந்துகொள். எனவேதான், **இஷ்கு ஹகீகீ** உலக வியவகாரங்களாக தோன்றியிருக்கும் லீலா விநோதங்கள் யாவற்றினும் தலைசிறந்ததாகவும், யதார்த்தமாயும், மற்ற யாவும் அனர்த்தமான வீண் காரியங்களாயும் தென்படுகின்றன. நிற்க, இதில் தான் **அல்லாஹுத்தஆலா** சகல தத்துவங்களையும் அற்புத மகிமைகளையும் ஏற்படுத்தி வைத்திருக்கிறுன். ஆனல், **ஆஷிக்**காகிய காதலன் பூமியிலிருந்தபோதினும் அவனும் கொள்ளிக்கட்டையைப்போன்று எரிந்தவண்ணமிருக்கிறுன். **இஷ்கு** என்ற சூரியனு எந்த இடத்தில் பிரகாசிக்கத்

தொடங்கியதோ அவ்விடத்தை விட்டும் வேற்றுமை என்ற இராப்பொழுது அறவே நீங்கிவிடும். ஆகவே, சிலகாலம் இஷ்கு என்ற இராஜவீதியிலிருந்து கொண்டு நெருப்பின் சூட்டில் பருப்பானது வெந்து கறைதல்போன்று, காதல் நெருப்பில் எனது சரீரம் கறைந்துருகிவிட்டது. இதுதவிர, இஷ்காகிறது **துஷ்மன்** ஆகிய சண்டாளன் செய்யாத வேலையெல்லாம் செய்தது. துரும்பின் தலையில் துரும்பை வைத்தால் தாங்கிக்கொள்ளும்; மலையொன்றை சுமத்தினால் எவ்வாறு தாங்கும்? இஷ்குடைய காரியத்தை நான் அறிந்திருப்பதால் உன் முன்னர் நான் அதனைப்பற்றி விவரித்துப் பேசினேன். என்னுடைய காரியம் பூர்ணவும் நான் அனுபவமாகக் கண்டறிந்ததேயன்றி வாய்மொழியைக்கொண்டும், ஏட்டு ஞானத்தைக்கொண்டும் உள்ளதன்று.

ஹிகாயத்து:— ஓர் இரவு எனது ஞான தேசிகர் அவர்கள் எனக்கு **முரீது** என்னும் ஞானோபதேசம் செய்து என்மீது கிருபை மேலீட்டால் மறை பொருளான அபூர்வ இரகசியமாக இருந்துவந்த சில தீர்க்கமான அசுமியங்களை எனக்கு விபரமாய் அறிவித்துக்கொடுத்தார்கள். அப்போது விண்டலமும், மண்டலமும் எனக்கு ஒரே **நூர்** ஆகிய ஜோதிமயமாய்த் தோன்றிற்று. அதன் பின்னர் எனது எஜமானராகிய எனது குருமகானிடத்தில் **பீர்** அவர்களே! தங்களுடைய தீர்மானமாகிய கிருபையினால் எனக்கு ஒரு **ஷுக்லு** எனும் சாதனையைக் கற்றுக்கொடுக்கவேண்டும்; எத்தகைய சாதனையெனில் அந்த சாதனை அல்லது அப்பியாசத்

தினுல் மற்ற சாதனைகள் யாவும் என்னை விட்டும் அகன்றுவிடுமே அத்தகையதோர் சாதனை அல்லது அப்பியாஸமாயிருக்க வேண்டும்,'' என்று முறையிட்டவனுய்க்கேட்டேன். அவ்வாருன சாதனைதான் மற்ற பராக்குகளைப் போக்கிவைக்க வல்லது.

சிறப்புத்தங்கிய சோதரர்களே! இந்த அரிய பெரிய நூலைக் கோர்வைசெய்த மகான் மௌலா சாஹிபு என்னும் மூஹம்மது கௌது சாஹிபு அவர்கள் இந்த நூலின் முகவுரையில் எடுத்துக்காட்டியிருப்பதுபோல் முகவுரையும், எட்டு பிரிவுகளும், பதினென்கு அத்தியாயங்களும், ஒரு முடிவுரையுமாக எழுதி இந்த நூலைப் பூர்த்திசெய்வேன் என்று வரைந்திருக்கிருர்கள். ஆனல், மேற்படி நூலின் பதினென்காவது அத்தியாயத்தில் **ஷுக்லு** ஆகிய சாதனையைப்பற்றி விபரிக்கத் தொடங்கு முன்னர் யாது காரணத்தாலோ இந்த அரிய நூல் பூர்த்தி பெருது நின்றுவிட்டது; அத்துடன் பதினென்காம் அத்தியாயமும், முடிவுரையும் எழுதப்படாது இக் கிரந்தம் குறைபட நின்றுவிட்டது பெரியதோர் துர்ப் பாக்கியமே. எனினும், ஹலரத்து மௌலா சாஹிபு அவர்கள் இக் கிரந்தத்தின் பல்வேறு நுட்பங்களையும் ஒழுங்குபெறத் திரட்டி எளிதில் விளங்கியறிய வல்லமுறையில் தமிழ்ப் பாடலாகச்செய்து அதற்கு **இர்பானுஸ்ஸபா** அல்லது மெய்ஞ்ஞானத்தெளிவு என்ற பெயரும் சூட்டி; அதில் **ஷுக்லு** ஆகிய சாதனமுறைகளையும், **திக்ரு** என்னும் தியான வகைகளையும் விவரித்துக்காட்டி கையெழுத்துப் பிரதியாக தயார்செய்து வைத்திருந்த நூலிலிருந்து நான்

இந்த நூலைப் பூர்த்திசெய்தற்குரிய ஆதாரங்களை அடையப் பெற்றேன். வல்ல நாயனருளாலும், கிருபாகடாட்சத்தாலும் இதற்கு மற்றும் பல நாதாக்களின் சொன்முறை, செயன் முறைகளை ஆங்காங்கு இணைப்பதைக்கொண்டு அழகு படுத்தி வெளியிட்டேனாக.

மேலும் அறிவீர்களாக:— அறிவினது புதையலும், ஞானக்கடலுமாகச் சிறந்து விளங்கும் குறைஷிவம்ச பரம்பரையிலுதித்த இமாமுனா ஹல ரத்து ஷாபிஈ (றஹ்) அவர்கள், "தன்னுடைய புறக்கண்ணை மூடி, அகக் கண்ணைக் கொண்டு தன் றப்பாகிய நாயனை எவனொருவன் தெரிசித்தானோ அவன்தான் நன்மாராயம் பெற்றவன்," என்று அருள் செய்திருக்கிறார்கள். மேலும் மெய்ஞ்ஞான சொரூபராகிய ஹலரத்து ஷெய்கு உமர் வலீயுல்லா(ஹ்) [றஹ்] அவர்கள் சொல்லியிருப்பது கீழ் வருமாறு:—

பொல்லாப் பொறியும், புலனும், கரணமும் போக்கி
ஜமாலை ஷுஹூது செய்யாதவர்
எல்லா கிதாபும் எழுத்தற ஓதினும் எரிநரகிற் சென்று
வீழ்குவரது நிஜம். (கல்பை)
அல்லும் பகலுந்தானேம்பத்தோரட்சரமான
பொருளதை நேமத்திலாக்கியே
சொல்லும், செயலும், அறிவு மொன்றாகவே தோத்திரஞ்
செய்ததைப் பார்த்திருந்தே கண்டு. (கல்பை)

ஆகையால் துன்யாவிலே ஹக்கைத் தெரிசிப்பதற்கு மகான்கள் பல்வேறு அப்பியாஸ முறைகளை

ஏற்படுத்தியிருக்கின்றனர். அவற்றுள் முக்கியமான சிலவற்றை ஈண்டு எழுதப்படுகின்றன. அவை பின்வருமாறு:—

இப்போது நாம் சொன்ன இன்ப ஷுஹூது னக்கு
எப்போதும் சித்தித்திருக்கவே—செப்பா
அருமை ஷுக் லொன்றறை கின்றே னன்பாய்த்
திருந்தவே எப்போதும் செய்.

நெஞ்சிலிடதுபுறம் நேர் மார்பின் கீழாக
அஞ்சங் குலத்திலங்குலந் தள்ளி மிஞ்சாமல்
நாலானவங்குலத்திருட்டியிரு பார்வையொன்ருய்ப்
பாழான மனதை யுற்றுப்பார்.

பார்வை பிசகாமற் பார் ஹூவை வட்டமிட்டு
கூர்மை ரவிபோற்குறித்து நன்னேர்மையாய்ப்
பார்த்து வருகையிலே பார சுதராவகன்று
வீற்று மனந் தெளியுமே.

அறிவின் பார்வையாலதின் பிறகு ஹஸ்திதனைத்
திறமான கல்பில் தெரிசித்தால்
பிரியாத பேரின்ப தாத்து பிரகாசமாய் வெளியாஞ்
சாரும் மனந்தெளிந்ததால்.

அலையில்லாத் தண்ணீரருங் கண்ணாடிபோற்
பல நினைவற்றுள்ள மனம் பகர் தாத்து
நிலையாய் வெளியாகுந் தல்மென்று விண்டார் பெரியோர்
பழமனதை மனதாலே பார்.

ஆதியே அவ்வலுமாய், ஆகிறும்,லாஹிருமாய்
நீதியே பாத்திலுமாய் நிற்பதாற் கோதி
அவனையவனறிந்து அவனையவன் கண்டு
அவனுய் நிற்கின்ருன் அவன்.

ஓதும்படியறிந்து ஒன்ருயிருப்பதுவே
நீதி நபியுல்லா(ஹ்) நிலேபதுவாம் சாதுக்கள்
தூங்காமல் தூங்கும் ஷுஹூதான தூக்கத்தில்
நீங்காமல் நித்திரைசெய் நீ. (மெய்ஞ்ஞானத்தெளிவு)

மேற்கண்ட பாடல்களின் கருத்தாவது:—

இடது மார்பின்கீழ் நான்காவது அங்குலத்தில், அதாவது, ஹிருதய ஸ்தானத்தில் **ஹூ** என்ற அட்சரத்தை உன் நாட்டத்தால் தரிபடுத்தி, சூரியனைப்போன்ற பிரகாசம் பொருந்தியதாய்ப் பார்த்து வரவேண்டியது. அவ்வாறு பார்த்து பழகப் பழக, உனது மன ஊசாட்டங்கள் யாவும் நீங்கும் வரை இந்த சாதனையைக் கைவிட்டு விடாது பழகி வரவேண்டியது. ஊசாட்டங்கள் அகன்றுவிட்டவுடன் மனது தெளிவடைந்துவிடும். அதன் பின்னர், அறிவின் பார்வையால் **ஹஸ்தி**யாகிய உள்ளமைப் பொருளைப்பார். இதற்கு மேற்பட்ட நிலைகளின் விவரங்களை மேற்கண்ட பாடல்களிலிருந்து விளங்கியறிந்துகொள்.

‘ஷுஹூது’ சித்திக்கும் சாதனை.

இல்மு ஆகிறது திரையாகயிருக்கிறதென்று **சூபிய்யா**க்கள் சொல்வதை நீ அவசியம் கேட்டிருக்க கூடும். அதனை நீ இலேசு கண்டு புறக்கணிக்காதே. ஏனெனில், அது முற்றமுடிய மெய்யானதொன்ரு யிருக்கிறது. ஏனெனில், ஐயறிவுகளால் அறியப்படும் பொருள்களிலும், அவற்றின் வழியேயுண்டாகின்ற **இல்மு**களிலும் நீ பராக்காக யிருக்கிற வரையில் நீ தடைபட்டவனுகவே யிருப்பாய்,

கல்பு ஒரு குளத்தைப்போன்றிருக்கின்றது; ஐயறிவுகள் அந்த குளத்துக்கு ஐந்து கால்வாய்கள் போன்றிருக்கின்றன. அக் குளத்தின் அடித்தரையிலிருந்து தெளிந்த ஜலம் சுரக்கவேண்டுமென்று நீ நாடினல், அதற்கு செய்யவேண்டிய பிரயத்தனம் யாதெனில், முன்னர் பலதிக்கிலிருந்தும் தண்ணீர் அந்த குளத்தில் வந்து பாயாதபடி கால்வாய்களை அடைத்துவிடவேண்டும். பின்பு குளத்திலிருக்கிற தண்ணீரை இறைத்துவிடவேண்டும். அந்த தண்ணீரில் படிந்திருக்கும் வண்டலாகிய கருஞ்சேற்றை வாரி வெளியே கொட்டவேண்டும். பின்னர் அக் குளத்தின் அடித்தரையைத் தோண்டவேண்டும். அப்படி தோண்டும்பொழுது அதிலிருந்து தெளிந்த நீர் சுரந்து பொங்கிவழிய ஆரம்பிக்கும். அசுத்தமான வெளி நீர் குளத்திலிருக்கிறவரை சுத்தமான உள் நீர் சுரக்க வழியில்லை.

இதுபோன்றே வெளியிலிருந்து மனதிலம்மையும் எண்ணங்களாலான ஒவ்வொரு வஸ்துவையும் விட்டு **கல்பு** காலியாகாதவரையில் அந்தரங்க அறிவு (இல்மு) உண்டாகாது. ஆனல் கலைஞனென்பவனே தான் கற்றறிந்த கலைகளைவிட்டும் **கல்பை** காலி செய்து, அந்த கலைஞானத்துடன் தன் **கல்பைச்** சேர்க்காதிருப்பானகில் அவன் கற்ற கலைகள் அல்லது கல்வி அவனுக்கு திரையாகமாட்டாது. அவனுக்கு **கல்பு**டைய வாசல் திறப்பதற்கு இடமுண்டு. இன்னும் பல்வேறு எண்ணங்களிலிருந்தும், ஐயறிவுகளால் அறியும் பொருள்களிலிருந்தும் **கல்பை** காலியாக வைத்துக் கொண்டிருப்பானேயாகில்,

சென்ற எண்ணங்கள் அவனுக்கு திரையாகமாட்டாது என்று ஹுஜ்ஜதுல் இஸ்லாம் இமாமுனு கஸ்ஸாலி (றஹ்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

மேலும் இதனைப்பற்றி ஒரு பெரியார், "**பகீருடைய** வணக்கமாகிறது **கல்பி**லுண்டாகும் ஊசாட்டத்தை இன்மையாக்குவதாகும்," என்று கூறியிருக்கிறார்கள். இந்த சாதனையும் மேலான தொன்றேயாம்.

மற்றொரு சாதனை:— மனமாகிய பூமியைச் சுத்தப்படுத்தி விட்டானேயாகில் அதில் விதை தூவ ஆரம்பிப்பான். விதை என்பது **அல்லாஹுத்த ஆலாவுடைய திக்று** என்னும் தியானமேயாம். ஆகவே, அல்லாஹுத்தஆலா அல்லாத மற்ற வஸ்துக்களை விட்டும் மனம் ஒழிந்துபோனுல் தனித்த ஓரிடத்திலுட்கார்ந்து, **அல்லா(ஹ்), அல்லா(ஹ்)** என்று எப்போதும் மனதாலும், நாவாலும் சொல்லிக் கொண்டிருந்து வருகையில் மனதில் **திக்று** மிகைத்து விட்டால் நாவால் சொல்வதை நிறுத்தி விடவேண்டும்; பின்னர் மனதும் அதை தொனிக்காது நின்று, அந்தச்சொல்லின் பொருள் மனதில் மிகைத்துவிடவேண்டும்; அந்த பொருளில் **அரபீ, பார்ஸீ** பாஷைகளின் யாதொரு அட்சரமும் இருக்கக் கூடாது. ஏனெனில், மனதாலும், நாவாலும் சொல்வதும் பேச்சேயாம். பேச்சானது அந்த விதைக்கு, அதாவது **வுஜூது** என்னும் உள்ளமைப் பொருளுக்கு கவசமும், தோலுமேயன்றி உட்பொருளான மணியல்ல. மனமானது **அரபீ, பார்ஸீ**

முதலிய பேச்சுகளையும், மற்றுமுள்ள பாஷைகளை யும் விட்டொழிந்து, வேறொரு வஸ்துவுக்கும் அதில் இடமில்லாதபடி **எல்லாம் அவனுகவே** ஆய்விடு வதுதான் **திக்ருடைய** சாரமாகும். பெரிய **முஹப் பத்து** என்ற ஆசை இருந்தால்தான் இவ்வித மாகும். இதற்கு **இஷ்கு** அல்லது பேரின்பக்காதல் என்று சொல்லப்படும். ஆதலால், அந்த பொருள் எவ்விதம் மனதில் குடிகொண்டிருக்கவேண்டுமென் ருல், பிரயாசையின்றியே மனதை அதில் நிலை நாட்டும் வண்ணம் ஆய்விடவேண்டும். மேலும் பிரயாசையினுலும் மனதை அதிலிருந்து எடுக்க முடியாத விதமாய் அப்படி அதில் ஆசைகொண்ட வனுய்ப் போகவேண்டும்.

ஹலரத்து ஷெய்கு ஷிப்லீ (றஹ்) அவர்கள் தங்கள் **முரீது** ஒருவருக்கு ஒரு உத்திரவிட்டிருந் தார்கள். அதாவது:—

"இந்த வெள்ளிக்கிழமை முதல் மறு வெள் ளிக் கிழமை வரை **அல்லா(ஹ்)** என்பதேயன்றி வேறொன்று உன் மனதில் நிகழுமாகில் நீ என்னி டம் வருவது உனக்கு **ஹராம்**—விலக்காயிருக் கிறது," என்பதே.

ஆதலின், **துன்யா**வுடைய **வஸ்வாஸு** களென்னும் முட்கள்போன்ற ஆசாபாச எண்ணங் களை விட்டும் மனதை சுத்தப்படுத்தி, இந்த **திக்ரு** என்ற தியானமாகிய விதையை மனமென்னும் பூமியில் ஊன்றிவிட்டால் பிறகு தந்திரத்தால் ஒரு

காரியத்தை செய்யவேண்டிய அவசியத்தை விட்டும் தப்பிக்கொள்ளலாம். தந்திரமெல்லாம் விதையை நடும்வரைதான். நட்டானாலும் என்ன நடக்கப் போகிறது, என்ன விளையப்போகிறது என்பதை எதிர்பார்ப்பதுதான் வேலை. பெரும்பான்மை சந்தர்ப்பங்களில் இந்த விதை பழுதுபடாது. ஏனென்றால் "எவனொருவன் மறுமையின் வேளாண்மையை விரும்பியிருக்கின்றானோ அவனுடைய வேளாண்மையை நாம் அவனுக்கு அதிகரிப்போம்," என்று **அல்லாஹுத்தஆலா** திருவுளமாகியிருக்கிறான்.

இவ்விடத்தில் **முரீது**களின் நிலைமைகள் பல்வேறாயிருக்கும். ஒருவனுக்கு இந்த **கலிமா**வாகிய மூலமந்திரத்தின் பொருளை நோட்டமிடுவதில் கஷ்டந்தோன்றும். தப்பான எண்ணங்கள் வந்து நேரிடும். ஆனால், வேறொருவன் இவ்வித சங்கடங்களை விட்டும் நீங்கியிருப்பான். இவ்வித அப்பியாஸிக்கு சொப்பனத்தில் மலக்குகளுடைய ஒளிகளும், **நபி**மார்களின் **ரூஹு**களும் அழகிய கோலங்களாகத் தோன்றத்தொடங்கும்; அல்லது அவைகளை விழிப்பிலும் காண்பான். இதன் பின்னர் வேறு **ஹால்** ஆகிய நிலைமைகள் ஏற்படும். இவற்றின் விபரம் மிகவும் விரிவானது. இதனை விளக்குவதால் விரியும். ஏனெனில், இது சாதிக்கும் வழியேயன்றி விவாதிக்கும் வழியன்று. ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு காட்சிகள் தோன்றும். இந்த வழி நடப்பவன் எவனோ அவன் இந்த காட்சிகளில் யாதொன்றையும் கேட்காமலிருப்பதே மிக உசிதம். ஏனெனில், இந்த காட்சிகளை எதிர்ப்பார்ப்பதானது மனதைப்

பராக்கிலாக்கி, திரைபோடுவதாகும். ஈண்டெடுத்துக் காட்டுதற்கு இயல்பாகிய கல்வி இம்மட்டேயாம். இவ்வளவு சொன்னதெல்லாம் இதன்மேல் ஈமான் விசுவாச மில்லாதோருக்கு விசுவாசம் அல்லது நம்பிக்கை ஏற்படும் பொருட்டேயாம். உலமாக்களுள் அநேகர் இதனை மறுப்பவர்களா யிருக்கின்றனர். எந்த ஒன்று வழக்கமாக படித்தறியக்கூடிய **இல்மு** ஆகிய கல்வி ஞானத்துக்கு புறம்பானதா யிருக்கின்றதோ அதனை அவர்கள்ஒப்புக்கொள்வதில்லை.

‘தன்பீஹ்’ என்னும் எச்சரிக்கை !

அருமையானவனே ! அறிந்துகொள்வாயாக:—

கல்பு என்னும் ஒருபொருள் உண்டென்பதை நீ அறிந்துகொள்ளாத வரையில் அது இத்தன்மையானதென்று நீ அறியமாட்டாய். ஆகையால் முந்தி அது என்ன பொருள் என்பதையும், பின்பு அதன் இயற்கைக்குணமான **ஹக்**குடைய **மஅரிபா** அதற்கு எப்படி சித்திக்கிறது என்பதையும், இந்த **மஅரிபா**வினால் அது எப்படி தன் பதவியை அடைகின்றது என்பதையும் நோட்டமிட்டு அறிவாயாக. ஆனால் **கல்பு** உண்டென்பது பகிரங்கமாயிருக்கிறது. ஏனென்றால், மனிதனுக்கு தன் இருப்பில் யாதொரு சந்தேகமுமில்லை. அவனுடைய இருப்பு சரீரமாகிய வெளிக்கூட்டைப் பொறுத்ததல்ல. பிணத்துக்கும் சரீரமிருக்கிறது; உயிரில்லை. **கல்பு** என்று நாம் சொல்வது, **ரூஹி**னது

சுயார்த்த ரூபத்தையே நாம் கருதுகிறோம். இந்த ரூஹு போனால் சரீரம் பிணமாகும்.

ஒருவன் தன் கண்ணை மூடி வானம், பூமி இவைகளையும், மற்றும் கண்ணால் காணக்கூடிய வஸ்துக்களையும் மறந்துபோவானாகில், அப்போதும் அவன் தன் இருப்பை அறிகிறான். அவனுக்கு தன் சரீர உணர்ச்சியும், வானம், பூமி, அவற்றி லுள்ள எல்லா வஸ்துக்களின் உணர்ச்சியும் இல்லாமல் போனாலும் தன் சுய உணர்ச்சி யிருக்கின்றது. ஒருவன் இது விஷயத்தில் நன்றாய் யோசிப்பானாகில் ஆகிறத்துடைய ஹகீகத்தை—மறுமையின் எதார்த்தத்தை—அறிந்துகொள்வான். இன்னும் சரீரத்தை அவனிடமிருந்து பிடுங்கிக்கொண்டால் அப்போதும் அவன் தான் அழியாமல் நிலைத்திருப்பான் என்பதையும் தெரிந்துகொள்வான். (கீமியாயெ ஸஆதத்து)

எனவே, கல்பைப்பற்றி இவ்விடத்தில் எடுத்துக் கூறியது கல்பின் சொரூப லட்சணத்தை யறிந்து அதில் தரிபட்டு சாதிப்பதற்கேயாம். மேலும் இதுவே கல்பு ஹகீகீ என்றும், அனுவாகிய நான் என்னும் பொருளென்றும், அல்லா(ஹ்) வென்ற திருநாமத்துக்கு இதுவே முஸம்மா வாகிய பொருளென்றும், இதனைத் தெரிசிப்பதற்கு ஷுஹூது முத்லக்கு என்னும் குறிப்பற்ற தெரிசனை யென்றும் அழைக்கப்படும். இந்த தெரிசிப்பை அடையப் பெறுதற்காகவே அநேக வித சாதனைகளை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

சுல்தானுல் அத்கார் அல்லது **சலாத்துல் வஹ்தத்தி** என்னும் மற்றொரு சாதனே. [இதனை எல்லா ஜபங்களுக்கும் மேலானதாகிய ஒன்றுபட்ட வணக்கம் என்றும் அழைக்கப்படும்.]

சொல்லக் கேளென் மகனே சூட்ச **திக்ரொன்றைத்**
தொல்லைப் புலன் சோர்ந்து போகவே—வல்லமையாம்
ஓங்கார வட்டத்தில் ஒலிக்கும் தொனியதனை
நீங்காமற் கேட்டுவா நீ.

ஓயாம லெப்போதும் ஒலிக்கும் **ஹூ** நாதத்தை
மாயாச் செவியால் மகிழ்ந்து கேள்—தாயான
நாதமுழக்கமது நாளுக்கு நாள் மீறி
காதுக் கடங்காது காண்.

மல்லுக்கட்டும் புலன்கள் மாண்டு **சுதரா** வெல்லாங்
கல்லு போட்டாப்போலே கட்டிப்போம்—அல்லுபகல்
ஓயாமலே முழங்கும் ஓசை **திக்ருதனை**
மாயாமல் கேட்டுவா நீ.

கேட்டுவரும்போது கெடியான நாதத்தை
ஆட்டமனது அடங்கியே—நாட்டமது
ஒன்றுபட்டே நிற்கும் ஒழிந்துபோம் வேறெல்லாம்
பண்டு **வஹ்தத்**தாகும் பார்.

ஆதி கிருபையது ஆர்க்குண்டாமோ அவருக்கு
ஈது கிடைக்கு மல்லாலில்லையே—ஓதுகின்ற
எல்லா தொனிகளுக்கும் எஜமா னிதுவாகும்
நல்லா யறிந்துசெய் நயம்.

வெற்றி ஒலுச்செய்து வேற்றுமையற் றொன்றுபட்டு
முத்தி **கிப்லாவை** முன்னோக்கி—சுத்த **நபில்**
நிய்யத்து செய்து இரண்டு **ரக்அத்து** நீ கட்டி
ஐயன் தொனியிலமை.

பாத்திஹா சூரத்துக்குப் பகரமாய்த் தொனியை
நேர்த்தியாய் வெகுநேரங் கேட்டபின்—வேற்றுமை
நக்பீரு சொல்லிச்சார் ருகூஉ சுஜூதிலும்
தக்பீறு நாதத்தைச்சார்.

மற்றுமடை வெல்லாமாறு மலிப்படியே
சத்தங்கொடு செய்து சலாங்கொடுத்து—புத்தியுடன்
இந்தவித மென்று மிசைந்து தொழுதாக்கால்
புந்தி நினைவற்றுப்போம்.

நினைவற்றிடந்தனிலே தூக்கம்போல் நிற்பாய்
நினைவுவருமளவுந் தொழாமல்—நினைவு வந்தால்
சொச்சத் தொழுகை தொழுது முடி பெரியோரின்
அச்சமற்ற ஓர் தொழுகையாம்.

பறுலு இமாமுடனே பாங்காய்த் தொழுங்கால்
அருள்சேரும் தொனியிலமைந்து—பொருளதுவாய்
நின்று உகந்துதொழு நினைவெல்லாம் **ஹறூ**வாக
அன்று மின்று மென்று மதாம்.

உச்சிவெளி தனிலே ஓங்கார வட்டத்துள்
பச்சைப் புறநின்று கூவுதுபா—ரிச்சைவைத்து
அல்லும் பகலுமதை ஆனந்தமாய்க் கேட்டால்
நல்ல **பனு**வாவோம் நாம்.

ஜமாஅத்து தொழுகையிலும் சகல செயல்களிலும்
இமாகு தொனியிலே சேர்ந்துநில்— **அமானத்து**
ஒப்புவமை யில்லாமல் ஒன்றாயிலங்கி நிற்கும்
அப்போ **பகாவானு** யறி.

கண்டிப் பற்றுக் கமலக்கண் தெளியவேண்டுமென்றால்
தெண்டிப்பு செய்துவா தெளிந்துபோம்—தெண்டித்தால்
பெருமையுற்றார், சிறுமையற்றார், பேரின்ப முக்திபெற்றார்
அருமை குத்பானவர்.

மனமொன்று பட்டாலதே மகாஞானம்
மனமொன்று பட்டாலதே வஸ்தாம்—மனமொன்று
பட்டாலதுபோலே பாரவஸ்தொன்றில்லை
கெட்டால் பிசாசாய்க் கெடும்.

பொல்லாக் குணங்கள் தனைப் பொன்மனதெடுத்திருந்தால்
கல்லாய்க் கறையாய்க் கருப்பாகும்—சல்லாப
நற்குணங்களை மிகவு நன்று யெடுத்திருந்தால்
சற்குருவாய்த் தானிலங்குந்தான்.

எடுத்து நடக்கையிலிணையற்றிருந்தே
அடுத்தடுத்து **திக்ரை** அன்பாக—தொடுத்தாக்கால்
பல நினைவெனுங் களிம்பு பாரமனம் விட்டு
நிலையாமலேகும் நிஜம்.

வம்புலருவப்பு மற்ற மாலாசை கெட்டகுணம்
செம்பின் களிம்புபோல் சித்தத்தை—தும்பிக்கும்
பொல்லாக் கசடற்றுப் பொன்னுகை வேண்டின் மனம்
வல்லான் **திக்ரை**யதனில் மாட்டு.

மாட்டி மாட்டியே யுறுக்க மாண்டு களிம்பெல்லாம்
தாட்டிகம தாய்த்தங்கமாகு மட்டும்—ஆட்ட மனம்
அடங்கி **தாக்கிறுடன் திக்று** மானந்த **மத்கூறும்**
ஒடுங்கி யொன்றுருமே **ஹூ**. (மெய்ஞ்ஞானத்தெளிவு.)

மேற்கண்ட பாடல்களின் விபரமாவது பின் வருமாறு காண்க. அதாவது, "ஆரம்பக்காரன் முதலில் தனித்த இடத்திலிருந்து தனக்கு வசதியான இருப்பில் தரிபட்டு, நேராக நிமிர்ந்திருந்துகொண்டு, தன்னுடைய நாடியை நெஞ்சோடு சேர்த்து, தன்மனதை அண்ணுக்குக்கு மேலும், புருவமத்திக்கும், பிடரியின் பள்ளத்துக்கும், இரண்டு காதுக்கும்

மத்திபமாக செலுத்திவந்தால் தொனிகேட்கும். இதில் சிலகாலம் தரிபட்டு இந்த தொனியைக் கேட்டுப் பழகிவந்தால் பல்வேறு தொனிகள் பத்து விதமாக வெளியாகி, கடைசியாக **ஹூ** என்ற தொனி ஓயாமற் கேட்டுக்கொண்டிருக்கும். இது வரையும் தான் ஒருவனுக்கு முயற்சியும், தெண்டிப் பும் தேவையாகின்றன; மேற்சொன்ன குறிப்பில் மனதைச் செலுத்துவதும் இதுவரையில்தான். அதற்கப்பால் குறிப்பற்ற எல்லையே இவனுக்கு ஸ்தானமாகும். இதற்குமேல் என்ன நடக்கிறது, என்ன விளைகிறது என்று எதிர்ப்பார்க்க வேண்டியதுதான். மேலும் இந்த சாதனையின் உயர்வும், இதை கவனிக்கவேண்டிய பாகுபாடுகளையும் மேற் கண்ட பாடலில் கவனித்தால் நன்கு தெரியும்.''

இன்னுமொரு சாதனை:—

நமது ஷெய்குனா முகம்மது தாஹிர் சாஹிபு (கத்தஸ) அவர்கள் இயற்றிய **கடவுள் தூதும், அவர் வாக்கியமும்** என்ற நூலில், "அப்பியாஸங் களில் யோகம் வேண்டாம். அதில் அநேக அபாயங் களிருக்கின்றன. உன் மனதை வசப்படுத்தி, உன் சிந்தையை வலுவாக்கிக்கொள்ள எவ்வளவோ அப்பியாஸங்களிருக்கின்றன. உன் மனதை கொஞ் சிற்றும் அசையாமற் செய்தற்கு ஒரு உபாயம் சொல்லுகிறேன். அது மகான்களின் இரகசியம்; வேதத்தின் முடிவு; எல்லாவற்றையும் விடச் சிறந் தது; இதனைப் பக்குவமில்லாதவர்களுக்கு வெளியிட உத்திரவில்லை. இதற்கு மேலான ஒரு வழியுமில்லை.

இதுவே மஹாவாக்கியம். முத்தியடைதற்கு இதனை விட்ச் சிறந்ததோர் வழியில்லை. இதில் உனக்கு சந்தேகம் வருமானால் உனது துர்ப்பாக்கியம்தான். சத்தியமாகச் சொல்லுகிறேன். இதன் உண்மையை அநேகர் அறியவில்லை.'' அதாவது,

★ "நீ உன் சரீரத்தையும், உலகத்திலுள்ள வஸ்துக்களையும் உன் மனதால் அழித்து, மேல், கீழ், முன், பின், என்ற திசையற்ற முடிவில்லாத ஆகாயமாகிய வெட்டவெளியாக இருந்துகொள். உன் மனதில் அநேக ரூபங்களும், எண்ணங்களும் ஓடிவரும். அதை நாசஞ் செய்துகொண்டிரு. சில காலத்தில் உனக்கு சொரூப நாசமுண்டாகும். அதற்குமேல் ஒரு சப்தமுண்டாகும். அதையே கேட்டுக்கொண்டுவா. அதில் உன் சுவாசம் அழிந்து போகும். அந்த தொனி உன்னில் எப்பொழுதும் மாறாமல் கேட்டுக்கொண்டே யிருக்கும். நீயும் அந்த சப்தமயமாகவே ஆய்விடுவாய். அதற்குமேல் அஞ் ஞானமாகிய இருள் திரையைக் கடப்பாய்; அதற்கு மேல் ஞானமாகிய ஒளியின் திரையைக் கடப்பாய்; அதற்குமேல் திருஷ்டி மயமாகிய பார்வையின் திரையைக் கடப்பாய்; அதற்குமேல் ஆசையாகிய இச்சையின் திரையைக் கடப்பாய்; அதற்குமேல் பூர்ணத்தை அடைவாய்; இதற்கிடையில் அநேக சூட்சுமலோகங்களைக் காண்பாய். தேவர்களையும், மஹான்களின் ஆத்மாக்களையும் காண்பாய். உனக்கு சத்சங்கல்பமுண்டாகும். உன் எண்ணத் துக்கு மாறாக ஒன்றும் நடவாது. எல்லாவித்துக்கும் நீயே அருகனாவாய். நீயே கடவுளாயிருப்பாய். உன்

மகத்துவத்தை யாரால் சொல்லக்கூடும்? மண்ணைப் பொன்னுக்குவாய்; பொன்னை மண்ணுக்குவாய். இதற்குமேல் உனக்கு தபமில்லை. மற்ற அப்பியாஸங்களினல் நீ சில பதவிகளைத்தான் காணக்கூடும். எல்லா பதவிகளையுங் கடக்கமாட்டாய். நீ இரத்தினத்தை சாதாரண கல்லாகவும், முத்தை நத்தையாகவும் எண்ணி இதைத் தோற்றுவிடாதே. இதை வாயினல் அபக்குவிகளுக்கு உறைப்பதே பெரும்பாவம்.''★ மேலும் இந்த சாதனையின் சுருக்கத்தை கவனிக்க வேண்டுமென்றால் இந்த அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் கல்பின் சொரூப இலட்சணத்தை கவனித்தால் தெளிவாகத் தெரியவரும். மேலும் இந்த சாதனையைப்பற்றி **இர்பானுஸ்ஸபா** வென்னும் மெய்ஞ்ஞானத் தெளிவில்,

"உனை நிற ரூடமியல் பின்றி கல்பி
லோர் கண்ணுற் தெரிசிப்பாயேற்
கன நபி சொன்ன **ஹதீது** சொற்படியே
கசகாம லறிந்துனைக் காண்பாய்,
வினையறவப் போதுனையாளும் றப்பை
வெளிரூப மனரூப மின்றி
தனியவன் தானுய் வேறன்றிக் காண்பாய்
சத்திய மிதுவென வறியே,"

(என்று வரையப்பட்டிருப்பதைக் கவனிக்க.)

நற்குணங் குடிகொண்ட பாதுஷா(ஹ்)வான குருநாதர் முஹ்யியத்தீன் ஆண்டகை (ரலி) அவர்கள் கீழ்வருமாறு அருள் செய்திருக்கிருர்கள். அதாவது:— **அல் அமாஉ அனில் கௌனி**

பிஜனில் புஆதி: வமுதாலிஅதி பிஜனில் மஅரி பதி—" இருலோகத்தையும் விட்டு **கல்பு**டைய கண் தெரியாமலாகி, **மஅரிபா** (அறிவு) உடைய கண்ணைக் கொண்டு பார்ப்பதே **முஷாஹதா** வென்னும் தெரிசனை."—அதுவோ இன்ன நிறம், இன்ன கோலம்; இன்ன விதம், இன்ன திக்கு, இன்ன திசை என்று ஐயறிவினாலும், தத்துவங்களாலும், புத்தியினாலும் அறிகின்ற விஷயங்களை சிந்திப்பதன்றியும், ஆசிப்பதன்றியும் இருக்கவேண்டும். **வ இத்லா இல் குலூபி பிஸபாஇல் யகீனி இலாமா அக்பரல் ஹக்குதஆலா பிஹிமினல் குயூபி**—" இன்னும் அல்லாஹுத்தஆலா **கைபு** என்ற மறைவான விஷயங்களை அறிவிக்கிறதளவில் **யகீன்** என்னும் நிர்ணய சுத்தியாக **கல்பு**களை உதயமாக்கி வைப்பதாயிருக்கும்." **(பஹ்ஜதுல் அன்வார்.)**

இன்னுமொரு சாதனை:—

சொப்பனத்திலும், நித்திரையிலும் ஞானம் அல்லது அறிவு நழுவாது வைத்துக்கொள்ளல். அதாவது, சாக்கிரத்தினின்று சுவப்னத்திற்கு போகும்போதும், சுவப்னத்திலிருந்து சுழுத்திக்குப் போகும்போதும் **நான்** என்ற பிரக்ஞையின் தொடர்பு அற்றுப்போகிறது. அத்தொடர்பு அறாமல் **பிரக்ஞை**யை நிலைப்படுத்தல்வேண்டும். அற்றுப் போகும் நிலையை **பாழ்** என்றும் அழைக்கப்படுகின்றது. அத்தகைய பாழ்நிலையைத் தாண்டுதற்கு முயற்சிக்கவேண்டும். இதுவும் மனம் லயிப்பதற்கு ஓர் அப்பியாஸம். (பதஞ்சலீ யோக சூத்திரம்.)

நண்பர்களே! அறிவீர்களாக:— **ஜீவன் முக்தி** என்பது சரீர சம்பந்தம் அல்லது சரீர அனுபோகத்துடன் நமது எண்ணத்தைக்கொண்டு நம்மை பிர்மமாக அறிதல், அல்லது நமது எண்ணத்தினுல் நம்மை பிர்மமாக சிந்தித்தல், அல்லது நமது செயல்களை பிர்மத்தின் செயல்களென்று கருதிக் கொள்ளுதல் முதலியனவாம். இவ்விதமாக நமது எண்ணங்களும், செயல்களும், தத்துவங்களும், எப்போதும் சிந்தனை மூலமாக **சிவத்தில்** கலந்திருக்குமாயின் அதனை **ஜீவன் முக்தி** பதமென்றும், இவ்வித சாதனையுடையோர் மரணத்துக்குப் பின்னர் **விதேக முக்தி** பதத்தை அடைவரென்றும் சொல்லப்படும். இதுபோன்றே **சங்கற்ப சமாதி** என்பது ஏதாவது ஒரு எண்ணத்தில் நமது மனதை நிலை நிறுத்தல், அல்லது, தன்னையும், தனது தத்துவங்களையும் **ஹக்கில்** சேர்க்க, அல்லது, தன்னை **ஹக்கு** என சிந்திக்க, அல்லது, யாதொரு மறைவான விஷயங்களை விசாரித்துணர சமாதி செய்தல் முதலியனவாம்.

நிர்சங்கற்ப சமாதி என்பது யாதொரு எண்ணமும், செயலுமற்று பிர்மத்தைப்போல் சலனமற்று இருப்பதேயாம். இதன் மகத்துவத்தை வர்ணித்து கூறமுடியாது. இதுதான் பரிபூர்ண நிலையாகிய **அசம்பிரக்யாத சமாதி** எனப்படும். மனதின் காரியங்களை நிறுத்திவிடுவதென்பது இடைவிடாத அப்பியாஸத்தினுல் அடையப்படுகிறது. அப்போது சித்தத்தில் சம்ஸ்காரங்கள், அடையாளங்கள் முதலியன ஆவிர்ப்பவிக்காத ரூபத்திலேயே நிற்கின்றன.

இந்த நிலைதான் நமக்கு சுதந்திரத்தையும், முக்தியையும் அளிக்கின்றது. ஒரு மனிதன் சகல சித்திகளையும் அடைந்துவிட்டபோதிலும் மீண்டும் கீழே விழுந்துவிடக்கூடும். ஜீவன் பிரகிருதியைத் தாண்டி, சிந்தனையுடன் கூடிய ஏகாக்கிர நிலையைத் தாண்டி அப்பால் செல்லும் வரையில் கீழே விழமாட்டானென்ற நிச்சயம் எற்படாது. இத்தகைய நிலையை அடைதற்குரிய வழி சுலபமாகத் தோன்றியபோதிலும் இதனை அடைவது மகாக் கடினம். மனதையே தியானிக்கப்படும் பொருளாக நிறுத்திவைத்தல்தான் இதற்குரிய மார்க்கம். அந்த மனதினிடம் எண்ணங்கள் தோன்றும்போது அவற்றை தகர்த்தெரிந்துவிடவேண்டும். யாதொரு எண்ணமும் மனதினிடம் தோன்றாமல் செய்துவிடுதல்தான் யாதொன்றுமின்றிய ஸ்தானமாக வைத்துக்கொள்ளலாம். இவ்வாறு நமக்கு செய்தற்கு சக்தியுண்டாகும் பட்சத்தில் அதே வினாடியில் நாம் விடுவிக்கப்பட்டுவிட்டோம்; **முக்தர்**களாவோம்.

மேலும் **ஹக்குடைய நூர்** வெளியாவது கொண்டு அவனை அடைதல் இருவகைப்படும்: அவற்றுள் முந்தின வகையாகிறது, சரீர உணர்ச்சியற்றுபோதலால் அவனை அடைதலே **ஹக்**கை அடைதலாகும். செய்யிதினா அலிய்யுன் கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள், **இன்னல்லாஹ தஜல்லா லிஇபாதிஹி மின் கைரி அன் ரஒஉஹு வஅராஹும் நப்ஸஹு மின்கைரி அன் யதஜல்லால ஹும்—"அல்லாஹுத்தஆலா** தனது அடியார்களுக்கு அவர்கள் அவனைப்பார்ப்பதன்றியே பிரதி

பலிப்பான் அல்லது தோற்றமாவான். அவர்களுக்கு தான் வெளியாகிறதன்றியே தன்னுடைய ரப்பை, அதாவது, தன்னைக் காண்பிப்பான். இவ்வாறு பெறுதல் சரீர உணர்ச்சி அற்றுப்போவதுகொண்டு ஹக்கைப் பெறுதலாகும்,'' என்று அருட் செய்திருக்கிறார்கள்.

இரண்டாவது வகையாகிறது, சரீர உணர்ச்சியுடனே பார்த்தல். அத்தகைய பார்வையை தனது சொந்த அடியார்களுக்கு **ஹக்குதஆலா** கொடுத்தருளியிருக்கிறான். செய்யிதினா அலிய்யுன் கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள், **ரஜதுஹு பஅரப்துஹு பஅபத்துஹு லம் அஉபுது ரப்பன் லம் அரஹு**—''நான் அவனைப்பார்த்தேன், அவனையறிந்தேன், அவனை வணங்கினேன், நான் பார்க்காத ரப்பை நான் வணங்கவில்லை,'' என்று அருளியிருக்கிறார்கள்.

ஷெய்கு அபாயஸீதுல் புஸ்தாமீ (றலி) அவர்கள், ''முப்பது வருடகாலமாக நான் **அல்லா(ஹ்)** அல்லாதவர்களுடன் பேசவில்லை. நான் அவர்களுடன்தான் பேசுகிறேனென்று மனிதர்கள் என்னை அறிந்தார்கள்,'' என்று கூறியிருக்கிறார்கள்.

ஆகையால், நாமும் ஹலரத்து ஷெய்கு அபாயஸீதுல் புஸ்தாமீ (றலி) ஆண்டகை அவர்கள் சொன்னதுபோல் நடக்கவேண்டும். அதாவது, யாரிடமும் உரையாடினால் நாம் **அல்லா(ஹ்)**விடம்

பேசுகிறேமென்றும், யாரேனும் பேசினல் **அல்லா(ஹ்)**நம்மிடம் பேசுகிருனென்றும் **முவஹ்ஹிது**களான அத்வைதிகள் அறிவார்கள். தம்மோடு பேசினது மனிதரென்று கருதுவது கிடையாது. எல்லாவற்றையும் மறந்துவிட்டு சகலவற்றையும் **அல்லா(ஹ்)** வென்றே பார்ப்பார்கள். எவ்வாறெனில், ஷெய்கு பரீதுத்தீன் அத்தார் (றலி) அவர்கள் வழிப்பயணம் செல்லுங்காலை அவர்களை நோக்கிவரும் ஒரு மனிதன் அவர்களைப்பார்த்து, **நீ யார்?** என்று கேட்க, **ஹலரத்து** அவர்கள் நான் **அல்லா(ஹ்)**வாகுமென்று சொன்னர்கள். அப்பொழுது அந்த மனிதன் **நீர் ஷெய்கு பரீது** அல்லவா? வென்று கேட்டபொழுது, "என்னுடைய பிறந்தானே! நீ உண்மை சொன்னுய். அப்பொழுது நான் மறந்திருந்தேன். இப்பொழுது நல்ல நினைவு உண்டாக்கினுய். இப்பொழுது நான் ஷெய்குபரீது தான்," என்று பதிலிறுத்தார்கள்.

ஆரிபீன்களான ஞான சொரூபிகள் தன்னை மறந்து, **தௌஹீது** ஆகிய ஒன்று படுத்தலிலும் **எல்லாம் அவன்**தானென்று சொல்லுகிருர்கள். பிரபஞ்சம் பூராவையும் மறந்திருக்கின்றனர். வேருகவும், அன்னியமாகவும் அறியவில்லை. அவன் **ஹக்கு) மௌஜூது** என்னும் உள்ளமைப் பொருளாயிருப்பதால் அவனின் **தாத்து** ஆகிய சுயார்த்த ரூபத்தைத்தவிற வேறில்லையென அறிந்தவன் **ஆரிபு** எனும் ஞானியாக ஆனுனென்றும், இவ்வகையாகப் பார்த்தவன் **ஆஷிக்** எனும் பேரின்பக் காதலனுக ஆனுனென்றும், இவ்வகையாகப்

பார்த்தலில் தன்னை மறந்தவன் அல்லது தன்னை இழந்தவன் **வாஸில்** ஆகிய ஐக்கியம் பெற்றவனென்றும் அழைக்கப்படுவர். அவனே தின்கிறானென்று தின்னவும், அவனே குடிக்கிறானென்று குடிக்கவும், அவனே உட்காருகிறானென்று உட்காரவும், அவனே உறங்குகிறானென்று உறங்கவும், அவனே எழுந்திருக்கிறானென்று எழுந்திருக்கவும், அவனே பிடிக்கிறானென்று பிடிக்கவும்வேண்டும். இவ்வாறு எல்லா வகையாலும் அவனுடைய செயல்களென்றும், அவனுக் குடையதென்றும் அறிபவரும், காண்பவரும் **ஆரிபு**தான். அப்பொழுது இவன் தின்றது அவன் தின்றதாகும்; இவன் குடித்தது அவன் குடித்ததாகும்; இவன் நடப்பது அவன் நடப்பதாகும்; இவன் அசைவது அவன் அசைவதாகும்; சகல செயல்களும் அவனுக்குடையதே. எதுபோலெனில், ஹலரத்து செய்யிதினா அலிய்யுன் கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள், **அல்லாஹுத்தஆலாவிடம், நீ தின்கிறாயா?** என்று கேட்டபோது, **பகீர்** ஆகிய **ஆஷிக்** "தின்பதும் குடிப்பதும், நான் தின்பதும் குடிப்பதுமாகும்," என்று அல்லா(ஹ்) பதிலளித்ததுபோலாம். ஆகையால், இந்த **மகாம்** ஆகிய ஸ்தானத்தில் எப்பொழுதும், எந்நேரமும் விழிப்பாகவும், **ஹுஷாரா**கவுமிருந்து சாதனை செய்துவந்தால் சொற்ப நாட்களில் அவனுடைய நெஞ்சமானது **துவிதம்** என்ற இரண்டு என்பதை விட்டும் துப்புரவாகிவிடும். எனினும், ஒரு இரவு, பகல் முழுமையும் இந்த **மகாமி**ல் சாதித்து வந்தால் ஒப்புவமையற்ற **தாத்து** அவனுடைய **வுஜூது** ஆகிய உள்ளமையில் **கஷ்பு** எனும் திரை

நீங்கலாகிய வெளியீட்டைப்பெறும்.

இதுபோன்றே, ஹலரத்து மௌலானு ஷம்ஸுத் தப்ரேஸி (றலி) ஆண்டகையவர்கள், “**நான் வேறு** என்று எண்ணும் வேற்றுமையை ஒரு இரவு, பகல் முழுமையும் ஒருவன் மறந்துவிட்டு (நான்) அவனேயென்பதாய் அல்லது **அல்லா(ஹ்)** என்பதாகக்கண்டு, தன்னை இழந்திருப்பானுகில் ஒரே நாளையில் அவன் **தாத்து** ஆகிய சுயார்த்த ரூபத்தில் **வாஸில்** என்ற ஐக்கியத்தை அடையப் பெறுவான்,” என்று அறிவிக்கின்ருர்கள்.

அல்லாஹுத்தஆலா ஹதீது குதுஸியில் அருளியபடி, “என்னைக்கொண்டு கேட்கிறுன், என்னைக் கொண்டு பார்க்கிறுன், என்னைக்கொண்டு பேசுகிறுன், என்னைக்கொண்டு பிடிக்கிறுன், என்னைக் கொண்டு நடக்கிறுன்,” என்று இறைவன் திருவுளமாயிருக்கிறுன். **ஆரிபீன்**கள் இவ்விதமாய் அறிகின்றனர். அதாவது, நம்முடைய காதைக் கொண்டு அவன் கேட்கிறுன், நம்முடைய கண்ணைக் கொண்டு அவன் பார்க்கிறுன், நம்முடைய நாவைக் கொண்டு அவன் பேசுகிறுன், நம்முடைய காலைக் கொண்டு அவன் நடக்கிறுன், நம்முடைய கையைக் கொண்டு அவன் பிடிக்கிறுனென்று அறியவேண்டும். இவ்வாறே, அவன் பிரபஞ்சத்திலுண்டாயிருக்கும் கண்கள் யாவற்றையுங்கொண்டு அவன் பார்க்கிறுன். **உலக**முழுதிலுமுள்ள நாவுகளைக்கொண்டு அவன் பேசுகிறுன், பிரபஞ்சத்திலுள்ள **வுஜூது** என்னும் உள்ளமையைக்கொண்டு அவன் உள்ள

மையுடனிருக்கிறான்," என்று அறிதல்வேண்டும். மேலும் உலகத்தோரனைவரின் செயல்களும் அவனது செயல் என்று அறியவேண்டும். இவ்வண்ணமே தன்னிலும் அறியவேண்டும். நமது கண்ணில் அவனது கண் உண்டாயிருக்கிறதென்றும், நமது காதில் அவனுடைய காது உண்டாயிருக்கிறதென்றும், நம்முடைய நாவில் அவனின் நாவும், நம்முடைய கையில் அவனுடைய கையும் உண்டாகியிருக்கின்றனவென்றும், நம்முடைய **வுஜூது**ஆகிய உள்ளமை அவனுடைய உள்ளமை என்றும், எல்லாம் அவனுக்குடையதென்றும் அறிந்துகொள்ள வேண்டும்.

நபிகட் பெருமானார்(ஸல்) அவர்கள், **யா அலீ லஹ்முக லஹ்மீ தமுக தமீ**—"அலியே! உம்முடைய தசை என் தசை, உம்முடைய இரத்தம் என் இரத்தம்," என்று திருவுளமாயிருக்கிறார்கள். இந்த சைக்கினையை **ஆரிபீன்**கள் அறிவார்கள். **லாஹிரு** ஆகிய வெளியரங்கத்திலும், **பாத்தின்** ஆகிய அந்தரங்கத்திலுமுள்ள **வுஜூது** என்னும் உள்ளமை பூராவும் **தாத்து**டைய உள்ளமையான **வுஜூது** என்றும், தன்னுடைய **வுஜூதும் தாத்து**டைய **வுஜூது** தானென்றும், பிரபஞ்சத்திலுள்ள **வுஜூது** யாவும் **தாத்து**டைய **வுஜூது** என்றும், இவ்வகையாக அறிதல், பார்த்தல் ஆகியவை இம்மையி(துன்யாவி)ல் **அல்லாஹ்வின் தீதார்** ஆகிய தெரிசனை என்றும் பாரவான்களான **ஆஷிகீன்**கள், **ஆரிபீன்**கள் சொல்லியிருக்கின்றார்கள். எனினும், **அல்லாஹுத்தஆலா**வுடைய

தாத்து ஆகிறது ஒப்புவமையற்று, தனித்ததாய், தானிருக்கும் பாங்கில் இருந்து **அஸ்மா, சிபாத்து** ஆகிய நாமரூபமாய் தோற்றமாக யிருக்கிறதாகவும் பார்க்கிறார்கள். எந்த ஒருவர் இவ்வகையாக இம்மையில் பார்க்கவில்லையோ, மறுமையிலும் அவர்கள் ஒரு வஸ்தையும் பார்க்கமாட்டார்கள் என்று அறிந்து கொள்ளவேண்டியது.

சகோதரர்களே! அறிந்து கொள்வீர்களாக:— **அல்லாஹுத்தஆலா** உங்களையும், எங்களையும் நற்பதவியிலாக்குவான். ஏனெனில், நிட்சயமாக அவன் ஒருவன்தான் **வுஜூது** என்னும் உள்ளமைப்பொருளாக இருக்கின்றான். அதாவது, அவனது **வுஜூது**தான் அவனின் **தாத்து** ஆகிய சுயார்த்தரூபமும், **வுஜூது**க்கு **தாத்து** அன்னியமான வேற்றுப் பொருளன்றுமாம் என்பதே. அந்த **வுஜூது**க்கு உருவமுமில்லை; கால, தேசங்களாலான எல்லையுமில்லை; அந்த **வுஜூது** இப்படி பரிசுத்தமாயிருப்பதோடு உருவமும், எல்லையுங்கொண்டு வெளிப்பட்டு ஆரோபமாகப் பிரகாசித்தது. இப்படி வெளிப்பட்டதினால் அது தனக்கு உருவமின்மையும், எல்லையின்மையு மாகிய தன்மையை விட்டும் மாறி விடவில்லை. மேலும் அஃதிருந்தவாறே இன்றுமிருக்கின்றது. எனவே, இந்த **வுஜூது** அல்லது **தாத்தை** இத்தன்மையானதென்று ஐயமற்றிரிபற நிர்ணயத்துடன் அறிந்துகொண்டால் நாமும், சர்வமும் **அது**வாக விருக்கின்றோமென்று தெரிசிக்கலாம். இதனை முன்னிட்டே **வுஜூதை**ப்பற்றி நன்கு விவரிக்கப்பட்டது. **மாரஜது ஷைஅன்**

இல்லா வரஜத்துல்லாஹ பீஹி "நான் வஸ் தொன்றைப் பார்ப்பதில்லை அதில் அல்லாஹுத்த ஆலாவைப் பார்த்தேயொழிய;" அதாவது, "யாதொரு வஸ்துவைப் பார்த்தேனேயாகில் அதில் அல்லாஹுத்த ஆலாவையே பார்க்கிறேன்," என்பதாய் நமது நாயகம் செய்யிதினு அலிய்யுன் கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் அருள் செய் திருக்கிறார்கள்.

ஷெய்குல் அக்பர் முஹ்யியத்தீனிப்னு அரபீ (றலி) அவர்கள் புசூசுல் ஹிகம் என்ற அரிய கிரந் தத்தில், ஆலம் அடங்கலும் இருளாக இருக்கும், ஆலத்தை வெளிச்சமாக்கினதெல்லாம் ஹக்குத ஆலா அதில் வெளியானதாயிருக்கும். யாராகிலு மொருவன் ஆலத்தில் அல்லது ஆலத்தினிடத்தில் அல்லது ஆலத்துக்கு முன்னுல் அல்லது ஆலத்துக் குப் பின்னுல் ஹக்குதஆலாவைக் காணுமல் ஆல மாகிய பிரபஞ்சத்தைக்கண்டால் அவன் நூருடைய உள்ளமையை இழந்து, மஅரிபா வென்னும் சூரியனை வேற்றுமை என்ற மேகத்தினுல் அவனை திரையிட்டுக் கொண்டவனுகும்," என்று கூறியிருக்கிறார்கள். ஆலம் என்பது 'அல்லா(ஹ்) வல்லாத சகலவற்றிற்கு மிடப்பட்ட பெயராக யிருக்கும்.'

மேலும் இதனைப்பற்றி பார்ஸி பைத்து ஒன்றில், பீயப்ஸூர் என்ற ஒளியில் நின்றுமுள்ள சுர்மாவை (ஹக்கு வேறு, கல்கு வேறு என்ற கொள்கையினையுடைய) தாசி நிறைந்த இருநேத்

திரங்கவிலும் திட்டிக்கொள்வாயாகில், உள்ளாலும், புறம்பாலும், கீழாலும், மேலாலும், பின்னாலும், முன்னாலும், வலப்பக்கத்தாலும், இடப்பக்கத்தாலும் **அவனன்றி யாதொரு மௌஜூதும்** இல்லை என்று சாட்சியளிக்கின்ற **லா இலாஹ இல்லல்லா(ஹ்)**வானது உன்னை மூடிக்கொண்டிருக்கிற திரையை உன் முகத்திலிருந்து எடுத்துவிடும். அப்போது, "அங்கு **அல்லா(ஹ்)**வுடைய முகமிருக்கிறது," என்னும் உண்மை உனக்கு தெரியவரும். இன்னும் **"அவன் உங்களோடிருக்கிறான்** என்பது உனக்கு **தீதாரைக்** காட்டிவிடும்" என்ற பொருள் பொருந்தியதாக விளக்கப்பட்டிருக்கிறது. **முவஹ்ஹிதீன்**களாகிய அத்வைத ஞானிகளின் கொள்கைப்படி தெரிசனையென்னும் இந்த சிறப்புற்ற செல்வமானது ஒவ்வொருவருக்கும் **துன்யா**விலும், **ஆகிறத்**திலும் உண்டாகி யிருக்கிறது. **ஹக்கு** வேறு, **கல்கு** வேறு என்னும் மருட்சியில் மருண்டு கிடப்போர் தம்மைப் பாராதவர்களாயிருப்பினும் இருக்கட்டும்; எனினும், **அல்லாஹுத்தஆலா** பார்க்கிறவனாயிருக்கிறான். பார்க்கப்படுதற்கு உண்மையில் அவனையன்றி வேறு பொருள் இல்லை.

மேலும் ஹஸரத்து அத்தார் (ரஹ்) அவர்கள் "அல்லாஹுத்தஆலா வானவன் பார்க்கிறவனும் தானாய், பார்க்கப்படுவதும் தானாய், ஜாலக்காட்சியும் தானாய், ஜால வித்வானும் தானாய், காதலனும் தானாய், காதலியும் தானாய், வைத்தியனும் தானாய், வியாதியஸ்தனும் தானாய் விளங்குகின்றான் என்பதும், அவன் தன் ஜாலசக்தியால் தானே தேகாதி

பிரபஞ்சங்களில் வெளியாகி, சர்வமும் தானுகி இலங்குகின்ருன் என்பதும், தானே மூஸா (அலை) அவர்களாக ஆகி, **தீதாரை** தெரிசிக்க ஆவல் கொண்டு, " ஆண்டவனே! உன்னை எனக்கு காட்டு வாயாக," என்று தன் காதுக்கு தானே சொன்ஞன் என்பதும், பிறகு தானே "நீ என்னைப்பார்க்க சக்தி பெறமாட்டாய்," என்று சொன்ஞன் என்பதும் எதற்கெனில், பிரபஞ்ச விவகாரங்கள் நடந்தேறுவதற்காக வேண்டியே," என்று தங்கள் பாடல்களிலொன்றில் இவ்வாறு பொருள்பட கூறியிருக்கிருர்கள்.

மற்ருெரு **பார்ஸீ பைத்தில்,** " உள்ளதென்னும் படத்தின்மேல் தோற்றுகின்ற ஒவ்வொரு சித்திரமும் அதைச் சித்தரித்தவனுடைய உருவமாயிருக்கிறது. தொன்றுதொட்டு பழமையாயுள்ள கடலானது புதிதாக அலைத்து வீசினல் அதை அலை என்று அழைக்கின்றனர். ஆனல் யதார்த்தத்தில் அது கடலேயாம்," என்று கூறப்பட்டிருக்கிறது.

ஹலரத்து ஷெய்கு அப்துல்கரீம் ஜீலீ (ரலி) அவர்கள் தங்களுடைய **ஹகீகதுல் ஹகாயிக்** என்னும் கிரந்தத்தில் **சூபியா**க்கள் சொன்னதாக ஒருபமானத்தை எடுத்துக்காட்டுகிருர்கள். அதாவது, கடலில் இருக்கும் மீன்கள் யாவும் கூடி, " நம்முடைய உயிர் தண்ணீரில் உண்டாயிருக்கிறதென்று வெகு நாட்களாய் கேட்டறிந்திருக்கிரேம்; ஆனல் நாம் அந்த தண்ணீரைப் பார்த்ததே

யில்லை," என்றதும் ஒவ்வொரு மீனும் தண்ணீரைத் தேடி பலதிக்கிலும், வலம், இடம், முன், பின், மேல், கீழ் எங்கும் அலைந்தும் காணமுடியாதபடி அறியாமையால் திரிந்து கொண்டிருக்கையில், **அல்லாஹுத்தஆலா** கடலில் வசிக்கும் மீன்களுள் பிரம்மாண்டமான ஒரு மீனுருவில் ஒரு **மலக்கை** அந்த மீன்களிடம் அனுப்பினான். அந்த பெரிய மீனைக் கண்ட மற்றமீன்கள் யாவும் இந்த மீனிடஞ்சென்று தண்ணீர் எங்குண்டாயிருக்கிறது என்று கேட்டால் தங்களைக்காண வயதில் மூத்தவராயும், உருவத்தில் பெரியவராகவுமிருப்பதால், சரியான பதில் கிடைக்குமென தீர்மானித்துக்கொண்டு, பெரிய மீனிடஞ் சென்று, "பெரியாரே! தண்ணீரைக்கொண்டே நம்முடைய உயிர் நிலைபெற்றிருக்கிறதென்று நாங்கள் கேள்வியுற்றிருக்கிறோம்; அந்த தண்ணீரை எங்களுக்கு அறிவித்துத்தரவேண்டும்," என்று கேட்டுக்கொண்டன. அதற்கு அந்த பெரிய மீன் "நன்று, நன்று; அதனை நான் தங்களுக்கு அறிவிக்க வேண்டுமாயின், நான் கேட்கும் கேள்விக்கு தாங்கள் மறுமொழி தரவேண்டும்: அதாவது, நீங்கள் எல்லோரும் கூடி எனக்கு தண்ணீரில்லாத இடத்தைக் காண்பித்தால் நான் உங்களுக்கு தண்ணீரைக் காண்பிக்கிறேன்," என்று கூறிற்று. தண்ணீராகிய கடலோ அவர்களை **தாத்**தாலும், **சிபாத்**தாலும், மூலத்தாலும், கோலத்தாலும், தொகையாகவும், வகையாகவும் சூழ்ந்திருக்கையில் தாங்கள் தண்ணீரிலிருந்து உற்பத்தியாகி, தண்ணீரில் தான் ஜீவித்திருக்கிறோமென்று தண்ணீரை அறிந்து கொண்டார்கள்.

மேற்சொல்லப்பட்ட உவமானப்படி நாமும் தரிபாட்டைப் பெற்றிருப்பதால் அதனை **மஅரிபா**வின் கண்ணைக்கொண்டு பார்த்தறிந்து கொள்வாயாக.

மேலும் இஸ்லாமிய மூலமந்திரமாகிய **கலிமத்துத் தையிபா**வான **லா இலாஹ இல்லல்லா(ஹ்)** என்பதின் பொருள், "நானும், சர்வமும் **அல்லா(ஹ்)**வாயிருக்கும்" என்றும், **முஹம்மதுர் ரசூலுல்லாஹி** என்பதின் பொருள் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லா(ஹ்)வின் ஒளியென்றும், தோற்றமென்றும், அல்லா(ஹ்)வுடைய சுயம் என்றும் சொல்லப்படும். இதனை ஒப்புக்கொள்வதுதான் சுத்த **ஈமான்** ஆகும். இதற்கு **இல்முல்யகீன்** என்ற **நிர்ணய அறிவு** என்றும், இந்த விசுவாசம் மட்டும் உள்ளோரை **முஃமின்** என்றும், **முஸ்லிம்** என்றும் அழைக்கப்படும். மேலும் இவ்வாறு விசுவாசிப்பதுடன் தன்னையும், சகல வஸ்துக்களையும் **அல்லா(ஹ்)**வாயிருக்குமென்று காண்பதே **இஸ்லாம்** என்றும், இன்னும் கேட்டறிந்ததற்கொப்ப பார்த்து வருவது அல்லது காண்பதே **ஐனுல்யகீன்** அல்லது **நிர்ணயமான பார்வை** என்றும், அவ்வாறு கண்டதை அனுபவிப்பதே **ஹக்குல்யகீன்** அல்லது **நிர்ணயமான அனுபவம்** என்றும் சொல்லப்படும். மேலும் இந்த உறுதி அல்லது நிர்ணயத்தையுடையோர் **ஷரீஅத்தி**லுள்ள **இபாதத்து**களாகிய வணக்கங்களை **ஷிர்க்கு** என்னும் இணையில்லாமல் செய்து வருவார்கள். ஏனென்றால், **ஆபிது** என்னும் வணங்குபவனும், **மஉபூது** என்னும் வுணக்கப்

பொருளும், **இபாதத்து** என்னும் வணக்கமும் **ஏகம்** என்று காண்பதால் அவர்களுக்கு **ஷிர்க்கு** ஆகிய **இணை** எவ்வாறு ஏற்படும்? மேலும் ஹுஜ்ஜதுல் இஸ்லாம் இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) அவர்கள், "ஓயாதிக்ருக்கு இரண்டு வழிகளுண்டு. முந்தியது, இடைவிடாது எப்போதும் **அல்லா(ஹ்), அல்லா(ஹ்)** என்று **கல்பி**னுல் சொல்லிக்கொண்டிருப்பதேயன்றி நாவினுல் அல்ல. மேலும் **கல்பி**னுல் மொழிவதும் **நப்ஸு**டைய பேச்சாயிருப்பதால் அவ்வாறும் சொல்லமாட்டான். ஆனுல், ஒருபோதும் மறவாதபடி எந்நேரமும் அவனை (ஹக்கை)த் தெரிசித்துக் கொண்டிருப்பதாம். இது மகா கஷ்டமானது. இப்படி தன் மனதை ஒரு நிலைப்படுத்த எல்லாராலும் முடியாது. அதில் அநேக ஜனங்களுக்கு சடைவு நேரிடுகின்றது. இதனிமித்தமே வெவ்வேறு **அவ்ராது**கள் என்னும் ஜபதப்ங்கள் ஏற்படுத்தப் பட்டன. அவைகளுள் சில **அவ்ராது**கள் தொழுகையைப்போன்று சரீரத்தால் செய்யப்படுகிறவையாயும், **பிக்ரு** செய்தல்போல் சில **அவ்ராது**கள் **கல்பி**னுல் செய்யப்படுகிறவையாயும் ஏற்படுத்தப் பட்டன. ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு திரும்புவது பராக்கொழிதலுக்கும், சௌக்கியத்துக்கும் காரணமாயிருக்கின்றது. ஆகையால், **இபாதத்து**களென்னும் வணக்கங்களை ஏற்படுத்தி வைத்த காரணம் அல்லாஹுத்தஆலாவை நாடுவதற்கும், அவனைத் தெரிசிப்பதற்குமேயாம். இன்னும் ஒரு பெரியார் "நான் **குர்ஆன்** ஓதிக்கொண்டிருக்கையில் அதனை ரசூல்(ஸல்) அவர்களிடமிருந்து கேட்கிறேன் என்று எண்ணிக்கொண்டேன்.

இன்பம் அதிகரித்தது. பின்பு, முன்னே சென்று உயர்ந்த பதவிக்குச் சேர்ந்தேன். ஆனால், இப்பொழுது நேரடியாக **அல்லாஹு த்தஆலா**வினிடமிருந்து கேட்கிறவன்போல் ஓதுகிறேன். இப்பொழுதுதான் நான் என்றுமடைந்திராத இன்பத்தை அடைகின்றேன்,'' என்று கூறியிருக்கிறார்கள்.

மேலும் **பிக்ஹு**டைய **உலமா**க்களிடத்தில் தொழுகைக்கு **பர்ளு** பத்தொன்பது என்றும், **சூபியா**க்களிடத்தில் தொழுகைக்கு **பர்ளு** இருபது என்றும், அதாவது, **குஷூஉ** என்னும் உள்ளச்சம் என்றும்; உள்ளச்சமாகிறது **அல்லா(ஹ்)** அல்லாத வஸ்துவை **கல்பி**ல்கொண்டு வராதிருப்பது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் அவர்கள் தொழுகையில் தங்களைக் காணாதவர்களாகி விடுகின்ற படியால், அதில் ஓதப்பட்ட **கலாம்** ஆகிய வேதவசனங்களையும், **தஸ்பீஹு**களையும் **அல்லா(ஹ்)** தான் அவர்கள் நாவில் நடத்தாட்டுகிறானென்றும், அவ்வாறே அவர்களின் செயல்கள், அசைதல் ஒடுங்குதல் யாவும் **அல்லாஹு த்தஆலா**வுக்குடையதென்றும் **அல்லா(ஹ்)**வையே தெரிசிப்பார்கள். **அல்இஹ்ஸானு அன்தஉ புதல்லாஹ க அன்னக தராஹு பஇன்லம்தகுன்தராஹு பஇன்னஹு யராக்**—''**இஹ்ஸான்** ஆகிறது யாதெனில், **அல்லா(ஹ்)**வை நீ வணங்குவதில் திட்டமாக அவனை நீ கண்டதுபோல் வணங்கவேண்டும்; அப்படி நீ காணாவிடில் உன்னை அவன் கண்டுகொண்டிருக்கிறானென்று வணங்கவேண்டும்,'' என்பதே.

எனவே, வணக்கம் இருவகைப்பட்டதாக ஆயிற்று. முந்தினது, **முவஹ்ஹிதீன்**களாகிய அத்துவிதிகளுடைய வணக்கம். அதாவது, நானும், சர்வமும் **அல்லா(ஹ்)**வாக யிருக்குமென்று தெரிசிப்பது. இப்படி தெரிசிக்காத மற்றவர்கள் **அல்லாஹுத்தஆலா** நம்மை கண்டுகொண்டிருக்கிறான் என்றேனும் வணங்கவேண்டும். முந்தியது **காமிலீன்**களுடைய வணக்கம் என்றும், பிந்தியது **நாகிஸீன்**களுடைய வணக்கம் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. **அல்லாஹுத்தஆலா** நம்மனைவரையும் **காமிலீன்**களுடைய கூட்டத்தில் சேர்த்து, அவர்களுடைய வணக்கத்தில் ஈடுபட்டிருக்கச் செய்வாளுகவும். ஆமீன்.

மேலும் ஹலரத்து செய்யிதினு அலிய்யுன் கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் **மன் ரஆத்த ஷைஅன் வலம் யரல்லாஹ பீஹி பஹுவ பாதிலுன்**—"யாதேனுமொரு வஸ்தை ஒருவன் கண்டு அதில் **அல்லா(ஹ்)**வைக் காணுமலிருக்கிற நிலையில் தெரிசிப்பானேயாகில் அத்தகைய தெரிசனையாகிய காட்சி **பாதில்** எனும் பொய்யாக இருக்கும்," என்று அருள் செய்திருக்கிறார்கள். ஆனதால், **ஹமஓஸ்த்** '**எல்லாம் அவனே**'—என்று தெரிசிப்பதே **மெய்யான காட்சி** என்றும், சகலவற்றையும் அன்னியமாகக் கண்டு தெரிசிப்பது **பொய்யான காட்சி** யென்றும் அழைக்கப்படும். தன்னுடைய எந்த மூச்சில் **ரூஹு**க் கைப்பற்றப்படுமென்று அடிமைத்தனேயை அறுத்தெரியாத எந்த மனிதனும் அறிய மாட்டான். ஒரு சமயம் மறந்து மிகைத்த நேரத்தில்

ரூஹு வாங்கப்படும் ஒருவனும், மறதியின்றிய மெய்யான காட்சியில் தரிபட்டு, சகலவற்றையும் **அல்லா(ஹ்)**வென்று தெரிசித்துக்கொண்டிருக்கிற நேரத்தில் **ரூஹு** கைப்பற்றப்படும் ஒருவனும் எவ்வாறு ஒருவனுக்கொருவன் சரிசமானமாகுவான்? ஏனெனில், தெரிசனைபின்பேரில் **ரூஹு** வாங்கப்பட்டவன் **ஹக்**களவில் முகம் திரும்பியவனாக எழுப்பப்படுவான்; மறதியின் மிகைப்பில் **ரூஹு** கைப்பற்றப்பட்டவன் **கைர்** என்னும் வேற்றுமையளவில் திருப்பப்பட்டவனாக எழுப்பப்படுவான்; அவன் சமுகத்தைவிட்டு விரட்டியடிக்கப்படுதற்கு பாத்திரமாவான். "வேற்றுமையாகப் பார்த்தலை விட்டும் அல்லா(ஹ்)வைக்கொண்டு கார்மானம் தேடுகிறோம்." இது நிற்க, **அல்லாஹுத்தஆலா குர்ஆன்ஷரீபில் பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்** என்பதாய் ஆரம்பித்திருக்கிறான். அதன் சுய அர்த்தத்தை கவனிக்கையில் சுத்த அத்வைதமானது அதில் தொனிக்கிறது. அதாவது, "**அல்லா(ஹ்)**வுடைய **இஸ்மு** ஆகிய **இஸ்முல்லா(ஹ்)** என்னும் திருநாமத்தைக்கொண்டு" என்பதே. அல்லா(ஹ்)வினுடைய **அஸ்மா** என்ற திருநாமங்கள் நம்மிலும், சகலவற்றிலும் வெளியீடாயிருக்கின்றன. **வலைஸல் இஸ்மு கைரன் லில்முஸம்மா**—இஸ்மு எனும் திருநாமம் **முஸம்மா** வென்னும் **தாத்து** அல்லாததன்று—இஸ்மு என்றது **அல்லா(ஹ்)**வைக் குறித்தே சொல்லப்பட்ட அவனது திருநாமமாகும். இதன்படி செயலடங்கலும் **அல்லா(ஹ்)**வைக்கொண்டே என்பதை சுட்டிக்காட்ட நாயகம் (ஸல்) அவர்கள், "**பிஸ்மில்லா(ஹ்)**வைக்கொண்டு துவர்க்

கம் செய்யாத காரியமடங்கலும் **பரக்கத்து** பெற மாட்டா'' வென்று திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார்கள். மேலும் **ஷரீஅத்து**படி அன்னபானதிகள் அருந்தும்போதும், **ஜிமாஉ** (சம்போகம்) செய்யும் போதும், வாகனங்களில் ஏறும்போதும், வாசற்கதவை அடைக்கும்போதும், விளக்கை அணைக்கும் போதும், பாத்திரங்களை மூடிவைக்கும்போதும், வேறு எத்தகைய சுத்த வஸ்துக்களைத் தேடும் போதும், நற்காரியங்களைச் செய்யும்போதும் **பிஸ்மில்லா(ஹ்)**வை சொல்லுவது **சுன்னத்**தாக இருக்கிறது.

ஆகையால், நமக்கு ஆகுமான சகல காரியங்களிலும் **பிஸ்மில்லா(ஹ்)**வைக்கொண்டு ஆரம்பித்தால் **அல்லா(ஹ்)**வைக்கொண்டே ஆரம்பிக்கிறேமென்று உறுதிகொண்டு, திட்டப்படுத்தி சர்வத்திலும் **அல்லா(ஹ்)**வைக் காண்பதற்கேயாம். மேலும், **பிஸ்மில்லா(ஹ்)** என்று சொல்லிக் கொண்டு அன்னபானதியருந்தினல் **அல்லா(ஹ்)**வைக் கொண்டே அருந்துவதாகும். இவ்விதமாக ஏவப்பட்ட சகல காரியங்களிலும் தன்னைக் காணமல் **அல்லா(ஹ்)**வைக் காண்பதற்கேயாம். இந்த மேலான இரகசியத்தை அறிந்தோர் உண்ணும் போதும், குடிக்கும்போதும், படுக்கும்போதும், விழிக்கும்போதும், எழுந்திருக்கும்போதும், நடக்கும் போதும், உட்காரும்போதும், சம்போகஞ் செய்யும்போதும், மற்றும் இதர வேலைகள் யாவற்றையும் தொடங்குமுன்னர் **பிஸ்மில்லா(ஹ்)** சொல்வதை மறக்கமாட்டார்கள். ஏனென்றால், சர்வமும்

அல்லா(ஹ்)வுக்குடையதாயிருப்பதாலும், சர்வமும் **அல்லா(ஹ்)**வாயிருப்பதாலும் மறதியுடையோருக்கு **பிஸ்மில்லா(ஹ்)** சொல்வதை ஒரு ஞாபக சின்னமாய் அமைக்கப்பட்டிருக்கின்றது. எனவே, ஆகுமான எத்தொழிலையும் ஆரம்பிக்கும் பொழுது **பிஸ்மில்லா(ஹ்)** என்று சொல்லி ஆரம்பித்தால் **அல்லா(ஹ்)**வைக்கொண்டு ஆரம்பிப்பதாக அல்லது செய்கிறதாக ஆகும். ஆகையால், இந்த **நிய்யத்து** அல்லது நாட்டத்தைக்கொண்டே **பிஸ்மில்லா(ஹ்)** சொல்லவேண்டியதவசியம். ஏனென்றால், நமது நாயகம் (ஸல்) அவர்கள் **இன்னமல் அஉமாலு பின்நிய்யாத்தி**—செயல்கள் யாவும் எண்ணங்களைப் பொருத்தவையே" என்றும், **வஇன்னமா லிகுல்லிம் ரிஇம் மா நவா**—மனிதர்கள் யாவருக்கும் அவ்ரவர்களின் **நிய்யத்து**படி நிறைவேறும்; அதாவது, அவரவருடைய நிர்ணயம் அல்லது நாட்டத்தைப் பெற்றுக்கொள்வார்கள். "என்றும் அருட்செய்திருப்பதால் சகல காரியங்களிலும் **நிய்யத்து** அவசியமாயிருக்கிறது. மேலும் "**ஆகிரத்து** ஆகிய மறுமையின் வாழ்க்கையானது இம்மையாகிய இவ்வுலகில் **நிய்யத்**தாயிருக்கிறது" என்று மகான்கள் சொல்லியிருக்கிறார்கள். மேலும் **கியாமத்து** நாளையில் மனிதர்களை அவரவர்களின் **நிய்யத்து** அல்லது நாட்டப்படிக்கே எழுப்பப்படுமாகையால், நீ **தக்வா** செய்வதை அத்தியாவசியமாக்கிக்கொள். அதாவது, தன்னையும், காணப்பட்ட சகல வஸ்துக்களையும் **அல்லா(ஹ்)**வென்றே **நிய்யத்து** செய்து தெரிசிப்பதை நியமமாகக் கருதுவதாகும். நீ பார்க்கவில்லையா? பகலில் ஒரு வேலை

செய்கிறாய், அந்த வேலையை இரவில் கனவிலுங் காண்கிறாய். அந்நௌமு அகுல் மௌத்து—"நித்திரை மரணத்தின் சகோதரனாகும் என்ற ஹதீதும், **கமாதஈஷூன தமூதூன வகமா தமூதூன துப்அதூன வகமா துப்அதூன துஹ்ஷரூன்** "நீங்கள் எவ்வண்ணம் ஜீவித்திருக்கிறீர்களோ அவ்வண்ணமே மரணிப்பீர்கள்; எவ்விதம் மரணிப்பீர்களோ அவ்விதமே எழுப்பப்படுவீர்கள்; எவ்வாறு எழுப்பப்படுவீர்களோ அவ்வாறேதான் **அல்லா(ஹ்)**வுடைய சமுகத்தில் நிறுத்தப்படுவீர்கள்," என்ற நாயக வாக்கியமும் ஏற்பட்டிருப்பதால் மேற்படி இரண்டு **ஹதீது**களாலும் நாம் நினைப்பில் அல்லது விழிப்பில் எதனைப் பழகிவந்தோமோ அதனையே கனவிலும் காண்போமென்றும், இன்னும் அதுதான் மரணத்தருவாயிலும் வருமென்றும், மேலும் அந்த பழக்கத்தின்பேரிலேயே எழுப்பப்படுமென்றும் தெரிந்துகொள்கிறோம்.

இன்னும் திருமறையில் **ஸலாத்து** எனும் தொழுகையைப்பற்றி விபரிக்கப்படும் தானங்களில் **வயுகீமூனஸ்ஸலாத்த** என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது, 'தொழுகையை நிலைபடுத்தி வைப்பார்கள்,' என்பதாம், 'நானும், சர்வமும் **அல்லா(ஹ்)**வாக இருக்குமென்பதை (இல்முல் யகீன்) நினைப்பதும், (ஐனுல் யகீன்) காண்பதும், (ஹக்குல் யகீன்) தெரிசிப்பதுமாகும்,' என்பதே அதன் கருத்து. இதே பழக்கத்தில் சதாவும் தரிபட்டிருப்பதே அதன் தாத்பரியமாகும்.

மேலும் இர்பானுஸ்ஸபாவில்

"தானே தானுயிருக்கும் தானவனேயுந்தனேயும்
மானேயறிந்து மயக்கமற—தேனேகேள்,
ஆசுமுதல் யாவையுமே அஹதாய்க் கண்டே பழகு
பாத முதலா மிதுதான் பார்," என்றும்,

"மனத்தின் கண்ணுலே மஹ்பூபைத் தவிர
மற்றதைப் பார்க்கவேண்டாம்
முகத்தின் கண்ணுலே காண்கின்ற வஸ்தை
முன்னவன் மல்ஹறு வென்று
புலத்தின் கண்ணுலே வேறுவராமற்
புத்தியாலதை யொன்று படுத்தி
திறத்தின் கண்ணுலே தீர்க்கமாய் நின்று
சேர்ந்திடு முத்லக்கு தனிலே,"

என்றும் பாடப்பட்டிருக்கின்றன.

இன்னும் ஷெய்குனல் காமில் உமர் வலீயுல்லாஹில் காஹிரீ அப்பா நாயகம் அவர்கள் தங்களின் பாடல்கள் ஒன்றில், "காணுஞ் சொரூபமெலாங் கர்த்தன் மல்ஹறென்று பேணி ஷுஹூது செய்து பலப்படுவதென்னுளோ," என்றும், கீழக் கரை மெய்ஞ்ஞான சொரூபியாகிய ஹலரத்து செய்யிது அப்துல் காதிறு தைக்கால் சாஹிபு அப்பா அவர்கள் தங்கள் முனுஜாத்து மாலையில்,

"காலத்தை ஏசவேண்டாமென்றதால் காலம் நீயே
கோலங்கள் கொண்டதெல்லாம் குதா வல்லால்
வேறுமுண்டோ
ஆலத்தில் நீயே யல்லால் அறவே வேறில்லை யென்றன்
சீலத்தை நல்லதாக்கிச் சிறப்பருள்வா யாகாலிகே"

" குல்ஹூ வல்லாஹூ அஹது என்றதில் வந்த
ஹூதான்
நல்ல இன்ஸான் தானென்றால் நான், நீயும்
ஹூதான் என்றும்
வல்ல யாதொருவனிரண்டும் வகையிரண்டாய்க்
கண்டோன் சேரான்
குல்லு மொன்றாய்க் கண்டோரில் கூட்டுவாய்
யாகாஹிரீ "

அன்தவும், அனவும், ஹூவும் ஆறென்று
பார்க்கும்போது
எந்தெந்தவிதம் பார்த்தாலு மிறையே நீயல்லாவில்லை,

முந்தியும் பிந்தியும் நீ, முல்ஹிரும் பாதினும் நீ,

சிந்தையிலதுபோற் காணச்செய்தருள் யாபதீஈ "
என்றும் கூறப்பட்டிருக்கின்றன.

முடிவுரை.

இந்த நூலில் முகவுரை முதலாக முடிவுரை வரையில் கூறப்பட்ட விஷயங்களில் பல்வேறு **ஷுக்லு** அல்லது சாதனை அல்லது அப்பியாசங்களை எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. எனினும், நமது நாயகம் செய்யிதினா அலிய்யுன் கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களின் திருவாக்கினால் நமக்கு வெளியானவை இரண்டு சாதனைகளாகும். சகலவிதமான சாதனைகளின் முடிவுகளும் இந்த இரு சாதனைகளின் ஆரம்பமாயிருக்கின்றன, மேலும் மற்ற மகான்களின் சொன்முறை, செயன்முறை ஆதாரங்களும் இதனையே உறுதிப்படுத்துகின்றன.

அதாவது, மனிதர்களுக்கு சாதாரணமாக இரு தன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்று விவகாரத்தன்மை, மற்றொன்று அவிவகாரத்தன்மை அல்லது விவகாரமற்றத்தன்மை என்பனவாம். இந்த இரு தன்மைகளிலும் இரண்டு விதமான சாதனைகள் வேண்டும்.

முந்திய நிலையாகிய விவகாரத்தன்மையிலிருக்கும்போது சகல செயல்களும் **அல்லா(ஹ்)**வின் செயல்களென்றும், தானும், சர்வமும் **அல்லா(ஹ்)**வென்றும் தெரிசித்து வருவதாகும். இவ்விடத்தில் **ஆரிபு** தன்னை ஒரு கருவியென்றும், **அல்லாஹுத்தஆலா** அந்த கருவியைக்கொண்டு செயல் நடத்துகிறானென்றும் நினைக்கிறார். நமது நபிகள்

பெருமானார்(ஸல்) அவர்கள், "என்னுடைய உம்மத்தில் நின்றும் எழுபதினாயிரம் பேர் கேள்வி கணக்கின்றி சொர்க்கம் புகுதுவார்கள்," என்று சொன்னார்கள். அதற்கு, அவர்கள் யாராயிருக்குமெனக் கேட்கப்பட்டதற்கு, "தங்களுக்கென ஒரு செயலைக் காணாதவர்கள்," என்று நாயகமவர்கள் பதிலிறுத்தார்கள். **லாதத ஹர்ரக தர்ரதன் இல்லா பிஇத்னில்லாஹி—அல்லாஹுத்தஆலாவுடைய அனுமதியின்றி யாதொரு அணுவும் அசையாது,"** என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், இவ்வித சாதனை பக்குவிகளுக்கேயல்லாது மற்றவர்களுக்கல்ல. பக்குவி யாரெனில்; நமது **ஷரீஅத்தின்படி** ஏவலை எடுத்து, விலக்கலைத் தவிர்த்து, துர்க்குணங்களை விலக்கி, நற்குணங்களைக்கொண்டு **நப்ஸை** பழக்கிவருவார்களே அவர்களாயிருக்கும். மேலும் **ஆரிபுகள் இதனை பனாபில்லா(ஹ்)** என்று சொல்லுகின்றனர். அதாவது, **அல்லா(ஹ்)**வில் தன்னை இன்மையாக்குதலாம்.

இரண்டாவது நிலையான அவிவகாரத் தன்மை அல்லது விவகார மற்றத் தன்மையில் செயலற்று கரிபட்டிருக்கையில் ஒரு சாதனையுண்டு. அதாவது, எதனையும் சிந்தியாது, யாதொரு நாட்டமுமின்றி நினைவற்றிருப்பதாம். இதனை மகான்கள் **சும்மாயிருக்கும் நிலை** என்றும், **மகா மகத்துவம் தங்கிய சாதனை**யென்றும் அழைக்கின்றனர். இந்த நிலையைப்பற்றி மெய்ஞ்ஞான கொண்டலாகிய தைக்கால் சாஹிபு அப்பா அவர்கள் தங்களின் **முனாஜாத்து மாலை**யில்,

"அடிமை யென்றதும், ஆண்டோ
னென்றது மிரண்டுமற்ற
விடந்தனிற் றேடச் சொன்னு
ரிறையோனைக் காணவேண்டின்
கொடுமையா மிரண்டாய்
'குதா' வன்றி வேறே யில்லை
உடையவா வுன்னைக் காண
வுதவி செய் 'யாஅலீமீ.'"

என்று பாடியிருக்கிறார்கள். இந்த பாடலின் கருத்தைக் கவனிக்குமிடத்து, மேல்சொன்ன இரண்டு நிலைகளையும் நன்கு விவரிக்கப் பட்டிருக்கின்றதை புரிந்துகொள்ளலாம்.

மேலும் இதனைப்பற்றி ரிபுகீதை என்னும் கிரந்தத்தில் கீழ்வருமாறு இரு சாதனைகளையும் இரு பாடல்களின் வாயிலாக தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றன.

"நினைவெதுவோ வதுதானே ஜீவனாகும்
நினைவெதுவோ வதுதானே ஈசனாகும்
நினைவெதுவோ வதுதானே ஜகமுமாகும்
நினைவெதுவோ வதுதானே மனதுமாகும்
நினைவெதுவோ வதுதானே காமமாகும்
நினைவெதுவோ வதுதானே கர்மமாகும்
நினைவெதுவோ வதுதானே துக்கமாகும்
நினைவெதுவோ வதுதானே அனைத்துமாகும்."

"நினைவின்றி நிற்பதுவே அகண்டமாகும்
நினைவின்றி நிற்பதுவே நிட்டையாகும்
நினைவின்றி நிற்பதுவே ஞானமாகும்
நினைவின்றி நிற்பதுவே மோட்சமாகும்
நினைவின்றி நிற்பதுவே சுகசமாகும்
நினைவின்றி நிற்பதுவே பிர்மமாகும்

நினைவின்றி நிற்பதுவே சிவரூமாகும்
நினைவனுவு மில்லை யெலாம் பிரமந்தானே."

இன்னும், குணங்குடிவள்ளல் நாயகம் அவர்கள் தங்களின் கீழ்வரும் திருப்பாடல்களால் எவ்வாறு விளக்கியிருக்கிறார்கள் என்பதைக் கவனிப்பீர்களாக.

'மஹ்ளியத்'தான 'தாத்துல் கிப்ரியா'வில்
மறைந்த 'கன்ஸுல் மக்பீ'யாம்
'மஸ்கூத்து அன்ஹு'ல் 'கதீமுல் அமா'வான
'மவுஜூது'தெனும் 'ஸிர்பி'லே
'அஹதியத்துஹ'தாகி 'வாஹிதிய்யத்'தான
'ஆலம் அர்வா'ஹானதில்
'ஆலம் மிதா'லாகி 'ஆலம் அஜ்ஸா'மான
'ஆலம் இன்ஸா'னைபின்
'பஉதிய்யத்'தில்லா 'ஜலா'லொடு 'ஜமாலு'ம்
'பதீஉல் கமாலு'மாகி
'ப்உது' 'கப்ல'ற்ற 'லாஹூத்து' 'ஜபரூத்'தில்
'பகா'வான 'ஹூவியத்'தினுல்
'நஉஸியத்'தற்று முன்னுள்ளிமுல் பெற்றடிமை
நானினைவு மற்றுய்வனே
நற்குணங் குடிகொண்ட பாதுஷா(ஹ்)' வானகுரு
நாதன் 'முஹ்யியத்தீனே'!"

பல்லவி

இல்லல் லாஹூவென் றென்னை மறந்துகொண்டிருப்பா யென் னெஞ்சமே.

அநுபல்லவி

அல்லாஹுவென்று வகண்டித கண்டமா
நல்லா யிருக்குது காணும்-ஒரு
சொல்லாலே இப்படி தோணும்-வெகு
உல்லாசமா லா இலாஹ-இல்

சரணங்கள்

1

அண்ட புவனங்க ளென்று மிருப்பதை
யாதென் றறியாது தானே-எங்கும்
நின்று நிறைந்து மறைந்துசிறந்த
நெடிய நிராமயந் தானே-முதல்
பண்டு பழகிய நாட்டத்துக் கேயது
பாவைக் கூத்தானது தானே-நீ
கண்டு களித்துச் சகலமும்-விட்டுக்
கரையேறி னல்நலந் தானே-தான்
சென்ற விடஞ்செயந் தானே-தன்னைக்
கண்டு கொண்டு லா இலாஹ-இல்

2

கெட்ட மனத்தை யுடையவெருமைக்
கிடாவினைப் போலவு முண்டோ-காசைக்
கட்டிப் புதைத்துக் கடைசியிற் சாகின்ற
கழுதைகட் கும்பல னுண்டோ-வெகு
சட்டம தாகிய நிஷ்டை யிராத
சண்டாளர்க்குச் சாஸ்திர முண்டோ-இந்தத்
துஷ்டரைப் போலவு முண்டோ-நீ
கெட்டியுடன் லா இலாஹ-இல்

3

இல்லல்லா ஹூவென் றேநானிராமல்
இணைபடவு மிருந் தேனே-மெத்த
நல்ல நோன்புடன் றொழுகையும் விட்டு
நலங்களையு மறந் தேனே-தன்னை
வெல்லுங் குருபரன் சொல்லிய தீக்ஷை
வினவாமல் விட்டிருந் தேனே-அதை
அல்லும் பகலு மறியாம லென்னுள்ளே
ஆபாச மாக்குவித் தேனே-இது
எல்லா மறிந்திடுந் தானே சொல்லுஞ்
சொல்லுஞ் சொல்லும் லாஇலாஹ-இல்

4

பூசைகள் செய்கிறே னென்று திரிந்து
புலம்பிய பாபமும் போக்கி-பெண்கள்
ஆசையி னாலே யனேகந் தரங்கள்
அடிபட்ட தும்லகு வாக்கி-எங்கள்
ஈசன் றிருவடி யாசையுள் ளானபின்
என்னைக்கை யாலவர் தூக்கி-அந்தத்
தோஷித் தனங்க டொலையத் தொழுநற்
றுறைகளைப் போதனை யாக்கி-கெட்ட
பாசங்க ளைவிட்டு நீக்கி-தந்த
வாசியுடன் லாஇலாஹ-இல்

5

எண்சா ணுயரத் திருக்கும் பனங்க
ளிறக்கி யுண்ணேன்மனக் கண்ணே-கெட்ட
கஞ்சாவுங் கள்ளு மரக்கு மபினுங்
கலப்பதை விடுவெறு மண்ணே-நீ

தஞ்சா வூராளு மகராஜன் பாதந்
தணிந்து நமஸ்காரம் பண்ணே-என்றன்
கொஞ்சப் பெலனுள்ள காயா புரியென்ற
கோட்டை பிடித்திடு மெண்ணே-அவர்
அஞ்சா திடிப்பரென் றெண்ணே-இனிக்
கொஞ்சிக் கொஞ்சி லா இலாஹ-இல்

6

என்ன விதமென்று சொல்வேன்-முழக்க
முழங்குவ தென்னுக்குள் ளாலே-ஒரு
அன்ன மிருந்தே யழகு பிறக்க
அசைந்தசைந் தாடுவ தாலே-அதன்
முன்னாலே யான்செய்த பாக்கியங்கண்டு
மூன்றுசை யில்லாத தாலே-ஆது
தன்னாலே யானந்த வெள்ளம் பெருகித்
தடையறப் பாய்வத ஞலே-பயிர்
அன்ன பிடிப்பத ஞலே-உனக்
கென்ன குறை லா இலாஹ-இல்

7

வாசனை யாகிய மாசற்ற வஸ்துவும்
வாக்கு மனத்துக் கெட்டாதே-அதில்
ஆசைக்கடல் பொங்கி யோசை யுடனலை
ஆடிடு மொன்றுங் கட்டாதே-இந்த
நாசச் சரீரத்தை வாசியிற் றீட்டிடில்
நாசத்தை யண்ட வொட்டாதே-நல்ல
யோசனை செய்யுங் குணங்குடி வந்திடில்
யோக முனக்குக் குன்றுதே-ஒரு
மாசற யாஹூவென் றேதே-காசில்
ஆசைவிட்டே லா இலாஹ-இல்

பல்லவி

என்னை யறிந்தேனே—இனி
ஏகாந்த மானேனே

அநுபல்லவி

தன்னை மறந்து தலைகீழாய் நில்லாமல்
என்னை மறந்து முனைநினைந் திட்டபோது—என்னை

சரணம்

பார்க்கும் திசைந்தோறும் பரிபூரணங் கண்டேனே
நோக்கு மிடந்தோறும் நல்ல நூரினிற் சென்றேனே
ஏற்கையுடனே யிருள்வெளி யாயிட
வாக்குமன மறத்தாக்கிய போதினில்—என்னை

என்பதேயாம்.

சர்வலோக இரட்சகனுக்கே புகழ் யாவும். ‘சலவாத்து’ம் ‘சலாமு’ம் மல்ஹறுல் அதம்’மாகிய முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும், அன்னாரின் கிளை கோத்திர, தபோதனர்களின் மீதும் உண்டாவதாகுக. ஆமீன் !

ச ம் பூ ர் ண ம் .

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
4	2	அநந்ந	அனந்த
9	3	மலஜாதிகள்	மலஜலாதிகள்
13	11	அறிவாயாக,	அறிவாயாக;
15	9	வல்மௌஜூது வாஜிது	வல்மௌஜூது–'வாஜிது
16	12	வுஜூது	வுஜூது
22	11	ஆரப	அரப
22	26	நாஸூத்	நாஸூத்
27	14	குட்சுமம்	சூட்சுமம்
28	7	தவிற	தவிர
35	29	கொண்டிருமல்	கொண்டிராமல்
37	23	திரண்டுருகி	திரண்டுறுகி
44	8	த்விற	தவிர
46	8	ஞானகுருவின்	ஞானமாகிய குருவின்
47	20	(இறண்டறக் கலத்தல்)	(இரண்டறக்கலத்தல்)
48	2	சம்பூர்ணபொருளாகிய	சம்பூர்ணப்பொருளாகிய
52	9	தவிற	தவிர
56	24	எனெனில்,	ஏனெனில்,
58	13	மிருந்துங்துகொள்	மிருந்துகொள்
67	17	சம்பூர்ண ஜோதிதியும்	சம்பூர்ண ஜோதியும்
71	24	இவனுக்கு	அவனுக்கு
91	4	எனெனில்	ஏனெனில்
99	21	யிட்டுப்பார்	பிட்டுப்பார்
103	19	லாஹூத்	லாஹூத்
106	7	நடத்தேற	கடந்தேற
115	28	புலப்படுவது மஉகூஜு	புலப்படும் மஉகூஜு
117	6	குட்சுமத்தை	சூட்சுமத்தை
117	26	கிடைக்காது	கிடைக்காது,
118	21	உத்திர்வுபடியே	உத்திரவுபடியே
144	1	பேறிகள்	பேரிகள்
145	தலை	பூவாவது	ஏழாவது
149	9	ஒன்றுமில்லாதவனுய்	ஒன்றுமில்லாதவனு
151	3	அசுத்தமும்,	அசுத்தமும்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
153	24	கோப்பையில்	கோப்பையில்
161	5	வறைகின்றதாவது	வரைகின்றதாவது
165	23	விறைந்து	விரைந்து
166	4	ஆகிருக்கிறதோ	ஆகியிருக்கிறதோ
170	22	இவற்றிடங்கியுள்ள	இவற்றிலடங்கியுள்ள
174	24	நீக்கியிருக்கின்றது	நீங்கியிருக்கின்றது
183	24	ஒரு பைராகி	பைராகி
185	14	லகிதம்	சகிதம்
191	15	காதித்முன்னபி	காத்திமுன்னபீ

இந்நூல் கிடைக்குமிடங்கள்.

★

1. **மா. மு. மஸ்தான் லெப்பை,**
பொருள்வைச்சேரி,
சிக்கில் போஸ்டு. (S. India)

2. **தாருல்வுஜூதிய்யா,**
37, சாலாபிள்ளைத்தெரு,
நாகபட்டினம். (S. India)

3. **ஹலரத்து M. சுல்தான் சாஹிபு அவர்கள்,**
25, செய்யது பள்ளித்தெரு,
நாகூர் ஷரீப். (S. India)

4. **V. H. M. கௌஸ் மரைக்காயர்,**
அஹ்மது மஹால்,
ஷா அஹ்மது தெரு,
No. நாகபட்டினம். (S. India)

5. **M. P. M. காசிம் அவர்கள்,**
409, பேராதனிய [illegible],
கண்டி. (Ceylon.)

1236

★ ★ ★